
டா
தி மலர்
P. N. APPUSWAMI AIYAR
30
ந.பை
arya


SRI AMBAL & CO
No 1
POST BOX No 3 MADRAS
SRI AMBAL SNUFF
REGISTERED
அனைவரும்
விரும்புவது.
ஸ்ரீ
அம்பாள்
ஆபீஸர் பொடி
ஸ்ரீ அம்பாள் & கோ
201, தங்கசாலை தெரு . . . மதராஸ் .1.

M. L. V. SWAMINATHAIYAR ... THIRUVANMIYUR MADRAS

# சுடர்

## மலர் – ௭

### பொருளடக்கம்

◇◇◇◇◇◇


| | | |
|---|---|---|
| முன்னுரை | நிர்வாக ஆசிரியர் | 5 |
| பாரதி பாடல் இன்பம் | A. T. N. ராமசாமி | 9 |
| பாட்டுக்கொரு புலவன் | பி. விஜயலக்ஷ்மி | 10 |
| பாரதியும் விஞ்ஞானமும் | பெ. நா. அப்புஸ்வாமி | 17 |
| ..ாரதியாரும் திருவள்ளுவரும் | 'நேரு' | 26 |
| ...பார் வாழ்க்கையில் சில நிகழ்ச்சிகள் | | 30 |
| ...பார் படமும் கடிதமும் | | 33 |
| ...ர்ச்சி | S. ஸ்ரீனிவாசன் | 41 |
| ... என் ஆசான் | தி. கோ. அ. | [illegible] |
| ...லத் தமிழ்க் கவிதை | டாக்டர் பா. நடராசன் | 45 |
| ...்கொரு புலவன் | க. சி. கமலையா | 50 |
| ...யின் பாஞ்சாலி சபதம் | வேங்கடேசன் | 55 |
| ...த் தமிழா பெரிய தமிழா! | புலவர் க. ஆறுமுகம் | 62 |
| ...ற்போன மோதிரம் | 'தூன்...' | 67 |
| ...து எப்படி? | | 73 |
| ...றந்தது! | | 77 |
| ...ளர்க்கும் சக்தி | | |
| ...கம் | | |
| ...க... | | |
| ...நக்... | | |

| | | |
|---|---|---|
| ஐஸ்கட்டி | ... 'வண்ணமுத்து' | ... 107 |
| இழந்தது ஏன்? | ... எச். லட்சுமி | ... 109 |
| முருகன் என்னும் மின்னல் | ... ஸ்ரீ | ... 117 |
| மரக்குதிரை | ... 'வண்ணமுத்து' | ... 119 |
| பேத்தியின் கல்யாணம் | ... வெ. கிஷ்ணமூர்த்தி | ... 121 |
| தமிழ் நாட்டின் செப்பேடுகள் | ... ஐ. மகாதேவன் | ... 13 |
| சுடர் | ... 'காலன்' | ... 14 |
| இலக்கியக் கனவு | ... கனகசவுந்தரி இளந்திரையன் | 14 |
| சுவாதீனசித்தமும் ஆட்படுதலும் | 'புற்றன்' | ... 15 |
| துறவு | ... 'சித்திரையான்' | ... 15 |
| விருந்து | ... லெ. இராமமுத்து | ... 165 |
| நன்றி | ... | ... 170 |

சார்வரி வருஷம்
விலை 30 ந.பை.

சுடரில் காணும் கதை கட்டுரைகளில் வரு பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல் கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள அபிப்பிர யங்கள் அவற்றை எழுதியோரின் அபிப்பிராய களேயன்றி, சங்கத்தின் அபிப்பிராயங்கள் அல்ல.

உற்பத்தியாளர்களே !

சொத்துரிமையைக் காக்க
உங்கள் மார்க்குகளைப்
பதிவு செய்யுங்க

தி. கோ. அனந்தஸ்வாமி, எம்.ஏ., பி.எல்.
ரேட் மார்க்ஸ் ஏஜெண்ட்,
குடீரம்'
ாஸ் தெரு,
மதராஸ் –28

# முன்னுரை

நிகழும் ஆங்கில வருடம் தில்லித் தமிழ்ச் சங்கத்தின் சரித்திரத்திலேயே ஒரு பொன்னாண்டு என்று சொல்லலாம். சங்கத்தின் கனவுகளில் ஒன்று நனவாயிற்று. 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்த' தமிழ் நாட்டாருக்கு, அதிலும் தலைநகரில் பல்வேறு துறைகளில் பணிசெய்யும் தமிழர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி தந்தது மத்திய அரசாங்கத்தார் 'திருவள்ளுவர்', 'சுப்பிரமணிய பாரதி' இருவர் உருவங்கள் தாங்கிய தபால் தலைகளை வெளியிட்டதே.

சில வருடங்களுக்கு முன் தில்லித் தமிழ்ச் சங்கம் தந்தி தபால் இலாகா அமைச்சரிடம் தென்னாட்டு மஹாகவிகள் உருவங்கள் தாங்கிய தபால் தலைகள் வெளியிட வேண்டுமென்று விண்ணப்பம் செய்தது. மத்திய அரசாங்கத்தார் இந்த விஷயத்தில் தாமதம் செய்ததற்கு ஒரு காரணம் – சுப்பிரமணிய பாரதியைத் தவிர மற்றவர்களுடைய (கம்பர், திருவள்ளுவர்) நிஜ உருவப் படங்கள் இல்லாதது. தாமதம் செய்தாலும் ஒரே வருஷத்தில் இரண்டு தென்னாட்டுக் கவிகளுடைய உருவங்கள் தாங்கிய தபால் தலைகளை வெளியிட்டு ஏமாற்றத்தை அறவே மறக்கும்படி மத்திய அரசாங்கம் செய்தது மிகவும் போற்றத்தக்கது. தமிழில் அபிமான முள்ளவரும் சிறந்த தேசபக்தருமான டாக்டர் சுப்பராயனுக்குப் புகழும் பாராட்டும் கிடைக்க வேண்டுமென்று தமிழ்க்கடவுள் திருவுளம் இருக்கும் போது வேறு இனத்தாருக்கோ வடநாட்டின ருக்கோ இந்தப் புகழ் சேராதது நியாயமென்றே தோன்றுகிறது

மத்திய அரசாங்கமே சுப்பிரமணிய பாரதிக்கு மரியாதை செய்த வருஷத்தில் தில்லித் தமிழ்ச் சங்கம் தன் கடமையைச் செய்வது மிகவும் அவசிய மல்லவா? அதனால்தான் சார்வரி ஆண்டுச் "சுடரை" பாரதி மலராக வெளியிடுகிறது.

பாரதி மறைந்து 39 வருஷங்கள் ஆகிவிட்டன. இதுவரை தமிழர்கள் நிறுவிய ஸ்தாபனங்கள் பல, பாரதி நினைவுநாளை ஸெப்டெம்பர் 11-ஆம் தேதியன்று கொண்டாடி வந்திருக்கின்றன. (உண்மையில் பாரதி ஸெப்டெம்பர் 12-ஆம் தேதி தொடங்கி சில மணி நேரத்திற்குள் பூதஉடல் நீத்தார்). நினைவுநாளை பிரார்த்தனை

களுடனே வைதிகச் சடங்குகளுடனே கழிப்பதைவிட்டு ஆடல், பாடல், சொற்பொழிகளுடன் கொண்டாடி வந்திருக்கின்றன. தில்லித் தமிழ்சங்கம் அநேக வருஷங்களாக பாரதி ஜயந்தியையே கொண்டாட வேண்டுமென்ற கொள்கையை கடைப்பிடித்து வந்திருக்கிறது. தலைநகரிலுள்ள தென்னிந்தியா க்ளப், கர்னாடக ஸங்கீத ஸபா, ஷண்முகானந்த ஸங்கீத ஸபா, மதராஸி உயர்தரக் கல்லூரி – இந்த ஸ்தாபனங்களும் சங்கத்துடன் சேர்ந்து ஆண்டு தோறும் பாரதி ஜயந்தியை மிகவும் கோலாகலமாகக் கொண்டாடி வருகின்றன. பாரதி ஜயந்தி ஒன்றுக்கே இந்தக் கௌரவம் இருந்து வருகிறது. இந்த வருஷம் தென்னிந்திய ஸமாஜமும் சேர்ந்திருப்பது குறிப்பிடவேண்டிய விஷயம். "ஒன்றுபட்டா லுண்டு வாழ்வு" – என்று உபதேசம் செய்தவருக்கு திருப்திகரமான அஞ்சலி தலைநகரில் பாரதி ஜயந்தி.

## ஏன் டிஸெம்பெர் 11?

நம் நாட்டில் கடவுளின் அவதாரங்களுடையவும் மஹா புருஷர்களுடையவும் பிறந்த நாட்களையே சிறந்த நாட்களாய்க் கொண்டாடுகிறோம். ராமநவமி, கோகுலாஷ்டமி, சங்கர ஜயந்தி, தத்தாத்ரேய ஜயந்தி போன்றவை உதாரணங்கள். ஹிந்துக்கள் அல்லாதவர்களும் அவரவர்கள் மத ஸ்தாபகர்களுடைய பிறந்த நாட்களைக் கொண்டாடுகிறார்கள். தேசப் பிதாவின் ஜயந்தியை அக்டோபெர் 2 ஆம் தேதி கொண்டாடுகிறோம். பாரதி தீர்க்க தரிசி, மஹாகவி, மஹா புருஷர் என்று எத்தனையோ அறிஞர்கள் நினைவு நாள் கூட்டங்களில் சென்ற 39 வருஷங்களாய்ச் சொல்லி வந்திருக்கிறார்கள். தக்க சான்றுகளுடன் பேராசிரியர்கள் சித்தாந்தம் செய்திருக்கிறார்கள். ஆகவே பாரதியாருக்கு அஞ்சலி செலுத்த ஜயந்தியைக் கொண்டாடுவதே உசிதமெனத் தோன்றுகிறது.

பிறந்த நாள் கொண்டாட பாரதியார் பிறந்த தமிழ் மாதம், தேதி, நக்ஷத்ரம் இவற்றைக் கவனித்துச் செய்வதில் சில அசௌகரியங்கள் இருக்கின்றன. அவர் பிறந்தது கார்த்திகை மாதம் 27-ஆம் தேதி மூல நக்ஷத்திரம். எல்லா வருஷங்களிலும் 27-ஆம் தேதியும் மூலநக்ஷத்திரமும் கூடிவராது. திருநக்ஷத்திரத்தை மட்டும் பிரதானமாக வைத்துக்கொள்வதும் சிரமம். எல்லோரும் பஞ்சாங்கம் பார்த்துத் தெரிந்துகொள்வதென்பது ஸாத்தியமில்லை, ஆகையால் ஸர்வதேச முறைப்படி தமிழ்த் தேதிக்குச் சரியான ஆங்கில தேதியான டிஸெம்பெர் 11-ஆம் தேதியையே பிறந்த நாளாகக் கொண்டாடுவது நலம். நடைமுறையில் அந்தத் தேதியன்று விடுமுறை நாளாகஇல்லையானால் அடுத்துவரும் விடுமுறை நாளிலே கொண்டாட்டங்கள் நடத்துவது ஸகஜம். தற்காலம்

நினைவுநாள் ஸெப்டெம்பர் 11-ஆம் தேதி முதல் பல தினங்கள் நடைபெறுவது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

தில்லித் தமிழ்ச் சங்கத்தின் தீவிரவாதத்துக்கு இறைவன் அருள் இருக்கிறதென்பது நிச்சயம். சுப்பிரமணிய பாரதி படம் பொறித்த தபால் தலை வெளிவந்தது டாக்டர் சுப்பராயன் தபால் இலாகாவுக்கு அமைச்சரானதால்தான். இந்த வருஷம் டிஸம்பர் 11-ஆம் தேதியன்று பாரதி ஜயந்திக்குத் தலைமை தாங்குவதும் ஒரு சுப்பிரமணியமே! இப்படியெல்லாம் கூடுமென்று தமிழ்ச் சங்கம் எதிர்பார்த்ததில்லை யென்பது திண்ணம்.

இம்மலர், தமிழ்கூறும் நல்லுகமெல்லாம் செல்லும். தமிழர் எல்லோரும் தலைநகர்த் தமிழ்ச் சங்கத்தின் கொள்கையை ஆதரித்து அடுத்த வருஷம் முதல், டிஸம்பர் மாதம் 11-ஆம் தேதியில் பாரதி ஜயந்தியையே கொண்டாடுவார்கள் என்று நம்புகிறேன்.

நிர்வாக ஆசிரியர்.


# எங்கள் பணி

* தலைநகரில் வாழும் தமிழ் அன்பர்களை ஒன்று கூட்டி, உரைகள், நிகழ்ச்சிகள் மூலம் முத்தமிழ்க் கலைகளை அனுபவிக்கச் செய்கிறது.
* தமிழ்க் கவிஞர்களையும் ஏனைய பெரியோர்களையும் விழாக்கள் மூலம் போற்றுகிறது.
* பொங்கல், புத்தாண்டு போன்ற தமிழ் விழாக்களைக் கொண்டாடுகிறது.
* ஸ்ரீ சத்தியமூர்த்தி நினைவு நூல் நிலையம், இலவச வாசகசாலை, இலக்கிய வகுப்புகள் ஆகியவற்றை நடத்துகிறது.
* ஆண்டு தோறும், 'சுடர்' மலரை உயர் கலை மலராக வெளியிடுகிறது.
* தலைநகர மக்களுக்கு நல்ல தமிழ் நூல்கள் கிடைக்க வசதி செய்கிறது.

## தில்லித் தமிழ்ச் சங்கம்

பாராளுமன்றத் தெரு :: புது தில்லி.

All the undertakings under the Seshasayee aegis have modest beginnings, but have, over the years, developed into dynamically successful industrial enterprises as a result of conscious endeavour by the promoters and ther successors in office, the willing co-operation of their employees and the confidence reposed in those companies by the investing public.

# THE SESHASAYEE GROUP...

At the moment, the Seshasayees are actively engageed in the project of establishing a rupees 6 crores paper plant near Erode on the banks of the Cauvery river in collaboration with the well-known American firm - M/s. Parsons and Whittemore - and utilising both bamboo and bagasse, the plant will have a capacity of 60 tons of writing and printing paper a day.

| | |
|---|---|
| The South Madras Electric Supply Corpn. Ltd., Tiruchirapalli.<br>The Mettur Chemical & Industrial Corpn. Ltd., Mettur Dam R. S. (Salem Dt.)<br>Seshasayee Industries Limited., Vadalur (South Arcot Dt.) | Managing Agents: Seshasayee Bros. Private Ltd. |

Seshasayee Bros. (Travancore) Private Ltd., have planned, established and developed the following pioneering undertakings:

The Fertilisers And Chemicals Travancore Ltd.,
Udyogamandal P. O., Alwaye, Kerala State.

The Travancore-Cochin Chemicals Limited.,
Udyogamandal P. O., Alwaye, Kerala State.

The Aluminium Industries Limited,
Kundara, Kerala State.

*Resident Representative :*

**R. Chakravarthi,** M.A., B.L.
3/1 Mutiny Memorial Road, New Delhi.

# பாரதி பாடல் இன்பம்

A. T. N. இராமசாமி

★

ஊருலகம் திருந்திடவே அழுது கெட்டும்
உழைப்பதனை வீணாக்கி இதயம் காய்ந்தும்
பாரெல்லாம் நலந்தேடி அலைந்த போதில்,
பாரதி! நின்செந்தமிழில் இன்பம் கண்டேன்.
தூறடர்ந்த வேதனைகள் முளைத்திட் டாலும்
துடுக்குடனே இருகாலால் துவைத்த பின்னே
வேரதனில் ஞானமெனும் நெருப்பை வைத்து
விளையாடித் தீந்தமிழில் மூழ்கு வேனே!

★

அறங்கள்நிலை குலைந்துதுயர் ஓங்கும் போதில்
அவதரித்து நான்வருவேன் என்று சொன்னேன்
திறங்களெலாம் நீபாடி மகிழ்ந்தாய்; உன்றன்
தீந்தமிழின் புதுப்பாட்டில் தோழி யாகி,
உரங்கொண்ட சேவகனாய், தோழ னாகி,
உற்றபெருங் காதலியு மானான், கண்ணன்!
வரங்கொண்ட பாரதியே, நின்றன் பாவில்
வண்டாகி மொய்க்கிறதே எனது நெஞ்சம்!

★

உலகமெலாம் வேதமதம் போற்று கின்ற
முதல்மனிதன், உயர்தமிழன் மனுவாம் எந்தை;
நலமுயர்ந்த முதல்மொழியும் தமிழகம் என்றே
நம்முடைய பாகவதம் கூறக் கேட்டோம்.
பலகலையும் கற்றவர்கள் பரவிப் போற்றும்
பசுந்தமிழின் வளம்சொல்லும் கவிஞனே! நின்
நிலைகுலையாத் தமிழன்பு நேர்மை எல்லாம்
நீணிலத்தில் புகழோங்க நிற்கு மன்றோ!

# பாட்டுக்கொரு புலவன்

P. விஜயலக்ஷ்மி

தமிழ் நாட்டிலே தேசாபிமானத்தையும் விதைத்து, மங்கியிருந்த தமிழ்மொழிப் பற்றையும் செழித்து வளரச் செய்தவர்களுள் சுப்ரமணிய பாரதியார் தலை சிறந்தவராவார். இத்துறையில் உழைத்துவந்த பெரியோர்களில் சிலர் ஆங்காங்கே அதன் அவசியத்தைப் பிரசங்கங்கள் வாயிலாக நமது மக்களுக்கு அறிவுறுத்தி வந்தார்கள். சிலர் பத்திரிகைகள் வாயிலாக நாட்டுப் பற்று ததும்பும் அரிய கட்டுரைகளை எழுதி அதன் மூலமாக நம்மவர்களுக்குப் புதுநெறியைக் கற்பித்து வந்தனர். சிலர் சமுதாய சேவையில் ஈடுபட்டு நின்று, அதன் மூலமாகத் தேசாபிமானத்தை பரவச் செய்தனர். ஆனால் பாரதியாரோ தமக்கென ஒரு தனி வழியை வகுத்துக்கொண்டார். உணர்ச்சி ததும்பும் செய்யுளைப் போல அனைவரையும் — கற்றோர் கல்லாதவர், செல்வர் வறியர், முதியோர் இளைஞர், ஆண் பெண் முதலான அனைவரையும் வசிகரிக்கத்தக்கது வேறு யாதும் இல்லை என்பதை உணர்ந்து அவ்வழியை அவர் மேற்கொண்டார்.

## 1

1882-ம் வருடம் டிஸெம்பர் மாதம் பதினொன்றும் தேதிக்குச் சரியான சித்திரபானு வருஷம் கார்த்திகை மாதம் 27-ந் தேதி மூல நக்ஷத்திரத்தில் சிவலப்பேரி சின்னசாமி ஐயருக்கும் லக்ஷ்மி அம்மாளுக்கும் புதல்வராக எட்டயபுரத்தில் ஸ்ரீசுப்ரமணிய பாரதி பிறந்தார். பாரதியின் இளமைப் பெயர் சுப்ரமணியன், செல்லப் பெயர் சுப்பையா. பாரதியின் ஐந்தாவது வயதில் அவருடைய தாயார் லக்ஷ்மி அம்மாள் மரணமடைந்தார். தந்தை சின்னசாமி ஐயர் மறுமணம் புரிந்து கொண்டார். சின்னம்மாள்தான் பையன் சுப்பையாவை அன்புடனும் ஆதரவுடனும் பராமரித்து வந்தாள். 1889-ம் வருடம் பாரதிக்கு உபநயனம் நடந்தது. தமது ஏழாவது வயதுமுதலே இளைஞர் பாரதி அருட்கவி பொழியலுற்றார்.

பள்ளிப்படிப்பில் பாரதிக்கு மனம் செல்லவில்லை, சிந்துகள் பாடிக்கொண்டே ஆறுகளிலும் சோலைகளிலும் உலவித் திரிந்தார். புலவர்கள் கண்டு வியந்தனர். பதினோரு வயதுகூட நிரம்பாத

சுப்பையாவை எட்டயபுரம் சமஸ்தானப் புலவர்கள் பெரும் சபையில் சோதித்து, வியந்து, "பாரதி" (கலைமகள்) என்ற பட்டம் அளித்தனர். புலவர்கள் சபையில் பாரதி ஆசு கவிகள் பொழிந்தார். ஈற்றடி தந்தால், நகை ததும்பிப் பாட்டை முடிப்பார். ஒரு சமயம் காந்திமதிநாதப்பிள்ளை இவரைப்பார்த்து "பாரதி சின்னப் பயல்" என்பதை ஈற்றடியாக அமைத்து ஒரு கவி பாடும்படி பணித்தார். பாரதியார்,

"காந்திமதி நாதனைப்பார்
அதிசின்னப் பயல்."

என்று பாடி முடித்தார்!

ஒரு சமயம் தமிழாசிரியர் பாரதியைப் பார்த்து, "மேகம்போல் கவிபொழிவாயாமே காளமேகம் இப்போது பொழியட்டுமே" என்று கூறவே பாரதியார் சற்றும் தயங்காமல் "இது தெரியாதா! காளமேகம் தனக்குத் தோன்றியபோதே மழைபொழியும். பிறர் கட்டாயத்திற்காகப் பொழியாதே;" என்று பதிலிறுத்தார். வகுப்பெல்லாம் ஒரே சிரிப்பு.

நாடகம் பார்ப்பதென்றால் பாரதிக்கு அதிக உற்சாகம். ஒருமுறை "திரௌபதி துகிலுரிதல்" நாடகம் நடந்தது. காந்தியடிகளை "அரிச்சந்திர" நாடகம் கவர்ந்ததுபோல் பாரதியை இந்த நாடகம் கவர்ந்தது. இங்கேதான் "பாஞ்சாலி சபத"க் காவியத்தின் தோற்றத்திற்குக் காரணமான எழுச்சி யுண்டாயிற்று. இப்படியாக 1894–1897 வரை திருநெல்வேலி ஹிந்து காலேஜில் ஐந்தாம் படிவம்வரை படிப்பு நடந்தது.

1897-ம் ஆண்டு ஜூன் மாதம் ஸ்ரீமதி செல்லம்மாளைத் திருமணம் புரிந்தார். பதினைந்து வயது பாரதிக்கும் ஏழு வயது செல்லம்மாளுக்கும் திருமணம் நடந்தது பாரதியாரின் தந்தை, தாம் ஈடுபட்டிருந்த இயந்திரத் தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தால் தம் செல்வத்தை இழந்தார். பாரதியை வறுமை பற்றிக் கொண்டது. இந்த நிலையில் திருமணமான ஓர் ஆண்டுக்குள் பாரதியின் தந்தை இறந்தார். இது பாரதியின் பெருந்துயருக்கும் சஞ்சலத்திற்கும் காரணமாயிற்று.

பாரதியின் அத்தை குப்பம்மாள் காசியில் கணவனுடன் வாழ்ந்து வந்தாள். பாரதியைத் தன்னிடம் வந்து தங்குமாறு அந்த அம்மாள் அழைக்கவே, மனைவியைக் கடயம் அனுப்பிவிட்டு

1898 முதல் 1902 வரை காசியில் வசித்து வந்தார். அங்கிருந்த போது அலகாபாத் சர்வகலாசாலையில் சேர்ந்து பிரவேசப்பரிட்சையில் தேர்ச்சி பெற்ருர். ஹிந்தி, ஆங்கிலம், சமஸ்கிருதம் கற்ருர்.

பாரதியாரின் நடையுடை பாவனைகளில் பெரும் மாறுதல்கள் இங்கு தோன்றலாயின. பத்திரிகைகளைப் படித்துத் தேசநிலையை நன்கு அறிந்து கொண்டிருந்தார். மாமா சிவசிந்தனை செய்வார்; மருமான் தேச சிந்தனை செய்வார். யாருடனும் தேசத்தைப் பற்றியே பேசலுற்ருர். இது கடயத்தில் உள்ள மனைவியின் காதிலும் எட்டிற்று. மனைவிக்குப் போலீஸ் பயம் பிடித்துக் கொண்டது. கவலையுற்றுக் கணவருக்குக் கடிதம் வரைந்தாள். பாரதி அக் கடிதத்திற்குப் பதிலாக மனைவிக்கு எழுதினுர். "இந்த மாதிரி கவலைப்படுவதை விட்டு நேரத்தைத் தமிழில் செலவழி" என்று.

## 3

டில்லி தர்பாருக்குச் சென்று திரும்பும்போது எட்டயபுரம் அரசர் காசியில் தங்கினுர். பாரதியை ஊருக்கு வரும்படி கூறி அழைத்துத் தமது சமஸ்தானத்தில் மாதம் பன்னிரண்டு ரூபாய் ஊதியத்தில் வேலைக்கு அமர்த்திக் கொண்டார். 1902 முதல் 1904 வரை எட்டயபுரத்தில் மன்னருக்குத் தோழராக வாழ்ந்து வந்தும் மனத்திற்குப் பிடிக்காத வேலையாகவே அதைக்கருதி வந்தார்.

1904-ல் எட்டயபுரத்தை விட்டு மதுரை சென்று அங்கு சேதுபதி கலாசாலையில் மூன்று மாதம் தமிழாசிரியர் வேலை பார்த்தார். மதுரையில் கோபாலகிருஷ்ணய்யர் பாரதியின் பேரில் மிகவும் அன்பு காட்டி வந்தார். பெரும்பாலும் அவருடைய உதவியாலேயே பாரதியார் 1904-ம் ஆண்டு சென்னையில் சுதேசமித்ரனில் பேனா பிடித்தார். சுதேசமித்ரன்மணி (திரு. ஜி. சுப்ரமணிய அய்யர்) தமிழ் மணியாகிய பாரதியைக் கண்மணிபோல அன்புடன் போற்றி வந்தார்.

தம் கொள்கைகளை வீராவேசம் பொருந்திய நடையில் எழுத விரும்பிய பாரதி சென்னையில் புரட்சிகரமான வாரப் பத்திரிகை "இந்தியா"வைத் தொடங்கினுர். தொடங்கிய ஒரு மாதத்தில் அதற்கு நாலாயிரம் சந்தாதார்கள் சேர்ந்தனர். காலத்திற்கேற்ற விஷயம், விஷயத்திற்கேற்ற உணர்ச்சி, உணர்ச்சிக்கேற்ற தெளிவு, தெளிவிற்கேற்ற திண்மையுடன் அஞ்சா நெஞ்சம் படைத்த பாரதவாணி "இந்தியா" மூலம் உறங்கிக்கிடந்த தமிழரைத் தட்டி எழுப்பியது. சென்னை வாசத்தில் மண்டயம் ந. திருமலாச்சாரி, எஸ். ஸ்ரீநிவாஸாச்சாரி, சா. துரைசாமி ஐயர், வி. சர்க்கரைச் செட்டி, வ. உ. சி. ஆகியோருடன் பாரதிக்கு நட்பு ஏற்பட்டது. இது சமயம் விபின சந்திரபாலரும் சென்னைக்கு விஜயம் செய்தார்.

1907-ம் டிசம்பர் மாதம் சூரத்தில் காங்கிரஸ் கூடிற்று. திலகரின் தீவிரவாத கோஷ்டிக்கு ஆதரவு அதிகரித்து வந்த கால மது, வ. உ. சி., மண்டயம், ஸ்ரீநிவாஸாச்சாரியுடன் சென்னை தீவிர இளைஞர் கோஷ்டியை அழைத்துக்கொண்டு பாரதி சூரத் சென்றார். காங்கிரஸில் பிளவு ஏற்பட்டது. பாரதி திலகர், அரவிந்தர், லஜபதிராய் இவர்களைச் சந்தித்தார். பழுத்த மிதவாதி யான வி. கிருஷ்ணசாமி ஐயர்கூட பாரதியின் தேசிய கீதங்களில் மோகித்துப்போனார். "சுதேச கீதங்கள்" என்ற தலைப்பில் மூன்று பாடல்கள் கொண்ட நாலு பக்கப் பிரசுரத்தை நிறைய வெளியிட்டு இலவசமாக விநியோகிக்க உதவினார் கிருஷ்ணசாமி ஐயர்.

சென்னை தீவிர வாதிகளின் கோட்டைகளுள் ஒன்றாகக் கருதப்பட்டது. "சுயராஜ்ய தினம்" சென்னையில் பாரதியாலும், தூத்துக்குடியில் வ. உ. சி., சுப்ரமணிய சிவா, சுதேசி பத்மநாபயங் கார் முதலோராலும் கொண்டாடப்பட்டது. இதன் பயனாக வ. உ. சி.யும் சிவாவும் கைது செய்யப்பட்டுச் சிறைத் தண்டனை பெற்றனர். இவ் வழக்கில் பாரதி சாட்சி சொல்ல முன்வந்தார். "சுதேச கீதங்கள்" என்ற தமது முதல் கவிதைத் தொகுதியை 1908-ல் வெளியிட்டார். "இந்தியா" பத்திரிகைமீது சர்க்காரின் பார்வை விழவே பாரதிமீது வாரண்டு பிறந்தது. பாரதி தப்பிப் போய்ப் புதுச்சேரி சேர்ந்தார். பழக்கமற்ற புது ஊர், போலீஸ் தொல்லை வேறு.

இங்கு வறுமையும், அனுதாரவும், காவலும், கட்டுப்பாடுகளும் பாரதியைக் கடுமையாகச் சோதித்தன. எதற்கும் மனங்கலங்காமல் பாரதியார் தமது சுதேச விரதத்தைக் காத்தார். "இந்தியா" வும் புதுவை வந்து பிரஞ்சிந்திய எல்லைக்குள் இருந்து நெருப்பு மழை பொழியத் தொடங்கியது. பத்திரிகையின் செல்வாக்கு அதிகரிப்பது கண்டு பிரிட்டிஷ் இந்தியாவில் நுழையாதபடி பிரிட்டிஷ் சர்க்கார் தடையுத்திரவு பிறப்பிக்கவே "இந்தியா" நின்று போயிற்று.

4—4—1910-ல் அரவிந்தர் புதுச்சேரிக்கு ரகசிய யாத்திரை செய்தார். அரவிந்தர் வந்ததுமுதல் பாரதியார் வாழ்வும் நினைப்பும் புதுமைபெற்றன என்று கூறலாம். அவர் உறவினால் பாரதியாரின் உள்ளம் வேத ரிஷிகளின் வாக்குகளில் பாய்ந்தது. பாரதியார் கீதையை அழகான தமிழில் மொழி பெயர்த்தார். வேத பாசுரங் களில் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். சில பாசுரங் களைப் பின்பற்றித் தமிழில் அமுதகானம் பொழிந்தார். பதஞ்சலி யின் யோக சூத்ரத்தை ஆராய்ந்தார். கண்ணனிடம் காதல் கொண்டு "கண்ணன் பாட்டு"ப்பாடினார். வியாசரின் சபா பருவத்தைப் படித்து இனிமையும், அழகும், உணர்ச்சியும் பொருந்திய, எளிய நடையில் "பாஞ்சாலி சபதம்" எழுதினார். இதற்கிடையில் வ. வே. சு. ஐயரும் புதுவை வந்து சேர்ந்தார்.

ஸ்ரீ அரவிந்தர் உறவு அத்யாத்ம ஞானத்தைப் பாரதிக்குத் தந்த தாயின் ஐயரின் உறவு வீரக்கலை ஞானத்தைத் தந்தது எனலாம்.

கொடிய வறுமையையும் பொறுத்துக்கொண்டு பாரதி தமது பணியைச் செய்து வந்தார். வறுமை எனும் உரம்போட்டுக் கவிதைப் பயிரைப் பேணி வளர்த்தார். அவர் வருந்திய வறுமை தமிழருக்காக செய்யப்பட்ட கடுந்தவமும் தியாகமும் ஆகும். அந்தத் தவத்தில் பொரிந்தெழுந்த கவிதை தமிழர் உள்ளத்தை இன்று ஆளுகிறது என்றால் மிகையாகாது. பாரதி பத்தாண்டுகள் புதுவையில் இருந்தது தமிழருக்குப் பெரிய பாக்கியம். இக் காலத்திலேதான் பாரதியாரின் நூல்கள் எல்லாம் உருக்கொண்டன.

## 4

புதுவை வாசம் சலித்துப்போகவே அதைவிட்டு "அச்சமில்லை, அச்சமில்லை" என்று பாடிக்கொண்டே 1919-ல் கடலூருக்கு ஓடினார். கடலூர் சென்றதும் போலீஸாரால் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்பட்டார். முடிவில் வழக்கில்லை என விடுதலை செய்யப்பட்டதும் நேரே மனைவியின் ஊராகிய கடயத்திற்குச் சென்றார். கடயவாசத்தின்போது திருவனந்தபுரம், எட்டயபுரம், காரைக்குடி, கானாடுகாத்தான் ஆகிய இடங்களுக்குப்போய் வந்தார். பணம் வேண்டி எட்டயபுரம் மன்னருக்குச் சீட்டுக் கவிகள் அனுப்பினார்; பயனில்லை.

1919-ம் ஆண்டு மார்ச் மாதம் பாரதியார்மீண்டும் சென்னைக்கு வந்தார். மீண்டும் சுதேசமித்ரனில் உதவியாசிரியராக வேலை ஏற்றுக்கொண்டார். அநேகம் கட்டுரைகள் எழுதிக் குவித்தார்.

1921-ம் ஆண்டு திருவல்லிக்கேணி கோயில் மதயானையால் ஒதுக்கித் தள்ளப்பட்டுக் கீழேவிழுந்தார். அந்த அதிர்ச்சியால் கவிஞர் நோய்வாய்ப் பட்டார். பிறகு சிறிது குணமடைந்தாலும் வயிற்றுக்கடுப்பு நோய் பீடித்தது. மருந்துண்ண மறுக்கவே நோயின் கடுமை அதிகரித்து வந்தது. 11—9—1921-ந் தேதி நள்ளிரவில் 39 வயதுகூட நிறையாத கவி பாரதி பூத உடலை நீத்தார்.

---

**பாரதி வாக்கு**

தமிழ் வசனநடை இப்போதுதான் பிறந்தது, பல வருஷமாக வில்லை ஆதலால், இப்போதே நமது வசனம் உலகத்தில் எந்தப் பாஷையைக் காட்டிலும் தெளிவாக இருக்கும்படி முயற்சிகள் செய்ய வேண்டும். கூடியவரை பேசுவதுபோல எழுதுவதுதான் உத்தமம் என்பது என்னுடைய கட்சி. ஒரு கதை, அல்லது தர்க்கம், ஒரு சாஸ்திரம், ஒரு பத்திரிகை விஷயம்—எதை எழுதினாலும் சரி வார்த்தை சொல்கிற மாதிரியாகவே அமைந்து விட்டால் நல்லது.

தமிழ் ஒரு பெருங்கடல் என்ருல், பாரதி இலக்கியத்தை அக் கடலிலே மிதந்து செல்லும் ஓடமெனலாம். பாரதி தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் தமது இலக்கியத்தின் மூலம்செய்த தொண்டிற்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிருேம்.

இலக்கியத்திற்குப் பாரதி கூறும் இலக்கணத்தோடு இக் கட்டுரையை முடிப்போம்: "எதுகை மோனைகளுக்காக, சொல்ல வந்த பொருளை மாற்றிச் சொல்லும் பண்டிதன் சரஸ்வதியின் கடாக்ஷத்தை இழந்து விடுவான். யமகம், திரிபு முதலிய சித்திரக் கட்டுக்களை விரும்பி, சொல்லுக்குத் தக்கபடி பொருளைத் திரித்துக் கொண்டு போகும் கயிறு பின்னிப் புலவன் வாணியின் திருமேனியை நோகும்படி செய்கிருன். அவசியமில்லாத அடைமொழிகள் கோப்போன் அந்தத் தெய்வத்தின்மீது புழுதியைச் சொரிகிருன். உலகத்தாருக்குப் பொருள் விளங்காதபடி இலக்கியம் செய்வோன் அந்தச் சக்தியைக் கரித்துணியாலே மூடுகின்ருன். இலக்கியத்திற்குத் தெளிவும் உண்மையுமே உயிரெனலாம், இவ்வுயிருடைய வாக்கே அருள்வாக்கு என்று சொல்லப்படும்."

பாரதியைப் பற்றிய முக்கியமான நூல்கள் :—

1. மஹாகவி பாரதியார்—எழுதியவர் வ. ரா.
   வெளியீடு "சக்தி கார்யாலயம்"
   3-111, மவுண்ட் ரோட், சென்னை-6.

2. பாரதியார் சரித்திரம்—எழுதியவர் செல்லம்மா பாரதி
   வெளியீடு, சக்தி காரியாலயம், சென்னை-6.

3. சித்திரபாரதி—எழுதியவர் ரா. அ. பத்மநாபன், வெளியீடு — அமுத நிலையம், (ப்ரைவேட்) லிமிடெட்-தேனாம்பேட்டை, சென்னை-18.

4. பாரதி தமிழ்—எழுதியவர் பெ. தூரன்
   வெளியீடு, அமுத நிலையம், சென்னை-18.

5. பாரதி நினைவுகள்—எழுதியவர் யதுகிரி அம்மாள்
   வெளியீடு, அமுத நிலையம், லிமிடெட், சென்னை-18.

EASY INSTALMENTS

# at no extra cost..

- This Offer is only for a short period.
- Remembér: All USHA ceiling fans have double ball-bearings to ensure long life.
- For terms contact the nearest USHA fan dealer.



USHA

BUY NOW *Most popular fan on sale to-day.*

JAY ENGINEERING WORKS LIMITED, CALCUTTA

JF-47

# பாரதியும் விஞ்ஞானமும்

பெ. நா. அப்புஸ்வாமி

நாட்டில் முன்னேற்றத்தைக் கருதும் ஒவ்வொருவனும் விஞ்ஞானத்தினால் நாட்டுக்கு ஏற்படக்கூடிய நன்மைகளைப் பற்றிச் சிந்திக்காமல் இருக்க முடியாது. விஞ்ஞானம் நல்லதா? அதைப் படைத்தது அருள் நிரம்பிய கருணைத் தெய்வம் தானா? அல்லது மானிடர்களை மயக்கி, மாயத்தில் ஆழ்த்தி, நன்மை தீமைகளை அறிய வொட்டாது தடுத்து, மனித இனத்துக்கே தீங்கிழைக்க முயலும் சைத்தான் வேண்டுமென்று படைத்த படைப்பா அது?

இவ்வாறான வீண் எண்ணங்களை எண்ணிக்கொண்டிருப்பதினால் இப்போது யாதொரு பயனும் இல்லை. கூரியகத்தியைப் போன்றது விஞ்ஞானம். கல்வி நல்லதா? கெட்டதா? கத்தியின் குணம் கத்தியை உபயோகப்படுத்துபவனைப் பொறுத்திருக்கிறதே தவிரக் கத்தியை மட்டும் அது பொறுத்ததன்று. கத்தியால் உயிரைப் போக்கலாம். உயிரைக் காக்கவும் செய்யலாம். நற்குணமுடையவன் கையிலே இருக்கும் கத்தி நன்மையேதான் பயக்கும். அவன் கையில் அது சிறந்த கருவியாக விளங்கும். ஆனால் கெட்ட மனம் படைத்த தீயவன் ஒருவன் கையில் ஏறிவிட்டாலோ, அதனால் விளையக்கூடிய தீங்குகளுக்கும் கொடூரங்களுக்கும் கணக்கு ஏது? கலப்பை என்னும் உழு கலம் மக்களுக்கு உணவளிக்கும் நற்காரியத்தோடு பிணைப்புண்டது. நன்மைக்கும், நற்செயல்களுக்கும், நல்ல விளைவுகளுக்குமே அறிகுறியாக உள்ளது. இவ்வாறுதானே யாவரும் எண்ணுவார்கள்? அப்படி எண்ணுவதும் நியாயம்தான். ஆனால் அதையும்கூட ஒரு சந்தர்ப்பத்தில் படைக்கலமாகப் பலராமன் வழங்கினன் என்ற கதையைக் கேட்டதில்லையா? தற்கால வாழ்விலும் எத்தனையோ பேர்கள் மண்வெட்டியாலும், கடப்பாரையாலும் உயிர்க்கொலை செய்யவில்லையா?

ஆதலால், சக்தி பொருந்திய விஞ்ஞானத்தைக் குறை கூறுமல்—குறை கூறினுலும் பயனில்லை; ஏனெனில் அது உலகத்திலே நிலையாக நிலைத்துவிட்டது — விஞ்ஞான விஷயங்களை நன்கு அறிந்து, அவற்றை நல்ல முறையிலே பயன்படுத்தி, நாட்டின் வளத்தையும், நாட்டு மக்களின் நலத்தையும் சீராக அமைத்துக்கொள்ள வேண்டும். இதுதான் அறிவாளிகளின் கடமை. விஞ்ஞானத் துறைகளில் ஈடுபடாத நாடு முன்னேற்றம் அடையாது. அது இருக்கும் நிலையில் தங்கி நிற்கும் என்று சொல்லுதற்கும் இல்லை. நாகரிக ஏணியிலும், உலக மதிப்பிலும் அது பிற்போக்காகச் செல்லத் தொடங்கி, உலகத்தாரின் அவமதிப்புக்கு உள்ளாகி, என்றும் நீங்காத அடிமைத்தனத்திலேயே ஆழ்ந்து கிடக்கும்.

இவ்வாறுன எண்ணங்களைப் பாரதி கொண்டிருந்தார். தம்முடைய நூல்களில் அடிக்கடி இவற்றை வெளியிட்டிருக்கிறுர். நவீன விஞ்ஞான சாஸ்திரங்களிலே அவருக்குப் பூரண நம்பிக்கை உண்டு. அதனுல் அவர்

> " சாஸ்திரம் பெரிது. சாஸ்திரம் வலியது. அஷ்ட மகா சித்திகளும் சாஸ்திரத்தினுல் ஒருவேளை மனிதனுக்கு வசப்படலாம்.' (தத்துவம் : பக்கம் 109)

என்று சொல்லுகிறுர். அவற்றை நமது நாட்டில் அனைவருக்கும் கற்றுக் கொடுப்பது அவசியம் என்று நினைத்து, அந்த அவசியத்தைப் பல இடங்களில் வற்புறுத்துகிறுர்.

> " ஐரோப்பிய ஸயன்ஸின் ஆரம்ப உண்மைகளைத் தக்க கருவிகள் மூலமாகவும் பரிட்சைகள் மூலமாகவும் பிள்ளைகளுக்குக் கற்பித்துக் கொடுத்தல் மிகவும் அவசியமாகும். பிள்ளைகளுக்குத் தாங்களே 'ஸயன்ஸ்' சோதனைகள் செய்து பார்க்கும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். வியாபார விஷயங்களுக்கு ரஸாயன சாஸ்திரம் மிகவும் பிரதானமாகையால், ரஸாயனப் பயிற்சியில் அதிக சிரத்தை காண்பிக்கவேண்டும். (கலைகள் : பக்கம் 60-61)

'விஞ்ஞானத் துறைகளிலே நாம் இவ்வளவு பின்னணியில் நிற்கிறோமே. மேலை நாடுகள் யாவும் அவற்றில் அத்துணை முன்னேற்றம் அடைந்திருக்கின்றனவே. நம்மால் அவைகளை எட்டிப் பிடிக்க முடியுமா?' என்று அஞ்சுவோனுக்குத் தைரியம் சொல்லுகிறுர்.

'தமிழா, பயப்படாதே, ஊர் தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங் களை எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்.'

(கலைகள் : பக்கம் 4)

ஆனால் இத்தகைய காரியம் வாய்ப் பேச்சால் ஆகாது. ஊன்றி ஆராய்ந்து உண்மையாக உழைத்தாலன்றி இது கை கூடாது. வெறும் பேச்சுப் பேசுகிறவர்கள் மெய்யான தேச பக்தர்கள் அல்லர். அவர்கள் வெறும் நடிப்புச் சுதேசிகள் என்று அவர்களை இகழ்ந்து கூறுகிறார். இகழ்ச்சியின் சிகரம், தான் காதல் கொண்ட பெண் இகழ்வதல்லவா? அதனாலேதான் தோல்வியுற்ற இராவணன் இலங்கை திரும்பும்போது, தலை குனிந்த வண்ணமாய் வருகிறான். அப்போதுள்ள அவனுடைய மனநிலையைச் சித்திரித்துக் காட்டும் கம்பர்,

"வான்நகும் ; மண்ணும் எல்லாம்
நகும்—மணி வயிரத் தோளான்
'நான்நகு பகைஞர் எல்லாம்
நகுவர்' என்று அதற்கு நாணான் ;
'வேல்நகு நெடுங் கண், செவ் வாய்,
மெல் இயல் மிதிலை வந்த,
சானகி நகுவள்'—என்றே
நாணத்தால் சாம்புகின்றான்."

என்று தான் காதலித்துக் காதலைக்கோரும் பெண்ணாகிய ஜானகி தன்னை இகழ்வாளே என்பதையே குறித்து மனம் வாடுவதாகக் காட்டியிருக்கிறார். அதைப் போலவே பாரதியும் நடிப்புச் சுதேசிகளை இகழும் வார்த்தைகளைக் காதற் பெண்கள் வாயில் வைக்கிறார்.

"யந்திரசாலை யென்பர்.
எங்கள் துணிக ளென்பர்,
மந்திரத்தாலே யெங்கும் – கிளியே
மாங்கனி வீழ்வ துண்டோ ?"
"உப்பென்றும் சீனி யென்றும்
உள்நாட்டுச் சேலை யென்றும்
செப்பித் திரிவாரடீ—கிளியே
செய்வ தறியாரடீ"

இந்தப் பாட்டுக்களிலே இகழ்ச்சி எப்படித் தொனிக்கிறது பார்த்தீர்களா ?

இவர்களைத் தவிர மற்றொரு வகைச் 'சுதேசிகள்' மீதும் பாரதிக்கு அடங்காத கோபம் உண்டு. அவர்கள் குறைகூறும் சொல்லில் உண்மை சிறிது கலந்து கிடக்கிறது என்பதுதான் பாரதியின் கருத்து. வசைச் சொல்லில் உண்மை கலந்து கிடந்தால்தானே அதன் காரம் அதிகம்; அது மிகவும் நன்றாக உறைக்கும்? தன் மகன் ஒருவன் தனக்கு வேண்டியன செய்யாமல், தன்னைக் குறை கூறுவதாக வருந்துகிறாள் தமிழ்த் தாய். அவன் சொன்ன சொல் அவளுடைய நெஞ்சில் கிடந்து உறுத்துகிறது. அதைப் புண்படுத்திக்கொண்டே யிருக்கிறது. அச் சொல்லால் துடிதுடிக்கிறாள். ஆனால், அவன் சொல்லியது முற்றிலும் பிசகு அன்று. ஆதலால் கோபமும் வருத்தமும் ஒருங்கே கொண்ட தமிழ்த் தாய் தன்னுடைய அருமை மக்களைப் பார்த்து, அந்தக் கெட்ட மகன் என்னைக் குறை சொன்னான். அந்தக் குறையை நீங்கள் உடனே நீக்குங்கள் என்று கெஞ்சுகிறாள், வற்புறுத்துகிறாள், ஆத்திரத்தோடு உத்தரவு இடுகிறாள். இது பாரதி கண்ட காட்சி. அதைச் சொல்லுகிறார் கேளுங்கள்,

" இன்னொரு சொல்லினைக் கேட்டேன் !—இனி
ஏது செய்வேன் ? எனதாருயிர் மக்காள் !
கொன்றிடல் போலொரு வார்த்தை—இங்கு
கூறத் தகாதவன் கூறினன் கண்டீர் !

" புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும் ;
மெத்த வளருது மேற்கே ; அந்த
மேன்மைக் கலைகள் தமிழில் இல்லை.

" சொல்லவும் கூடுவ தில்லை—அவை
சொல்லும் திறமை தமிழ் மொழிக் கில்லை ;
மெல்லத் தமிழினிச் சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசை யோங்கும் "

" என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ !
இந்த வசை யெனக் கெய்திட லாமோ !
சென்றிடுவீ ரெட்டுத் திக்கும்—கலைச்
செல்வங்கள் யாவுங் கொணர்ந் திங்குச் சேர்ப்பீர் "

(தமிழ்த் தாய் தன் மக்களைப் புதிய சாத்திரம் வேண்டல்.)

இந்த அவசியத்தை அவர் அடிக்கடி சொல்லுகிருர்.

“ காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே!”

“ பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்
மொழியில் பெயர்த்தல் வேண்டும்”

“ இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்
மொழியில் இயற்றல் வேண்டும்.”

“ உலோகநூல் கற்றுணர்”

“ வான நூற் பயிற்சி கொள்.”

குறைகளை வரிசையாக அடுக்கி மனத்தைத் தளரச் செய்வது தலைவர்களுக்கு உரிய காரியம் அன்று. அவற்றை உணர்ந்து, அவற்றை நீக்குவதற்கு உரிய உபாயங்களைத் தேடி, மக்கள் மனத்திலே கிளர்ச்சியையும் ஊக்கத்தையும் தோன்றச் செய்து. காரியத்தை முடிப்பதே அவர்களுடைய கடமை. கவியின் கடமையும், அவன் செய்யக்கூடிய உதவியும் அதுவே. ஆகையால் பாரதி ஒரு தீர்க்கதரிசியாக விளங்கி, சங்கநாதம் போன்ற குரலில் மக்களை எழுப்பி, அவர்களுக்குத் தைரியம் அளிக்கிருர்.

‘பூமண்டல முழுதிலும் பெரிய விழிப்பொன்று வரப்போகிறது.

அதற்காதாரமாக ஹிந்துஸ்தானம் கண்ணை விழித்து இருபதாண்டுகளாயின. ஹிந்துஸ்தானத்துக்குள் தமிழ்நாடு முதலாவது கண் விழித்தது. ஆனல், இன்னும் புத்திசரியாகத் தெரியாமல் கண்ணை விழிப்பதும் கொட்டாவி விடுவதுமாக இருக்கிறது.

(கலைகள் : பக்கம் 94)

நமது நாட்டின் பழங்காலப் பெருமைகளைப் பெரிதாகக் கொண்டாடிப் புகழ்ந்து நம்மை உற்சாகப்படுத்துகிருர், பாரதி.

‘பூர்வ காலத்தில் பலவகை கணித சாஸ்திரங்களும் இயற்கை நூல்களும் பாரத நாட்டிலேதான் பிறந்து பின்பு உலகத்தில் பரவி யிருப்பதாகச் சரித்திர ஆராய்ச்சியிலே தெரிகிறது.’ (தத்துவம் : பக்கம் 109)

'நமது பூர்விகர் சயின்ஸ் தேர்ச்சியிலே நிகரில்லாது விளங்கினார்கள். அந்தக் காலத்து லௌகிக சாஸ்திரம் நமக்குத் தெரிந்தமாதிரி வேறு யாருக்கும் தெரியாது. இந்தக் காலத்து சங்கதிதான் நமக்கு கொஞ்சம் இழுப்பு.'
(சமூகம் : பக்கம் 160)

அதே சமயத்தில் நாம் தற்காலத்தில் சற்றே பின்வாங்கித் தான் இருக்கிறோம் என்பதையும் நினைப்பூட்டுகிறார். மேலை நாடுகளில் இத்துறைகளிலே முன்னேறி யிருக்கிறார்கள். அத் தகைய முன்னேற்றத்தை நாமும் பெறவேண்டியதற்கு உரிய முயற்சிகளைச் செய்ய எத்தனையோ பேர்கள், திறமையுள்ளவர் கள், ஆவலோடிருக்கிறார்கள் என்கிறார்.

'பஞ்ச பூதங்களின் இயற்கையைப் பற்றின ஆராய்ச்சிகளிலே, நம்மைக் காட்டிலும் ஐரோப்பியர் முன்னேறி நிற்பது தெரிந்த விஷயம். ஆதலால், ஐரோப்பாவில் வழங்கும் லௌகிக சாஸ்திரங்களைத் தமிழில் எழுதவேண்டுமென்று பண்டிதர் மிகவும் ஆவலோடிருக்கிறார்கள். ஏற்கெனவே சில பகுதி களின் ஆரம்பம் தமிழில் மொழி பெயர்த்திருக்கிறது. இந்த முயற்சி மேன்மேலும் வளரும். வளர்ந்து தீரவேண்டும்.'
(கலைகள் : பக்கம் 98)

அப்பேர்ப்பட்ட அவசியமான காரியம் அவர்களிடத்தே ஆவலோடு மட்டிலும் நின்றுவிடவில்லை. செயலிலும் சிறிதளவு வந்திருக்கிறது. ஆனால் அந்த அளவு போதாது. இன்னும் மேன்மேலும் அது வளரவேண்டும் என்பதை உணர்த்துகிறார்.

'அந்த சாஸ்திரங்களை யெல்லாம் ஏக காலத்திலே தமிழில் எழுதி முடிப்பதற்காக பண்டித சங்கம் ஏற் படக் கூடும். நமது ராஜாக்களுக்கும், ஜெமீன்தார் களுக்கும், செட்டிகளுக்கும் நல்ல புத்தி யுண்டாகித் தமிழில் நவீன சாஸ்திரம் சேர்ப்பதாகிய காரியத்தை அவர்கள் தக்க பண்டிதர்களின் உதவிகொண்டு, விரைவில் நிறைவேற்றி மேன்மை பெறக் கூடும்.'
(கலைகள் : பக்கம் 98)

பாரதி சொல்லிய காரியங்கள் நடந்தேறி வருகின்றன. அவர் ஆசைப்பட்டபடியே 'ராஜாக்களும், ஜெமீன்தார்களும், செட்டிகளும்' ஓர் அளவில் இம் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார் கள். இன்னும் மேன்மேலும் முயலுவார்கள் என்பது உறுதி.

இப் புதிய நூல்களை மொழி பெயர்க்கும் முறைகளைப் பற்றியும் கற்பிக்கும் முறைகளைப் பற்றியும் அவர் சொல்லி யிருக்கிறார்.

'பௌதிக சாஸ்திரங்கள் கற்றுக் கொடுப்பதில் மிகவும் தெளிவான எளிய தமிழ் நடையில் பிள்ளை களுக்கு மிகவும் சுலபமாக விளங்கும்படி சொல்லிக் கொடுக்க வேண்டும்.' (சமூகம் ; பக்கம் 60–61)

இவற்றின் முதற்படி இன்னது என்று குறிப்பிடுகிறார்.

'இதற்கெல்லாம் முன்னதாகவே பண்டிதர்கள் செய்து வைக்கவேண்டிய அடிப்படைக் காரியம் ஒன்றுண்டு. கூடியவரை பரிபாஷையை நிச்சயப் படுத்தி வைத்தால், பிறகு மொழிபெயர்ப்புத் தொடங்குவோர்க்கு அதிக சிரம மிராது; ஸங்கட மிராது.' (கலைகள் : பக்கம் 98–99)

பாரதி 'பண்டிதர்கள்' என்று குறிப்பிடுவது தமிழ்ப் பண்டிதர் களை மட்டும் அன்று, விஞ்ஞான சாஸ்திரப் பண்டிதர்களையும் கூடவே சேர்த்துத்தான். இவ்விருவகைப் பண்டிதர்களும் ஒன்று சேர்ந்தாலன்றி இந்தக் காரியம் நடைபெறுவது கஷ்டம். வெறும் தமிழ்ப் பண்டிதர்கள் மட்டும் ஒன்றாகக் கூடினால் அவர்கள் பழைய தமிழ்ச் சொற்களைத் தேடிப் பிடித்துத் துலக்கிக் கொடுப்பார்கள். ஒருபுறம் துலக்கும்போதே மற்றொரு புறத்தில் துரு ஏறிக்கொண்டு வரும். பொருள் விளங்காது. விஞ்ஞான சாஸ்திரப் பண்டிதர்கள் மட்டும் ஒன்றாகச் சேர்ந் தாலோ, தமிழ்த் தெய்வம் இருக்கிற இடமே தெரியாமல் போய்விடக் கூடும்.

விஞ்ஞானச் சொற்களைத் திரட்ட அவர் ஓர் உபாயம் சொல்லிக் கொடுக்கிறார். கட்சிகள் மிகுந்த இந்தக் காலத்திலே அதைச் சொல்லக் கூடப் பயமாயிருக்கிறது. அவர் சொல்வதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும் என்பதில்லை; ஆனாலும் அவர் சொல்லியதைத் தெரிந்து கொள்ளலாம் அல்லவா?

'இயன்ற இடத்திலெல்லாம் பதார்த்தங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே உபயோகப்படுத்தவேண்டும். திருஷ்டாந்தமாக "ஆக்ஸிஜன்", "ஹைட்ரஜன்" முதலிய பதார்த்தங்களுக்கு ஏற்கெனவே தமிழ் நாட்டில் வழங்கப்பட்டிருக்கும் பிராணவாயு ஜலவாயு என்ற நாமங்களையே வழங்கவேண்டும். தமிழ்ச் சொற்கள் அகப்படாவிட்டால் ஸம்ஸ்கிருத பதங்களை

வழங்கலாம். பதார்த்தங்களுக்கு மட்டுமேயன்றிக் கிரியைகளுக்கும் அவஸ்தைகளுக்கும் (நிலைமைகளுக்கும்) தமிழ், ஸம்ஸ்கிருத மொழிகளையே வழங்குதல் பொருந்தும். இந்த இரண்டு பாஷைகளிலும் பெயர்கள் அகப்படாத இடத்தில் இங்கிலீஷ் பதங்களையே உபயோகப்படுத்தலாம். ஆனால் குணங்கள், செயல்கள், நிலைமைகள்—இவற்றிற்கு இங்கிலீஷ் பதங்களை ஒருபோதும் வழங்கக் கூடாது. பதார்த்தங்களின் பெயர்களை மாத்திரமே இங்கிலீஷில் சொல்லலாம், வேறு வகையால் உணர்த்த இயலாவிடின்.'

(சமூகம்: பக்கம் 62–63)

ஆங்கிலேயரும் பிற ஐரோப்பிய நாட்டினரும் சாஸ்திரச் சொற்களை கிரேக்க பாஷையிலிருந்தும், லத்தீன் பாஷையிலிருந்தும் எடுத்துக்கொண்டிருக்கின்றனர். நம்முடைய தேசத்தில் நாம் எளிய ஸம்ஸ்கிருத பதங்களைக்கொண்டு அச்சொற்களை அமைக்கலாம். அப்படி அமைத்தால் நாட்டினர் அனைவரும் ஒரே வகை சொற்களை வழங்குவதற்கு அது அனுகூலமாயிருக்கும் என்பது பாரதியாரின் கொள்கை. (கலைகள் : பக்கம் 100) ஆனால் இத்தகைய ஒற்றுமை போதுமா? உலகத்தார் அனைவரோடும் ஒற்றுமை இந்த வகையிலாவது பாராட்டக்கூடாதா என்னும் விஷயங்களை அறிவாளிகள் சிந்திப்பது அவசியமாகும்.

விஞ்ஞானத் துறையிலே பெண்களும் ஈடுபடவேண்டும், அவ்வாறு ஈடுபடுவதற்கும் அவர்கள் ஆவலோடு இருக்கிறார்கள் என்கிறார்.

'உலக வாழ்க்கையி னுட்பங்கள் தேரவும்,
ஓது பற்பல நூல் வகை கற்கவும்,
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார்நங்கள் பாரதி
தேச மோங்க உழைத்திட வேண்டுமாம்'

'சாத்திரங்கள் பற்பல செய்வாராம்.'

விஞ்ஞானம் கொடியது; தீங்கிழைப்பது; அதனால் தீது என்று சிலர் குறை சொல்லுகிறார்கள். மென்மையே உருவெடுத்தவராய், அன்பே மனமாகப் படைத்தவராய் உள்ள பெண்கள் விஞ்ஞானத் துறையிலே இறங்கினால், வல்நெஞ்சினரான ஆடவர் விஞ்ஞான அறிவைக் கொண்டு இழைக்கும் தீங்குகளைத்

தடுத்து, அந்த அறிவை நல்ல வழியில் செலுத்துவதற்கு அப் பெண்கள் நிச்சயமாக முயலுவார்கள். அப்போது விஞ்ஞானம் தெய்வத்துக்கு உகந்த விஷயமாகி இருக்கும் என்கிறார்.

'காத்து மானிடர் செய்கை யனைத்தையும்
கடவுளர்க் கினிதாகச் சமைப்பாராம்'

இத்தனை வகையாக மக்களைத் தூண்டி ஊக்குவித்த பாரதி, தானும் கச்சை கட்டிக்கொண்டு 'உங்களை ஏவிவிட்டு விட்டு, நான்மட்டும் பின் நிற்கமாட்டேன்; நானும் கூடவே உங்களோடு உழைக்கிறேன்' என்பது போலச் சொல்லுகிறார்.

'காசி நகர்ப்புலவர் பேசு முரைதான்
காஞ்சியிற் கேட்பதற்கோர் கருவி செய்வோம்'

வேலை செய்யும்போதேகூட உழைப்போருக்கும், தன்னுடைய நெஞ்சுக்குமே தைரியம் சொல்லுகிறார். இனி முன்னேற்றம் பெறுவோம் என்கிறார்.

இப்போது "ஸயன்ஸ்" பயிற்சியில் இவ்வளவு தீவிரமாக மேன்மை பெற்று வருகிறோம்; காலக்கிரமத்தில் தலைமை பெறுவோம். (தத்துவம் : பக்கம் 109)

இவ்வாறு முயலுவோராகிய நாம் சிறந்த நாட்டைச் சேர்ந்தவர், சிறந்த பரம்பரையில் தோன்றியவர், ஆகையால் நாம் இப்போதுள்ள கீழ்நிலைமாறி நாம் மேன்மையுறுவது உறுதி என்று தீர்க்க தரிசனச் சொல்லைத் தைரியமாகக் கூறுகிறார்.

'தந்தை யருள்வலி யாலும்—இன்று
சார்ந்த புலவர் தவவலியாலும்
இந்தப் பெரும்பழி தீரும்—புகழ்
ஏறிப் புவிமிசை யென்று மிருப்பேன்'

இவ்வாறு தமிழ்த் தாயின் வாயிலாகக் கூறும் பாரதி கண்ட கனவை நனவாக நிறைவேற்றி வைப்பது பாரதியைக் கொண்டாடும் நாம் அனைவரும் செய்யவேண்டிய கடமை. அதுவே நம்முடைய தமிழ்த் தாய்க்கு நாம் செய்யவேண்டிய திருப்பணியும் ஆகும்.

— லோகோபகாரி – பாரதி மலர், 1940.

# பாரதியாரும் திருவள்ளுவரும்

"நேரு"

பாரதி பாராட்டிய முப்பெருந் தமிழ்ப் புலவர்களில் வள்ளுவரும் ஒருவர். வாழ்வுக்கு வழிகாட்டும் அறங்களைத் தொகுத்துக் கூறிய தவப் புதல்வர் வள்ளுவர். அதே நெறியில் புதுமை வாழ்வுக்கு வழிகாட்டியவர் பாரதி. அவருடைய பாடல்கள் உயிருள்ள பாடல்கள். சிந்தனையை எழுப்பி, கிளர்ச்சியைத் தூண்டிவிடும் பாடல்கள். உருவான நெறியிலே நடக்க வழிசெய்த பெருமை பாரதியைச் சேர்ந்ததாகும்.

**"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்**
**வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்**
**பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை;**
**உண்மை: வெறும் புகழ்ச்சியில்லை"**

என்கிறார் பாரதி.

வள்ளுவர் எல்லோருக்கும் பொதுவான அறங்களையே கூறியிருக்கிறார். பாரதியும் சாதி, சமய, பேதம் பாராட்டாமல் எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து உரிமையுடன் வாழவேண்டும் என்று கூறியிருக்கிறார். நான்கு சாதியை அடிப்படையாகக் கொண்டு சாதிக்கொரு நீதியைப் போதிக்கும் புராணங்களையும், ஸ்மிருதிகளையும் நன்கு அறிந்த பாரதி, சலித்துப்போய், இம்மாதிரி பேதம் பாராட்டும் நூல்களையெல்லாம் வெறுத்து, உலகத்துக்கே பொதுவான நீதிகளைக் கூறும் திருக்குறளை வகுத்த வள்ளுவரைப் போற்றியிருப்பதில் வியப்பொன்றுமில்லை.

சக்தியென்பது பல்லையும் மூக்கையும் வாயையும் பயங்கரமாக வைத்திருக்கும் ஒரு பெண் தெய்வம் (மகா காளி) என்று பாரதி நினைக்கவில்லை. இதை அவர் தம் "சக்தி"ப் பாடலில், 'செல்வத்தைப் பெருக்கும் அறிவு தான் சக்தி; உலகத்தைத் துன்புறாமல் காப்பதுதான் சக்தி; இழிவு நேராமல் தடுக்கும் திறமை தான் சக்தி; துன்பத்தை விரட்டியடிக்கும் முயற்சிதான் சக்தி; தோல்வியைத் தடுக்கும் வல்லமை தான் சக்தி; வானத்தையும்

அளந்தறியும் பரந்த அறிவுதான் சக்தி; ஊழ்வினையால் வரும் துன்பத்தைத் தகர்த்தெறிவதுதான் சக்தி; உள்ளத்திலே என்றும் விளங்கும் அறிவுதான் சக்தி, என்று அழகாகக் கூறியிருக்கிறார்.

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்"

என்ற குறட்கருத்துக்கள் மேலே காட்டிய பாரதியின் 'சக்தி'ப் பாட்டிலே அடங்கியிருப்பதைக் காணலாம்.

ஒழுக்கந் தவறினால் தாழ்ந்த குடியாகி விடுகின்றனர்; தாழ்ந்த குடியிலே பிறந்தாலும் நல்லொழுக்கத்தைப் பின்பற்றினால் உயர்ந்த குடியினர் ஆகிவிடுவர். உயர்ந்த குடிக்கும், தாழ்ந்த குடிக்கும் ஒழுக்கமே அடிப்படை என்பதை வள்ளுவர்

"ஒழுக்கம் முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்"

என்று கூறியிருக்கிறார். இதையே பாரதியாரும்,

நாலு குலங்கள் அமைத்தான் – அதை
நாசமுறப் புரிந்தனர் மூட மனிதர்
சீலம் அறிவு கர்மம் இவை
சிறந்தவர் குலத்தினில் சிறந்தவ ராம்
மேலவர் கீழவரென்றே – வெறும்
வேடத்திற் பிறப்பினில் விதிப்பன வாம்
போலிச் சுவடியை எல்லாம் – இன்று
பொசுக்கிவிட்டா லெவர்க்கும் நன்மையுண்டென்பான்

என்று பாடியிருக்கிறார். ஒழுக்கம், அறிவு, செய்கை, இவைகளிலே சிறந்தவர்கள் தாம் குலத்தில் உயர்ந்தவர்களாவர்.

கொடுங்கோலையும், செங்கோலையும் விவரிக்கும் பொழுது குடியாட்சியானாலும் சரி, முடியாட்சியானாலும் சரி, மக்கள் நலத்தைக் கருத்திற் கொள்ளாத ஆட்சி நிலைத்து நிற்காது. பெரும்பாலான குடிமக்களின் கருத்துக்கு விரோதமாக ஆளும் குடியாட்சி பொது மக்களாலேயே கவிழ்க்கப்படும். மக்களை மதிக்காத மன்னராட்சியும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிடும் என்பதை,

"கூழும் குடியும் ஒருங்கு இழக்கும்
கோல்கோடிச் சூழாது செய்யும் அரசு"

என்ற குறள் விளக்குகிறது.

இது, பாரதி பாடிய,

" நல்லறம் நாடிய மன்னரை – வாழ்த்தி
நயம் புரிவாள் எங்கள் தாய் – அவர்
அல்லவராயின் அவரை விழுங்கிப் பின்
ஆனந்தக் கூத்திடுவாள் "

என்ற பாட்டுடன் ஒத்திருப்பதைக் காணலாம்.

ஒரு நாட்டிலே தீமைகளுக்கெல்லாம் அடிப்படையாக நிற்பது உணவுப் பஞ்சம். பசியினாலும், பிணியினாலும் வருந்தும் மக்கள் எளிதில் ஜனநாயக ஆட்சிக்கும் விரோதிகளாய்த் திரும்பிவிடுவார்கள். இதை மனத்தில் கொண்டுதான் வள்ளுவரும் பசிக்கு முதன்மை ஸ்தானம் கொடுத்து, தம் குறளில்

" உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு "

என்று கூறியுள்ளார். இந்த அரிய கருத்தைச் சிந்தித்துத்தான் பாரதியாரும்,

" வயிற்றுக்குச் சோறிடவேண்டும் – இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்;
பயிற்றிப் பல கல்வி தந்து – இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும் "

என்று பாடினார்.

பாரதி புரட்சிக் கவிஞர் அல்லவா ? அவர் நன்றுடு எது என்று கூறுவதுடன் நிற்கவில்லை. அதை அடைய, வழிகூறினார். அதற்கு இடையூறு செய்வோரை ஒறுத்து விலக்கவும் துணிந்தார்.

" இனி ஒரு விதி செய்வோம் அதை
எந்தநாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம் "
" உண்மை தவறி நடப்பவர் தம்மை
உதைத்து நசுக்கிடுவான் "

பாரதியின் சிந்தனையிலே இத்தகைய முற்போக்கான கருத்துக்கள் எழுவதற்குக் குறட்பாக்கள் சில ஊக்கமளித்தன. உலகம் போற்றும்படி பலருக்கும் உதவி செய்து வாழ்கின்றவனுடைய

செல்வம், ஊருணியிலே தண்ணீர் நிறைந்திருப்பது போன்று எல்லோருக்கும் பயன்படுவதாகும் என்பதை வள்ளுவர்,

"ஊருணி நீர்நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு" என்று கூறியிருக்கிறார்.

ஊரைச் சுரண்டிக் கொழுக்கின்றவர்களின் செல்வத்தைப் பறிமுதல் செய்வது கூடத் தவறல்ல என்பதே வள்ளுவரின் கருத்து.

"சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்."

நன்மக்கள் குறை கேட்டதும் உதவத் துணிவார்கள். ஆனால் கரும்பை ஆலையிலிட்டுப் பிழிவதுபோல் பலவந்தப் படுத்தினால்தான் குணங்கெட்ட பணக்காரர்கள் பயன்படுவார்கள் என்று கூறுகிறார்.

வள்ளுவரும்—பாரதியும் மகாகவிகள், தாங்கள் சொல்வதை நூற்றுக்கு நூறு கடைபிடிப்பவர்கள். சொல் ஒன்று செயல் ஒன்று என்பது இவர்களிடம் கிடையாது. திருக்குறளையும் பாரதி பாடல்களையும் படிப்பவர்களும் பேசுபவர்களும் இவர்கள் அறிவுறுத்திய பேருரைகளை தங்கள் வாழ்க்கைப் பாதையில் கடைப்பிடித்து ஒழுகுவதே இவ்விரு மாபுலவர்களுக்கும் செய்யும் உன்னதக் கடமையாம். *


# National Shorthand Association,

NEW DELHI.

Newly formed body of shorthand writers,
by shorthand writers, for shorthand writers.

*Patron-in-Chief:* **Shri M. Ananthasayanam Ayyangar,**
Speaker, Lok Sabha.

*Chairman:* **Shri. C. R. Narasimhan, M. P.**

1. High Speed development facilities at Karol–bagh, Lodi Road and Vinay Nagar.
2. Monthly publication "High Speed" supplied free to members.
3. Other useful publications of **ad hoc** nature, e.g. "High Speed: How to attain quickly" by G. H. G. Raman.

Annual Subsn. Rs. 5/-     Entrance Fee Re. 1/-

*Address Enquiries to:*

The Executive Director,
National Shorthand Association,
C/o Delhi Tamil Sangam,
Parliament Street, New Delhi.

# பாரதியார் வாழ்க்கையில் சில நிகழ்ச்சிகள்...

[குறிப்பு :— பாரதியார் உயர்ந்த கலைஞர்; சிறந்த கவிஞர். ஆகையால் அவருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் எல்லாருக்குமே வழிகாட்டும் தகுதி படைத்தவை. பாரதியாரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புப் பெற்ற பலர் பாரதியார் வாழ்க்கை நிகழ்ச்சிகளைச் சொல்லியும் எழுதியும் வருகிறார்கள். புதுச்சேரிக் கவிஞர் பாரதிதாசன், பாரதியார் புதுவையில் இருந்தபோது அவரோடு மிகுந்த ஈடுபாடுடன் பழகி மகிழ்ந்தவர். அவர்மூலம் பாரதியார் வாழ்க்கையைக் கேட்டு மகிழ்ந்தவர்கள் பலர். இக்கவிஞர் பாரதியார் வாழ்க்கையில் ஏற்பட்ட சில முக்கியமான நிகழ்ச்சிகளைக் கவிதையாகப் பாடியுள்ளார். அந்தக் கவிதைகளில் காணும் செய்திகளை இங்கே தொகுத்துத் தருகிறோம்.]

ஒரு சமயம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் கவிதைப் போட்டி ஒன்றை அறிவித்திருந்தார்கள். 'தமிழ்நாடு பற்றிப் பாடப்படும் சிறந்த பாட்டுக்குப் பரிசு வழங்கப்படும்' என்று அந்த அறிவிப்பில் கண்டிருந்தது. இதைப் பார்த்த சில நண்பர்கள் பாரதியார் அப்போட்டியில் கலந்து கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். பாரதியாரோ, "என் கவிதை நன்றாக இருந்தாலும் அவர்கள் அதை ஏற்கமாட்டார்கள். அப்படி ஏற்காவிட்டால்தான் 'சங்கத்தில் சர்க்கார் தயவிருக்கும்!" என்று சொல்லி விட்டார். நண்பர்களுக்கு இது பெரும் ஏமாற்றமாக இருந்தது. அதை அறிந்த பாரதியார். 'உங்களுக்கு வேண்டுமானால் தமிழ் நாட்டைப் பற்றிப்பாடிக் காட்டுகிறேன்." என்றார்.

நண்பர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன், "பாடுங்கள், எதிர் பார்த்துக் காத்திருக்கிறோம்" என்று ஆர்வத்துடன் மொழிந்தார்கள்.

"'செந்தமிழ் நாடென்னும் போதினிலே, இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என்(று) அழகுத் தமிழ் நாட்டை அப்படியே நெஞ்சால் எழுதி முடித்தார்! இசையோடு பாடினார்! காதினிக்கும் நல்ல கருத்தினிக்கும் அஃதிந்நாள் மேதினியிற் சோதி விளக்கு."

* * *

மார்கழி மாதம். குளிர் நிறைந்த வைகறைப் பொழுதில் பாரதியாரும் நண்பர்களும் நீராடுவதற்காக ஊருக்கு அருகிலுள்ள ஒரு குளத்தை நோக்கிப்

போய்க் கொண்டிருந்தார்கள். வழியில், ஒரு நண்பரின் தாயார் பாரதியாரைப் பார்த்து, "திருப்பள்ளி எழுச்சி ஒன்று புதிதாகப் பாடித் தருகிறீர்களா?" என்று கேட்டார். பாரதியாரும் அந்த அம்மையாரின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக வாக்களித்தார்.

எல்லாரும் நடந்து கொண்டிருந்தார்கள், காலையின் அமைதி, இளங்குளிர், சாலையில் உற்சாகமான நடை, இனிய நண்பர்களின் சூழல், எல்லாமாகப் பாரதியாரின் நெஞ்சில் புதிய நெகிழ்ச்சியை உண்டாக்கின;

"நீல மணிஇருட் சாலை அமைதியில் நெஞ்சு குளிரும் நெடுமரச் சாலையின் கோல நடையிற் குதிக்கும் மகிழ்ச்சியில் கோரி உடன்வரும் நண்பர்கள் மத்தியில் காலை மலரக் கவிதை மலர்ந்தது ;—ககனம் முழுமையும் தேனலை பாய்ந்தது. ஞானப் 'பொழுது புலர்ந்த(து)' என்றூர்ந்த நல்ல தமிழ்க் கவி நாமடைந்தோமே."

* * *

இனிய நண்பர்களின் சூழலில் கவிதை அமுது பெய்து இன்பமாக வாழ்ந்து வந்தார் பாரதியார். காலை எழுந்தால், வாடிக்கையாக வரும் அன்பர்களெல்லாம் வந்திருப்பார்கள். கடிதங்களும் பத்திரிகைகளும் வந்திருக்கும். பாரதியார் செய்தித்தாளைப் படித்துவிட்டு தாம் அனுப்பிய கட்டுரை—பாட்டுக்கள் சரியாக வெளிவந்திருக்கின்றனவா என்று கவனமாக அவற்றைப் படித்துப் பார்ப்பார். அதன் பிறகு நண்பர்களோடு பேச்சும் சிரிப்புமாகப் பொழுதுபோகும். "கிண்டல்கள் ஓயாச் சிரிப்பைக் கிளப்புகின்ற துண்டு துணுக்குரைகள், வீரச் சுடர்க் கதைகள்,— இப்படிப் பல. தாம்பூலம் தின்பார்; தமிழ் ஒன்று சிந்திடுவார்... அழிகின்ற நெஞ்சத்தை அன்பில் நனைத்திடுவார்."

* * *

ஒரு நாள் காலை சுமார் எட்டரை மணியிருக்கும், நண்பர்கள் எல்லாரும் மாடி அறையில் கூடி இருந்தார்கள். பாரதியார் கடிதங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். அதில் ஒரு கடிதம் 'சீர்திருத்தம் கொண்டதொரு சென்னைத் தினசரியின் ஆசிரியர் போட்ட கடிதம், அதைப் படித்ததும் பாரதியாரின் முகம் வாட்டமுற்றது.

"என்னை வசனம் மட்டும் நித்தம் எழுதென்று சென்னைத் தினசரியின் ஆசிரியர் செப்புகின்றார். பாட்டெழுத வேண்டாமாம்! பார்த்திரா அன்னவரின் பாட்டின் பயனறியாப் பான்மையினை?— என்றுரைத்தார்."

சிறிது சோர்வுற்றார். 'பாட்டின் சுவை யறிய மாட்டாரோ நந்தமிழர்?' என்று சொல்லி வருந்தினார்; சிந்தித்தார். உடனேயே ஊக்கத் துடிப்புக் கிளர்ந்தெழுந்தது. நன்று மிகநன்று, நான் சலிப்பதில்லை' என்றார்.

நாட்கள் சில சென்றன. பாரதியாரின் பாட்டுத் திறம்

பலரைக் கவர்ந்தது. ஒருநாள் கசின்ஸ் என்னும் ஆங்கிலேயரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில்,

"நீங்கள் எழுதி நிரப்பும் சுவைக்கவியை ஆங்கிலத்தில் ஆக்கி அகில அரங்கேற்றுகிறேன். பாங்காய் எனக்கு நல்ல பாட்டெழுதித் தாருங்கள்."

என்று கண்டிருந்தது. அக்கடிதத்தை நண்பர்களிடம் காட்டினார் பாரதியார். எல்லாரும், "வேண்டும், எழுதத் தான் வேண்டும்," என்றார்கள். பாரதியார், 'வேண்டும் அடி எப்போதும் விடுதலை' என்னும் பாடலை எழுதிக் கொடுத்தார். நாலே நாளில் அப்பாடல் ஆங்கிலத்தில் வெளியாயிற்று. அதைப் படித்த பலரும் மகிழ்ந்து பாராட்டினார்கள்.

முன்பு, 'கவிதை வேண்டாம் வசனம் மட்டும் எழுதுங்கள்' என்று கேட்டுக்கொண்ட தினசரிப் பத்திரிகையின் ஆசிரியர் இனிமேல் கவிதைஎழுதி அனுப்புங்கள்' என்று கேட்டுக்கொண்டார்! இப்புதிய மாற்றத்தைக் கண்டு,

"தாயாம் தமிழில் தரும் கவியின் நற்பயனைச் சேயாம் தமிழன் தெரிந்துகொள்ளவில்லை. அயலார் சுவை கண்(டு) அறிவித்த பின்னர் பயன் தெரிந்தார் நம் தமிழர் என்றுரைத்தார் பாரதியார்."

அந்த நிலை நீங்க வேண்டுமென்றே எளிய நடையில் பாடல்கள் பாடினார் பாரதியார்.

"நல்ல கவி இனிமை நம் தமிழர் நாடும் நாள், வெல்ல வரும் திருநாள்." ○


LAKSHMI APPALAM DEPOT,

MYLAPORE :: MADRAS - 4.

*Dealers in*

QUALITY APPALAMS, APPALA CHIPS
SAMBAR/RASAM POWDER
MANATHAKALI & DRIED VEGETABLES
NENDRANGAI CHIPS
VADASSERI HANDLOOM DHOTIES & TOWELS ETC.

A TRIAL WILL CONVINCE YOU.



பாரதி தம்பதிகள்


இந்தியா.

சனிக்கிழமைதோறும் வெளியாகும்.

புதுவை, " இந்தியா "

# Our Congress Tour.

## எங்கள் காங்கிரஸ் யாத்திரை.

சென்னப்பட்டணத்து ஸென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து 21-ம் தேதி சனிக்கிழமை யன்று மாலை சென்னப்பட்டணத்துப் புதியகட்சிப் பிரதிநிதிகளிலே சுமார் 30 பேர் புறப்பட்டோம். தஞ்சாவூர் கே. ராமஸ்வாமி அய்யர், தூத்துக்குடி ஸ்ரீ சிதம்பரம்பிள்ளை, சென்னப்பட்டணத்திலிருந்து ஸ்ரீ. சக்கரைச்செட்டி, பி. ஏ. பி. எல். ஸ்ரீ துரைஸாமி அய்யர், எம். ஏ. பி. எல். ஸ்ரீ சங்கர நாராயணய்யர், ஸ்ரீ. வெங்கடரமணராவ், ஸ்ரீ. யதிராஜ சுரேந்திரநாத், நான், முதலியவர்களும், திருவல்லிக்கேணியிலிருந்து சில பிரபுக்களும், வெளியூர் கனவான்கள் சிலரும் எங்கள் கூட்டத்திலே சேர்ந்திருந்தனர். ஸ்டேஷனுக்கு எங்களுடைய சிநேகிதர்களும், சுதேசபக்தியின் விசேஷத்தினால் எங்களைப் பிரியத்துடன் உபசரித்தனுப்ப வந்த கனவான்களும், நானா திசைகளிலிருந்தும் வந்து சேர்ந்திருந்தார்கள். ஸ்வதேச விசுவாசத்வமே ஆவேசமாகக் கொண்டவர்களும், பாரத நாட்டின் எதிர் காலத்து ஸம்ரக்ஷகர்களுமாகிய வாலிபர்கள் வந்து எங்களுக்கு மிகுந்த சந்தோஷத்தை விளைவித்தார்கள். சுமைவண்டிகளை எங்களுடைய அறைகளுக்கு இழுத்துவருவதற்கு நாங்கள் கூலிக்காரர் வைத்திருந்தபோதிலும், சில குணசாலிகளான வாலிபர்கள் அந்த வண்டிகளைத் - தாமே

பாரதியார் அச்சிட்ட நூலில் ஒரு பக்கம்



Souvenir de Mr Bharati

THE FOX WITH
THE GOLDEN TAIL.

A FABLE WITH
AN ESOTERIC SIGNIFICANCE

2nd EDITION

BY

C. Subramania Bharati.

1914

Price: One anna.

(All rights reserved)

Saigon Sinnaya Press, Pondicherry

பாரதியார் அச்சிட்ட ஒரு நூலின் அட்டை

ஓம்.

புதுச்சேரி
19 ஜூலை 1915

ஞானத்தினால் தம்பியாகிய ஸ்ரீ நெல்லையப்ப பிள்ளைக்கு
பராசக்தி நன்று காத்திடுக.

தம்பி— மாதத்துக்கு மாதம், வாரத்துக்கு வாரம், நினது நடை மலர்ச்சி பெற்று வருவதைக் காண்கிறேன். நினது உள்ளக்கமலத்திலே பேரறிவாகிய ஒள்-ஞாயிற்றின் கதிர்கள் விரைவிலே தாக்கி நினக்கு நல்லின்பம் உண்டாகுமென்றே நம்புகிறேன்.

* * *

நெஞ்சம் இளகி கசிவெய்து விரிவெய்து அறிவிலே சுடர் எழுகிறது. நம்மிலும் மெலியாருக்கு நாம் இரங்கி அவர்களை நமக்கு நிகராகச் செய்து விட வேண்டுமென்று பாடுபடுதலே நாம் வலிமை பெறுதற்கு வழியாகும். வேறு வழியில்லை.

* * *

ஹா! உனக்கு ஹிந்தி, மராட்டி முதலிய வடநாட்டு பாஷைகள் தெரிந்திராது. அந்த பாஷைப் பத்திரிகைகளின் என்ன அற்புதமான புதுமை பெற்றுள்ளன

என்பதை நேரிடத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் — தமிழ் நாட்டிற்கு எத்தனை மேன்மையுண்டாகும்! தமிழ், தமிழ், தமிழ் — என்று எப்போதும் தமிழை வளர்ப்பதே கடமையாகக் கொள்க. ஆனால் புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன்பம் — தமிழில் ஏறிக் கொண்டே. போக வேண்டும்.

" " " "

தம்பி, — நான் ஏது செய்வேனடா! தமிழை விட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும் போது எனக்கு வருத்தமுண்டாகிறது. தமிழனை விட மற்றொரு ஜாதியான் அறிவிலும், வலிமையிலும் உயர்ந்திருப்பது எனக்கு சம்மதமில்லை. தமிழச்சியைக் காட்டிலும் மற்றொரு ஜாதிக்காரி அழகாயிருப்பதைக் கண்டால் என் மனம் புண்படுகிறது. தம்பி — உள்ளமே உலகம்.

ஏறு! ஏறு! ஏறு! மேலே, மேலே, மேலே! நிற்கும் நிலையிலிருந்து கீழே விழாதபடி கயிறுகள் கட்டி வைத்துக் கொண்டு பிழைக்க முயற்சி பண்ணும் உன் பழங்காலத்து போக்கினைக் கண்டு மேல் நோக்கச் சிரி.

உனக்குச் சிறகுகள் தோன்றுக. பறந்து போ.

பக்கம் — 3

பாரீ பாரீ — மேலே, மேலே, மேலே.

" "

தம்பி — தமிழ்நாடு வாழ்க என்றெழுது.

தமிழ்நாட்டில் கோயில்கள் சிறக்க என்றெழுது.

தமிழ்நாட்டில் வீதி தோறும் தமிழ்ப்பள்ளிக் கூடங்கள் மலர்க என்றெழுது.

அந்தத் தமிழ்ப் பள்ளிக் கூடங்களிலே கலைகளெல்லாம் பயிற்சி பெற்று விளங்க என்றெழுது

தமிழ் நாட்டில் ஒரே ஜாதி தான் உண்டு. அதன் பெயர் தமிழ் ஜாதி அது ஆரியஜாதி என்ற பேதத்திலே நிலைக்காது என்றெழுது.

ஆணும் பெண்ணும் - நேரொத்தவர் நிகரொத்தவர்கள் என்றெழுது.

அவை ஒன்றுக்கொன்று தாழ்வில்லை என்றெழுது.

பெண்ணைத் தாழ்மை செய்தோன் கண்ணைக் குத்திக் கொண்டான் என்றெழுது.

பெண்ணை அடைத்தவன் கண்ணை அடைத்தான் என்றெழுது.

தொழில்கள், தொழில்கள் தொழில்கள் என்று கூவு.

பக்கம் 4.

தப்பாக வேதம் சொல்பவனைக் காட்டிலும் நன்றாகச் சிரைப்பவன் மேற்குலத்தான் என்று கூறு.

ஸயன்ஸ் வளர்க, யந்திரங்கள் பெருக. தொழில்கள் ஓங்குக. ஸங்கீதம், சிற்பம், யந்திரநூல், பூமிநூல், வானநூல், இயற்கைநூல் ஆயிரம் வித்தைகள் இவை தமிழ் நாட்டிலே மலிந்திடுக என்று போராடு.

சக்தி, சக்தி, சக்தி, என்று பாடு.

தம்பி — நீ வாழ்க.

.. ..
..

உனது கடிதம் கிடைத்தது. இதுவரைக்கு உடம்பு சௌக்யமில்லாமல் இருந்தபடியால் உடனே "ஜவாப்" எழுத முடியவில்லை. இப்போது புதிய உயிர் கொண்டது. இன்று உன் விலாஸத்துக்கு "நாட்டுப் பாட்டுக்கள்" அனுப்புகிறேன். அவற்றைப் பகுதி பகுதியாக உனது பத்திரிகையிலும் ஞானபானுவிலும் ப்ரசுரம் செய்வித்திடு. "புதுமைப் பெண்" என்றொரு பாட்டு அனுப்புகிறேன். அதைத் தவறாமல் உடனே அச்சிட்டு அதன் கருத்தை விளக்கிப் பாடுக. எங்கேனும், எப்படியேனும் பணம் கண்டு பிடித்து ஒரு நண்பன் பெயரால் ஸமக்ஷம் அனுப்புக. தம்பி — உனக்கு தோன்றவில்லை? நீ வாழ்க. இது கடமை யென்று.

உன்னண்ணன்
பாரதி

# மறு மலர்ச்சி

S. ஸ்ரீனிவாசன்

பாரதியார் ஒரு மகாகவியா, சாதாரண கவியா என்பது பற்றி நீங்கள் இரண்டு வித அபிப்பிராயங் கொள்ளலாம். பாரதியின் கவிதைத் திறத்தைப் பற்றிப் பலவித கருத்துக்கள் வெளியிடலாம். ஆனால் தமிழ் நாட்டில் தமிழ் இலக்கியத்தில், ஒருபுரட்சி உண்டுபண்ணியவர் பாரதியார் என்னும் விஷயத்தில் இருவித அபிப்பிராயங் கொள்ள இடமில்லை. தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி பீடத்திலே பாரதியாருக்கே முதல் ஸ்தானம் உரியது என்பதை யாரும் மறுக்க மாட்டீர்கள்.

'மறுமலர்ச்சி' என்றேன். பாரதியார் காலத்துக்கு முன் தமிழின் நிலைமை என்ன? 18-வது 19-வது நூற்றாண்டுகளில்தமிழ் இலக்கியத்தில் ஒரு தேக்கம் இருந்து வந்தது. அந்நாளில் கவிஞர்கள் இலக்கண வரம்புஎன்ற படியைத் தாண்டாத பத்தினிகளாய் இருந்தார்கள். இலக்கணம் என்ற பழைய குல்லாய்க்குள் தங்கள் இலக்கியமாகிய தலையைக் கூட்டியோ குறைத்தோ நுழைக்கப் பார்த்தார்கள். தமக்கு முன்போன இலக்கியங்களைப் புரட்டிப் பார்த்து அவைகளை யொட்டியே தம்பாடல்களில் வரும் அணிகளையும் வர்ணனைகளையும் அமைத்துக் கொண்டார்கள்.

உதாரணமாக காட்டிலும், நாட்டிலும் எத்தனையோ பக்ஷி ஜாலங்கள் காணப்படுகின்றன. ஆனால் இந்தக் கவிஞர்களின் கண்ணுக்கு ஆடுகிற மயிலும், பாடுகிற குயிலும், பேசுகிறகிளியும்தான் புலப்படும். மாதர்களில் முகத்தை வர்ணிப்பதற்கு இவர்களும் சந்திரனையேதான் பிடிப்பார்கள். இவர்கள் பல சொல்லணிகளை வலியப் புகுத்தித் தம் திறமையைக் காட்டுவதற்காகக்கவிதையின் உணர்ச்சி, கற்பனை, பொருள் நயம் முதலியவைகளைத் தியாகம் செய்யவும் துணிந்து விடுவார்கள். கவிதையைத் தங்கள் சாமர்த்தியத்தை ஏற்றிச் செல்லும் ஒரு வண்டியாகவே கருதினார்கள்.

பாரதியார் இருந்த காலத்தில் தமிழ் நாட்டிலே தாய்மொழியின் மாற்று மங்கியிருந்தது. அந்நிய ஆட்சியில் அன்னிய மொழிக்கு அளவுகடந்த மதிப்புக்கொடுத்து ஆண்மையை இழந்திருந்தனர் தமிழ்மக்கள். பதவியும் பொருப்

பும் படைத்த பெரியோர் தாய் மொழியில் பேசக் கூச்சப்பட்ட னர்; மொழியின் மீது பழியைச் சுமத்தினர். இந்த நிலைமையை இன்றைய நிலைமையுடன் ஒப்பிட்டுப் பாருங்கள்! இந்த மாறுதலுக்கு முக்கியக் காரணம் பாரதியார் என்பது தெளிவாகும். தமிழ் இலக்கியத்தில் இது வரை நிகழாத இந்தப் புரட்சியைத் தோற்றுவித்து அதை வேரூன்றச் செய்த பெருமை பாரதியருக்கே உரியது.

ஃ ஃ ஃ

பாரதியார் பழையசம்பிரதாய சந்தங்களுடன் நிற்காமல், கருத்திற்கு ஒத்தனவும் பொது ஜனங்களின் மனத்தைக் கவர்வனவுமான மெட்டுக்களையும் சந்தங்களையும் உபயோகித்தார். பாமரர்களின் மனத்தைக் கவர்ந்த சுலபமான சந்தங்களாகப் பார்த்துப் பொறுக்கி எடுத்தார். தாயுமானவரின் 'ஆனந்தக்களிப்பு' மெட்டு, பாம்பாட்டிச் சித்தரின் 'ஆடுபாம்பே' மெட்டு, வண்டி ஓட்டுபவர்களும் ரசிக்கக் கூடிய 'ஆறுமுகவடிவேலவனே' என்ற காவடிச் சிந்து, தமிழ் நாட்டாரின் பொக்கிஷமான நந்தன் சரித்திரக் கிர்த்தனைகளின் வர்ண மெட்டு, பள்ளர்கள் கள் குடித்து ஆனந்தமாய்க் கூத்தாடிக் கொண்டே பாடுகின்ற 'பள்ளு' நொண்டிச்சிந்து, கும்மி- இந்த எளிய உறைகளுக்குள் தன் பெரிய கருத்துக்களைத் திணிப்பதற்கு எவ்வளவு திறமை வேண்டும்!

ஃ ஃ ஃ

பழைய கவிஞர்கள் கிட்ட நெருங்குவதற்குக்கூட அஞ்சிய சில விஷயங்களைப் பற்றியும் பாரதியார் பாடியுள்ளார். அரசியல் விஷயங்களோடு நிற்காமல் மேல் நாட்டுக் கவிஞர்கள் பலர் முயன்றும் தவறிப்போக நேரிட்ட ஒரு துறையிலும் அவர் தைரியமாக இறங்கி சிறந்த வெற்றியையும் கண்டார், அது தான் விஞ்ஞான உண்மைகளைத் தெரிவிக்கும் கவிதைகள்.

ஃ ஃ ஃ

தூய பௌதிக உண்மைகள் அவருடைய கவிதா சக்தியில் கட்டுண்டு நவமோகனமான ஒரு உருவத்தில் வெளிவருகின்றன. விஞ்ஞானத்தையும் கவிதையையும் ஒன்றுகூடவைத்த பெருமை பாரதியாருக்கே உரியது.

ஃ ஃ ஃ

சம்பிரதாயம் பழமை என்ற பெயரால் ஏற்படுத்தப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை உடைத்தவர் என்ற முறையில்தான் இன்று நாம் அவரைப் போற்றுகிறோம். தேசத்திற்கும் சமுதாயத்திற்கும் பெண்களுக்கும் விடுதலை அளிக்க வந்த பாரதியார். உண்மையான கவிதைக்கும் விடுதலையளித்ததில் ஆச்சரியப் படுவதற்கென்ன இருக்கிறது?

**பாரதி பெருமை**

பாரதியாருக்கு சிறந்த ஞாபகச் சின்னம் அவருடைய பாடல்கள்தான். தமிழன் ஒவ்வொருவனுடைய உள்ளத்திலும் அப்பாடல்கள் ஊறிவிட வேண்டும்.

— *ராஜாஜி*

# பாரதி என் ஆசான்

**தி. கோ. அ.**

பாரதியை நான் பார்த்ததில்லை: அவரைப்பற்றி நான் நிரம்பக் கேட்டதுண்டு. அவர் கவிதைகளை பிரசுரித்த காலத்தில், பள்ளியில் படித்துக் கொண்டிருந்த நான் கள்ளத்தனமாகப் படித்ததுண்டு. எட்டயபுரத்து நண்பர் ஒருவர் என் பள்ளித்தோழர் எனக்கு அவருடைய பாட்டுக்களை ஆர்வத்துடன் பாடிக் காண்பித்ததுண்டு. படிப்பு முடிந்து நான் இரங்கோனில் ஒரு பத்திரிகை ஆசிரியர் (ஸ்ரீ. வேதமூர்த்தி) அவர்களுக்கு உதவியாளராக இருக்கும் பொழுது அவர் வாயிலாக பாரதியாரின் பெருமையை நன்கறிய வாய்ப்புக் கிடைத்தது. அதற்குப் பிறகு பாரதியாரின் நூல்களில் அனேகமாய் எல்லாவற்றையும் வாசித்தேன். ஆனால் பாரதி எனக்கு ஆசான் ஆனது ஒரு கதை.

ஆறுவருஷத்துக்கு முன் நடந்த சம்பவம். தில்லிச் தமிழ்ச் சங்கத்தாரும் இதர தில்லி ஸ்தாபனங்களும் சேர்ந்து பாரதி ஜெயந்தியைக் கோலாகலமாய்க் கொண்டாடிய நாள். கவிஅரங்கம் ஏற்பாடாகியிருந்தது. ஸபாநாயகர் பக்கத்தில் கவிஅரசன் பாரதியாரின் படம் (தமிழ்ச் சங்கத்துக்கு ஓவியர் மஹாதேவ்ஜியின் அன்பளிப்பு) மாலைதாங்கி வைக்கப்பட்டிருந்தது: கவிகள் தங்கள் கவிதைகளை அரங்கேற்றினர்; சிறிது வியாக்யானமும் செய்தார்கள். சபையிலுள்ளவர்கள் கரகோஷம் செய்து உத்ஸாக மூட்டினர். கவிஅரங்கத்தில் கலந்து கொள்ள எனக்கும் ஆசை இருந்தது. ஆனால் பலவிதத்தொல்லைகளால் நிர்வாகிகளிடம் முன் அறிவிப்புக் கொடுக்கவில்லை. நிர்வாகிகளில் ஒருவரிடம் மட்டும் "ஆசு கவிக்கிடமுண்டோ"? என்று கேட்டேன். ஆனால் ஏன் கேட்டோம் என்று வருத்தமடைந்தேன். பின்னர் ஒரு விநோத எண்ணம் உதித்தது. பாரதியையே குருவாக வரித்து ஆசிகோரினால் என்ன என்று தோன்றியது.

பாரதியின் படத்தையே கண்கொட்டாது பார்த்துக் கொண்டிருந்தேன். இயற்கை வென்றது. கண்கள் அசதியுற்று மூடிக் கொண்டன. மனத்தில் ஒரே எண்ணம். தமிழறிந்த நண்பர்கள் போல், பாமரனை நானும் ஏன் போற்றக் கூடாது என்பதுதான்.

கவிகள் கூற்றெல்லாம் கானம்போல் இனித்தது. ஆனால் எளிமையில்லாதது போல் தோன்றியது. கனவுலகத்தில் இருந்த எனக்குத் திடீரென்று ஓர் உத்தரவு கிடைத்ததுபோல் தோன்றிற்று. "பாண்டியா ஏன் தயங்குகிறாய் – என்னைப்பற்றியே எழுதேன்" – என்று படத்திலிருந்து உத்தரவு பிறந்தது. பாரதி வரலாற்று நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்தன. மானஸீகமாகத்தான் – பின்வரும் அக்ஷரமாலை தொடுத்தேன் :—

அன்பொழுகும் வதனத்தாய்.
ஆர்வ மிகு வசனத்தாய்.
இன்னலிலே திளைத்தாய் – எனில்
ஈகையினால் கை சளைத்தாய்
உண்மைபு கட்ட வந்தா யெனில்
ஊரார் நகைக் காளானாய்,
எ.: கெனும் நெஞ்சத்தாய் – எனில்
ஏதலர்க் கஞ்சி வாழ்ந்தாய்,
ஐயம் திரிபறக் கற்றாய்.
ஒன்றே குலம் ஒன்றே இறை யென்றாய்
ஓதலிலும் ஓங்கி நின்றாய்.
ஔவை போல் 'சூடி' செய்தாய்.
ஆரியனே பாரதியே !

பக்கத்திலிருந்த நண்பர் ஒருவர் "தியானத்தில் ஆழ்ந்துவிட்டாயோ அல்லது அந்திவேளை நித்திரையோ" என்று கேட்டு நனவுலகிற்கு என்னைக் கொண்டு வந்தார். கதம்ப நிகழ்ச்சி ஆரம்பமாயிருந்தது. என் மனத்தில் பதிந்த நிகழ்ச்சியும் என்னுளே மறைந்தது. என்னைப்போல் பாரதியை ஆசானாகப் பெற்றவர்கள் அனேகர் இருக்கலாம். பூதஉடல் இல்லாமல் சப்த ரூபத்துடன் நம்முடன் என்றென்றும் குலவும் பாரதி வாழ்க! அவருக்கு நம் அஞ்சலி உரித்தாகுக!

## பாரதி பெருமை

அர்த்த புஷ்டியில்லாத ஆற்றலின்றி, சொன்னதையே சொல்லி பக்கங்கள் நிரப்பதுமின்றி, ஸ்படிகம் போன்ற தெளிவும் வைரம் போன்ற உறுதியும் பெற்று இலக்கணப் பிழைகள் ஒழிந்த பேச்சுத் தமிழையே எவ்வாறு ஆழ்ந்த கருத்துக்களை எழுதவும் சித்திரிக்கவும் உபயோகப் படுத்தலாம் என்பதை பாரதியார் வசன நடையில் நாம் பார்க்கலாம். பயன் கொண்ட கற்பனை சக்தியும், கொழுந்து விட்டெரியும் நாட்டன்பும், விசாலமான தருமஞானமும், நோவாத ஹாஸ்யரஸமும், தமிழ்த் தாயின் செல்வக் குழந்தை, வரப்பிரஸாதர், பாரதியாரின் எழுத்துக்களில் - காணலாம் - அனுபவிக்கலாம்.

— ராஜாஜி

# தற்காலத் தமிழ்க் கவிதை

டாக்டர் பா. நடராசன்

கவிதை, காலத்தில் பூக்கும் பருவ மலர். சோழப் பேரரசு காலத்தில் தமிழர் கலை, வாழ்வு, அரசியல், பொருளாதாரம், சமூகம், ஆகிய எல்லாத் துறைகளிலும், உச்ச நிலையை அடைந்தது. "சிங்களம், புட்பகம், சாவகமாகிய தீவு பலவினுஞ் சென்றேறி தங்கள் புலிக்கொடியை"த் தமிழர் நாட்டினகாலம். "விண்ணேயிடிக்கும் தலையிமயம் எனும் வெற்பை அடிக்கும் திறனுடைய"வராகத் தமிழர் திகழ்ந்த காலம். கவிதைக்கு ஏற்ற பருவ காலம். சோழப் பேரரசர் பொற்காலத்தில் கம்பன், சேக்கிழார், ஒட்டக்கூத்தர், சயங்கொண்டான் போன்ற புலவர் பெருமக்கள் தோன்றினர்.

பின்னே தமிழர் வாழ்வில் இருள் சூழ்ந்தது. வலியிழந்து மக்கள் அடிமையாயினர். சமயத்துள் சரண்புகுந்தனர். புதுமணமில்லாத தல புராணங்களே தோன்றலாயின. பேரரசர் மறைந்து சிற்றரசர் கூட்டம் பெருகியது. வாழ்வு சிறுகுற்றது. சில்லறைப் பிரபந்தங்கள் முளைத்தன. பருவ காலம் போயிற்று. " கல்லைத்தான், மண்ணைத்தான், காய்ச்சித்தான் குடிக்கத்தான் கற்பித்தானு" என்று ஏங்கிய காலத்தில், பெருங்கவிதை மலர்கள் பூக்க வாய்ப்பேது?

இந்த நிலையில் இருபதாம் நூற்றுண்டு தொடங்கியது. இந்திய நாடெங்கும் ஒரு புது உணர்ச்சி வேகம் வெள்ளம் போல் பெருக்கெடுத்து வந்தது- உரிமை வேகம். ஒரு புது ஆத்ம தாகம் அடக்க முடியாது உடற்றியது - விடுதலைத் தாகம். இது தமிழ் நாட்டிலும் படர்ந்தது. அரசியல், பொருளாதாரம், சமூகம், கலை ஆகிய எல்லாத்துறைகளையும் பிணித்தது. மீண்டும் கவிதையின் பருவ காலம் பிறந்தது. இதில் மலர்ந்ததுதான் இன்றைய தமிழ்க்கவிதை.

இன்றைய தமிழ்க் கவிதை வானத்தில், விடி வெள்ளியாகப் பூத்தவர் சுப்பிரமண்ய பாரதி. கம்பனுக்கு உரையிட்ட காலஞ் சென்ற ரசிக சிகாமணி வ. வே. சு. ஐயரும் "நம்காலத்து தமிழ்க் கவிகளுள் பிரதம ஸ்தானத்தை வகிக்கும் ஸ்ரீமான் சுப்பிரமண்ய பாரதி" என்று அன்றே அறிந்து கூறுவாராயினர்.

பாரதி பழமையிற் தோய்ந்த பெரும் புலவன். ஆயினும் கால

நிலைக்கேற்ற கவிதை புனைவதே கடமை என்று கருதினுன்.

தமிழர் கல்வி யில்லாது தாழ்வுற்று தரைப்பட்ட காலம். கவிதை படிப்போர் வெகு சிலராயிருந் தனர்; கவிதைச் சுவைப்போர் அதிலும் சிலரே. இந்த நிலையில் தூங்கிக் கிடக்கும் பெருமக்கள் திரளை எழுப்பவல்ல எளிமை, கவிதைக்கு இன்றியமையாதது. "அருமையான உள்ளக் காட்சி களை எளிமை கொண்ட நடை யிலே எழுதுவது நல்ல கவிதை" என்பது பாரதியார் கொள்கை. "எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது மக்கள் விரும்பும் இசை, இவற்றினை யுடைய காவிய மொன்று தற் காலத்திலே செய்து தருவோன் நமது தாய் மொழிக்குப் புதிய உயிர் தருவோனுகிருன்." இதுவே அவர் கவிதா இலட்சிய மாயிருந்தது. எளிமையே பாரதியின் கவிதைக்கு உயிர் நாடியாக அமைந்து விட்டது.

புலவர்கள் நயக்கும் பாடல் கள் பாடும் புலவராக அல்ல அன்று அவர் அமைய விரும் பியது. பாமரர் வியக்கக்கவிதை பாடும் பண்டிதர் ஆவதே அவர் கொண்ட இலக்கு. பாரதியார் வகுத்த இந்த எளிய இலட்சியம் இன்றைய தமிழ் கவிதைக்கெல் லாம் உகந்த ஒரு பொது இலட் சிய மாகிவிட்டது. இருபதாம் நூற்ருண்டு ஆங்கிலக் கவிதை யிலும் இந்த இலட்சியம் திகழ் வதை, நாம் ஒப்பு நோக்கும் பொழுது, காணலாகும். கார ணம், நல்லகவிதை காலநிலையை நிழலிடுவதாகவே இருக்கும்.

பாரதியாரின் கவிதையின் வேறிரு சிறப்பு இயல்புகள், வேகம் ஆண்மை என்பனவா கும். வேகத்துக்கு தற்கால ஆங் கிலக் கவிஞருள் ஹாப்கின்சை யும், ஆண்மைக்கு காம்பெல்லை யும் ஒப்பிடலாம். "பாஞ்சாலி சபதம்" என்பதை பாட்டுடைப் பொருளாக பாரதியார்எடுத்துக் கொண்டது வேண்டுமென்றே செய்தது என்று படுகிறது. வேகம், ஆண்மை என்ற இரசங் களுக்கு அந்தக் கதையில் வேண்டுமட்டும் இடமுள்ளது. பெண்மைக்கும் ஆண்மை யூட் டும் அளவில் அதில் ஆண்மை இரசத்தை புகுத்த கவிஞர் அரியதொரு வாய்ப்பினைக் கண் டார் போலும்.

ஆனல் வேகம், ஆண்மை என்ற இவ்விரு சுவைகள், மிகுந்ததால் பாரதியாரின் கவி தைக்கு இனிமை குறைந்துவிட வில்லை. இனிமையைக் கவிதை யின் முதல் உறுப்பாகக் கொள் கிருர். இதனைக் "கள்" என்கி ருர். பிறகுதான் "தீ" அல்லது வேகத்தையும் ஆண்மையையும் கருதுகிருர். இவற்ருேடு, கவி தையிலே "காற்று"ப் போன்ற மென்மையும், கட்டுக்கடங்காது மனப்புள் சிறகு விரித்து சஞ் சரிக்கும் கருத்து உரிமையும் அமைய வேண்டுமென்கிருர். "வானவெளி"க்கு ஒப்பான விரிந்த கற்பனு சக்தியும் கலந் திருக்க வேண்டுமென்கிருர். எனவேதான்,

"கள்ளையும், தீயையும்
சேர்த்து - நல்ல
காற்றையும் வான
வெளியையும் - சேர்த்துத்
தெள்ளு தமிழ்ப்புல
வோர்கள் - பல
தீஞ்சுவைக் காவியம்
செய்து கொடுத்தார்

என்று, தன் கவிதை இலக்கணத்தை அழகுறப் பாடுகின்றார். தன் கவிதை இலக்கணத்துக்குத்தானே இலக்கியமாக, பாரதியார் பொலிவு தருகின்றார்.

✦ ✦ ✦

ஆண்மையும் வேகமும் பாரதி பாடல்களில் இரு கண்களானால், பெண்மையும் மென்மையும் தேசிக விநாயகம்பிள்ளையின் கவிதையின் இரு கண்களாகும். எளிமை இருவருக்கும் பொதுவானதே. "பாஞ்சாலி சபதத்தை"ப் பாரதியார் பாட்டுடைப் பொருளாகக் கொண்டது போலவே, பிள்ளை அவர்களும் புத்ததேவன் வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டு "கருணைக் கடல்" பாடியதில் ஒரு உள்ளீடான பொருத்தமுண்டு. "ஆசிய ஜோதி" யினும் மென்மையைப் பாட வேறிடம் வாய்ப்பதேது? "மலரும் மாலையும்" என்று உரிய மென்மை நலம் தெளிவாகும் வகையில் அவரது கவிதைத் தொகுதிக்குத் தலைப்புக் கொடுத்தவர்கள், கவிஞரின் உள்ளக்கிடக்கையை கன் குணர்ந்த ரசிகமணிகளே ஆவர்.

கதை எட்வின் ஆர்னல்டு செய்த ஆசியஜோதி. ஆனல் வால்மீகியின் இராம கதை கம்பனுக்கே உரிய கதையாகி விடுவதே போல், ஆங்கில ஆசிரியர் எடுத்துக் கொடுத்த புத்தர் கதையும் "தேவி"யின் இனிமைத்தமிழுக்கு தனி உரிமையாகி விடுகிறது. பலகற்பனைகள் மூலத்திலுள்ளவை. ஆனல் அவையெல்லாம் சுயம் என்று சொல்லுமளவு தமிழ்த்தனி உருவம் பெறுகின்றன, "கண்ணில் ஒரு மகள் மைபெழுதி - இரு கண்ணும் எழுதுமுன் ஓடி வந்தாள்" - என்பது முற்றிலும் தமிழ் மணக்கும் கற்பனையன்றோ? மூலத்திலில்லாத ஒரு கனிவு - பிள்ளை அவர்களுக்கே உரியது, - தமிழாக்கத்தில் பிறக்கிறது. இந்தக்கனிவே "அன்பின் வெற்றி" என்ற தலைப்பில் மீராபாய் பற்றியும், 'இரட்சகர்' என்ற தலைப்பில் ஏசுநாதரைப் பற்றியும், பிள்ளை அவர்களைப் பாடச் செய்தது. திண்டாதார் விண்ணப்பம் பாடவும், வேலையில்லாத் திண்டாட்டம் பாடவும் கதர் விற்பனை பாடவும் இந்தக் கனிவே காரணமாயிருந்தது. இந்தக் கனிவே குழந்தைகளுக்குரிய பற்பல எளிய பாடல்களையும் பிள்ளையைப் பாடத் தூண்டிற்று.

✦ ✦ ✦

எட்டையபுரம் பாரதியும் புத்தேரி தேசிக விநாயகம் பிள்ளையும் இன்று நம்மைப்பிரிந்துசென்றனர். ஆனல் புதுச்சேரி பாரதிதாசனும் (கனக-சுப்புரத்தினம்) நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையும் நம்மிடையே இன்று உயிர்ப்போடு கவிஞராய்ப் பொலிந்து வாழ்கின்றனர். பாரதிதாசன்,

பாரதியின் பரம்பரையில் வந்தவர். பாரதியின் வேகம், ஆண்மை, கருத்துப் புரட்சி அனைத்தையும் கொண்டு நிற்பவர். நாமக்கல் கவிஞர் புத்தேரிக் கவிஞரின் மென் சாயலையும் கனிவுநயத்தையும் படைத்தவர்.

பாரதிதாசன் வருகையால் தமிழ்க் கவிதையில் ஒரு பெரு மாறுதல் எழுந்தது. கவிதை கவிதைக்கே என்ற நிலையிலிருந்து சற்றுத் திரிந்து, கவிதை கருத்து மாற்றத்துக்கே என்ற நிலை பிறந்தது. சமூக சீர் திருத்தம் கவிதையின் எல்லையையும் குறிக்கோளும் ஆகியது. தாம் கருத்திற் கொண்ட சில அறக் கோட்பாடுகளை உலகோர்க்கு அறிவுறுத்துவதே கவிஞன்கடன் என்ற நிலையில் பாரதிதாசன் தன்னை அமர்த்திக் கொள்கிறார். இம்மாதிரியான கவிதை தமிழ் இலக்கியத்துக்குப் புதிதன்று. பதினெண் கிழ்க்கணக்கில் அற நெறிச்சாரம், திரிகடுகம் என்று பல நூல்கள் இவ் வரிசையில் வந்தனவே. சமணர் வருகையால் அவை மிகுதியாயின. ஆனால் கவிதை என்ற அளவில் அவை தோல்வியுற்றன. கருத்தினை நிலை நாட்டும் கருவியே ஆயின அவைப் பல. ஆனால் பாரதிதாசன் இந்த் ஆபத்தினின்றும் தப்பிவிடுகின்றார். உணர்வோடு உணர்ச்சியையும், கருத்தோடு இதயத் துடிப்பினையும் சிந்தையோடு இனிய கற்பனையையும் ;விரவி, பிசைந்து, அள்ளும் இனிய ஆற்றல் அவர் கவிதையில் நிரம்பியுள்ளதைக் காண்கின்றேம். ஆனல் பாரதி போன்றவர்கள் கால உரைக் கல் சோதனையில் உறுதியான வெற்றியைப் பெற்று நிற்பது போல, பாரதிதாசன் கவிதையை இன்னும் கூறமுடியாது. மேலும் காலஞ் செல்ல வேண்டும். வருங்காலமே இறுதி தீர்ப் பளிக்க வல்லது.

இந் நால்வரும் தமிழ் நாட்டின் நான்கு கோடிகளிலிருந்து கவிதை அன்னைக்கு வாடாத மலர்களை இற்றை நாள் சூட்டி நின்றனர். இன்றைய யுகம் - இருபதாம் நூற்றுண்டு - கவிதைக்கு ஏற்ற பருவ காலமாயில்லை. இங்கும் அப்படியே; மேலை நாட்டிலும் அப்படியே. இயந்திர நாகரிகத்தின் பயனை எளிதில் துய்த்துவாழும் மனிதக் கூட்டம் இதயம் தொடும் கவிதைக்குரிய உணர்ச்சிப் பக்குவத்தைப் பெறவில்லை. திரைப்படம் வானெலி, சிறுகதை, தொடர் கதை, அரசியல் செய்தித்தாள் - இவற்றில் உள்ளத்தையும் உணர்வையும் பறிகொடுத்து நிற்கின்ற மனித இனத்துக்கு கவிதை புரியாத பாஷையாக உள்ளது. திரைப்படக் கவிதையே அவர்களுக்கு முழு நிறைவு அளிக்க வல்லதாய் ;அமைகின்றது. அமெரிக்காவில் - கோடிக் கணக்கான பிரதிகளில் சில நூல்கள் வெளிவரும் அந்நாட்டினில் ஒரு கவிதை நூல் என்றால் ஐந்நூறு பிரதிகளுக்கு மேல் அச்சிடப்படுவதில்லையாம்.அதற்குங்கூட ஆசிரியர் அச்சுக் கூலியை முன் பணமாகக் கொடுக்கவேண்டுமாம். இந்த நிலையில் தமிழ்க் கவிதையின் வருங்காலம் என்னகுமோ என்பது பார்த்திருந்துதான் தெரிய வேண்டும்.



# *Business moves on wheels*

THAT's why nearly 30% of Government of India's investments in the successive Five Year Plans are devoted to the development of nationwide transport.

The assembly and progressive manufacture of Royal Enfield motor cycles and three-wheelers fill a major gap in the transport needs of our economy. Motor cycles are an essential item of equipment of our Armed Forces, Police, Post & Telegraphs, and other Government Departments use motor cycles in increasing numbers. Motor cycle is the most economical form of automotive transport for our business executives, engineers, technicians, agriculturists, salesmen, insurance agents and others doing field work, who must go places to do their work efficiently and on time. Fo local deliveries in our steadily expanding cities an towns there's none so ideal as the Royal Enfiel three wheelers for quick despatch of goods in eas economical lots.

Planned and progressed in collaboration with th Enfield Cycle Company, Redditch, England and backe by the entrepreneurs with the experience of over a gene ration in the motor cycle and engineering lines in Indi Enfield India factory and their business organisatio are truly a model of achievement. Already expansio plans are in hand to increase the production capacit to serve the growing transport needs of our country

# ROYAL ENFIELD

MOTOR CYCLES AND THREE-WHEELERS

*Progressively manufactured by:*

THE ENFIELD INDIA LIMITED

MADRAS-19.




M 1811

# நாட்டுக்கொரு புலவன்

க. சி. கமலையா

கன்னித் தமிழில் இன்னிசையைப் பண்கூட்டக் கொடுத்து வைத்த பாவலருள்—நாவலருள்—பாரதிக்கு ஒரு சிறப்பான இடம் உண்டு. தெய்வத் தமிழாகிய தீந்தமிழ் மொழிக்குக் கடவுள் செவி சாய்ப்பர்; ஐம்பெரும் பூதமும் துணிவுடன் பணி செய்யக் காத்து நிற்கின்றன. கற்கோயில்கள் நிரம்பிய செந்தமிழ் நாட்டில் பொற் கோயிலினும் அழகிய சொற்கோயில்கள் சமைத்துத் தமிழணங்கின் தாள் பணிந்து வருகின்றான் புலவன். காவியத்தில் ஓவியம் தீட்டிய இப் பரம்பரையில் உதய ஞாயிறு ஒப்ப வந்தவன் பாரதி.

"காலா உனைநான் சிறுபுல்லென
மதிக்கிறேன்: என்றன்
காலருகே வாடா! சற்றே
உனை மிதிக்கிறேன்"

என்று கூற்றுவனை நோக்கித் தோள் தட்டி,

"காலினில் வந்துயிர்க் குலத்தினை யழிக்கும்
காலன் நடுநடுங்க விழித்தோம்"

என்று ஜயபேரிகை கொட்டுகிறான் பாரதி.

உள்ளம் உருகி வெளிப்படுவதுதான் கவிதை. அது இயற்கை; சிரஞ்சீவிக் கவிஞன் சிருஷ்டி; சிரஞ்சீவிக் கவிஞர் இனத்தைச் சேர்ந்தவன் பாரதி.

"சாகா வரமருள்வாய்" என இராமனைத் துதிசெய்கின்றான். இருப்பினும் கவிஞனும் இயற்கையின் நியதியைக் கடந்தவனில்லை. 'உறங்குவது போலும் சாக்காடு', என்றார் வள்ளுவர் பெருமான். இதை யாரே தவிர்க்க முடியும்? பாரதி சொல்கின்றான்:

"காலவான் போக்கி லென்றும்
கழிகளைப் பெருமை கொண்ட
கோலவான் தொழில்கள் செய்து
குலவிய பெரியோர் தாமும்

சீலவாழ் வகற்றியோர் நாட்
செத்திட வுறுதியாயின்
ஞால வாழ்வினது மாயம்
நவின்றிடற் கரியதன்றோ! "

இயற்கையின் வழி சென்றான் பாரதியும். அவன் மறைந்து ஆண்டுகள் பல உருண்டோடின. இக்காலத்திலே பாரதி கண்ட கனவு நனவாயிற்று; தணியாத சுதந்திர தாகம் தணிந்தது; அடிமையில் நம்மவர் கொண்ட மோகம் மடிந்தது. இந்திய சரித்திரத்தில் இக்காலம் முக்கியத்துவம் வாய்ந்தது. 'மண்ணகம் விட்டு விண்ணகம் சென்ற பாரதி உயிரோடிருந்தால்' என்பதைக் கற்பனை செய்யும் பொழுதே நாம் புளகாங்கித மடைகிறோம்.

'என்றெமதின்னல் தீருமோ?' என்று துயர் கொண்டான் கவிஞன். இன்றிருந்தால், அண்டம் அதிர, வானம் வெடிக்க விடுதலை முழக்கம் செய்வான். விடுதலைப் போர் முரசு கொட்டிய பாரதி நம்முடனிருந்தால் வறுமைமீது தொடுத்த நம் கணைக்கு வில்லாய் இருந்து வல்லமை கொடுத்திருப்பான். பூலோக சொர்க்கமாய்ப் பாரதத்தை மாற்றும் பணியில் ஈடுபட்ட நமக்குக் காயகற்பம் தரும் கவிகளைச் சொரிந்திருப்பான்.

'வெட்டுக் கனிகள் செய்து தங்க முதலாம்
வேறுபல பொருளும் குடைந்தெடுப்போம்'

என்று பாடிய பாரதி நெய்வேலிச் சுரங்கத்தில் நிலக்கரியை அகழ்ந்து எடுக்கும் நம் முயற்சிக்கு பள்ளுப் பாடியிருப்பான். தமிழ் நாட்டு வீதிகளில் இன்று அவன் பவனி வந்தால் தெள்ளு தமிழ்ச் சுவையைப் பருகி உன்மத்தமாகி விடுவான். பாரெல்லாம் பாரதத்தின் புகழ் பரவக் கப்பற்படை கடலெல்லாம் செல்லவிட்டான் சோழன். சரித்திரம் ஒப்புக்கொண்ட இவ்வுண்மையை மனத்தில் வைத்த பாரதி,

'மேலைக்கடல் முழுதும் கப்பல் விடுவோம்'.

என்று ஏக்கம் கொண்டான். இன்றோ எங்கும் சென்று பாரதத்தின் துதிபாடும் அப்படைக்குப் பாடல்கள் பல வாரி இறைத்திருப்பான்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடினாள் கோதை நாச்சியார். கண்ணனைப் பல வண்ணங்களில் கண்டான் பாரதியும். இன்றும் நம்மிடை அவன் உலவுவானாகில் இன்னும் எத்தனை கோணங்களில் மணிவண்ணன் மாண்பை நமக்கு எடுத்துரைப்பானோ? பாதிமதி நதி சூடிய பரமசிவனுக்குத் திருப்பள்ளி யெழுச்சி பாடினார் மணிவாசகப் பெருமான். பாரதத் தாய் துயில் நீங்கப் பாடினான் பாரதி. இப்பவும் நம்மிடையிருந்தால் திருப்பாவை ஒன்றை அவள் திருவடியில் அருட்பாவாக வழங்கியிருப்பான் அன்றோ?

'கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்'

என்ற தமிழ் மறையைக் காட்டினும் பறை சாற்றும் வீரிய வாசகம் எது? நாட்டுக் காவலில் போட்டியிட்டுப் பணி புரியும் வீரர்களுக்கு மெய் சிலிர்க்கும் அணிவகுப்புப் பாடல்களை அனந்தம் அள்ளி வீசியிருப்பான் பாரதி. 'கைபுனைந் தியற்றுக் கவின்பெறு வனப்பில்' மனத்தைப் பறிகொடுத்தான் அக்காலத் தமிழ்க் கவிஞன். இக்காலத்து அமரகவி பாரதி இன்று வாழ்ந்திருந்தானாகில் தமிழ் நாடு வனப்புக்களை எத்தனை சொல்லோவியமாய்ப் புனைந்திருப்பானோ!

"காய் கதிர்ச் செல்வனே! கள்வனோ என் கணவன்?"

எனக் கேட்டாள் பத்தினித் தெய்வம் பரிதியைப் பார்த்து. செங்கோல் வளைய உயிர் வாழார் பாண்டியர் என்ற உண்மையை நிரூபித்தான் மதுரை மன்னன். சேரன் தம்பி இதைச் சிலம்பால் இசைத்தான். இந்நாட்டு பாரதி பாஞ்சாலி சபதம் பாடினான். நம் புண்ணிய வசத்தால் இன்று வரை பிழைத்திருந்தானாகில் அவன் இசைத்துச் செல்லும் காவியம் எத்தனை எத்தனையோ?

பாரதி இன்னும் உயிரோடிருந்தால் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்து, உயர் வீரம் செறிந்த தமிழ் நாட்டுக்குத் தலை வணங்கி, பாருக்குள்ளே நல்ல நாடான பாரத நாட்டுக்குச் சிரம் தாழ்த்தி, மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்தி, ஜயபேரிகை கொட்டி, தீராத விளையாட்டுப் பிள்ளை கண்ணனுடன் கொஞ்சிக் கொஞ்சி விளையாடி, ஞானரதம் ஏறிக், காற்றைக் குதிரை கொண்டேறித் திரியுமோர் உள்ளம் படைத்து, வல்லவேல் முருகன் மேல் திருப்புகழ் பாடி, கற்பனைக் குயிலுடன் ஆசைக்கடலின் அமுதம் பருகி, என்றுமுள செந்தமிழில் இன்பத்தேனை நம் காதில் பாயவிட்டுக் கொண்டிருப்பானன்றோ? ஒளியை ஊடுருவிப் பார்த்த இராமனுக்குப் பின் இரண்டாவது தமிழனாய் நோபல் பரிசு பெற்றிருப்பானன்றோ? பாட்டுக் கொரு புலவனாய் விளங்கிய பாரதி நாட்டுக்கொரு புலவனாயும் திகழ்ந்திருப்பானன்றோ?


*FOR*

**PARTIES & PICNICS**

*PLEASE REMEMBER*

**S. S. MANI,**

**INDIAN RESTAURANT,**

D. G. S. & D. Office, National Insurance Building,

**Parliament Street, New Delhi.**

# Contemporary Classics

the craft so long to learn
schooled by generations of skill
the cottage weaver's
precious heritage
now as ever worthy of the
nation's tribute
all the world loves
India's handloom fabrics
classic elegance
contemporary simplicity
old world richness
new world crispness
in colour weave and design



a fascinating variety
blending luxury with restraint
folk patterns with
modern chic
workaday utility with dignity
and good taste.

ALL INDIA HANDLOOM BOARD

*Handloom* **FABRICS**

*Finest creations by India's artist weavers*

**ALL INDIA HANDLOOM BOARD**
Post Bag No. 10004, BOMBAY-1

DA 58/341

# Let's look at the Standard Ten

## for value

- It has four speed gearbox and 948 cc. overhead valve engine, which gives superb acceleration.
- It is sturdy in construction and reliable.
- It gives 35 miles per gallon on an average, or more depending on driving conditions.
- It seats four/five persons comfortably.
- Its spacious boot provides ample room for luggage.




STANDARD

*That is why more people find it is well worth waiting for a*

**STANDARD TEN**

# பாரதியின் பாஞ்சாலி சபதம்

**வேங்கடேசன்**

இயற்கைக் கவிஞர் பாரதி குழந்தை உள்ளம் படைத்தவர். நல்ல சில கொள்கைகளை மனத்தில் கொண்டு, இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்க்கைப் பாதையை வகுத்துக் கொண்டவர். எண்ணிலடங்காத இன்னல்கள் வந்த போதினும் கலங்காது, கொள்கையைப் பின்பற்றியவர். பிறர் துன்பத்தைக் கண்டு பொறுக்காத உள்ளம். அதே போல பிறருடைய கொடுமையையும் தாங்காத நெஞ்சு. நேர்மையையும் நல்லனவற்றையும் கண்டு விட்டாலோ, பெரு மகிழ்ச்சி. இப்படிப்பட்ட உணர்ச்சிக் கலவை கொண்ட உள்ளம் அமைந்திருந்ததனால் தாம் நினைத்தவற்றை அப்படியே கவிதை உருவில் வெளியிட அவரால் முடிந்தது.

ஒரு நூலாசிரியரின் குணத்தை, ஓரளவுக்கு, அவர் எழுதிய நூல்களைக் கொண்டே கண்டு பிடித்து விடலாம். இதுபோலவே, மகாகவியின் பாடல்களிலிருந்தே அவருடைய கள்ளமில்லா வெள்ளை உள்ளத்தையும், அந்த வெள்ளை உள்ளம் வெள்ளமெனக் கொட்டும் அழகுக் கருத்துக்களையும் எளிதில் புரிந்துகொள்ளலாம்.

நன்மைக்கும் தீமைக்கும் எப்போதுமே இடைவிடாத போராட்டம். போராட்ட இறுதியில் நன்மையே வென்றாலும், தீமையின் சக்தி, போராட்ட வேளையில் அதிகமாகத்தான் இருக்கிறது. தீமைகளும் துன்பங்களும், மின்னலைப் போன்றே, தோன்றும் சிறிது நேரத்திற்குள் அசாதாரண ஒளியையும் சக்தியையும் காட்டி மறைகின்றன. தீமைகள் ஓங்கி ஒளிரும்போதும் கலங்காது அறத்தைச் சார்ந்து நிற்பதே உறுதியுள்ள நல்ல மனம். வீரம் என்பது வெறும் உடல் வலுவை மட்டும் குறிப்பதில்லை. மன வலுவும் உடல் வலுவும் சேரும் போதுதான் வீரம் முழு அழகு பெறுகிறது.

"பாஞ்சாலி சபதம்"—எல்லோருக்கும் தெரிந்த கதை. தருமன் நல்லவன். நன்னெறியே அவனது வாழ்வின் உயிர், அறத்தின் காவலன். இந்த நல்லவன், நல்லவனாகவே வாழ முயன்றபோது

எப்படியெல்லாம் இன்னல்கள் அனுபவிக்க நேர்ந்தது, இவ்வளவையும் எப்படி உறுதியுடன் கலங்காமல் பொறுத்துக் கொண்டான் என்பது, இக்கதை தரும் சிந்தனை விருந்து.

தருமனுக்கு நேர் எதிரான குணம் கொண்டவன் துரியோதனன். பிறர் வாழப் பொறுக்காத நெஞ்சு; பொறாமையின் உரு.

பாரதக் கதையில் அறத்துக்கும் மறத்துக்கும் இடையறாத போராட்டம் எப்போதும் இருந்து கொண்டே இருக்கிறது. அற உரு, தருமன். மற உரு, துரியோதனன். பாரதியாரின் சிந்தையிலே இந்த அறமும் மறமும் மாறி மாறித் தோன்றி தங்கள் நிழலைக் காட்ட, அவர் இந்த நிழலுக்கே தம் கவிதையால் உரு அமைத்து இரண்டையும் நமக்கு விளக்குகிறார். பாரதியின் இந்த அழகுக் காவியத்தில் வரும் ஒவ்வொரு சொல்லும் அவர் நெஞ்சின் ஆழத்தினின்று இயற்கையாகப் பிறந்தது.

துரியோதனனை அறிமுகப்படுத்துகிறார் கவி. அவன் மேல் நமக்கு எள்ளளவு வெறுப்பும் தோன்றாதபடி, மன்னனுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதை, சிறப்பு, இவையெல்லாம் வைத்துப் பாடுகிறார். "மன்னன் தம் கோமான்", "கரியோராயிரத்தின் வலி காட்டிடுவான்", "நெஞ்சத் துணிவுடையோன்", என்றெல்லாம் விளக்கி விட்டு, கடைசியில் மட்டும் "உரியோர் தாம் எனினும், பகைக்கு உரியோர் தமக்கு வெந்தீயனையான்" என்று முடிக்கிறார். ஆனால் சகுனியையோ, ஆரம்பத்திலேயே "புல் நடைச் சகுனி" என்று அழைக்கின்றார். பொறாமையால் சிறிது மதி இழந்திருந்த மன்னனை முற்றும் கெடுத்தவன் இந்தச் சகுனி தானே என்ற கோபம் போலும்!

கதையின் நாயகர்களை அவர்கள் குணம், அந்தஸ்து, தகுதிக்கேற்ப வருணித்து அறிமுகப் படுத்துதல் பாரதியின் தனிச் சிறப்பு என்பதைக் காண்கிறோம். உதாரணம் கர்ணனின் அறிமுகம். நல்ல மனம், நல்ல குணம், இவைகளைப் பெற்றிருந்தும் தீமைக்கு உடன் சென்ற ஒரேகாரணத்தால் அழிந்த கர்ணன்மேல் நமக்கு அனுதாபம்தான் பிறக்கிறது. ஆனால் கடமையை உயிராகக் கொண்டு, நண்பனுக்காக உயிரையே கொடுக்கும் கர்ணன், தருமனுக்கு நிகரானவன் என்பதில் ஐயமில்லை. "மைந்நெறிவான் கொடையான், உயர் மானமும் வீரமும் மதியுமுளோன், **உய்ந் நெறி அறியாதான்** இறைக்கு (துரியோதனனுக்கு) உயிர் நிகர் கர்ணனும் உடன் இருந்தான்" என்ற வரிகளைப் படிக்கையில் நாம் நம்மையறியாது கர்ணன் மேல் அனுதாபம் கொள்கிறோம்.

பொறாமைப் பேய் துரியோதனனை ஆட்டுவிக்கிறது. சகுனியிடம் தன் உள்ளக் குமுறலை அப்படியே கொட்டுகிறான். கெடுமதி கொண்ட சகுனியும் "இன்று தருகுவன் வெற்றியே. இதற்கு இத்தனை வீண் சொல் வளர்ப்பதேன்" என்று அவனைத் தேற்றி,

திரிதராட்டிரனிடம் அழைத்துச் செல்கிறான். துரியோதனன் தன் மனக்குறைகளை நம்முன் ஒரு குரல் அழுது தீர்ப்பதாகத் தோன்றும்படி அமைந்திருக்கிறது பாட்டு.

திரிதராட்டிரன் நல்லவன் தான், ஆனால் மகனிடம் அளவு கடந்த பாசம். இந்தப் பாசம் அவனது அறிவு ஒளியையும் அவித்து விடுகிறது. முதலில் சகுனியைத்தான் அவன் ஏசுகிறான். "அட பிள்ளையை நாசம் புரியவே. ஒரு பேயென நீ வந்து தோன்றினாய்" என்று கடிந்து உரைக்கின்றான்......மகனுக்கு சமாதானம் கூறுகிறான். பயனில்லை. துரியோதனனோ தந்தையைக் கடிந்து கடைசியில் "நின் முன்னர் என் சிரம் கொய்தே—நான் இங்கு ஆவி இறுத்திடுவேன்" என்று பயமுறுத்துகிறான். மனம் உடைந்த திரிதராட்டிரனும் "விதி! விதி! விதி! மகனே! – இனி வேறெது சொல்லுவேன் அட மகனே!" என்று நொந்து கூறித் தன் சம்மதத்தை அளிக்கிறான், பாண்டவரை அழைக்க. சகுனியின் மேல் ஆருத கோபம், என்ன செய்வது? பிள்ளைப் பாசம் அறமனத்தை வென்று விடுகிறது. பின்பு, பாண்டவரிடம் தூது செல்லும் விதுரனையும் கூப்பிட்டு "சகுனி சொல் கேட்டே, இப்பேயெனும் பிள்ளை கருத்தினிற் கொண்ட தீச்செயல் இஃது என்று குறிப்பாற் செப்பிடுவாய்" என்று திரிதராட்டிரன் கூறும்போது அவனுடைய பாசத்தை நாம் நன்கு அறிந்து கொள்கிறோம். ஒரு தந்தையின் உள்ளத்தைக் கண்ணாடியாகக் காட்டுகிறது இப்பாட்டு, காவியத்தின் பாத்திரமாகவே மாறி, அப்பாத்திரத்தின் மன நிலையைச் சொற்களால் படம் பிடித்துக் காட்டுவது, வியப்பு, வியப்பிலும் வியப்பு!

பழைய காலப் பழக்க வழக்கங்கள், சிறியோர் பெரியோருக்கு எவ்வளவு மரியாதை கொடுத்து வந்தனர், என்பதை "விதுரனை (பாண்டவர்) வரவேற்றல்" என்னும் தலைப்பின் கீழுள்ள மூன்று பாட்டுக்களால் நன்கு விளக்கி விடுகிறார் பாரதி. இங்குதான் முதன் முதலில் காவிய நாயகியாகிய பாஞ்சாலியையும் நமக்கு அறிமுகப் படுத்துகிறார்.

"வெந்திறல் கொண்ட துருபதன் செல்வம்
வெள்கித் தலைகுனிந் தாங்குவந் தெய்தி,
அந்தி மயங்க விசும்பிடைத் தோன்றும்
ஆசைக் கதிர்மதி யன்ன முகத்தை
மந்திரந் தேர்ந்ததோர் மாமன், அடிக்கண்
வைத்து, வணங்கி, வனப்புற நின்றாள்"

என்னும் வரிகளிலேயே நாம் பாஞ்சாலியின் அழகை, அடக்கம், விருந்தோம்பல் முதலிய நற்குணங்களை, பெண்மைக் கியல்பான நால்வகைக் குணங்கள் அடையும் சிறப்பை – யாவையும் அறிந்து கொள்ளுகிறோம்.

சூதுக்கு அழைப்பதாக விதுரன் கூறியவுடன் தருமன் முதலில் கலங்கினாலும் பின்பு மனம் தேறிவிடுகிறான். ஆனால் வீமனோ கோபம் கொண்டு பொங்குகிறான். அர்ஜுனனைப் பார்த்து "விடு! நாண் கோத்திடடா! – தம்பி, வில்லினுக்கிரை மிக விளையுளதடா" என்று உறுமுகின்றான். வீமனைப் போலவே மற்ற மூவரும் முதலில் கோபம் கொள்கின்றனர். இவர்கள் மனநிலையை "தவநேமம் தவறலும் உண்டு காண்,–நரர் நெஞ்சம் கொதித்திடு போழ்திலே" என்ற வரிகளால் பாரதி அப்படியே படம் பிடித்துக் காட்டி விடுகிறார். கடைசியில் தியோர் ஊருக்குப் பாண்டவர் புறப்படுகின்றனர். பாரதியின் "மாலை வர்ணனை" நெஞ்சை அள்ளுகிறது.

பாண்டவர்கள் சூதாட்டம் நடைபெறும் மண்டபத்துள் வருகிறார்கள். முதன் முதலில் இவர்களை வரவேற்பவன் சகுனி! "வல்லுறு சூதெனும் போர் தனில் வலிமைகள் பார்க்குதும், வருதி" என்று அழைக்கிறான். அழைக்கும் அவன் குரலில் ஏளனத்தின் சாயையைக் காண்கிறோம், கயமையைக் காண்கிறோம். வில்லின் வீரம் காட்டி புவி வென்றுவிட்ட நீங்கள் இன்று சூது எனும் போரில் திறமையைக் காட்டுங்கள் என்று சவால் விடுகிறான். தருமன் திடுக்கிடுகிறான். சூதாடல் "இருமையும் கெடுக்கும் இழி தொழில்" என்று கூறுகிறான். கெடுமதிச் சகுனி சமாதானங்கள் பல கூறி இறுதியில் "நிச்சயம் நீ வெல்வாய்—வெற்றி நினக்கு இயல்பு ஆயினது அறியாயோ" என்று வஞ்சப் புகழ்ச்சியாலும் "நாணமிலார் சொலும் கதை வேண்டா—மனத் துணிவு இல்லையேல் அதுவும் சொல்க" என்பன போன்ற இடித்துரைகளாலும் தருமனின் நெஞ்சைக் கொன்று விடுகிறான். ஒரே வரியில் முடித்து விடுகிறார் பாரதி. நம் கண்களில் நீர் நிறைகிறது. "மெய்யறிந்தவர் தம்முள் உயர்ந்தோன்—விதியினால் அத்தருமனும் வீழ்ந்தான்",—விதியின் கொடுமையை பாரதி அப்படியே சித்தரித்து விடுகிறார்.

சூதாட்டம் தொடங்குகிறது. தருமனுக்கு எதிரே சகுனி, செல்வத்திலும், அறிவிலும் தாழ்ந்தவனான சகுனியை நோக்கித் தருமன் "வந்தெதிர்த்து விட்டாய், எதிரே வைக்க நிதியமுண்டோ?" என்று வினவுகிறான், துள்ளிக் குதித்து, துரியோதனன் "ஒரு மடங்கு வைத்தால்—எதிரே ஒன்பதாக வைப்பேன்" என்று உத்தரம் கூறுகிறான்.

காய்கள் உருளுகின்றன; அறம் உருளுகிறது, தீமை வளர்கிறது. மணி மாலைகள், பொற் குடங்கள், மாபெரும் படைகள், தருமன் பணயம் வைத்து யாவும் சகுனியின் காய்களின் ஓசையால் கரைந்து விடுகின்றன. சகுனி விடவில்லை. "நாடிழக்க வில்லை—தருமா! நாட்டை வைத்திடு" என்கிறான். நாடும் பறிபோகிறது. நாடும் போனபின் தங்களையே ஒவ்வொருவராகப் பணயம் வைக்கின்றனர். முதலில் சகாதேவன், பின் நகுலன், பின் அர்ஜுனன்,

பின் பீமன், — இவர்கள் யாவரையும் பணயம் வைத்துத் தோற்று, முடிவில் தன்னைத் தானே பணயம் வைத்து ஆடித் தோற்கிறான் தருமன்.

பாரதியார் இந்தச் சூதாட்டத்தைப் பற்றிப் பாடுகிறார். ஒவ்வொரு சொல்லும் அவர் நெஞ்சத் துடிப்பை நமக்குச் சொல்லுகிறது. சகுனியின் கைவேகத்துக்கேற்ப சொற்கள் பிறக்கின்றன. நம் கண்ணெதிரே சபை தெரிகிறது. நம் காதுகளிலே ஆட்டக் காய்கள் வேகமாக உருளும் ஒலி கேட்கிறது. சபையில் உள்ள ஒவ்வொருவருடைய எண்ணமும் நமக்குத் தெரிகிறது. நாமும் சபைக்கே போய் விடுகிறோம்.

பாண்டவர்கள் நாடிழந்த உடனேயே துரியோதனன் திருப்தி அடைந்து விடுகிறான். வெற்றிப் போதையில் "எங்கும் பறை யறைவாயடா — தம்பி", என்று எக்காள மிடுகிறான். ஆனால் அழிவுடைச் சகுனி அவனை மேலும் கெடுக்கிறான். "ஒளி மின்னும் அமுதம் போன்றவள் — இவர் மேவிடு தேவியை வைத்திடட்டும்" என்று கூறி அவனைப் பித்தனுக்குகிறான். மறுபடியும் காய் உருளுகிறது. பாஞ்சாலியின் பணயமும் முடிந்தது. தலை குனிந்து நிற்கிறான் தருமன்.

பாஞ்சாலியை சபைக்கு அழைத்துவர விதுரனை ஏவுகிறான் கெடுமதி மன்னன். பெரியவரான விதுரன் மறுத்து விடுகிறார். பின் தேர்ப்பாகனை ஏவுகிறான் துரியோதனன், தேர்ப்பாகன் பைங் கொடியின் மாளிகைக்கு வருகிறான். திரௌபதியோ,

> "வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர்தாம்
> என்னை முன்னே கூறி இழந்தாரா? — தம்மையே
> முன்ன மிழந்து முடித்தென்னைத் தோற்றாரா"

என்று கேட்டு வரும்படி திருப்பி அனுப்பி விடுகிறாள் அவனை. சபைக்குச் சென்று மன்னனின் கோபத்தைப் பெற்று மீண்டும் வருகிறான் தேர்ப்பாகன். பாஞ்சாலியின் அற உரைகள் அவன் மனத்தை ஆட்கொள்கின்றன. "என்னைக் கொன்று விட்டாலும் பெரிதில்லை — இவள் கூறும் வினாவிற் கவர் விடை — தரினன்றி இவளை மறுமுறை வந்தழைத்திட நான் அங்கு இசைந்திடேன்" என்று உறுதியுடன் சபைக்குத் திரும்புகிறான். நடந்ததைக் கேட்ட துரியோதனன் "இந்தப் பையலும் வீமனை அஞ்சியே — பலவாகத் திகைப்புற்று நின்றனன்" என்று எண்ணி தம்பியாகிய துச்சாதனனை ஏவுகிறான். வீமனிடம் துரியோதனனுக்கு உள்ள பயத்தை இவ்வரிகள் கூறாமல் கூறிவிடுகின்றன.

அறிமுகப்படுத்தும் போதே துச்சாதனன் மேல் வெறுப்பு பிறந்து விடுகிறது நமக்கு. வார்த்தைகள் அவன் குணங்களை அப்படியே காட்டுகின்றன. "ஆண்டகை அற்ற இப்புலையன்" திரௌபதியின் மாளிகைக்கு வருகிறான். அவள் முன் மனம்

போனபடியெல்லாம் உளறுகின்றான். துச்சாதனன் கூறுவதாக வரும் ஒவ்வொரு சொல்லும் நம் உள்ளத்தில் பெரும் புயலையே எழுப்பி விடுகிறது. இந்த மூடனை எப்படி அனுப்புவது என்று அறியாமல் திகைக்கிறாள் திரௌபதி. "ஓராடையுடன் இருக்கிறேன். தார் வேந்தன் பொற்சபை முன் இப்போது வரும் நிலையிலில்லை என்று கூறுகிறாள். வெறிகொண்ட விலங்கு, மங்கையின் கூந்தலைப் பற்றி நகரத் தெருக்களில் இழுத்துச் செல்கிறது. நம் உள்ளம் கொதிக்கிறது. தெருவில் இக்கொடுமையைப் பலர் காண்கின்றனர். கண்டு என்ன பயன்? பாரதியே கூறியபடி "நெட்டை மர"மென நின்று புலம்பிக் கொண்டிருந்தனர்.

திரௌபதி சபைக்குள் வருகிறாள். நியாயம் கூறி முறையிடுகிறாள். சபை காதுகளை இழந்து நிற்கிறது. பீமனுக்கு மட்டும் கோபம் பொங்குகிறது. தன்னையே மறந்து விடுகிறான். தருமனை ஏசிப் பேசுவதோடல்லாமல், சகாதேவனை நோக்கி "இது பொறுப்பதில்லை, தம்பி......எரிதழல் கொண்டுவா: கதிரை வைத்திழந்தான், அண்ணன் கையை எரித் திடுவோம்" என்று அலறுகின்றான். நாம் திடுக்கிடுகிறோம். என்ன? பீமன் தருமனின் கையை எரிப்பதா? படபடப்புடன் மேலே படிக்கிறோம். பீமனைத் தேற்றி அடக்கி விசயன் கூறும் மொழிகளைப் பார்க்கிறோம். பதட்டம் அடங்குகிறது. சுருக்கமாக, ஆனால் தெளிவான மனத்துடன் சொல்கிறான் அர்ஜுனன்,

"சினமான தீ அறிவைப் புகைத்தலாலே
திரிலோக நாயகனைச் சினந்து சொன்னாய்
... ... ... ...இன்று
கட்டுண்டோம்; பொறுத்திருப்போம்; காலம் மாறும்
தனு உண்டு, காண்டீவம் அதன் பேர்"

இந்த வீர மொழிகளைக் கேட்டவுடன் அடங்கிவிடுகிறான் வீமன். நம் உடல் சிலிர்க்கிறது.

இடையே, விகர்ணனுக்கும் கர்ணனுக்கும் சொற்போர் நடக்கிறது. முடிவில் கர்ணன், பணியாளைக் கூப்பிட்டு, "யாரடா பணியாள்! வாராய்!—" பாண்டவர் மார்பிலேந்தும் சீரையும் களைவாய்; தையல் சேலையும் களைவாய் என்று கூவுகிறான்.

திரௌபதி "எவ்வழி உய்வோம்" என்று தியங்குகிறாள். இணைக்கை கோத்து நிற்கிறாள். அவ்வளவு பெரிய சபையில் யாவரும் கல்லாகவே மாறிவிட்டனர் போலும்!

துச்சாதனன் எழுகின்றான். கொடுமையிலும் கொடுமை ஆரம்பமாகிறது. பாஞ்சாலி, கண்ணனை, கார்போலும் மேனி எழில் வண்ணனை நினைக்கிறாள். பாரதியார் கூறியபடி, கண்ணனின் நினைப்பிலே அவள் "உட்சோதியிற் கலந்தாள்; உலகத்தை மறந்தாள்; ஒருமையுற்றாள்".

திரௌபதியின் பிரார்த்தனை பாரதியாரின் வாயிலிருந்து முழு வேகத்துடன் வெளி வருகிறது. நாமும் இயற்கையுடன் இயற்கையாக ஒன்றி நின்று விடுகிறோம். துகில் வளர, துச்சாதனன் தளர, அறம் தலைதூக்குகிறது; மறம் தலை கவிழ்கிறது; உண்மை பெருமையடைகிறது.

பின்பு சபதங்கள் ஆரம்பமாகின்றன. முதலில் வீமன் சபதம் செய்கிறான். பின் விசயன் எழுந்து கர்ணனைப் போரில் அழிப்பதாகச் சபதம் செய்கிறான். பின்பு பாஞ்சாலியும்

"பாவி துச்சாதனன் செந்நீர்—அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்
மேவி இரண்டுங் கலந்து—குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன்யான்—இது
செய்யு முன்னே முடியேன்"

என்று சபதம் செய்கிறாள்.

நமது நெஞ்சமும் 'வாழ்க அறம்' என்று கூவுகிறது. ஒரு முறை படித்தாலும் உள்ளத்தில் அழியாமல் நிலைத்து நிற்கக் கூடிய பேரெழிற் செல்வம் பாரதியின் "பாஞ்சாலி சபதம்" *

## பாரதி வாக்கு

இப்போது மனிதர் ஒருவருக்கு ஒருவர் பயப்படுவது தான் அதிகம். பயத்தினால் விரோதம் வளருகிறது. விரோதத்தால் போர் உண்டாகிறது. மனித சாதி அழிகிறது. பரஸ்பரபயம் நீங்க வேண்டுமானால் அதற்கு போர்சரியானமருந்தில்லை. உலகம் தோன்றிய காலம்முதல் இன்று வரையில் போர்கள் நடந்துதான் வருகின்றன. இதுமட்டிலும் ஒருவருக் கொருவர் பயப்படுவது துளிக்கூடக் குறையவில்லை.

அன்பிருந்தால் பயம் தெளிந்து போகும். ஒரே குடும்பத்தில் ஒருவரையொருவர் கண்டு மரண பயங்கொள்வதில்லை. உலக முழுவதும் ஒரே குடும்பத்தைப் போல வாழக் கூடாதா? எளியவன் அன்பு தொடங்கி வலியவன் சும்மாயிருந்தால் ஒன்றும் நடக்காது. எளியவன் வலிமையை விரும்பி நடக்க வேண்டும். வலியவன் எளியவனிடம் அன்பு செலுத்த வேண்டும்.

— 22. செப்டம்பர் 1916 எழுதிய கட்டுரையிலிருந்து.

# பிள்ளைத் தமிழா பெரிய தமிழா!

**புலவர் க. ஆறுமுகம்**

தவழ்ந்து எழுந்து நடந்து திரியும் குழந்தைக் கல்வி பற்றிய ஆராய்ச்சி ஒருபக்கம். வளர்ந்து அமைந்து அறிவு சான்ற முதியோர் கல்வி பற்றிய ஆராய்ச்சி மற்றொரு பக்கம், இவற்றின் இடைப்பட்டு கட்டுக்கடங்காது திரியும் காளையராம் இளைஞர் கல்வி பற்றிய ஆராய்ச்சி பிறிதொரு பக்கம். இங்ஙனம் பல பல ஆராய்ச்சிகள் நாட்டில் நடந்து வருகின்றன. இவருள் குழந்தைக் கல்வியை ஆய்வோர் மிக மிகக் குறைவு. நர்சரி கல்வி முறை, மாண்டிசோரித் திட்டம், கிண்டர் கார்டன் வகை என குழந்தைக் கல்வித் திட்டங்களின் பல பெயர்கள் ஒலிக்கின்றன.

பல இடத்தும் ஓடி யாடித் துள்ளித்திரியும் பிள்ளைகளைத் துடுக்கடக்கிப் பள்ளியில் இருத்துவது எப்படி? என்ன கல்வி பயிற்றுவது? எம்முறையை மேற்கொள்வது? என்ற பல கேள்வி குழந்தைக் கல்வியை ஆயும் அறிஞர் மனத்தில் எழும். ஆடித்திரியும் குழந்தையைப் பிடித்து இழுத்து அடித்து நிறுத்தி ஆனா ஆவன்னா படிக்கவும் எழுதவும் பயிற்றிய கொடிய கல்வித் திட்டம் வாழ்ந்த காலம் ஒன்றுண்டு; நம் நாட்டில் மட்டுமா? பிற நாட்டிலும் கூடத்தான். பாழூர் (Deserted village) என்னும் ஆங்கிலக் கவிதையின் ஒருபகுதி அக்காலத்து அந்நாட்டுக் கொடுங் கல்வித் திட்டத்தை விளக்குவதுதானே.

பிள்ளைகள் ஓரிடத்து நில்லாமல் ஓடும்; விளையாடும்; குருவிகளின் அழகிய வண்ணங்களைக் கண்டு அகமகிழும்; கொத்தித் திரியும் கோழியைத் துரத்தும்; எத்தித் திருடும் காக்கையைக் கல்லால் எறியும். இங்ஙனம் ஓடித் திரியும் குழந்தையைக் கண்டு முற்றக்கற்ற பெற்றோர் சிலர் அமைதியை இழந்து ஆத்திரம் கொள்வர். "பரீட்சை நெருங்கி விட்டது. பாடம் படிக்காமலா இப்படித்திரிகின்றாய்?" என வெகுளுவர்; அதட்டி இழுத்து, அடித்து உதைத்து விளக்கருகில் இருத்துவர். அக் குழந்தை அழுது வடிந்துகொண்டு படிப்பதைக் கண்டு சற்றேமன அமைதி அடைவர்.

குழந்தையின் விளையாட்டைத் தடுக்காமலேயே விளையாட்டொடு விளையாட்டாய்க் கல்வி புகட்டும் புதிய திட்டம்

பாரதியார் கண்ட புரட்சித் திட்டங்களில் ஒன்றுகும். குழந்தை சிறிது ஓய்ந்துகிடந்தாலும் ஓடி விளையாடத் தூண்டுகிருர் அவர். இப்படி விளையாடத் தூண்டிஞல் அதற்குப் படிப்பு எப்படி வரும்? கல்வியறிவு எவ்வாறு பெருகும்? தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்விக்கும் அவர் குழந்தைகளுக்குத் தரும் புத்தகம் குருவியும், காக்கையும், கோழியும், பசுவும் நாயும் பிற விலங்குகளுமே. அந்நூல்களின் மூலம் அவர்பயிற்றும் கல்வி எவ்வகையானது. பல பல நூல்களைப் பக்கம் பக்கமாகப்படித்து தேர்வெழுதிப் பலமுறை தோற்ருலும் ஒருமுறை எப்படியாவது வெற்றி பெற்றவுடன் ஒரு சிலராவது மறவாது போற்றிவரும் பேரறிவுக் கருத்துக் கருவூலங்களைவிட பாரதியார் கல்வி ஒரு சிறிதும் குறைந்த தரமுடைய தன்று.

எனவே பாரதியார் கல்வித் திட்டத்தில் நான்கு சுவர்களின் எல்லைக்குட்பட்ட வகுப்பறை இல்லை, கையில் எடுத்தவுடன் தலையணைமீது மயங்கி விழச் செய்யும் உறக்க மருந்தாம் காகித நூல்களில்லை. இளைஞர்கள் ஆசிரியரை வெறுத்துத் தூற்றும் தேர்வுகள் இல்லை. தேர்வில் எவ்வகையாலேனும் வெற்றி பெற்றவுடன் பெறும் பட்டம் பதவிகளுமில்லை. ஆனல் ஒன்றுமட்டும் உண்டு. அதுதான் அனுபவக் கல்வி. வெறும் ஏட்டுக்கல்வி யன்று. வாய்ச்சொல்லில் வீரராக்கும் வறட்டுக்கல்வி யன்று, கற்றபின் அதற்குத் தக நிற்கவைக்கும் வாழ்க்கைக் கல்வியேயாகும்.

மனிதன் வாழப் பிறந்தவன். தனியாக அல்ல, பிறருடன்கூடி, செல்வர்க்கும் ஏழைகளின் உதவிவேண்டும். ஏழைக்கும் செல்வர் ஆதரவுவேண்டும். ஒருவன் மற்றவனுடன் பழகவேண்டும். ஒருகுடும்பம் மற்ற குடும்பத்துடன் உறவாட வேண்டும். ஓர் ஊர் பிற ஆருடன் கூடிவாழ வேண்டும். ஒருநாடு ஏனைய நாடுகளுடன் நட்புக் கொள்ளவேண்டும். இங்கிலே ஏற்படுமானல் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்று பாடிய தமிழ்ப் புலவரின் கனவு நனவாகும் "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறென்று அறியேன் பராபரமே" என்று கூறிச்சென்ற சான்ருேர் நினைவு நனவாகும். இத்தகைய உலக அமைதிநிலை, உலக சமாதான வாழ்வு, உலகக் கூட்டுறவுப்பண்பு பலபல நூல்களைப் படித்துத் தேர்வு எழுதி வெற்றி பெறுவதால் மட்டும் வருமா? இக்கூட்டுப் பண்பு எங்கிருந்து தொடங்குகிறது? எங்கிருந்து தொடங்கவேண்டும்? எவ்வாறு தொடங்கவேண்டும்? நாட்டுக் கூட்டுறவில் தொடங்கி வீட்டுக் கூட்டுறவில் முடிப்பதா? வீட்டுக் கூட்டுறவில் தொடங்கி நாட்டுக் கூட்டுறவில் முடிப்பதா? முன்னையது கலசம் முதலில் வைத்து அதன்பின் கோபுரம் கட்டி அதன்பின் அடிப்படை போடுவது போன்றது. ஏனையது அடிப்படையிட்டுக் கோபுரம் கட்டிக் கலசம் சூட்டுவது போன்றது.

கூட்டுறவுப் பண்பு குழந்தைகளின் விளையாட்டில் தொடங்க வேண்டும் என்பது பாரதியார்

காணும் உண்மை. தனியாக ஓடி விளையாடும் பாப்பாவை அழைத்துப் பிற குழந்தைகளுடன் கூடி விளையாட ஏவுகின்றார் அவர். பிற வீட்டுச்சிறு குழந்தைகளுடன் கூடிவிளையாடப் பழகிய குழந்தைக்கு வயது வந்த பிறகு பிறநாட்டுப் பெருமக்களுடன் கூடிவாழ்வது மிகமிக எளிதாக இயலும். இது தான் உலக சமாதானம், உலக ஒற்றுமை, உலகக் கூட்டுறவு —என்றெல்லாம் இன்று நாம் பேசிவரும் பொற்கலசம் தாங்கும் கோபுரம் அமைப்பதற்குரிய அடிப்படையாகும். இவ்வடிப்படை யிடுதற்குரிய தெய்விகச் சிற்பிகள் பாலொழுகப் பள்ளி செல்லும் பாலர்க்குப் பயிற்சி தரும் பாலாசிரியர்களெனப்படும் தொடக்கப் பள்ளி ஆசிரியப் பெருமக்களேயாவர். இவ்வாசிரியச் சிற்பிகள் குழந்தைகட்குப் பயிற்றும் வீட்டுக் கூட்டுறவே அடிப்படை. அதன்மேல் மிக எளிதாக எழும் நாட்டுக் கூட்டுறவே கோபுரம். அதன் சிகரமாக விளங்கும் உலகக் கூட்டுறவே அக்கோபுரத்தின் பொற்கலசம் எனலாம்.

நாடுகள் ஒன்றுபட்டு வாழாமைக்கு ஒரு சிறந்த காரணம் உண்டு. வல்லரசு நாடு ஒரு சிறிது தவறிழைப்பினும் மெல்லரசு நாடு அத் தவற்றினைப் பொறுத்தாற்றும் பண்பு வேண்டும். இப்பொறுமைப் பண்பிருந்தால்தான் நாடனைத்தும் பகைமை நீங்கி நட்பு நாடுகளாக வாழ இயலும். இவ்வுயரிய பண்பினையும் பாரதியார் தம் பாப்பாவுக்குப் புகட்டுகிறார். கூடிவிளையாடுகையில் ஒரு [illegible] குழந்தை சிறிது துடுக்கும் செய்யும். ஆனால் அதனை மற்றொரு குழந்தை பொறுக்காமல் வையத் தொடங்கும். உடனே குழந்தைகளுக்குள் சிறுபகை குடும்பப் பகையாய் வளரும். குடும்பப் பகை ஊர்ப்பகையாகவும் பெருகலாம். இத்தகைய வீட்டுப் பகை போன்றதுதான் நாட்டுப் பகையும். நாட்டுப் பகையைத் தடுக்க முதலில் வீட்டுப் பகையைக் களையவேண்டும். 'கூடி விளையாடு பாப்பா' என்று நாடுகளின் கூட்டுறவு வாழ்க்கைக்கு வித்திடும் பாரதியாசிரியர் அக் கூட்டுறவு வித்து முளைத்து வளர்வதற்கு இடையூறாக முளைக்கும் களையாகிய பகைமையை ஒழிக்க வேண்டுமல்லவா, எனவே அவர் "ஒரு குழந்தையை வையாதே பாப்பா" என்று அப்பகைக் களையைக் களைந்தெறிகின்றார்.

அறிஞர் பலர் ஆராய்ந்து பக்கம் பக்கமாகப் பலபல நூல்களில் எழுதிவரும் அரிய கருத்துக்கள்; விளங்கவும் விளக்கவும் இயலாத பெரிய கொள்கைகள் விளங்கி விளக்கினாலும் நெஞ்சில் நில்லாதோடும் கடினமான உண்மைகள் — இவை அனைத்தையும் எளிய இனிய பாட்டாக்கி விளையாட்டொடு விளையாட்டாய்த் தம் பிள்ளைக்குப் புகட்டப் பாரதியார் பாடிய பாப்பாப் பாட்டு "பிள்ளைத் தமிழா?" அறிவும் அனுபவமும் முதிர்ந்த முதியோரும் பயில வேண்டிய "பெரிய தமிழா"?

ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.


Swing it high!
J. B. MANGHARAM'S
Energy FOOD
BISCUITS
Children abound with energy when they have ENERGY FOOD Biscuits regularly. These delicious biscuits are entirely made with health-giving ingredients.
"Nourishing the Nation of Tomorrow"
J. B. MANGHARAM & CO.
GWALIOR · INDIA
JB/63

*with the compliments of*

**BRITANNIA**

*makers of*

*Better Biscuits*

FBMI
FEDERATION
OF BISCUIT
MANUFACTURERS
OF INDIA

# காணமற்போன மோதிரம்

KAHAMAHOPADHYA

'தூன்'

நிரஞ்சனாவுக்கு வாழ்க்கை ஒரு துளைப்பாக இருந்தது. தூக்கிவாரிப் போடும் வகையில் ஏதாவது செய்தால் தான் வாழ்க்கை உப்பு உறைப்பாக இருக்கும் என்று அவள் தீர்மானித்தாள்.

இந்த வெறியில் மனத்தில் தோன்றியதை அவள் எழுதி முடித்து, நேரே 'கதிரொளி' பத்திரிகையின் காரியாலயத்தில் டாக்ஸியில் போய் இறங்கினாள்.

மறுநாள்! வேலை காலியிருக்கிறதா என்று தேடி தேவைப் பகுதியைப் பார்க்கக்'கதிரொளி'யைப் புரட்டின வாலிபர்களின் கவனம் நிரஞ்சனா பிரசுரித்திருந்த விளம்பரத்தின் மீது விழுந்தது.

நான்கு மணி சாயங்கால வெயில் சுட்டது. சூட்டைப் பொருட் படுத்தாமல் நாற்பது ஆள் நீளமுள்ள 'கியூ' நிரஞ்சனாவின் வீட்டு வாசலில் நின்றது. நிமிஷத்துக்கு இரண்டு வாலிபர்கள் வீதம் கியூவின் வால் நீண்டு கொண்டு போயிற்று.

ஐந்து மணிக்கு நிரஞ்சனா டாக்ஸியிலிருந்து வீட்டு வாசலில் வந்து இறங்கினாள். சொந்தக் காரில் பங்களாவின் 'போர்ட்டிகோ'வில் நிரஞ்சனா வந்து இறங்காததற்குக் காரணம் அவள் இன்னும் நட்சத்திரப் பதவியை அடையாமல் முதல் தர எக்ஸ்டிரா நடிகையாகவே இருந்ததுதான். ஒளி வெள்ளம் பெருக்கும் இருள் கடல்கள் போன்ற இரு விழிகள், வில்லில் அம்பு கோத்து வைத்தது போன்ற புருவமும் மூக்கும் இப்படியாக அழகிக்கு வேண்டிய அழகுகள் அத்தனையும் இருந்தும் அவள் நட்சத்திரமாகாததற்குக் காரணம் ஒன்று இருந்தது. கடல் பட்டாள அணி வகுப்பில் ஆபீஸர் நிற்பது போல அவள் பல் வரிசையில் ஒரு பல் மட்டும் முன்னுக்கு வந்திருந்ததால் அவள் நட்சத்திர வரிசையில் முன்னேற முடியாமல் இருந்தாள். பல்லைப் பிடுங்கிக் கொண்டு சிரிப்பை அழகு படுத்த அவளுக்கு இஷ்டமில்லை.

டாக்ஸியை விட்டு இறங்கினவள் கூட இறங்கின வேலைக்காரியிடம் சாவிக் கொத்தைக் கொடுத்து விட்டுக் கதவைத் திறக்கச் சொன்னாள். நிரஞ்சனாவும் வேலைக்காரியும் உள்ளே நுழைந்து கதவைத் தாளிட்டுக் கொண்டனர்

வெளியே போய்விட்டு வந்ததால் கசங்கிப் போன ஆடைகளுடனும் கலைந்த அலங்காரங்களுடனும் அவளுக்கு வாலிப

வரிசையின் முன் வர மனம் வர வில்லை. நிரஞ்சனா மறுமுறை சாத்துபடி செய்து கொள்ளத் துவங்கினாள். முகத்தைக் கழுவிக் கொண்டு வெங்காயத் தோலை உரிப்பது போல ஆடைகளை உருவிக் கீழே போட்டுக் கொண்டே இப்படி துணிச்சலாக ஒரு காரியத்தில் ஆழந் தெரியாமல் இறங்கி விட்டோமே என்று சற்றுக் கலங்கினாள். புதியரவிக்கை, பாவாடை, சேலை இவைகளை அணிந்து கொண்டே சுமார் எத்தனை வாலிபர்கள் வந்திருப்பார்கள் என்று மானஸீகமாக கணக்கிட்டுப் பார்த்தாள்.

நிரஞ்சனா கதவைத் திறந்து தரிசனம் கொடுத்ததும் கியூவிலிருந்து வாசற்கதவை நோக்கி வீசிய பெருமூச்சுக் காற்று அவளுடைய மேல் தலைப்பைப் பறக்க விட்டது.

"நீங்கள் ஒவ்வொருவரும் நான் கெட்டுப் போக்கிய ஒரு மோதிரத்தைக் கண்டெடுத்து வந்திருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்" என்றாள் நிரஞ்சனா...

"ஆமாம்" என்று பல ஸ்தாயிகளில் கியூவின் குரலோசை கேட்டது.

"ஒவ்வொருவராக என் வேலைக்காரி உள்ளே அனுமதிப்பாள். மோதிரத்தைக் காட்டி விட்டுப் பின்புறவாசல் வழியாக வெளியே போக வேண்டும்" என்று நிரஞ்சனா சொல்லி விட்டு, விச்வாமித்திரன் குவித்த தவப்போரை தீப்பற்றி எரியச் செய்யப் போதுமான தன் அழகான உடலை உள்ளே நகர்த்திச் சென்றாள்.

கியூவில் ஐம்பத்திரண்டாவதாக நின்ற அதிமதுரம் தன் முறை வந்ததும் உள்ளே சென்றான். கோவில் துவாரபாலகன் போல கம்பீரமான அவனுடைய வருகையைக் கண்டு நிரஞ்சனா எழுந்து அவனை வரவேற்றாள். ஐஸ்கிரீமில் நாவல் பழம் மிதப்பது போன்ற அவன் கண்கள் அவளுடைய அந்தரங்கத்தில் உலைவைத்து அவள் உடலை வெப்பமுறச் செய்தது.

"மோதிரம் எங்கே, காட்டுங்கள்?" என்று நிரஞ்சனா தன்னைச் சமாளித்துக் கொண்டு கேட்டாள்.

அதிமதுரம் பையிலிருந்து பர்ஸை எடுத்து பர்ஸிலிருந்து ஒரு பொட்டலத்தை யெடுத்து பொட்டலத்திலிருந்து ஒரு மோதிரத்தையும் எடுத்தான். சித்திரத்திலுள்ள சூரியனின் கிரணங்கள் போல வட்டமான அவளுடைய கைகளிலிருந்து புறப்பட்ட விரல்களால் நிரஞ்சனா அந்த மோதிரத்தைப் பற்றிக் கவனித்துப் பார்த்தாள். "என் மோதிரம் இப்படித்தான் இருக்கும். நீங்கள் சற்று உள்ளே போய் உட்காருங்கள். வெளியில் நிற்கும் இவ்வளவு பேரும் என்னைப் பார்க்க வேண்டும் என்று கடையிலிருந்து மோதிரங்களை வாங்கியோ, திருடியோ கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த அசடுகளை அனுப்பி விட்டு வந்துவிடுகிறேன்" என்று நிரஞ்சனா கூறி அடுத்த அறைக்கு அதிமதுரத்தை இட்டுச் சென்று அவனை அமரச் செய்து விட்டு வெளியே வந்தாள்.

கியூவில் பாக்கியிருந்தவர்களின் மோதிரங்களையோ முகரைகளையோ சற்றும் பொருட் பொடுத்தாமல் அவர்களையெல்லாம் போகச் சொல்லிவிட்டு அதிமதுரம் அசடுதட்ட அமர்ந்திருக்கும் அறையை நோக்கிப் பானையை நோக்கிப் பதுங்கி வரும் பூனைபோல . நெஞ்சில் இனிப்புச் சொட்ட நடந்தாள். மிருகக் காட்சிச் சாலையில் இயற்கைச் சூழ்நிலையில் பட்சிகளைக் காணுவது போல அவளுடைய வீட்டின் இயற்கைச் சூழ்நிலையில் நிரஞ்சனாவைக் குளோஸப் காண விரும்பிக் காத்து நின்ற கூட்டம் ஏமாற்றத்துடன் கலைந்தது.

“மோதிரத்தை எங்கே கண்டெடுத்தீர்கள்?” என்று தேனும் பாலும் கன்னலும் கலந்த குரலில் கேட்டுக் கொண்டே மெல்லாடையும் கையும் வீச, மெல்லிடையசைய உள்ளே வந்த நிரஞ்சனா அதிமதுரத்தின் பக்கத்தில் உட்கார்ந்தாள். “நீங்கள் நழுவ விட்ட இடத்திலிருந்து” என்று அதிமதுரம் சுருக்கமாகப் பதிலளித்தான்.

இலையுதிர் பருவத்தின் பாவை போல மஞ்சளாடை உடுத்தியிருந்த நிரஞ்சனா வசந்தம் போல ரோஜாக் கன்னங்கள் மலர மிளகாய்ப்பழ இதழ்கள் விரியச் சிரித்தாள்.

“எனக்கு மோதிரமே கெட்டுப் போகவில்லையே!”

“எனக்கு அது அகப்படவில்லையே!”

“நான் என் மோதிரம் எங்கேயோ கெட்டுப் போய்விட்டது என்று பேப்பரில் விளம்பரம் போட்டதன் காரணம் என் சுயம்வரத்துக்காக வாலிபர்களைத் திரட்டுவதற்காக அல்ல.”

“உங்கள் எண்ணங்களைப் பற்றிய விசாரமே எனக்கில்லை”

“ஆனால் உங்களைக்கண்டதும் உங்களைப் பற்றிய விசாரம் எனக்கு வந்து விட்டது.”

ஒளியூடுருவும் சேலை வழியே உள்ளத்தை ஊடுருவக்கூடிய அவளுடைய அங்க வளப்புக்களையும் நெளிவுகளையும் எடுப்பாகக் காட்டிக் கொண்டு சோபாவில் கவர்ச்சி தரும் நிலையில் நிரஞ்சனா தன் உடலைச் சாய்த்துக் கொண்டாள். பெண்மையின் அம்புறைத் தூணியில் உள்ள அவ்வளவு சாகஸ அஸ்திர சஸ்திரங்களையும் உபயோகித்து அதிமதுரத்தை வசியம்


Remember to obtain reliable, prompt & less expensive services:

**Dr. RAJKUMAR, D. O. Sc.,**

**Sight Testing Specialist & Optician,**

15, Shanker Market, Connaught Circus,

Near Fire Brigade, NEW DELHI.

செய்து விடுவது என்ற முயற்சியில் அவள் முனைந்தாள்.

"உங்களை நான் நிறுத்தி வைத்துக் கொண்ட காரணம் என்ன தெரியுமா?" என்று நிரஞ்சனு கேட்டாள். அவனுடைய மயிலைபாய்ந்த கண்களை மையல் வழியும் மஸ்காரா தீட்டிய கண்களால் ஊடுருவிப் பார்த்து "நான் காட்டிய மோதிரம் தற்செயலாக நீங்கள் இழந்த மோதிரத்தை ஒத்திருந்தது தான் காரணமாக இருக்கும் என்று முதலில் நினைத்தேன்."

"என் மோதிரத்தை நீங்கள் கொண்டு வந்திருந்த மோதிரம் ஒத்திருக்கிறது என்று நான் சொன்னதும் உங்களுக்கு மிகவும் சந்தோஷம் ஏற்பட்டிருக்க வேண்டுமே!"

"சந்தோஷம் ஏற்படவில்லை!"

எதிர்பாராத இந்தப் பதில் அவளுக்கு ஏமாற்றத்தை அளித்ததும் அவள் கால்களை மாற்றிப் போட்டு உட்கார்ந்தாள்.

"என்னுடைய மோதிரத்தை நீங்கள் கண்டுபிடித்து விட்டதாகப் பொய்சொல்லிக்கொண்டு வந்து என்னை நெருங்கிப்பார்த்து விட்டுப் போகலாம் என்று நைப்பாசையுடன் வரப்போக இப்போது உங்கள் சொந்த மோதிரத்தை இழக்கும்படியாக ஏற்பட்ட நஷ்ட உணர்ச்சியால் சந்தோஷம் ஏற்படவில்லையா?"

"உங்கள் ஹேஷ்யம் தவறு"

"அது தவருனல் எனக்கு சந்தோஷமே! நான் ஏன் இப்படி ஒரு விஷமத்தனமாக விளம்பரத்தைப் போட்டு ஊரைக் கூட்டினேன், தெரியுமா?"

"தெரியாது"

"எனக்குத் தனிமை வாழ்வு அலுத்துச் சலித்துப் புளித்துப் போய் சள்ளையான உணர்ச்சி ஏற்பட்டது."

"பருவத்தில் தனி வாழ்வு கஷ்டம் தான்."

"ஏதாவது விபரீதமாக, துணிகரமாகச் செய்தால் தான் சப்பென்று போன என் வாழ்வில் உப்பு உறைப்பு ஏற்படும் என்று தோன்றியது."

"பணமும் காசும் இருந்தும் கணவனும் குழந்தையும் இல்லாத வாழ்வு அப்படித்தானே இருக்கும்."

"எனக்கு இப்படி ஒரு பைத்தியக்காரத்தனமான விளம்பரத்தைப் போட வேண்டும் என்று ஆசை ஏற்பட்டது. என் அசட்டுக் காரியம் என் அதிர்ஷ்டமாகியது. காணுமற் போகாத என் மோதிரத்தைக் கண்டெடுக்காத நீங்கள் என் கண்ணிறைய என் உள்ளத்தில் உறைந்து விட்டீர்கள். தங்கள் கையால் இந்த மோதிரத்தை இந்த அடியாள் விரலில் போடும் பாக்யம் எனக்கு வரவேண்டும்."

நிரஞ்சனுவின் வில் புருவம் அம்பு எய்து கொண்டிருந்தது.

பேச்சின் போக்கும் அவள் கண்ணின் நோக்கும் அதிமதுரத்துக்குப் பிடித்தமானவையாக இல்லை.

"நான் உங்களைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையில் இங்கே வரவில்லை" என்றுன் அதிமதுரம். அவன் தொண்டையில் சஹாரா பாலைவன வறட்சி இருந்தது.

அவனுடைய இமைக் கேடயங்களால் அவள் ஓவிய காதல் கண்கள் உள்ளே பாயாமல் கண்ணை மூடிக் கொண்டான் அதிமதுரம்.

"ஏன் இங்கே வந்தீர்கள், என் விளம்பரத்தை வியாஜமாக வைத்துக் கொண்டு?"

அவள் விழிகளும், மூக்கும் ரௌத்ர முத்திரை அபிநயம் பிடித்தன.

"என் மனைவிக்காகவந்தேன்!"

"நீங்கள் மணமானவரா? மணமாகியும் இப்படி ஒரு விளம்பரத்தைப் பார்த்து வந்தீர்களா என்னைப் பார்க்க?"

"என் மனைவிக்குச் சினிமா என்றால் பைத்தியம்?"

"உங்களுக்கு சினிமாக்காரி என்றால் பைத்தியமாக்கும்!"

ஏமாற்றம் உதைத்துவிட்ட ஏளனம் எழும்பி வந்தது அவள் குரலில்.

"எனக்கு ஒன்றிலுமே பைத்தியம் இல்லை. என் மனைவி அடுத்த லோகத்திலும் சினிமா உண்டு என்று ஏற்பட்டுவிட்டால் சாகக்கூட பயப்படமாட்டாள். அவ்வளவு சினிமா மோஹம் அவளுக்கு. அவள் இன்னும் உயிரைப் பிடித்து வைத்துக் கொண்டிருப்பது சினிமா பார்க்கலாம் இந்த உலகத்தில் இருந்தால் என்ற ஒரே நம்பிக்கையில் தான். அவளுக்கு உங்கள் ஆட்டோகிராப் வேண்டுமாம்" என்று கூறியபடி அதிமதுரம் ஆட்டோகிராப் நோட்டை அவளிடம் நீட்டினான்.

இந்த திடும் திருப்பம் நிரஞ்சனாவைத் திடுக்கி…

காதல் தெய்வம் கையெழுத்து வேடுவனாக மாறிவிட்டது ஒரு கணம் அவள் இரத்த ஓட்டத்தையே நிறுத்தி விட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது.

"உங்கள் மனைவியே நேரில் வருவதற்கென்ன?"

"அவளுக்கு வெகுநாளாக வெளியே போய் நடமாட முடியாமல் உடம்பு அசௌகரியம். அதனால் நேரில் வரவில்லை. உங்கள் விளம்பரத்தை அவள் படுத்த படுக்கையாகப் பார்த்தாள். இந்தச் சாக்கில் என்னை உங்களைப் போய்ப் பார்த்து ஆட்டோகிராப்பை பெற்றுவரச் சொல்லித் தன் கை மோதிரத்தைக் கழட்டிக் கொடுத்து அனுப்பினாள், உங்கள் பெண் விசிறி" என்றான் அதிமதுரம் சாவதானமான குரலில்.

நிரஞ்சனா மறுபேச்சுப் பேசாமல் நோட்டில் கையெழுத்துப் போட்டு, நோட்டையும் மோதிரத்தையும் திருப்பிக் கொடுத்தாள்.

அதிமதுரம் மறுநோக்குப் பாய்ச்சாமல் வெளியேறினான்.

அவனுடைய அழகிய உருவம் நிரஞ்சனாவின் நெஞ்சை விட்டு வெளியேற மறுத்து விட்டது. உலகத்து ரப்பர் எல்லாம் உபயோகித்து அழித்தாலும் அவன் உருவம் அவள் உள்ளத்திலிருந்து அழியாது போல இருந்தது. கல்லச்சுப் போல (Fossil) அடுத்த பிறவியிலும் அவன் உருவத்தை நெஞ்சில் வைத்துக் கொண்டே தான் பிறந்து விடுவோமே என்று நிரஞ்சனா பயப்…, கொஞ்ச நாளைக்கு.○

MAHAMAHOPADHYAYA

*With the best compliments*

*from*

# PANDYAN

## INSURANCE COMPANY LIMITED.

FOR ALL CLASSES OF

GENERAL INSURANCE BUSINESS

*Head office:*

**Pandyan Building, MADURAI.**

*Branch Office:*

Indra Palace,<br>Connaught Place,<br>NEW DELHI-1.

Phone No. 45503<br>Gram:<br>*'PANDYANCO'*

*Other branches at:*

BOMBAY, MADRAS, CALCUTTA etc.

# பேசுவது எப்படி?

பேச்சாளர் மேடையேறும் போது, கூட்டத்துக்கு வந்திருப்பவர்கள் அனைவரும் அவரை ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். அவர்களில் சிலர் விழித்த நிலையிலே உறங்கவும் கூடும். சிலர், வீட்டில் இருந்திருக்கலாமே என்று எண்ணவும் கூடும்.

என்றாலும் முக்கியமான தொரு கூட்டம் என்பதற்காக அங்கே அவர்கள் கூடியிருக்கிறார்கள். பேச்சாளர் கூறுவதிலிருந்து பல புதிய செய்திகளை யறிந்து கொள்ளலாம் என்று எண்ணியிருப்பார்கள்.

அந்தப் பேச்சை, வீட்டிலிருந்தபடியே, எழுத்து வடிவில் பார்த்துத் தெரிந்து கொள்ளலாமே? பேச்சரங்கில் நெருங்கி உட்கார்ந்து கொண்டு துன்பப்பட வேண்டாமே என்று சிலர் கருதலாம்.

எழுத்தை விடப் பேச்சு சில வகைகளில் சிறந்தது. சொந்தக் கருத்துக்களை எடுத்துக் கூறும் பேச்சாளரின் குரலை, எழுத்திலே காண முடியாது; அந்த வேகமும் இதில் இருக்காது.

பேச்சுக்குப் பின்னர், அவரோடு, பிறர், கருத்துக்களை ஒப்பிட்டுக் காண வாய்ப்புண்டு; கலந்தாலோசிக்க வழியுண்டு. இந்த நேரடித்தொடர்பு நன்மை பல பயக்கும்.

பேச்சாளர் தமது உரையைத் தொடங்கியவுடன் மக்கள் நிமிர்ந்து உட்கார்ந்து கொள்கிறார்கள். அவரது ஒவ்வொரு சொல்லும் செயலும் அழகாக அமைவதைக் கண்டு வியந்து நிற்கிறார்கள். சிறிது நேரத்தில் திகைப்பு மேலிடுகிறது. அவர் என்ன சொல்கிறார், உட்கிடக்கை என்னஎன்பது தெரிவதில்லை. வெறும் வார்த்தைகளாலேயே அவர் கட்டிடம் எழுப்புகிறார் என்பது விளங்குகிறது.

இது நல்ல பேச்சா? அல்ல, நல்ல "சொற்பொழிவு." பேச்சாளருக்கு மட்டுமே தாம் சொன்னது விளங்கியிருக்கும். கருத்து, தெளிவாக அமைவது தான் நல்ல பேச்சு.

பேச்சுக்கும் எழுத்துக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. எழுத்து, ஓவியக் காட்சியைப் போன்றது. அதன் எதிரே எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் நின்று, திரும்பத் திரும்பப் பார்த்து மகிழலாம். பேச்சோ, இசை நிகழ்ச்சியைப் போன்றது. ஒரு குறிப்பிட்ட நிரவல் குறிப்பிட்ட ஒரு கால அளவுவரை தான் நீடிக்கும். சொற்கள், சொல்லப்படும் போதுதான் பேச்சு; பிறகு அவை வெறும் மூச்சு. ஆகவே, எழுதுவதற்கென்று, தனிப்பட சில உத்திகளைப் பயன்படுத்த வேண்டும்.

பேச்சில், சில சொற்களும் கருத்துக்களும், திரும்பத்திரும்ப வந்து, எடுத்துக் கொண்ட

பொருளை நினைவூட்டும். எழுத்தில் இது பொருத்தமாக இராது.

"ஆகவே" 'என்றாலும்' போன்ற இணைப்புச் சொற்கள், பேச்சில் பொருள் ததும்பிச் சிறக்கும். எழுத்தில் இவை சிறப்புறு. ஏனெனில், வாக்கிய அமைப்பிலே கண்ணும் மனமும் செல்லா.

'நான்' எனும் தன்மை யொருமை பேச்சிலே விரவி வருவது, சுவையூட்டும். இதுவே அளவில் மிகுமாயின் தீமை பயக்கும்.

சொற்பொழிவை எழுதிப் பார்த்துக் கொள்வது நல்லது.

சொற்பொழிவின் உருவம் எப்படியமைய வேண்டும் என்பதைத் தீர்மானிக்க, அதை எழுதிப் பார்ப்பது துணைபுரிகிறது. ஒரு கருத்தும் மற்றொரு கருத்தும் இணைந்து, பொருத்தமாகச் செல்ல இது உதவுகிறது.

சொற்பொழிவின் உட்பொருளைத் தலைப்பு எடுத்துக் கூறும். தலைப்பின் விரிவை, எழுத்து வடிவில் அமைந்த பேச்சு, பல படிகளில், தொடர்ச்சியாகக் காட்டும்.

சிந்தனைத் தொடர்ச்சியையும், கருத்துக் கோவையையும் ஒரு சீராக மேற்கொள்வதற்கு, எழுதிப் பார்ப்பது நல்லது.

பேச்சு மெல்லிய திரைச் சீலையைப் போல அமைய வேணடும். உள்ளிருக்கும் பொருள்களைக் காட்டாமற் காட்டுவது திரைச் சீலை. பேச்சும், தெரிந்த பொருளைக் குறிப்பாகவும் தெரியாததை விளக்கமாகவும் காட்டமுற்பட வேண்டும். எல்லாவற்றையும் எடுத்து விளக்க முயலக் கூடாது.

மிகுதியான புள்ளி விவரங்களை, சொற்பொழிவின்போது, கொண்டு வந்து கொட்டக் கூடாது. அவை நினைவில் பதிவதில்லை. வெறுப்பும் ஊட்டும்.

பேசிக் கொண்டு செல்லும் போதே, அவ்வப்போது, கருத்துக்களைச் சுருக்கித் தருதல் வேண்டும். பெருங்கருத்துக்களை விரித்துக் கூறலாம்.

பேச்சு எளிய, தெளிந்த நடையில் அமைந்திருக்க வேண்டும். பேச்சை, எழுதிவிட்டுப் படித்துப் பார்த்தால் இதன் உண்மை புலனாகும்.

கலைச் சொற்களைப் பயன்படுத்தும்போது, முதலில் அவை எதைக் குறிக்கின்றன என்பதை விளக்க வேண்டும். அப்போதுதான் பேச்சாளரும் கேட்பவரும் ஒரு கலைச் சொல்லுக்கு ஒரே பொருளைக் கருத்தில் கொண்டு பேசவும், கேட்கவும் கூடும்.

இறுதியாக, சொற்பிழிவைப் 'பிழிந்து,' சீரிய கருத்துக்களை மட்டும் சிறப்பாகச் சுருக்கமாகத் தரவேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக' பேச்சைக் கேட்க வரும் மக்களைப் பற்றி யறிந்து கொள்வது நல்லது. அவர்கள் நன்கு படித்தவர்களா? அப்படியானால் பேச்சு சுருக்கமாகவும் செறிவு மிகுந்தும் இருக்கலாம். இல்லையானால், விளக்கங்களை அதிகமாக மேற்கொள்ளலாம். அவர்களுக்கு

ஒன்றும் தெரியாது என்று நினைத்துப் பேசுவதும் தொல்லை; எல்லாம் தெரியும் என்று நினைத்து, அவர்களுக்குப் புரியாமல் பேசுவதும் ஆபத்து.

சொற்பொழிவை எழுதி முடித்த பிறகு, அதிலிருந்து குறிப்புக்களைத் தொகுத்துக் கொள்வது நல்லது. எழுதிய பேச்சை அப்படியே படிப்பது சுவையாக இராது. தமது கையெழுத்தையே படிக்க முடியாமல் திண்டாடும் பேச்சாளர்களைப் பற்றி ஒன்றும் சொல்ல வேண்டாம்! குறிப்புக்களைக் கையில் வைத்துக் கொண்டு, அவ்வப்போது, தலை நிமிர்த்தி, மக்களைப் பார்த்து உரையாற்றுவது நல்ல பழக்கம். பேச்சை மனப்பாடம் செய்து ஒப்புவிப்பதனால், கருத்தை விடச் சொல்லில் தான் கவனம் இருக்கும். நடுவில் ஒரு வாக்கியம் மறந்து விட்டதோ, ......

குறிப்புக்களைப் பார்த்துக் கொண்டு, அதிற்காணும் கருத்துக்களை விரிக்க முயலும்போது, மக்கள், பேச்சாளர் என்ன சொல்ல வருகிறார் என்பதை ஆர்வத்தோடு கவனிப்பார்கள்.

குறிப்புக்கள் தயாரிக்க முடியுமானால், எழுதுவது ஏன் என்று கேட்கலாம். பேச்சுக்கு ஓர் உருவம் தந்து, கருத்துக்களைத் தெளிவாக எடுத்துக் கூற எழுதும் பழக்கம் வழிசெய்கிறது.

பேச்சைக் கேட்க வருபவர்களை மறக்கவே கூடாது. அவர்களைப் பார்த்துக் கொண்டே பேசுவதால் சலிப்புத் தோன்றாது. குரலைத் தாழ்த்தி, உயர்த்தி


BEST FOR

**South Indian Dishes**

**MADRAS HOTEL**

Hotel & Restaurant

(Under New Management)

CONNAUGHT CIRCUS,

NEW DELHI - 1.

Telephone : 40595.


நெகிழ்த்து, வலித்துப் பேச முயல வேண்டும்.

எல்லோர் காதிலும் விழுமாறு பேச வேண்டும். ஒலிபெருக்கியிருந்தால் அதனை மறக்கக் கூடாது, ஒலி பெருக்கி, குரலை உயர்த்திக் காட்டுமே ஒழிய, தெளிவை ஊட்டாது. ஆகவே, பேச்சில் தெளிவும் தேவை.

கற்சிலையாக நின்று சொற்பெருக்காற்றாமல், பேச்சாளர் தமது உடலிலும் உயிர் ஊட்டி, பேச்சிலே உயிரும் சுவையும் ஊட்டுவது போற்றத்தக்கது.

நிறுத்தமும் அழுத்தமும் பேச்சுக்கு உப்பைப் போன்றவை.

"எழுதிப் பார்த்த சொற்பொழிவு
இன்பம் தந்திடும் தேன்பிழிவு!"

YOU THE DISCERNING BUYER

&

WE THE JEWELLERS OF CONFIDENCE

★

Quality & Guaranteed Materials, attractive Designs, Excellent Workmanship and Reasonable Prices are dominating factors in the choice of Jewellery. Besides these, a courteous attention and prompt delivery always satisfy the Discerning buyer. These are the qualities that have distinguished M/S. BAPALAL'S for over 50 years now as Jewellers of Confidence.

**Select BAPALAL'S with Confidence.**

★

# BAPALAL & Co.,

[Estd. 1910]

*DIAMOND MERCHANTS,*

*MFG. JWELLERS, GOLD & SILVER SMITHS,*

**Rattan Bazaar, MADRAS - 3.**

'Phone: 2696. 'Grams: NECKLACE.

# கண் திறந்தது!

"என்னூரம்"

காலைக் கதிரவன் தன் மெல்லிய தளிர் போன்ற கரங்களை உலகெங்கும் வீசியவாறு இள வானத்தில் தோன்றலானான். அன்று தோன்றிய கதிரவன் அடிவானத்தில் தன் பிரயாணத்தைத் தொடங்கிய பொழுது, ஒரு குடும்பம் தன் தலைவனைப் பிரிந்த துக்கத்தில் தவித்துக் கொண்டிருந்தது.

ஆம்! மத்திய சர்க்கார் குமாஸ்தாக்களுக்கான குறைந்த வாடகையில் அரசாங்கத்தாரால் கட்டப்பட்ட விஜய நகர் என்ற பகுதியிலுள்ள ஒரு கோடி வீட்டினின்று எழுந்த அழுகுரல் அக்கம் பக்கத்திலுள்ளோரைப் பரபரக்கச் செய்தது.

கோடைக் காலமாதலால் புல்வெளியில் தன்னை மறந்து தூங்கிக் கொண்டிருந்த உமாசங்கர் ஒரு புறம் கதிரவனின் பொற்கிரணங்கள் தாக்கி, உடலைப் புரளச் செய்ய, மறு பக்கம் அழுகுரல் காதில் பளீரென்று ஜவ்வதிரக் கேட்க 'சட்' இது என்ன தொந்தரவு என்றவாறு கட்டிலை விட்டு வெறுப்புடன் எழுந்தான்.

வீட்டினுள் சென்ற உமாசங்கர் தன் காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, "ட்ராயிங் ரூமில்" வந்து உட்கார்ந்தான். தினமும் அவன் வழக்கமாக இப்படித்தான் உட்காருவான். முடுக்கிவிட்ட 'ரிஸ்ட் வாச்' போல அவன் மனைவி சாந்தி 'டீ' தயார் செய்து கொண்டு வந்து கொடுப்பாள். ஆனால் அன்று 'டீ' வந்தபாடில்லை. சற்று கோபம் கொண்டவனாக சமயலறையை எட்டிப் பார்த்தான். 'டீ'-க்கு வேண்டிய தண்ணீர் தளைத்துக் கொண்டிருந்தது. ஆனால் அங்கு சாந்தியைக் காணவில்லை. விர்ரென்று வாசலில் சென்று நோட்டம் விட்டான். பக்கத்து வீட்டு உஷாவோடு சாந்தி ஏதோ சுவாரஸ்யமாகப் பேசிக் கொண்டிருந்ததைக் கண்டவுடன், 'சாந்தி' என்று அதட்டினான். திடுக்கிட்டுத் திரும்பிய அவள், வெது வெதுப்பான ஒரு பார்வையைத் தள்ளி விட்டவளாக, தன் ஆறு வயது மகன் சுஷீலைத் தரதரவென இழுத்துக் கொண்டு வீட்டினுள் சென்றாள். அவளைப் பின் தொடர்ந்தான் அவன்.

"தண்ணீர் கொதித்துக் கொண்டிருக்கிறது. உனக்கு அங்கென்ன வேலை? மணி ஏழு ஆக வில்லையா?" என்றான்.

"உங்களுக்கென்ன? ஏழு மணி வரையில் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தால், ஊரில் என்ன நடந்தாலும் தெரியாது," என்று தன் பிடியை விடாமலே பேசினுள் சாந்தி.

"அப்படி என்ன நடந்தது" என்று ஒன்றும் அறியாதவனுய்க் குழைந்தான் அவன்.

"உங்கள் காது என்ன செவிடா? அடுத்த "ப்ளாக்கின்" முதல் வீட்டில் இருக்கும் சத்தியப்பிரகாஷ் நேற்று இராத்திரி படுக்கையில் படுத்தவர் தான். காலையில் எழுந்திருக்க வில்லை. படுக்கையில் அப்படியே மரணமடைந்துவிட்டார் இதைப்பற்றித்தான் ஷீலா விடம் கேட்டுக் கொண்டிருந்தேன்" என்று நெஞ்சு கரகரத்துக் கண்களில் நீர் மல்கக் கூறினுள்.

சாந்தி மிகவும் இளகிய மனமுடையவள். எவருக்கேனும் இடர் உண்டாகுமாயின், அத்தகைய நிலைமையைத் தானும் எய்தினுல் எவ்வாறு கஷ்டப்படுவோம் என்று நினைத்து மனம் சங்கடப்படுவாள்.

"ஹூம்! நாம் என்ன செய்வது? அவன் செய்த கர்மம் படுக்கையிலேயே உயிர் துறக்க நேரிட்டது," என்று கிஞ்சித்தும் இரக்கமில்லாத பதிலை வெளியிட்டான் அவன்.

இரக்க உள்ளத்திற்கு உறைவிடம் அளித்த சாந்தி என்ன பதில் சொல்வாள் இதற்கு? கருங்கல்லில் மோதுண்டால் கசியும் இரத்தம் என்ற கொள்கையோடு வேருென்றும் பதிலளிக்காது தன் காரியத்தில் கவனம் செலுத்தலானுள்.

உமாசங்கர் மத்திய சர்க்காரில் குமாஸ்தாவாகப் பணியாற்றி வருகிருன். கருமித்தனத்தில் கைதேர்ந்தவன். வட்டிக்குக் கடன் கொடுத்துப் பணம் சேர்ப்பவன். கிட்டத்தட்ட மூவாயிரம் ரூபாய் வரை வெளியில் சுற்றிக் கொண்டிருந்தது. அந்த வட்டாரத்தில் ஏதேனும் ஒரு விழாவுக்கென்ருே கதைப் பிரசங்கம் முதலியவைகளுக்கென்றே உண்டிப்பணம் சேர்க்க எவரேனும் வந்தால், அவர்களை எவ்வாருயினும் சாமாளித்து பண உதவி அளிப்பதைத் தவிர்த்துவிடுவான். அவன் பிறவிக் குணமே உலோபித்தனம். அவன் குணம் தெரிந்தவர்களும், அவன் வீட்டிற்கு வருவதை நிறுத்திக் கொண்டனர்.

பகல் சுமார் இரண்டு மணியிருக்கும். விநயகர் நற்குழுவில் பங்கெடுத்துக் கொண்ட நான்கு முக்கிய மனிதர்கள் ஒவ்வொரு வீடாக ஏறி இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

அவர்களின் முக்கிய நோக்கம் ஏதோ ஓர் அவசரக் காரியத்தை யொட்டிப் பணம் திரட்டுவதே என்பது மிகத் தெளிவாகத் தெரியலாயிற்று. ஆம்! அன்று காலை மரணமடைந்த சத்தியப் பிரகாஷ் நான்கு குழந்தைகளுக்கும், தாய் தந்தையற்ற இரு வயதுவந்த சகோதரிகளுக்கும் உற்ற தூண்போல் இருந்து குடும்பத்தைச் செவ்வனே நடத்திவந்தார். அவருக்கு வரும்

மாத வரும்படி எட்டு ஜீவன்களுக்குப் படியளித்து வந்தது. வரும் பணத்தைக் கொண்டு வாய்க்கும், கைக்கும்தான் எட்ட முடிந்ததே தவிர சேமிக்க ஒரு சல்லியும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் அநாதரவாக விடப்பட்ட குடும்பத்தை நினைத்து வருந்தாதவர்கள் அந்தக் காலனியில் ஒருவருமில்லை.

விஜய நகர் நற்குழுவினர் ஒரு வழியாக சத்தியபிரகாஷின் ஈமக் கடன்களை முடித்துவிட்டனர். எனினும் மேற்படி குடும்பத்தின் வருங்காலத்தை நோக்கி, தங்களால் ஆன உதவி செய்யவே வீடு வீடாக ஏறிப் பண உதவி பெற்றுக் கொண்டு வந்தனர்.

அச்சமயம் பக்கத் துவீட்டுச் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த சுஷீல் தன் விளையாட்டைச் சட்டென நிறுத்திவிட்டு அங்கு வந்தவர்களின் பேச்சு வார்த்தைகளை உற்றுக் கேட்டான். அவனுக்கு என்ன தோன்றிற்றோ, விருட்டென்று ஒரே பாய்ச்சலில் தன் வீட்டை நோக்கி ஓடினன். உள்ளே சென்றவன் தன் பெட்டியில் பல நாட்களாக சேமித்து வைத்திருந்த இரண்டு ரூபாய் நோட்டை எடுத்துக் கொண்டு ஓட்டமும், நடையுமாக வாசல் நோக்கி ஓடினன். அவன் கையில் ரூபாய் நோட்டை எடுத்துச் செல்வதைக் கண்ணுற்ற உமாசங்கர், 'சுஷீல்' என்று கூப்பிட்டான். சட்டென நின்ற 'சுஷீல் "அப்பா' நான் இந்த ரூபாயை என் சிநேகிதன் பிரேமுடைய அப்பா செத்துப் போனதற்குக் கொடுக்கப்போகிறேன்," என்று உமாசங்கர் கேட்குமுன்பே பல பல வெனக் கொட்டிவிட்டுச் சென்றான். "நில்லு, நில்லு சுஷீல்," என்று கத்தியவாறு உமாசங்கர் அவனைப் பின்தொடர்ந்து வீட்டிற்கு வெளியேவர, அதே சமயத்தில் பணம் திரட்டுபவர்களும் அவன் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தனர்.

சுஷீலை ஒரே தாவில் எட்டிப் பிடித்தவாறு, "ஏண்டா – உனக்குத் திமிர் அதிகமாகி விட்டதா? ஊரில் தினமும் ஒருவன் இறப்பான் – அதற்கென்று தர்மம் பண்ணிக் கொண்டிருந்தால் நாம் மொட்டை தான் அடித்துக்கொள்ள வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே சுஷீலின் கையில் அடைக்கலம் கொண்ட அந்த நோட்டைப் பிடுங்கினன். சுஷீலும் ஒரே பிடிவாதமாக தன் கையிலிருப்பதை கொடுக்க மறுத்தான். இவர்கள் இருவருக்கும் இடையில் அகப்பட்ட அந்த நோட்டு இரண்டாக கிழிபட்டுத் தன் இறுதி யாத்திரையைத் தொடங்கியது.

இந்த சச்சரவை நன்கு பார்த்தும், கேட்டும் புரிந்து கொண்டனர் அந்நற்குழுவினர். "என்ன உமாசங்கர் நற்காரியங்களுக்குத்தான் பங்குகொள்ள நீ முன் வருவதில்லை, போகட்டும் இந்த துக்கச் செய்தியைக் கேட்டாவது உன் பாறை நெஞ்சம் பிளவு கொடுத்துக் கருணைகொள்ளும் என்று நினைத்தோம், அதற்கும் நீ இடம் கொடுக்கவில்லை. என்றுலும் ஒரு குழந்தையின் உள்ளத்தையாவது புரிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாத மூர்க்க மிருகமே" என்று அடித்துக்

கூறுவதுபோல் இருந்தது அவர்களின் திக்கிளம்பிய கண்களில் எழுந்த பார்வை.

அடுத்தவினாடி ரூபாய்நோட்டு விண்டுபோனது பொறுக்காமல் 'பளீர்' என்று ஒரு அறையை தர்மமாக அளித்தான் சுஷீலின் கன்னத்தில். தர தரவென அவனை உள்ளே இழுத்துக் கொண்டும் சென்றான்.

இந்நிகழ்ச்சியை வீட்டினுள்ளிருந்து ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்த சாந்தி, கணவனிடம் ஒன்றும் கேட்காமல், குழந்தை சுஷீலைத் தன்னோடு சேர்த்து அணைத்தவாறு அடுத்த அறையை நாடினாள். சுமார் பத்து நிமிடங்களுக்குப் பிறகு உமாசங்கர் தன்னையும் மறந்து நித்திரை தேவியின் அரவணைப்பில் பிடியுண்டான்.

கருணை உள்ளம் படைத்த சாந்தியினால் தன் கணவனின் செய்கையைச் சிறிதும் பொறுக்க முடியவில்லை. விக்கலுடன் அழுகையும்கூடி தேம்பித்தேம்பி நின்ற தன் மகன் சுஷீலை மெதுவாக அழைத்தாள். ஏதோ ஓர் முடிவுக்கு வந்தவளாக, பல நாட்களாகக் கணவனுக்குத் தெரியாமல் சிறுகச் சிறுக சேமித்த பணத்திலிருந்து ஐந்து ரூபாய்நோட்டை எடுத்து அவனிடம்கொடுத்தாள். 'சுஷீல்,' இதைக் கொண்டுபோய் இப்போது பணம் சேர்க்க வந்தார்களே அவர்களிடம் கொடுத்து விட்டு வா," என்று மிக்க தணிவான குரலில் சொல்லியனுப்பினாள். குழந்தை சுஷீல் தன் கண்களைத் துடைத்துக் கொண்டு விறுவிறு என்று வீட்டின் பின்பக்கமாய் வெளியேறினான்.

சுமார் பத்து நாட்களுக்குப் பிறகு ஒருநாள் உமாசங்கர் காரியாலயத்திலிருந்து நேரே சைகிளில் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தான். துக்ளக் ரோட்டின் முனையில் ஏதோ தெரு வேடிக்கை நடந்து கொண்டிருந்தது. அதைத் திரும்பித்திரும்பிப் பார்த்தவாறு வந்து கொண்டிருந்தவன் பாதையில் கவனம் செலுத்தவில்லை. 'பிரிதிவிராஜ்' ரோட்டினின்று திரும்பிக் கொண்டிருந்த மண் எடுத்துச் செல்லும் லாரியினின்று வந்த "ஹாரன்" சப்தம் அவன் காதுக்கு எட்டவில்லை போலும்.

அடுத்த வினாடி பெருத்த சப்தத்துடன் அவனுடைய சைகிள் தூக்கி எறியப் பட்டது. நாற்சந்தி போலீஸ் சேவகன் "விஸில்" கொடுக்க 'லாரி' டிரைவர் வண்டியை நிறுத்தினான்.

மண்டையில் பலத்த அடியோடு விழுந்து கிடந்த உமாசங்கரைச் சுற்றி ஒரு கூட்டமே கூடிவிட்டது. யாரோ ஏதோ கேட்டார்கள். அவன் பதில் சொல்ல வாய்திறந்தான்—முடியவில்லை. அவன் கண்கள் சுழல ஆரம்பித்தன. தன்னைச் சுற்றி எல்லோரும் ரங்க ராட்டினம் ஆடுவது போலிருந்தது அவனுக்கு.

வழியோடு காரில் சென்ற அவனது ஆபீஸர் தற்செயலாக அந்த இடத்தில் தன் காரை

நிறுத்தினார். அடிபட்டுக் கிடப்பது தனது காரியாலயத்தில் வேலைசெய்யும் உமாசங்கர் என்பதைத் தெரிந்து, கூட்டத்தை விலக்கிக்கொண்டு, அவனை இரண்டொருவர் உதவியோடு தன் காரிலேயே போட்டுக்கொண்டு "சப்தர்ஜங்" மருத்துவச் சாலைக்கு விரைந்து சென்றார். உமாசங்கரை அவசர விடுதியில் சேர்த்த பிறகு அவன் சொக்காய்ப் பையில் இருந்த ஓர் பழைய கடிதத்திலிருந்து அவனது வீட்டு விலாசத்தையும் தெரிந்துகொண்டு காரை விநய நகரை நோக்கி ஓட்டினார்.

மறுநாள் காலை சுமார் ஆறு மணி இருக்கும். இரவு முழுவதும் உமா சங்கரின் படுக்கையருகில் உட்கார்ந்திருந்த சாந்தி வேண்டாத தெய்வமில்லை. அவள் மடியில் தலையை வைத்தவாறு குழந்தை சுஷீல் தூங்கிக்கொண்டிருந்தான். அவ்வமயம் உமாசங்கர் படுத்திருந்த கட்டில் சற்று அசைந்து கொடுத்தது

அரவம் கேட்டுச் சட்டென் றெழுந்தாள் சாந்தி. அவள் மடியில் படுத்துறங்கிக் கொண்டிருந்த சுஷீலும் எழுந்துவிட்டான்.

சாந்தி ஆவலுடன் உமாசங்கரின் முகத்தை உற்று நோக்கியவாறு இருந்தாள், மண்டைக் கட்டுகளினிடையே அவன் கண்களை இறுகத் தழுவியிருந்த இமைகள் சிறிது தளர்ந்து கொடுக்க, அவன் தன் உடலை அப்படியும், இப்படியும் அசைத்தவாறு கண்களை மெதுவாகத் திறந்தான்.

காலையில் அவன் கண் விழித்துப் பேச முடிந்தால் உயிருக்கு ஆபத்தில்லை — குணமாக மட்டும் சிறிது நாளாகும் என்று டாக்டர் சொல்லியிருந்தார். டாக்டர் சொல்லியபடி அவன் கண்களைத் திறந்துவிட்டான். சாந்திக்குத் தன்னிலை கொள்ளவில்லை. மாங்கல்யத்தைத் தொட்டுக் கண்களில் ஒத்திக்கொண்டாள்.

உமா சங்கர் அவளை மெதுவாகத் தன் அருகில் வரும்படி சைகை செய்தான். அவளும் அவன் அருகில் சென்றாள். அவள் கண்களிலிருந்து விடுபட்ட இன்ப நீர் ஊற்று அவன் முகத்தில் வீழ்ந்து தெறித்தது. அவன் எழுந்திருக்க முயன்றான். அதற்குள் சாந்தி மெதுவாக அவன் உடலைப் பிடித்தவாறு படுக்கையில் இருக்கச் செய்தாள்.

"நான் எங்கிருக்கிறேன்?" என்று கேட்டான் அவன். சாந்தி சுருக்கமாக அவனுக்கு நேர்ந்தவைகளை எடுத்துக் கூறினாள்.

"குழந்தை சுஷீல் எங்கே?" என்றான் அவன்.

"இதோ இருக்கிறேன்" என்று கட்டிலின்மேல் ஏறித் தன் தந்தையின் அருகில் அமர்ந்தான் சுஷீல்.

உமா சங்கர் சொன்னான்: "சாந்தி, நான் அடிபட்டுவிழுந்தபோது உங்களை அனாதைகளாக விட்டுச் செல்கிறோமே என்று, நினைக்கக்கூடாத சிலவற்றை நினைத்தேன். ஆனால் இப்பொழுது தைரியம் வந்துவிட்டது. தவிர இறந்த சத்தியப்பிரகாஷின் குடும்ப நிலைமை

எப்படி இருக்கும் என்பதை இப்பொழுதுதான் தெரிந்தவனானேன்."

"சாந்தி இப்பொழுதே ஓடு — வீடு சென்று என் பெட்டியில் துணிகளுக்கு அடியில் உள்ள காகிதப் பையிலிருந்து ரூபாய் ஐம்பதை சத்தியப் பிரகாஷின் குடும்பத்தினருக்குக் கொடுத்து விட்டு வா. அப்பொழுதுதான் என் உள்ளம் அமைதியடையும் என்று அவள் கைகளைப் பிடித்தவாறு கெஞ்சினான்.

அதற்குள் குழந்தை சுஷீல், "அப்பா, அப்பா நீ கவலைப் படாதே — நீ அன்றைக்குத் தூங்கிக் கொண்டிருக்கும் போதே, அம்மா என்னிடம் ஐந்து ரூபாய் கொடுத்து அவர்களிடம் கொடுக்கச் சொன்னாள்" என்று மடை திறந்தது போல் பொலபொலவெனச் சொற்களை உதிர்த்தான். இதைக் கேட்ட உமாசங்கர், "கண்ணே! சுஷீல், என் போன்ற கல்நெஞ்சமுள்ளவனுக்கு வந்து பிறந்த மாணிக்கமே — உனக்குள்ள ஈகைச் சிந்தையில் சிறிதளவும் எனக்கில்லாமல் போய்விட்டதே" என்று அரற்றியவாறு அவனை அணைத்து முத்தமிட்டான். தன் மனைவி செய்த தருமமே தன் தலையைக் காத்தது என்பதை நன்கு புரிந்து கொண்டான்.

மறுகணம் அவன் உள்ளத்தின் அடியில் இருந்து பீறிட்டெழுந்த உணர்ச்சியினால் உந்தப்பட்டவனாய் "என் கண்களைத் திறந்த கண்ணின் மணிகளே" என்றான்.

"வீணாகப் பேசி உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள்" என்று சொல்லியபடியே சாந்தி சுஷீலை ஒரு கையால் அணைத்தவாறு மறு கையால் உமா சங்கரின் தலைமயிரைக் கோதியபடி நின்றிருந்தாள். ○

FOR

**THE HINDU**

(Air Mail Edition)

SPORT & PASTIME and LEADING TAMIL DAILIES, WEEKLIES and MONTHLIES

*Contact:*

**CENTRAL NEWS AGENCY**

CONNAUGHT CIRCUS,

NEW DELHI.

Telephone: 44762.

# தமிழ் வளர்க்கும் சக்தி

ராஜம் ராமச்சந்திரன்

"செந்தமிழ் நாடெனும் போதினிலே, இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே" என்று பாடினார் பாரதியார். அப்படிப்பட்ட நாட்டில் பேசும் இனிமை மிக்க தமிழ்மொழியை, பெற்ற தாயை விட மேலாகக் கருதினார் அவர். ஆதி சிவன் பெற்றெடுத்து அகத்தியர் இலக்கணம் செய்து அலங்கரித்த தமிழ் அன்னை, தன் மக்களே பிறமொழி ஆசையால் தன்னைத் தாழ்த்தி விட்டது கண்டு நலிந்து மெலிந்து கிடந்தாள். பாரதியார் என்ற தன்வந்திரி அந்தத் தமிழ்த் தாயைத் தம்முடைய இனிமையான கவிதைகளாலும் தமிழ்ப்பற்று என்ற ஔஷதத்தாலும் மீண்டும் புத்துணர்வு அடையச் செய்தார். சோர்ந்து விழுந்து கிடந்த தமிழ்த் தாயை எழுப்பி உட்கார வைத்தார். ஆனால் தமது கடமை அத்துடன் முடிந்து விட்டதுபோல் அவர் அமரராகி விட்டார்.

பாரதியார் புத்துணர்வு அளித்த தமிழன்னை இன்றும் இன்னமும் 'நடக்கும் குழந்தைப் பருவம்' போன்ற அளவிலேயே இருக்கிறாள். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் கேட்கும் நாள் இன்னும் வந்தபாடில்லை. அமர கவி உயிரூட்டிய தமிழை இன்னும் நாம் வளர்க்கவேண்டும்; வளர்த்து அவள் பெருமை எட்டுத் திக்கும் முழங்கச் செய்ய வேண்டும்; பாரதியாரின் கனவை நனவாக்கவேண்டும்.

சங்கம் வைத்து மொழி வளர்த்த நாடு நம் தமிழ்நாடு. அந்நாட்களில் சங்கங்களில் புலவர்கள் தமிழை வளர்த்தால், அந்தப் புலவர்களை முழுதும் ஆதரிக்கவும், தமிழுக்கு ஆதரவு செய்யவும் அரசர்கள் இருந்தார்கள். ஆனால் தற்காலத்தில் காலை எட்டரை மணிக்குள் வெந்ததும் வேகாததுமாகச் சோற்றை அள்ளிப் போட்டுக் கொண்டு, எந்த லாரியில் அகப்பட்டுக் கொள்வோமோ என்ற பயத்துடன் அலுவலகம் சென்று உழைத்து விட்டு, மாலையில் மறுபடியும் எதிலும் மோதிக் கொள்ளாமல் இருக்க, கற்ற சித்துவித்தைகளைக் கையாண்டு வீடு வந்து சேரும் ஆடவர்களை, 'சற்றுத் தமிழ் வளர்ச்சிக்குப் பாடுபடுங்கள் என்று எப்படிச் சொல்வது? ஏதோ ஒரு சில ஆடவர்கள் தான் களைப்பையும் பொருட்படுத்தாமல் தமிழ் என்றும் சங்கம் என்றும் பாடுபடுகின்றனர். அப்படிப் பாடுபடுகிறவர்களுக்கு ஓரளவு ஆதரவு அளிக்கவாவது முன்வர யாரும் இல்லை. அப்படியானல் தமிழ் வளர்ச்சி

இப்படியே இருக்க வேண்டியது தானு?

பாரதியார் ஆண்களும் பெண்களும் சம உரிமையோடு வாழ வேண்டுமென்று பாடினூர். இன்று பெண்கள் எல்லாவற்றிலும் சம உரிமை கேட்கும் பெண்கள் இந்தத் தமிழ் வளர்ச்சியில் பங்கெடுத்துக் கொள்ளலாமே. சங்க காலத்தில் எத்தனையோ பெண்ணரசிகள் தமிழ் அறிவு மிக்கவர்களாக இருந்து தொண்டு செய்தனரே.

தமிழை எப்படி வளர்ப்பது? கஷ்டம் ஒன்றுமில்லை. ஓழிந்த நேரங்களில் நல்ல நல்ல தமிழ் இலக்கியங்களைப் படித்துத் தமிழின் பெருமைகளை அறிய வேண்டும். தாங்கள் படித்து அறிந்தால்தானே, மற்றவருக்கு எடுத்துச்சொல்ல முடியும்?

" வம்பளந்து வீண்பொழுது
போக்கமாட்டார் பெண்கள்
வாசலில் கும்பு கூடிப்
பேசமாட்டார்." — என்று

தன் எதிர்காலப் பெண்குலத்திற்காகப் பாரதியார் பாடினூர்.

பெண்கள் தங்கள் ஓய்வு சமயத்தைப் பயனுள்ளதான தமிழ் வளர்ச்சிக்குச் செலவழிக்கலாம். தமிழின் இனிமை, தமிழின் பெருமை இவற்றைத் தம் குழந்தைகளுக்கு எடுத்துச் சொல்லித் தாய்மொழிப் பற்றை வளர்க்கலாம். இது தமிழுக்குப் பெண்கள் செய்யும் சிறந்த சேவை. சில தாய்மார்கள், 'என் பெண்ணுக்கு ஹிந்தியில், தான் பேசவரும். தமிழே தெரியாது" "என் பிள்ளை எல்லாவற்றையும் ஆங்கிலத்திலேயே தான் சொல்லுவான். என்னைக் கூட 'மம்மி' என்றுதான் கூப்பிடுவான்" என்று பெருமையாகச் சொல்லிக்கொள்வார்கள். அந்தத் தாய்மார்களின் குழந்தைகள் ஹிந்தி, ஆங்கிலம் இன்னும் பல மொழிகளிலும் கூட மேதைகளாக விளங்கட்டும்; வாழ்த்து


FOR CLEAN, WHOLESOME, DELICIOUS
NORTH AND SOUTH INDIAN DISHES

Visit

**MODERN COFFEE HOUSE**

(Near South Indian Boarding House)

41 - M, CONNAUGHT CIRCUS,

NEW DELHI.

வோம். ஆனால் தாய்மொழியாகிய தமிழை உதாசீனம் செய்வது சரியா? தன் மகன் தன்னை மறக்காதிருக்க வேண்டுமென்று விரும்புவது போலவே தாய்மொழியையும் மறக்காதிருக்க வேண்டுமென்று ஒவ்வொரு தாயும் விரும்பவேண்டும். தன் மக்கள் பிறமொழி ஆசையில் தமிழ் மொழியை அலட்சியம் செய்யாதிருக்கும்படி தாய் அவர்களை நல்லவழியில் பயிற்றுவிக்க, தான் முதலில் தமிழின் பெருமைகளை அறிந்திருக்க வேண்டுவது அவசியம்.

எல்லாம் சரிதான்! இந்தக் காலத்தில் குழந்தைகளுக்குப் பள்ளிப்பாடப்புத்தகங்கள் வாங்கிக் கொடுத்தே குடும்பம் திவாலாகிறதே, நாங்கள் வேறு புத்தகங்களை வாங்கப் பணம் வேண்டாமா? என்ற கேள்வி பிறக்கும். தனி ஒருவராகப் பல இலக்கிய நூல்களைப் பொருள் கொடுத்து வாங்கிப் படிக்க முடியாதுதான். பழங்காலத்தைப் போல, தமிழ்ச் சங்கம் வைத்து இலக்கிய நூல்களைச் சேகரித்து எல்லோரும் படிக்கலாமே. தமிழர் வாழும் ஒவ்வொரு ஊரிலும் தமிழ்ச் சங்கம் ஏற்படவேண்டும். சந்தா என்ற பெயரில் மிகச் சிறிய ஒரு தொகை கொடுத்து மாபெரும் இலக்கியப் புத்தகத்தை வாங்கிப் படித்து விடலாம். ஆனால் சங்கங்கள் ஏற்பட மக்கள் ஆதரவு வேண்டும். ஒரு சிலர் முயன்று சங்கம் தொடங்கினால் மற்ற யாவரும் உறுப்பினராக அமர்ந்து அந்தச் சங்கம் தழைத்தோங்கப் பாடுபட வேண்டும். புத்தகத்தை வைத்துப் பாதுகாக்கும் தொல்லையெல்லாம் சங்கத்தினர் பட, உட்கார்ந்த இடத்தில் பலரூபாய்கள் பெறுமானமுள்ள புத்தகங்களைப் படித்துக் களிப்படையும் வேலை ஒன்றுதான் அங்கத்தினர்களுக்கு. ஆக, தமிழ்ச் சங்கத்திற்கு ஆதரவு அளிப்பதில் சிரமம் ஏதுமில்லை.

உதாரணமாக, நமது தலைநகரில் தமிழ்ச் சங்கம் தோன்றி பல இன்னல்களுக்கு இடையே ஒரு கிளையும் விட்டு வளர்ந்திருக்கிறது. இந்தச் சங்கம் இன்னும் ஆல் போல் தழைக்க தலைநகர்த் தமிழர் யாவருமே அங்கத்தினராகச் சேர முன் வர வேண்டும். பெண்கள் மனம் வைத்தால் எதுதான் நடக்காது? தாங்கள் தமிழைப் படித்து அறிய முதலில் முற்படும் பெண்கள் சிறிது சிறிதாகத் தங்கள் மக்களோடு, களைத்து வரும் கணவரையும் கூடத் தமிழ் இனிமையில் ஆழ்த்திவிட முடியும். இன்றைய காலத்தில் பெண்களிடம் எதையும் திறம்பட நடத்தும் சக்தி இருக்கிறது. அந்தச் சக்தியை நல்ல முறையிலே பயன்படுத்தி சகோதரிகள் உட்கார்ந்த இடத்திலேயே தமிழுக்கு தங்களாலியன்ற சேவையைச் செய்திடலாம். இமயப் பனி வரையிலே தமிழ் மூவேந்தர் தங்கள் இலச்சினைகளைப் பொறித்தனராம். இன்று இமயத்தின் அருகில் இருக்கும் தமிழர், தமிழ் அன்னையின் வெற்றிக்கொடியை இமயப் பனிவரையின் சிகரத்திலே ஏற்றிடலாம். தமிழை வளர்க்க, பாரதியார் கண்ட கனவை நிறைவேற்ற, தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்ய முன் வாருங்கள்.

# ஆனைமலைஸ் பஸ் டிரான்ஸ்போர்ட் (பிரைவேட்) லிமிடெட்
## பொள்ளாச்சி

எங்கள் பஸ்ஸுகள் கோயமுத்தூர், மதுரை ஜில்லாக்களிலும், கேரள ராஜ்யத்தில் திருச்சூர் ஜில்லாவிலும், தினசரி சுமார் 12,000 மைல்கள் குறித்த நேரங்களில் ஓடி 30,000-க்கு மேற்பட்ட பொதுமக்கள் பிரயாணம் செய்ய வசதியளிக்கிறது.

சென்ற 28 வருடங்களாக பொதுமக்களுக்குச் சிறப்பாகவும், திறமையாகவும் பணியாற்றிவரும் ஒரு ஸ்தாபனம்.

கம்பெனியின் வெள்ளி விழா 31-10-58, 1-11-58, 2-11-58 தேதிகளில் கொண்டாடப்பட்டது.

தொழில் நுணுக்கமும், திறமையும் கொண்ட 500-க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் இந்த ஸ்தாபனத்தில் பணி செய்கிறார்கள்.

N. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,

டைரக்டர்.

# ப்ரதிபா

சு. கணேச பாண்டியன்

“டிக் டிக் ... டிடிக் டிக் ...” கொஞ்ச நேரந்தான் இந்தச் சத்தம் கேட்டது. பின்னர் கந்தருவர் கீதம் இசைக்கிருர்கள்; ஊர்வசி, ரம்பையரின் பாதச் சிலம்புகள் கொஞ்சுகின்றன; என் நெஞ்சத்தில் இன்பம் பொங்குகின்றது; பொங்கிப் பொங்கி இன்பமயமான ஒரு மேல் நிலைக்கே என்னை எடுத்துச் சென்றுவிடுகின்றது. ‘டைப் ரைட்டர்’ முன் உட்காரும் போதெல்லாம் இதே கதைதான்!

அப்படிப்பட்ட மேல் நிலையில் சஞ்சரித்துக் கொண்டிருந்த போதுதான் ‘ஸா...ர்’ என்னும் முரட்டுக்குரல் என்னைச் சூழ் நிலைக்கு இழுத்து வந்தது. சிலம்பொலி மீண்டும் டிக் டிக் ஆகி விட்டது. அதிகாரி அழைப்பதாக ‘சப்ராஸி’ அறிவித்தான். இன்பம் தடைப்பட்டதில் எனக்குக் கவலையில்லை; தாராளமாகப் போய்வருவேன். ஆனல், ஆறு நிமிடத்துக்கு முன்தானே மாத்ரு பூதத்துக்கு — மாத்ரு பூதம் என்பது என் அதிகாரிக்கு அவர் தம் அருமை மாதா இட்டிருந்த பெயர் — ஒழுங்காக ‘டைப்’ செய்யப்பட்ட எட்டுக் கடிதங்களை அர்ப்பணித்துவிட்டு வந்தேன்! ஏதேனும் தவறு...? என் மனக்கண்முன் ஓர் எரிமலையும் பூகம்பமும் வந்து சென்றன. ஒரு கணத்தில் மின்னல்போல் என் முகத்தில் ஓடிய கவலை ரேகையை என் ‘சகப்பெட்டி’ ஆஷாதேவி கண்டுவிட்டாள். அனுதாபத்துடன், “கடவுள் உங்களைக் காப்பாற்றட்டும்” என ஆறுதல் கூறி வழியனுப்பி வைத்தாள்.

சுருக்கெழுத்து நோட்டைப் பிரித்து வைத்து ஏவலை எதிர் பார்த்திருந்தேன். கதவைத் திறந்து உள்ளே நுழையும் போதே சடசட வென்று சொற்களை உதிர்த்துக் கொட்டும் காளமேகம் அன்று அதுவரை வாளாவிருந்தது. ஏனே என்று அண்ணாந்து அவர் வாயைப் பார்த்தேன். ஒரு சமயத்தில் அவர் முகத்தில் ஏதேனும் ஓர் உறுப்பைத்தான் பார்க்க முடியும்!

“என்ன பாண்டியன், டயர்டா இருக்கயா?”

“ஷாக் அடித்ததா எனக்கு? இல்லையே? மாத்ருபூதத்தின் கனிவான பேச்சு — தமிழில் என்னிடம்! நான் என்ன எதிர்

பார்த்தேன்?... என்ன கிடைத்தது? அறைறியொன்று உறுதி என்னும் பயத்துடன் கண்ணை மூடி நிற்கும் பையனுக்கு ஓர் அணைப்பும் கட்டிமுத்தமும் கிடைத்தது போலிருந்தது.

திணறி திக்குமுக்காடி 'நோ ஸார்' 'இல்லை ஸார்' என்று அரற்றினேன். அதற்குமேல் நான் கேட்டவைதாம் என்னை இன்ப சாகரத்திற்கு இழுத்துச் சென்று ஆழத்தில் அழுத்தி விட்டன.

"உன்னை இப்போது அழைத்தது டிக்டேஷனுக்காக அல்ல" என்ற பீடிகையுடன் தொடங்கி, மாத்ருபூதம் கையிலிருந்த சிகரெட்டைத் தட்டில் போட்டார். சுருக்கெழுத்து நோட்டை நான் மூடினேன். மோட்டைப் பார்த்துக்கொண்டே தொடர்ந்தார் அவர்: "என் டாட்டர் மெட்ரிக் வாசிக்கறு. ...ப்ரதிபா. நீ கூடப் பார்த்திருப்பாயே... அவ மேதமேடிக்ஸ்லே ரொம்ப வீக். நீ கொஞ்சம் கோச் பண்ண முடியுமா?"

எமன்! நான் கணக்குப் படித்திருக்கிறேன் என்பதை எப்படியோ தெரிந்து வைத்திருக்கிறது!

நானும் எமன்? எனக்கா தெரியாது இவர் டாட்டர்! வட்ட வடிவமான இரு கருவிழிகளை முழுக்க முழுக்க விழித்துக் கொண்டு அவருடன் 'வாக்கிங்' வரும் அழகிதான்!

"அதற்கென்ன ஸார்..."

"உனக்குச் சிரமமாயிராதே?"

"சிரமம் ஒன்றுமில்லை ஸார்"

"அப்படியானு டுமாரோ ஈவினிங் வந்திடு. எபௌட்...ஸெ... ஸெவன்."

"ஆகட்டும் ஸார்". ஒரு சலாமடித்துவிட்டு சீட்டில் வந்து உட்கார்ந்தேன். என்முன் இருப்பது 'டைப்ரைட்டரா?' இல்லை... இல்லை. வட்டக் கருவிழிகள் இரண்டு. நான்கு சக்கரங்கள். பறக்கும் மோட்டார். புத்தகம் ஒரு கையில், ப்ரதிபா இன்னொரு கையில்...

"அடி விழவில்லையே?" –இது ஆஷா.

"......"– இது அடியேன்

## 2

"வழக்கம்போல் நேரே மேலே சென்றேன். வழியில் மா–பூதமும் அவர்தம் தர்மபத்னி மிருதுபாஷிணியும் எதற்காகவோ ஒருவரையொருவர் திட்டிக் கொண்டிருந்தது சுமாராகக் கேட்டது. தகரக் கொட்டகையில் மழைபெய்வதுபோல் வந்த அந்தக் கூச்சலைக் கேட்டும் கேளாததுபோல் போனேன்.

போன உடனே கேள்வி – 'என்ன ஸார், ரஸிக்கத் தகுந்த காட்சி தானே?"

"இல்லை, எதைச் சொல்கிறீர்கள்?"

பாய்ந்து வந்து கொஞ்சினாள் ப்ரதிபா. "மிஸ்டர் கணேஷ், இந்த மாடஸ்டியெல்லாம் என்னிடம் வேண்டாம். உள்ளதைச் சொல்லுங்கள். அப்பா அம்மா சண்டையை நீங்கள் கேட்டீர்கள். எப்படியிருக்கிறது?"

என்னத்தைச் சொல்வது? ஓர் அசட்டுச் சிரிப்பை மட்டும் சிந்தினேன். அதே நேரத்தில் ஒரு சிறு சிந்தனை என்னை ஆட்கொண்டிருந்தது. ப்ரதிபா என்னை 'கணேஷ்' என்று அழைப்பது அவளை ஒருவித நெருக்கத்தில் கொண்டுவந்து நிறுத்தியது. ஏனென்றால், என் பெயரின் பிற்பகுதியை வைத்தே பெரும்பாலோர் என்னை அழைப்பார்கள். சிலர் முழுப் பெயராலும் "கணேசபாண்டியன்" என்று வாய்நிறைய அழைப்பார்கள். ஆனால் 'கணேஷ்' என்று என் வீட்டிலுள்ளோராலும் இரண்டே இரண்டு நபர்களாலும் தான் அழைக்கப்பட்டு வருகிறேன். அப்படியிருக்க ப்ரதிபா என்னை 'கணேஷ்' என்று அழைத்தது ஒருவித இன்பக் கிளுகிளுப்பை உண்டாக்கியிருந்தது.

"ஐயா சிந்தனையாளரே, சண்டையை நீங்கள் ரசிக்காதது போகட்டும். நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள்" என்று அவள் அளந்த கதையிலிருந்து நான் தெரிந்து கொண்டது இது தான். ப்ரதிபாவின் தந்தையும் தாயும் தங்கள் கல்லூரி நாட்களில் ஒருவரையொருவர் விரும்பிமணந்துகொண்டார்கள். இப்போது அவர்கள் அடிக்கடி இரைந்து வாதாடுவதில் 'விவாகரத்து' என்னும் கடினமான வார்த்தையும் அடிபடுகிறது.

விளையாட்டுப் போல் ஒரு வாரம் ஓடிவிட்டது. ப்ரதிபாவுக்கு நான் பாடம் சொல்லத் தொடங்கி... அதில் ஒரு தனி இன்பம் இருக்கக் காண்கிறேன்.





ஐரிஸ் இங்க்

சுகமாக எழுத
உடனே உலர
என்றும் அழியாமல்
இருக்க

RESEARCH CHEMICAL LABORATORIES
Madras-4
Bangalore - New Delhi

MRC/159

சர்ம நோய்களுக்கு லாண்டலின்

Contact
Authorised Dealer & Stockist
For

Delhi, Punjab, Rajasthan,
Jammu and Kashmir

Mr. RAJBANS BAHADUR
5/68, Western Extension Area,
NEW DELHI - 5.
Telephone : 54005.

மேலும் நான் எண்ணும் எண்ணத்தில் புதுமை, செய்யும் செயலில் விரைவு, சொல்லும் சொல்லில் கனிவு – இவையெல்லாம் எங்கிருந்தோ வந்து சேர்ந்தன... அவளும் கெட்டிக்காரி. சொல்வதை உடனே புரிந்து கொள்கிறாள். ஆனால் அதற்குண்டான பெருமையையும் என் மீதே போட்டு விடுகிறாள்: "நீங்கள் ஒரு தடவை சொன்னால் அது உடனே விளங்கிவிடுகிறது; இந்தக் கவிதையைப் படித்து அர்த்தம் சொல்லுங்கள்" என்பாள். இரவு ஏழு முதல் எட்டு வரையிலும் அந்த ஒரு மணி நேரத்தில் சரமாரியாகக் கேள்வி கேட்பாள்; சந்தேகங்களாகக் கேட்டுத் துளைத்து எடுத்துவிடுவாள்... இவ்வளவு ஆர்வமுள்ள பெண், அறிவுள்ள பெண்... பிழைத்துக் கொள்வாள்!

"பிழையில்லாமல் போட்டிருக்கிறேனா, பாருங்கள்" என்று தான் போட்டிருந்த கணக்குகளையும் காட்டினாள். பார்த்துவிட்டு சிந்தனையைத் தொடர்ந்தேன்...

அலுவலகத்தில் தான் கடந்த ஒரு வாரத்தில் எவ்வளவு மாறுதல்கள் நிகழ்ந்திருக்கின்றன! அவற்றை நினைத்தால் சிரிப்புத்தான் வருகிறது. ஆபீசரின் பெண்ணுக்கு நான் பாடம் சொல்லிக் கொடுக்கும் செய்தி அவருடைய 'சப்ராஸி' மூலம் ஆபீசிலுள்ள ஒவ்வொருவரிடத்திலும் பரவிவிட்டது. எல்லாரும் என்னிடம் பயபக்தியுடன் நடந்து கொள்ள ஆரம்பித்தார்கள். மா-பூதத்தைப்பற்றி நான் இருக்கும்போது ஒன்றும் பேச மாட்டார்கள். அவரைப்பற்றி ஏதாவது விவாதம் நடந்து கொண்டிருக்கும்போது நான் போக நேர்ந்தாலும், உடனே பேச்சை நிறுத்திக் கொண்டு குற்றவாளிகளைப்போல் விழித்தார்கள். இதுமட்டுமா, சகஜமாகப் பெயர் சொல்லி அழைத்த தோழர்கள் மிஸ்டர் அல்லது ஸார் சேர்த்து அழைத்தார்கள். "போன் வந்திருக்கிறது" என்று 'போன்' மேசையருகே நின்று கத்தியவர்கள் இப்போது அருகில் வந்து குனிந்து, உங்களுக்குப் போன் வந்திருக்கிறது; காத்திருக்கச் சொல்லியிருக்கிறேன்" என்று சொல்லத் தொடங்கினார்கள். ஆகா, மனிதனிடம்தான் மரியாதைக்குரிய குணங்கள் எத்தனையெத்தனை மறைந்து கிடக்கின்றன! மீண்டும் நானாகச் சிரித்துக் கொண்டேன்.

இந்தக் காபியைக் குடித்து விட்டு அப்புறம் சிரியுங்கள், ஸார்!"

"ஸாரி ப்ரதிபா, ஏதோ நினைவாக இருந்துவிட்டேன். அந்தக் கணக்கின் வகை நன்றாகப் புரிந்ததல்லவா?"

"எல்லாம் புரிந்துவிட்டது. ஆனால் நீங்கள் இங்கே வரும் போது ஒரு நினைவாகத்தான் இருக்கவேண்டும். வேறு ஏதோ நினைவாக இருக்கக்கூடாது. என்ன, தெரிகிறதா?" என்று செல்லமாக அதட்டினாள்.

"ஆகட்டும் மேடம்" என்று பயந்த மாதிரி பதில் சொன்னேன்.

இரண்டு விநாடிகள் என் முகத்தையே உற்றுப்பார்த்து விட்டுப் பின்பு ப்ரதிபா கேட்டாள்: "ஒன்று கேட்பேன்; பதில் சொல்லவேண்டும்."

"காத்திருக்கிறேன்."

"நீங்கள் தனியாகத்தானே இருக்கிறீர்கள்?"

"ஆம்" என முனகினேன்.

"பிறகு ஏன் எட்டுமணியானதும் பறக்கிறீர்கள்—யாரோ உங்கள் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பது போல்?"

"யாருமில்லையே! ஒன்பது மணிக்கு சிதம்பரம் மெஸ்ஸில் சித்திரான்னம் புசிக்கத்தான் இந்த அவசரம். உற்ற துணைவருடன் ஒரு சேர அமர்ந்து, தலைவாழை இலையில் தண்ணீர் தெளித்து......"

"போதும் போதும் உங்கள் மெஸ்புராணம். ஆமாம், இந்த மாதிரி ஓட்டலில் சாப்பிட உங்களுக்கென்ன ஆசையாக இருக்கிறதா? ஓட்டல் சாப்பாடு உடம்புக்கு ஒத்துக்கொள்கிறதா?

"ப்ரதிபா, ஒத்துக்கொள்ளவில்லை என்பதற்காக ஓட்டல் சாப்பாட்டை ஒதுக்கித் தள்ள முடிகிறதா? ஒருசில தீமைகளை விலக்கித் தள்ளுகிறோம். சில வற்றை விலைகொடுத்து வாங்குகிறோம். எங்கள் சாப்பாடு இரண்டாம் வகையைச் சேர்ந்தது. ஆனல், ஒருநாள் நாங்கள் சாப்பிடும்போது வந்துபாரேன். சாப்பாட்டில் உள்ள வைட்டமின்களைவிட எங்கள் பேச்சில் எவ்வளவு சத்துப்பொருள்கள் இருக்கின்றன என்பதைக் கண்டு கொள்வாய்.

"அந்தக் கண்ணராவியை நான்வேறு பார்க்கவேண்டுமோ?"

## 3

மாதங்கள் மூன்று முழுதாக ஓடி மறைந்தன ப்ரதிபாவுக்குப் பாடம் சொல்வதில் கோடிகோடி இன்பம் கண்டேன். அவளைத் தினம் தினம் பார்ப்பதில் என் வேலைத்துன்பத்தை மறந்தேன். அவளுடன் பேசுவதில் அன்றலர்ந்த மலரை மோந்ததன் பயன் கிடைப்பதாக உணர்ந்தேன். சுருக்கமாகச் சொன்னல் ப்ரதிபாவை நான் விரும்பினேன்.

ஆனல் அவளும் என்னை விரும்புகிருளா? எப்படி அறிந்துகொள்வது? அவள் உள்ளம்தான் எவ்வளவு ஆழமானது! ஏமாற்றம் தரும் போர்வைகள் எத்தனை!

ஆனலும் ப்ரதிபா என்னை விரும்பினுள் என்று சொல்ல இடமிருந்தது. அவளுடைய அன்பான பேச்சு, என்னைக் கண்டதும் அவளது முகமலர்ச்சி காந்தக்கண் வீச்சு, உடையில் விசேஷ கவனம்!—

எனது நலனில் அவள் அக்கறை காட்டினுள்!

அவளிடம் நான் பிற பெண்களைப்பற்றி புகழ்ந்து பேசக் கூடாது.

விடுமுறை நாட்களெல்லாம் எங்களுக்குக் கரும்பாய் இனித்தன. காரில் ஊர் சுற்றுவோம்; பூங்காவில் காற்றுவாங்குவோம்; ஏரியில் படகோட்டுவோம்; சில நாட்கள் சினிமா பார்க்கவும் செல்வோம்.

அப்போதெல்லாம் மனம் நெகிழ்ந்தவளுய்ப் ப்ரதிபாவின்

பெரிய கண்களைச் சந்தித்து அவளைப் புகழ்ந்து பாராட்டுவேன். பெரும்பாலும் பதிலிராது; புதிர் பொதிந்த புன்னகை யொன்றை உதிர்ப்பாள் அல்லது குறும்பாகப் பார்த்து விட்டுப் பேச்சை மாற்றுவாள். இன்னும் முன்னேறிச் சென்று என் உள்ளத்தை அவளிடம் திறந்து காட்டிவிட சந்தர்ப்பத்தை எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்.

இதயம் நின்றுவிட்டது. என்ன? — 'டிக் டிக்' சத்தமில்லையே? — ஓகோ, ப்ரதிபா மெஷினில் 'டைப்' அடிப்பதைக் கை நிறுத்திவிட்டது. மற்றவர்களைப்போல் ஆஷாவும் இதைக் கவனித்துவிட்டாள். அவர்களுக்குள் ஏதோ பேசி என்னைப் பார்த்துச் சிரித்துக்கொண்டார்கள். அவர்கள் ஊகம் தவறு என்று எண்ணவில்லையே நான்!

"என்ன பாண்டியன் ஸார், எங்களுக்கு எப்போது விருந்து வைப்பதாக உத்தேசம்?" என்று கேட்டாள் விஷமக்காரி ஆஷா.

எனக்கே தெரியாதே தாயே!

## 4

ஒருமுறை பார்த்த படந்தான் என்றாலும் "ப்ளூ ஏஞ்சல்" இரண்டாம் முறை பார்க்கப்பட வேண்டியதுதான். இல்லாவிட்டாலும் ஓர் இளம் பெண் உங்களிடம், "'ப்ளூ ஏஞ்சல்' நல்ல படமென்று கேள்விப்பட்டேன். இன்றைக்கு என்னை அழைத்துப் போகிறீர்களா?" என்று கேட்கும்போது, 'மன்னிக்க வேண்டும். நான் ஏற்கனவே பார்த்து விட்டேன்" என்றா சொல்வீர்கள்?

கதையில் வயது முதிர்ந்த ஒருவரின் மணவாழ்வு சித்திரிக்கப் படுகிறது. நெடுங்காலம் மணம் செய்து கொள்ளாமல் அருங்குணச் சான்றோராக வாழ்ந்து வந்த அவருக்குப் பாடகி ஒருத்தியின்மீது காதல் பிறக்கிறது. நண்பர்களின் அறிவுரைகளையும் தட்டி தன் கருத்தைக் கவர்ந்தவளை கைப்பிடிக்கிறார். அவள் தம்மைக் காலால் எட்டி உதைக்கும் நிலைவந்தும் அவளைத் தன் மனைவியெனத் தாங்கித் திரிகிறார். இளம் பாடகியோ தனது இயல்புக்கேற்ற ஓர் இளைஞனுடன் உல்லாசமாய் இருக்கிறாள். ஆனால், தமது கண்ணுக்கெதிரே அவன் தம் மனைவியுடன் சல்லாபம் செய்வதைக் கண்ட பேராசிரியர் வெகுண்டெழுந்து அவளைக் கொல்ல முற்படுகிறார். கொல்லவில்லை. நண்பர்கள் சமாதானம் செய்து அவரது பழைய வாழ்வைப் புதுப்பித்துக் கொடுக்கிறார்கள். கதையின் சுவையை மிஞ்சுகிறது அதைத் திரையில் அமைத்துக்காட்டிய திறமை.

ஒவ்வொரு கட்டத்திலும் பேராசிரியருக்கு ஏற்படும் இழிவைக் கண்டு இரங்கினேன் நான். அதே அனுதாபத்தை ப்ரதிபாவிடமிருந்து எதிர்பார்த்தேன். அவளோ, ஒரே கலகலப்பாகச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள், மிஸ்டர் கணேஷ்? அந்த ப்ரொபஸருக்கு நன்றாக வேண்டும்!" —இது ப்ரதிபா.

"........" —இது நான்.

## 5

"அப்படியானால் நான் கணேஷைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று நினைத்துக் கொண்டிருந்தாய்?" ப்ரதிபாவின் இந்தக் கேள்வி சம்மட்டியடியாக விழுந்தது. நெஞ்சில் வலித்தது. மேலே நடக்க மாட்டாமல் கூடத்திலேயே நின்று விட்டேன்.

கடகடவென்று சிரித்தாள் ப்ரதிபா. "நீ என்ன சரஸ்வதி, கொஞ்சமும் அறியாதவளாய் இருக்கிறாய்? உன்னிடம் நான் எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன், 'மாதச் சம்பளக் காரனுக்கு நான் மாலையிடமாட்டேன்' என்று. என் அப்பாவை நான் பார்க்கவில்லை? மாதம் 350 கொண்டு வந்த காலத்திலும் போதவில்லை. மாதம் 800 வாங்கினார்; அப்போதும் தொட்டுக்கோ தொடச்சுக்கோ என்றிருந்தது. இப்போது 1300 வாங்குகிறார். இப்போதும் பஞ்சப்பாட்டு..."

"என்னடீ உளர்ரே, எல்லாம் நீ நடத்துகிற நிர்வாகத்தில் இருக்கிறது. மனம் ஒத்துப்போய் காதல் வாழ்க்கை நடத்த மாதச் சம்பளம் வந்தால் என்ன, வாரச் சம்பளம் வந்தால் என்ன?"

"காதல் காதல் என்று கத்திக் கத்தித்தான் நீங்கள் காதலுக்கே அர்த்தமில்லாமல் செய்து விட்டீர்கள். காதல் எங்கேயம்மா இருக்கிறது? ஏட்டிலேதான் இருக்கிறது. வாழ்க்கையில் ஏது காதல்? உண்மையாகவே நீ காதல் செய் - நூத்துக்கு நூறு நிச்சயமாய் நீ வாழ முடியாது. வாழத் தெரிந்தவர்கள் யாரையும் பார் - ப்ராக்டிகலாகத்தான் இருப்பார்கள்; உன் கண்மூடிக் காதலை நம்ப மாட்டார்கள்."

"போதும் உன் உபதேசம். நான் என்னவோ மிஸ்டர் பாண்டியன் உன்னைக் காதல் கண்களுடன்தான் பார்க்கிறார் என்று நினைக்கிறேன்."

"போடீ, பைத்தியம். அவர் ஒருபோதும் அப்படி நினைக்க மாட்டார். நான் அவரை ஒரு நண்பராக எண்ணிப் பழகுகிறேன். அவரும் அப்படித்தான் எண்ணுவார். 'இன்டெலக்சுவல் ப்ரண்ட்ஷிப்' என்று நீ கேட்டதில்லை? அவர் சிறந்த அறிவாளி என்பதற்காக அவரை நான் மதிக்கிறேன். அவருடன் பழகுகிறேன். உன் வாசகப்படி வேண்டுமானால் அவர் அறிவை நான் காதலிப்பதாக வைத்துக் கொள்... இரு, காபி கொண்டு வருகிறேன்."

திடீரென்று எழுந்துவந்தாள் ப்ரதிபா. கையில் கட்டியிருந்த கடிகாரத்தை உற்றுப் பார்த்துக் கொண்டே வந்தாள். கூடத்தில் என்னைக் கண்டதும், "வாருங்கள் மிஸ்டர் கணேஷ், உங்களுக்கு ஆயுசு நூறு. இப்போதுதான் உங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம்" என்று வரவேற்றாள்.

எனக்கு உலகமே சுழன்றது.*


"வைரங்களின், குணாதிசயங்களை அறியாத
வைரவியாபாரிகளை நம்பவே கூடாது
உம்மிடியாரின் கடைக்குப்
போ. வைரங்களைபற்றி
அவர்களுக்கு தெரியாத
விஷயமே கிடையாது"
என்று என் அப்பா
அடிக்கடி கூறுவார்.
உம்மிடியார்
உம்மிடி ராமய்யா செட்டி
குருஸ்வாமி செட்டி அண்ட் கோ.
23 விருந்து 25, என்.எஸ்.ஸி. போஸ் ரோடு, மதராஸ் 1.
கிளை; எல்.ஐ.ஸி. பில்டிங், மவுண்ட்ரோட், மதராஸ் 2.
VR 813

# மன உலகம்

“சுந்தா”

ஒருவனுடைய மன உலகத்தை நிபுணர் ஒருவர் சுற்றிக் காட்டினார்.

முதலாவது **ஆசைக்கடலுக்கு** அருகே கூட்டிச் சென்றார்.

பெரிய பெரிய அலைக் கரங்கள் ஓங்கி உயர்ந்து மோதிக் கொண்டிருந்தன. அலைக்கு மேல் அலை; பேரொலி.

“பெண்களைப் பார்த்து, பணத்தைப் பார்த்து, பண்டங்களைப் பார்த்து, இந்தக் கடல் இப்படிப் பொங்கிக் குதிக்கிறது” என்றார் நிபுணர். “உயிருள்ளவரை ஓயாத கடல் இது.”

“அடேயப்பா, என்ன கொந்தளிப்பு! இதன் அலைகளைப் பார்க்க, ஓசையைக் கேட்கக் கேட்கத் தலை சுற்றுகிறது. மேலேநடப்போம்.”

எட்டி நின்றே எரிமலை ஒன்றைக் காட்டினார் நிபுணர். “இது தான் **கோப எரிமலை**. அதனால் தான் தள்ளி நிற்கிறேன்.”

“என்ன வெப்பம்! எவ்வளவு பயங்கரமாய் இருக்கிறது? சுற்றிலும் எத்தனை பொருள்கள் வெந்தும் தீய்ந்தும் கிடக்கின்றன; அறவே புகைந்து போனவை எத்தனையோ?”

“இதுதான் அன்புச் சுனை” தண்மையும் பசுமையும், எழிலும் இனிமையும், சுற்றிலும் நிறைந்திருந்தன. யாவும் செழித்துத் தளிர்த்துப் பூத்துக் காய்த்துக் கனிந்திருந்தன. நறுமணமும் நல்லிசையும் கலந்து உலவின.

“எரிமலையைக் கண்ட பிறகு இதைக் காண்பது எவ்வளவோ ஆறுதலாய் இருக்கிறது” என்றேன்.

“ஆனாலும் ரொம்பவும் ஆறுதல் கொண்டு விடாதே; மேலே நட.”

அருவருப்பான நெடியும் பயங்கர ஒலங்களும் எங்களை எதிர் கொண்டு தாக்கின.

“இது என்ன காடு? நெருங்கவே நடுக்கமாய் இருக்கிறதே!”

இதுதான் **பகைமைக் காடு**!”

நெடுகிலும் முள்ளு மரங்கள்; நச்சுக் கொடிகள்; விஷப் புதர்கள். கொல்லிப் பாம்புகள் தலைகீழாய்த் தொங்கி ஆடிக் கொண்டும், சரசர வென்று ஓடிக் கொண்டும், சீறிப் பாய்ந்து கொண்டும் இருந்தன. குகைகளிலிருந்து பொல்லா விலங்குகள் ஊளையிட்டன; உறுமின.

“போதும் போதும், வேறு எங்கேனும் கூட்டிச் செல்லுங்கள்” என்று அலறினேன்.

“அப்படி என்றால் **காமப் பூங்காவைக்** காட்டுகிறேன், வா” என்றார்.

செவ்வாழையும் செங்கரும்பும் இரு மருங்கும் வளர்ந்திருந்த சாலையின் வழியே நடந்து, மோகனப் பூஞ்சோலை ஒன்றை அடைந்தோம். பூ மரங்களைச் சுற்றி மலரழகிகள் ஓடி விளையாடிக் கொண்டிருந்தார்கள். கொடி விடுகள் குலுங்கச் சிரிப்பொலி பரப்பி,

மாலை தொடுத்துக் கொண்டிருந்தனர் பூங்கோதையினர். மான்களுக்கு இணையான மான்கள்; கிளிகளுக்கு நிகரான கிளிகள்; மயில்களைக் காட்டிலும் மேலான மயில்கள். பன்னீர்த் தடாகம் ஒன்றில், கட்டழகுக் கன்னியர் நீந்திக் கொண்டிருந்தனர். பளிங்கு மண்டபம் ஒன்றில் பவள விரல்கள் வீணை மீட்டின; செவ்விதழ்கள் குழலூதின; செந்தளிர்க் கரங்கள் தாளம் ஆர்ப்ப எண்ணிலாப் பாதங்கள் குதித்தாடின.

இவற்றை எல்லாம் பார்த்துச் சொக்கி நின்ற என்னை, நிபுணர் உலுக்கி இழுத்து, "இனி நினைவுக் கூடத்தைப் பார்க்கலாம் வா" என்று கூப்பிட்டார்.

கோணல் மாணலாக இருந்த அந்தக் கூடத்தில், பொருள்கள் பல அணியணியாவும், தாறுமாறுவும் கிடந்தன. விளையாட்டுக் கருவிகள் முதல் தொழில் கருவிகள் வரை, ஈனமான பொருள்கள் முதல் புனிதமான பொருள்கள் வரை, சிறு சிறு துண்டங்கள் முதல் முழு முழு உருவங்கள் வரை, எத்தனையோ அங்கே குவிந்திருந்தன. ஒரு சுவரில் உருவப் படங்கள் மாட்டப்பட்டிருந்தன. அந்தப் படங்களில் குழந்தை முகங்கள் முதல் கிழட்டு முகங்கள் வரை. சில படங்கள் தெளிவாய் இருந்தன. வேறு சில படங்களில் தூசியும் மாசும் படிந்திருந்தன. சில படங்கள் தலை கீழாயும், புறம் மாறியும் மாட்டப்பட்டிருந்தன.

அதே கூடத்தின் ஒரு பக்கத்திலிருந்து இருட்டறை ஒன்று பிரிந்தது.

"அதுதான் மறதிப்பாழறை" என்று நிபுணர் தெரிவித்தார்.

"இந்த அறை அவசியந்தான்" என்றேன் நான். "இது இல்லாவிட்டால் நினைவுக் கூடம் எவ்வளவு அடைசலாகி விடாது!"

அடுத்தபடியாக நாங்கள் பார்த்தது கனவுக் களம்.

கண கணவென்று ஒலி செய்து ஓடிக் கொண்டிருந்தது பொன்னாறு. அதன் குறுக்கே வானவிற் பாலம். அதிலிருந்து, கச்சணிந்த நவரத்தின மீன்கள் துள்ளித் தங்கத் தண்ணீரில் குதித்துக் கொண்டிருந்தன. கருங் குரங்குகள் தூண்டில் போட்டு அவைகளைப் பிடித்துக் கொண்டிருந்தன.

பூசணிக்காய்த் தலையும், வெண்டைக்காய்க் கைகளும், சுரைக்காய் உடம்பும், முருங்கக்காய் கால்களும் கொண்ட ஓர் உருவம், களி வெறியோடு தும்பைப் பூக் குவியல் ஒன்றைச் சுற்றிக் கூத்தாடிக் கொண்டிருந்தது.

கொம்பு முளைத்த குதிரை ஒன்று, வாயில் ஒரு உலக்கையைக் கவ்விக் கொண்டு, பின்னங் கால்களால் சுற்றிச் சுற்றி வந்தது.

யானை போல் பெரிதாய் இருந்த சிலந்தி ஒன்று, எலிபோல் சிறிதாய் இருந்த யானை ஒன்றைத் துரத்திக் கொண்டிருந்தது.

நடக்கும் நாற்காலி ஒன்றில், தலை இல்லா மனிதன் ஒருவன் உட்கார்ந்திருந்து அபஸ்வரமாய்ப் பிடில் வாசித்துக் கொண்டிருந்தான்.

பெண் முகம் பொருந்திய புள்ளி மான் ஒன்று, கண்ணைச் சிமிட்டிக் கொண்டே நாணிக் கோணி நடந்தது....

"போதும், இனிமேல் பார்த்தால் பைத்தியம் பிடித்து விடும்" என்றேன்.

"பார்த்தது கொஞ்சம், பாராதவை இன்னும் எவ்வளவோ இருக்கின்றன" என்றார் நிபுணர்.

# THIRU AROORAN SUGARS LIMITED.

**Vadapathimangalam, Tanjore District.**

[MADRAS STATE]

*MANUFACTURERS OF*

**BEST QUALITY**

**WHITE CRYSTAL SUGAR**

*MANAGING AGENTS:*

**VENKATESA TYAGARAJAN (PRIVATE) LIMITED.**

EXPRESS ESTATE, MOUNT ROAD.

**MADRAS - 2.**

Telegrams: "FINESUGAR" Madras.


FINE TOBACCO
LIGHT TOBACCO
RIPE TOBACCO
MILD TOBACCO
PANAMA
Panama
20
CIGARETTES
Specially blended for a cool and pleasant smoke from selected Virginia Tobacco Leaves
The right combination of right tobaccos every puff a new smoking pleasure
Specially blended by
Golden Tobacco Co., Private Ltd., Bombay 24
India's Largest National Enterprise of its kind
GTC GOLDEN TOBACCO COMPANY PRIVATE LTD.
G.T. 601
Greens' Advtg.

# அமரனாக......

'கஜமுகன்'

தில்லிச் செய்தித் தாள்களில் அன்றாடம் வரும் கொலை, தற்கொலைச் செய்திகளில் அடிக்கடி ஒரு பெயர் இடம்பெறும். இந்தியாவுக்கு வரும் வெளிநாட்டு யாத்திரிகர்கள் தலைநகரில் பார்க்க வேண்டிய முக்கியமான இடங்களில் ஒன்றான குதுப்மினார் தான் அந்தப் பெயர்!

குதுப்தீன் ஐபெக் என்பவர் தமது வெற்றிச் சின்னமாக இந்தத் தூபியை எழுப்ப ஏற்பாடு செய்தார். பாவம்! அவர் இதைக் கட்டி முடிப்பதை இருந்து பார்க்கவில்லை. அவருக்குப் பின்னர் வந்தவரே கட்டி முடித்தார். இவ்வளவு உயரமாக இதைக் கட்டுகிறோமே இதனால் ஏதாவது நற்பலன் உண்டா என்பதை குதுப்தீனோ, அவருக்குப் பின்னால் வந்தவரோ யோசித்திருக்க மாட்டார்என்று தான் நமக்குத் தோன்றுகிறது. அடிமை அரசரின் வெற்றிப் பெருமிதத்தை வேண்டுமானால் இந்தத் தூபி பறைசாற்றிக் கொண்டிருக்கலாம். யாத்திரைப் பிரசாரத்துக்குரிய இடமாக வேண்டுமானால் இன்றைய அரசாங்கத்துக்கும் அது பயன்படலாம். இன்றுவன போஜனம் செய்வதில் ஆர்வம்கொண்டமக்களுக்குவேண்டுமானால் குதுப்மினாரைச் சுற்றிய பூங்காவும் புல் மைதானமும் பயன்படலாம். ஆனால் என்னைப் போல தற்கொலைப் பித்தர்களுக்கு இது ஒரு பெரும் சங்கடமாகவே இருக்கிறது.



தற்கொலைப் பித்தரா என்ற கேள்விக்குறி உங்கள் முகத்தில் தோன்றுவது எனக்குத் தெரிகிறது. ஆமாம் அய்யா, தற்

கொலைகளைப் பற்றிய செய்திகளைப் படிப்பதில் எனக்கு ஒரே பித்து! அதுவும் வறுமையில்லாமல், வியாதிவெக்கை அவதியில்லாமல் உயிரை மாய்த்துக் கொள்ளத் துணியும் பைத்தியங்களின் வரலாறுகளை அறிவதில் எனக்குக் கட்டுக்கடங்காத ஆவல்.

தற்கொலை செய்து கொள்வதற்கு எவ்வளவோ உபாயங்கள் இருக்கின்றன. அவற்றை எல்லாம்விட்டு இந்தக் குதுப்மினாரில் ஏறி விழுந்து சாகிறார்களே இது எதனால் என்று எனக்குப் புரியவில்லை. தற்கொலை செய்து கொள்வதற்குப் பயன்படட்டுமே என்று ஒருவர் தூபி கட்டிவிட்டுப் போயிருப்பாரா?

முன்னூற்றுக்கும் அதிகமான படிகளை, மூச்சுமுட்ட, வியர்க்க விறுவிறுக்க ஏறி உயிரை விடுவானேன்? உயிரை விட்டுத்தான் ஆகவேண்டுமானால் அதற்கு இவ்வளவு கஷ்டப்படுவானேன்? ஒரு வேளை, இவ்வளவு கஷ்டத்துக்குப் பிறகு உயிரை விடுவானேன் என்று மனம் மாறினாலும் மாறலாம் எனக் கருதி அதன் மீது ஏறுகிறார்களோ? அப்படி ஏறியும் மனம் மாறாமல்தான் விழுந்து சாகிறார்களோ?

குதுப்மினார் தற்கொலைகளைத் தவிர்க்க இப்போது சில ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். அதாவது முன்பு யார் வேண்டுமானாலும் இலவசமாகப் படியேறி உச்சியை அடையலாம். இப்போது தலா இருபது நயா பைசா கொடுத்துத்தான் உயிரை விட்டாக வேண்டும். அதுவும் தனியாகப் போக முடியாது. மூன்று பேருக்குக் குறைவில்லாத ஒரு கோஷ்டியாகப் போனால்தான் மேலே போக விடுவார்கள். கூட்டாக யமலோகம் போக ஒப்பந்தம் செய்து கொள்கிறார்களே அவர்களுக்கு இது வசதிதான். இதுவரை தற்கொலை புரிந்து கொண்டவர்கள் 20 ந. பை-க்கு வக்கில்லாதவர்களாகத் தெரியவில்லை. தற்கொலை செய்து கொள்கிறவன் எல்லோருக்கும் சொல்லிவிட்டு, பிரிவு உபசாரம் வாங்கிக் கொண்டு போக மாட்டான். மூன்றுபேர் ஆள் சேர்த்துக் கொண்டு கோஷ்டியாகப் போவது ஒன்றும் பிரமாதமில்லை. மற்றவர்கள் ஒருபக்கம் பார்த்துக் கொண்டிருக்கும்போது மற்ற பக்கத்தில் 'தற்கொலையாளி' குதித்துவிடுவதும் பிரமாதமில்லை. தற்கொலையைத் தடுக்க வேண்டுமானால் கீழே பெரியதொரு வலை கட்டவேண்டும்; அல்லது உச்சியில் திறந்த வெளியைச் சுற்றி வேலியால் மூடிவிட வேண்டும். நடுவழித் தங்கு வட்டங்களையும் பாதுகாப்புச் செய்ய வேண்டும். ஆனால் இவ்வளவும் எதற்காக? அந்தப் பழஞ்சின்னத்துக்கு அவப்பெயர் ஏற்படாமல் தடுப்பதற்காகத்தானே? அதனால் தற்கொலையாளிகளை அவர்களுடையமுயற்சியிலிருந்து தடுத்துவிட முடியுமா?

மற்ற தற்கொலையாளிகளைவிட குதுப் தற்கொலையாளிகளின் மனத்துணிவும் திடமும் பாராட்டுக் குரியவை என்று தோன்றுகிறது. தற்கொலையாளிகளுக்குப் பரிசு கொடுப்பதென்றால் நான் இந்தத் தற்கொலையாளிகளுக்குத்தான் கொடுப்பேன். முதலில் இந்த முன்னூற்றுச் சொச்சம் படிகளை ஏறிச் செல்லும்போதே

பாதிஉயிர் போய்விடும் போலிருக்கிறது. உச்சியை அடையும்போது வீசும் குளிர்ந்த காற்று இந்த உலக இன்பத்தையெல்லாம் நமக்கு நினைவூட்டுகிறது. படி ஏறிவந்த சிரமம் அந்த நினைப்பால் அழிந்து போகிறது. கண்ணுக்கு எட்டிய தூரம் பசுமையைப் பார்க்கிறோம் மாடமாளிகைகளையும், கூரைக் குச்சுகளையும், பாழ் மண்டபங்களை யும், மசூதிகளையும் பார்க்கிறோம். இவ்வளவையும் விட்டு எதற் காக உயிர்விட வேண்டும் என்ற எண்ணம் இயல்பாகவே எழும். அந்த எண்ணத்தையும் கொன்று உயிரையும் கொன்று கொள்ளத் துணிந்து கீழே பார்த்தால் தலைச்சுற்றல் வரும். "அடே அப்பா இவ்வளவு உயரமா? விழுந்தால் ஒரு எலும்புகூட உருப்படியாகக் கிடைக்காதே!" எவ்வளவு கவலை. உயிரை விடுகிறவனுக்குத் தன் எலும்பு உருவாகக் கிடைத்தால் என்ன, கிடைக்காமல் பொடி சூர்ணமாகப் போனால் என்ன? ஆசாபாசங்களையும் களைந்துவிட்டு, மனத்தைக் கல்லாக்கிக் கொண்டு உயரத்திலிருந்து குதிப்பதற்குத் தீர்மானித்தால் அவனைத் திடசாலி என்று சொல்லாமல் என்ன சொல்வது? இந்த மனத்திண்மை எப்படி ஏற்படுகிறது? என்றால் "அது ஒரு வெறி நிலைதான்" என்கிறார்கள்.

இதுவரை தற்கொலை செய்து கொண்டவர்கள் எதற்காக அப்படி உயிரை மாய்த்துக் கொண்டார்கள் என்று பார்த்தால் அப்படி ஒன்றும் பிரமாத காரணங்களாகப்படவில்லை. தன் மனைவி மாற்றானுடன் உறவுகொண்ட அவமானம் தாங்காமல் ஒருவன் உயிரை விடுகிறான். குடும்பத்தில் கணவன் இம்சை தாங்காமல் ஒரு பெண் உயிரை விடுகிறாள். உலகத்திலுள்ள கொடுமைகளைப் பார்த்து மனம் தாளாமல் தன்னுயிரைப் பணயம் வைக்கிறான். காதலித்த பெண்ணைக் கல்யாணம் செய்துகொள்ள முடியாமல் ஒருவன் ஆவி துறக்கிறான். அதே ஏமாற்றத்தில் பெண் ஒருத்தியும் உயரே இருந்து குதிக்கிறாள்.

இந்த அற்பக் காரணங்களுக்காக உயிரை மாய்த்துக் கொள் வதே பைத்தியக்காரத்தனம். அதுவும் குதுப்மினாரிலிருந்து எதற் காக விழவேண்டும்? இயற்கை அளித்துள்ள ஆறு குளங்கள் இல்லையா? மலைகள் மடுக்கள் இல்லையா? விஷப்பூண்டுகள் இல்லையா? மனிதன் சிருஷ்டித்த மின்சாரம் இல்லையா? புனித மெனப் பாதுகாத்துவரும் ஒரு வெற்றிச் சின்னத்தைத் தற்கொலைச் சின்னமாக்கி மாசு படுத்துவானேன்?

சண்டையில் மரணமடைந்தால் வீர மரணமடைந்தார்கள் என்று புகழ்பாடி நினைவுமண்டபமாவது கட்டுவார்கள். அது போல் இந்த வெற்றிச் சின்னத்தின் மீது ஏறி விழுவதை வீரச் செயலாகக் கருதுவார்கள் என்று நினைக்கிறார்களோ? ஒரு தற் கொலைக்கு ஆயிரம் தற்கொலை நடந்தால் தற்கொலைச் சின்னம் என்று பெயர் மாறி, அதுவே தமது வீர மரணத்தின் சான்றாகி விடும் என்று கருதித்தான் அங்கு போய் உயிரை விடுகிறார்களா?

இவர்களுடைய மனப்பான்மையே நமக்குப் புரியவில்லை. குதுப்பி லிருந்து விழுவதில் அவர்களுக்கு என்ன நன்மை என்பதும் தெரிய வில்லை. தற்கொலையாளிகளின் ஆவிகள் எதையாவது சந்தித்தால் விசாரித்துப் பார்க்கலாம். சாவு சுகமாயிருந்ததா? வேதனை அளித்ததா? உயிர் பாதியில் போயிற்று? கீழே அடிபட்டுச் சிதைந்ததா? இந்த விவரங்களையெல்லாம் அந்த ஆவிகள் சொல்ல முடியுமானால், பிற்கால குதுப் தற்கொலையாளிகளுக்கு வழிகாட்டியாக இருக்கும். ஆவி உலகத்துடன் தொடர்பு வைத்துக் கொண்டிருக்கும் அறிஞர்களாவது குதுப் ஆவிகளை வரவழைத்து இந்த விவரங்களைக் கேட்டறிந்து வெளியிட்டால் நலமாயிருக்கும். குதுப் ஆவிகளின் விவரங்கள் உண்மையிலேயே பயங்கரமாய் இருக்குமானால் வருங்கால தற்கொலையாளிகள் குதுப்மினார் பக்கம் போகாமல் வேறு வழியை நாடுவார்கள். வெற்றிச் சின்னத்துக்கும் அவப்பெயர் ஏற்படாது. அரசாங்கம் 20 ந. பை. கிஸ்தியை நிறுத்திவிடும். தனியாகப் போவதற்கான தடையையும் நீக்கிவிடும். ஆவி உலக ஆராய்ச்சியாளர்கள் உதவி புரிவார்களா? ○

---

## பாரதி வாக்கு

பாரத தேசத்தில் ஒவ்வொருவனுக்கும் தற்காலத்தில் நல்ல தியானம் உணவைக் காட்டிலும் இன்றியமையாதது. சோற்றை விட்டாலும் விடு. ஒரு தனியிடத்தே போயிருந்து உயர்ந்த சிந்தனைகள், அமைதி கொடுக்கக் கூடிய சிந்தனைகள், பலம் தரக் கூடிய சிந்தனைகள், துணியும் உறுதியும் தரக்கூடிய சிந்தனைகள். இவற்றால் அறிவை நிரப்பிக் கொண்டு தியானம் செய்வதை ஒரு நாளேனும் தவற விடாதே. தெய்வபக்தியுடையவர்கள் இஷ்ட தெய்வத்தை அறிவில் நிறுத்தி அதனிடம் மிகுந்த தாகத்துடனும் உண்மையுடனும் மேற்கூறியவாறு பெருமைகள் உண்டாகுமாறு பிரார்த்தனை செய்ய வேண்டும். வாயினால் பழங்கதை ஒன்றை முணு முணுப்பது அதிகப்பயன் தராது. உன்னுடைய உள்ளுயிரிலிருந்து அந்தப் பிரார்த்தனை வெளிவர வேண்டும். நீயாக உன் சொந்தக் கருத்துடன் சொந்த வசனங்களில் உயிர்கலந்து தியானம் செய்வதே பயன்படும். "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்பது குறள்.

பரிபூரண விருப்பத்துடன் தியானம் செய். சோர்வும் அதைரியமும் விளைவிக்கத்தக்க எண்ணங்களுக்கு இடங்கொடாதே. ஊற்றிலிருந்து நீர் பெருகுவதுபோல உனக்குள்ளிருந்து தெளிந்த அறிவும் தீரத்தன்மையும் சக்தியும் மேன்மேலும் பொங்கிவரும். இது சத்தியம். அனுபவத்திலே பார்.

---


நல்ல பென்ஸில்களால்
எழுதுவதற்கு
எவ்வளவு
ஆனந்தமாயிருக்கிறது
MPF ✻ COPYING "MERCURY" ✻ 1401 HARD
மெர்குரி பென்ஸில்கள்
நல்லவை என்று
எல்லா சோதனைகளிலும்
ருசுவாகியுள்ளது
MERCURY ✻ CHECKING COLOURED ★ MPF RED & BLUE
கருப்பு, இதர கலர் மற்றும் காபீங்
கிடைக்கும்
தயாரிப்பாளர்
மதராஸ் பென்ஸில் பாக்டரி
3, ஸ்டிரிங்கர்ஸ் தெரு, மதராஸ். 1.
MERCURY
The name for good Pencils
✻ MERCURY ✻ SPECIAL HB ★ MPF No.1100
ARUNA

# Ramco Group of Industries,

RAJAPALAIYAM,

(S. INDIA).

## Rajapalaiyam Mills Limited,

RAJAPALAIYAM.

(Modern Spinning Mills.)

## The Ramaraju Surgical Cotton Mills Ltd.,

RAJAPALAIYAM.

(Manufacturers of Antiseptic Dressings)

## Jayaram Mills Limited,

RAJAPALAIYAM.

(Manufacturers of Grey Gada.)

## GOWRI HOUSE METAL WORKS,

RAJAPALAIYAM.

(Manufacturers of Woodscrew & Wirenails.)

*AND NOW*

## MADRAS CEMENTS LIMITED.

RAJAPALAIYAM.

(Manufacturers of Portland Cement.)

Our Service towards Industrialisation of India.

P. A. C. RAMASAMY RAJA,

(Founder and Managing Agent.)

# குழந்தைக் குமரன்

"முருகானந்தம்"

கண்ணனையும் கந்தனையும் பல உருவங்களில் வழிபட்டாலும் குழந்தையுருவில் வழிபடுவதைத்தான் பெரிதும் விரும்புகின்றனர் பக்தர்கள். அம்பிகையையும் கூட அவ்வுருவிலேயே வழிபட்டு ஆனந்தம் அடைய விரும்புகிற மக்கள் ஏராளம். குழந்தைப் பருவத்தை அழகு செய்யும் கள்ளமற்ற தன்மையே இதற்குக் காரணமாகும். எரித்து விளையாடும் நெருப்பும் ஒன்றுதான்; விரித்துப்பேயாடும் காற்றும் ஒன்றுதான். விருவிரு என்று நெளிந்து ஓடும் பாம்பையும் பற்றி விளையாட விரும்பும் குழந்தை, எல்லோரையும் வெறுக்காது விரும்பி விளையாடும் இயல்புடையது குழந்தை மனம். அம் மனத்திலே ஒன்றும் தங்காது. ஆசையில்லை, பாசமில்லை. உலகில் ஆசைகளும் பாசங்களும் அதனிடம் அணுகா. எல்லோரும் வெறுப்பு விருப்பின்றி வாழ வேண்டுமானால் குழந்தை மனம் தான் வேண்டும்.

தன் அம்மையிடம் சதா அணுக விரும்பும் குழந்தைபோல அன்னையாகிய ஆண்டவனை, குழந்தை போன்று அணுகத்துடிப்பது தான் அன்பர் உள்ளம். குழந்தைப் பருவத்தைப் பாடுவதில் இன்பம் கண்டார்கள் நந்தமிழ்ப் பாவலர்கள். இத்தகையஈடுபாட்டாலன்றோ பிள்ளைத்தமிழ் என்னும் இலக்கியம் தோன்றலாயிற்று! முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ், திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்தங்களைத் தமிழ் இலக்கியத்தில் காணலாம். ஒவ்வொன்றும் தமிழன்னைக்கு இடப் பட்ட ஒப்பற்ற அணிகலனாகும்.

சந்தம் மலியும் திருப்புகழ்ப் பெரியாரான அருணகிரியார் பிள்ளைத் தமிழ் பாடிக் கந்தனைப் போற்றாவிட்டாலும், தம்முடைய கந்தரலங்காரத்திலே அக்குறையை ஒருவாறு நிவர்த்தி செய்துவிட்டார் எனலாம். ஆங்காங்கு அவர் பாடியிருக்கும் அலங்காரப் பாக்களைப் பார்த்தால் குட்டிப் பிள்ளைத் தமிழோ என்று நினைக்கத் தோன்றுகிறது. அவைகளின் பொருட் செறிவும் அலங்கார நுணுக்கங்களும் கண்டால் பாடிப்பாடி இன்புறத் தோன்றுகிறது.

குழந்தையழுதது. வீறிட்டழுதது. குழந்தையழுவது சகஜம் தான். இங்கு அழும் குழந்தை யார்? குமரன் தான். ஆனுல் இவன் அழுகை சாதாரணமானதல்ல. உலகங்கள் எல்லாம் சுக முற வாழ வந்த வள்ளலின் அழுகை தான்.

சரவணப் பூந்தொட்டிலிலே படுத்திருக்கும் குழந்தை முருகன் அம்மையின் திருமுலைப்பாலை அருந்தி விட்டு சமாதானம் அடையாமல் தன்னைச் சுற்றியுள்ள கார்த்திகைப் பெண்கள் அறுவர்களின் முலைப்பாலுக்காக அழுதானும்! இதைத்தான் அருணகிரியார் சித்திரித்திருக்கிருர்.

அவன் மட்டும் அழவில்லை. கடல்கள் அழுதன. குன்றுகள் அழுதன. சூரனும் அழுதான். மேலும் மேலும் விம்மி விம்மியழுதான் கந்தன். குறிஞ்சி நிலக்கிழவனுகிய குமரனின் அழுகைக்குப் பின்னணியும் பிரமாதமாயிருக்கிறது!

**திருந்தப் புவனங்க ளீன்றபொற்**
**பாவை திருமுலைப்பா**
**லருந்திச் சரவணப் பூந்தொட்டி**
**லேறி யறுவர் கொங்கை**
**விரும்பிக் கடலழக் குன்றழச்**
**சூரழ விம்மியழுங்**
**குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென்**
**றேதுங் குவலயமே.**

மேலும் மற்ருெரு பாட்டிலே "தாராகணம் எனும் தாய்மார் அறுவர்" என்று ஆரம்பிப்பதில், இந்த அறுவர்களின் முலைப்பாலைப் பருகினது மட்டுமில்லாமல் உமை முலைப்பாலும் உண்டான் பாலன் முருகன் என்கிருர்.

குழந்தை ஒரு பொருளுக்கு அழும். பிறகு மற்ருெரு பொருளை நினைத்து அழும். சற்று நேரத்தில் முந்திய பொருளை எண்ணி மீண்டும் அழும். இது குழந்தைகளின் செய்கை.

அந்த வடிவத்தில் கந்தனை நம் கண்முன் நிறுத்துகிருர். "அறையில் கட்டிய கவசம் இருக்கிறது. கையில் சிறு வாளும் தாங்கியிருக்கிருன். இந்தக் கோலம் நெஞ்சைவிட்டே அகலாது. உஷார்! கூற்றுவனே! என் அருகில் வந்தால் உன் உயிர் வாங்கப்படும்." என்று எமனை எச்சரிக்கிருர். பல இடங்களில் கந்தனைக் கொண்டு மரண பயத்தை ஓட்டுகிருர்.

அடுத்த காட்சியைப் பார்ப்போம். குழந்தை முருகன் நடந்து வருகிருன். மணிசேர் கிண்கிணி அரையில் கட்டி அழகுக்கு அழகு செய்திருக்கிருள் அன்னை பார்வதி. அவன் அசைந்து வரும் பொழுது 'கிண் கிண்' என கிண்கிணி ஓசை உண்டாகிறது. அந்த

இனிய ஓசையின் வலிமையைக் காட்டுகிறார் அருணகிரியார் ஒரு பாட்டிலே.

கிண்கிணி ஓசையைக் கேட்ட அரசர்கள் திடுக்கிட்டனராம். திக்குகள் செவிடு பட்டன. எட்டு வெற்பும் கனக பருவரைக்குன்றும் அதிர்ந்தன. இந்தச் செயல்களினால் தேவர்கள் கொண்ட பயம் கெட்டு விட்டது.

ஒருவரைப் பங்கி னுடையாள்
குமார னுடைமணிசேர்
திருவரைக் கிங்கிணி யோசை
படத்திடுக் கிட்டரக்கர்
வெருவரத் திக்குச் செவிடுபட்
டெட்டுவெற் புங்கனகப்
பருவரைக் குன்று மதிர்ந்தன
தேவர் பயங்கெட்டதே

கந்தன் விளையாடுகிறான். வேலெடுத்துத் திண்கிரி சிந்த விளையாடுகிறான் வேலன். இதனால் ஏற்படும் ஓசை மிகவும் சக்தி வாய்ந்ததாய்க் காணப்படுகிறது.

"திருமாலின் வலம்புரிச்சங்கின் ஓசையை விண்கமழ் சோலையும் வாவியும் தான் கேட்டது. ஆனால் குமரனின் அரைக்கிண்கிணி ஓசையைப் பதினாறு உலகமும் கேட்டது" என்று நாம் அச்சமுறுமாறு உரைக்கிறார் அருணகிரியார்.

மண்கம ழுந்தித் திருமால்
வலம்புரி யோசையந்த
விண்கமழ் சோலையும் வாவியுங்
கேட்டது வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும்
பிள்ளை திருவரையிற்
கிண்கிணி யோசை பதினா
லுலகமுங் கேட்டதுவே

சப்பாணி கொட்டுகிறான் குழந்தை முருகன். சாதாரண உலகியல் வழக்கிலே குழந்தை சப்பாணி கொட்டுவதைக் கண்டால்

---

## மேலோர் யார்?

["நந்தனத்திலோராண்டி" என்ற மெட்டு.]

வையகம் காப்பவ ரேனும் — சிறு
வாழைப் பழக்கடை வைப்பவரேனும்,
பொய்ய கலத்தொழில் செய்தே — பிறர்
போற்றிட வாழ்பவர் எங்கணும் மேலோர்.

---

காண் போருக்கு எல்லையில்லா மகிழ்ச்சியும் ஆனந்தமும் உண்டாவது இயற்கைதான். அதுவும் குமரன் சப்பாணி கொட்டுகிறுன் என்ருல் அது ஒருபடி மேல் தான்.

அருணகிரியார் குமரனின் சப்பாணியைத் தமக்கே உரிய பாணியில் உணர்கிருர். அதிலும் ஒரு வேண்டுகோள் விடுக்கிருர் கந்தனுக்கு.

“இந்தப் பாச வாழ்க்கையிலே ஐம்புலன்களால் சிக்குண்டு அல்லலுற்று சுழற்சியுடைய நெஞ்சினைக் கொண்ட என்னை ஈடேற்றுவாய்.” என்ருர்.

குப்பாச வாழ்க்கையுட் கூத்தாடு
மைவரிற் கொட்படைந்த
இப்பாச நெஞ்சனை யீடேற்று
வாயிரு நான்குவெற்பு
மப்பாதி யாய்விழ மேருங்
குலுங்கவிண் ணுருமுய்ய
சப்பாணி கொட்டிய கையா
றிரண்டுடைச் சண்முகனே

முருகன் சப்பாணி கொட்டும் பொழுது பல அற்புதங்கள் நிகழ்ந்தன. எட்டுத் திக்கிலுமுள்ள மலைகளும் பாதியாய் விழுந்தன; மேருவும் குலுங்கிற்று. முருகனின் விளையாட்டுக் கண்டு மகிழ்ந்து தமது துன்பங்கள் திரும் என்று விண்ணேர்கள் மகிழ்ந்தனர் போலும்! காரணம் பின்பு தெரிகிறது. கையாறிரடுண்டைச் சண்முகன் அல்லவா இவன்!

மரணப்ர மாத நமக்கில்லை
யாமென்றும் வாய்த்ததுணை
கிரணக் கலாபியும் வேலுமுன்
டேகிங் கிணிட்முகுள
சரணப்ர தாப சசிதேவி
மங்கய தந்துரட்சா
பரணக்கு பாகர ஞாறு
கரசுர பாற்கரனே.

இத்தகைய பெருமையுடைய முருகனைத் தொழுதால் மரண பயம் நமக்கில்லை. யாம் என்றும் வாய்த்த துணை கிரணக் கலாவியும் வேலுமுண்டோ” என்று மார்தட்டி உலகுக்குப் பறைபறிவிக் கிருர் அருணகிரியார் அருள் கிரியின் புகழ் பற்றி.

இந்த முருகன் யார் தெரியுமா? இதோ ஒரு அட்டவணை தருகிருர்; நாமும் அவனைப் போற்றிப் பயன் பெறுவோம்.

"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு
வெற்பனைச் செஞ்சுடர் வேல்
வேந்தனைச் செந்தமிழ் நூல்விரித்
தோனை விளங்குவள்ளிக்
காந்தனைக் கந்தக் கடம்பனைக்
கார்மயில் வாகனைச்
சாந்துணைப் போதும் மறவா
தவர்க்கொரு தாழ்வில்லையே."

நான் யார்?

MAHAMAHOPADHYAYA
DR. U. V. S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

## ஐஸ் கட்டி

வெய்யில் பட்டால் உருகிடுவேன்
வேர்வை போலப் பெருகிடுவேன்
கையில் பட்டால் சுட்டிடுவேன்
கண்ணாடியைப் போல் தோன்றிடுவேன்

ஐயம் எனக்கோ சிறிதில்லை
ஆழ நீரில் மிதந்திடுவேன்
பையன் தொட்டே எனைப் பெரியோர்
பானத் தோடே பருகுவரே.

— 'வண்ணமுத்து'.


மலரன்ன
மதிவதனத்திற்கு
ரெமி
டால்கம் பவுடர்
அதன் சுகததை ஒருதரம அனுப
வித்தீர்களேயானல் மறுமுறை
அதையே தேடுவீர்கள். மணத்திலும்
குணத்திலும் சிறந்தது 'ரெமி'
டால்கம் பவுடர்.
Remy
AVRA-4-64

# இழந்தது ஏன்?

எச். லட்சுமி

1935-ஆம் ஆண்டு ஜெர்மனியில் அமைதி நிலவியபொழுது. ரைன்நதியில் இரத்தம் ஓடாத போது, அந்நதிக் கரையின் ஒரு கிராமத்தில் இளவயதிலிருந்து இன்பமாய்ப் பழகிய காதலர்கள் இல்வாழ்க்கையில் அடி யெடுத்துவைக்கின்றனர். அவ்வசந்தகாலம் அவர்கள் வாழ்விலே வசந்தத்தை அளித்தது. இனியநிலா, குளிர்காற்று—கடும் வெம்மையையும் போக்கி அவர்களுக்கு இனிமையும், தண்மையும் தந்தன. பிரடெரிக்—மார்னிக் இன்பமாய் காதலில் திளைத்தனர்.

1939. அந்தநாளும் வந்தது. மார்னிக் கருஉயிர்த்தாள். இருவரும் மனமகிழ்ந்தனர். வசந்த காலமும் வேனிற்காலமும் சென்றன. வேனில் சென்றது வெப்பம் தங்கிவிட்டது. குளிர் காலம் வருமுன்னே மக்களுக்குக் குளிர்வந்துவிட்டது. போர் எனும் வெப்பம்; மரணபயம் ஆகியகுளிர். 1939 செப்டம்பர் வந்தது. ஜெர்மனிய அரசாங்கம் வலுவுள்ளவர் அனைவரையும் இராணுவத்தில் சேரப்பணித்தது. தாய்நாடு காக்க அல்ல. அதற்கென்றால் புனிதத்திக்குளி அன்றோ? இது அதற்கு மாறாக, ஆட்சி வெறிபிடித்த ஒருவனுடைய மாட்சிமைக்கு மக்கள் வீழ்ச்சி அடைந்தனர். தனி சுதந்திரம் பறிபோக வேற்று நாட்டின்மேல் படையெடுக்கக் கட்டாயப் படுத்தப்பட்டனர். மறுத்தவர் அடைந்த தண்டனை மரணமல்ல—சித்திரவதை; தாங்கொணாதது. வெளிநாட்டுக்குப் படையெடுத்துச் சென்றவருக்கு அனேகமாக மூன்றே முடிவு. பலர் மரணம். சிலர்கைது. சிலர் மிஞ்சி (வெற்றி) கண்டவர் தோல்வியே கண்டார். மீண்டும் போரிடவேண்டும்.

பிரடெரிக் பிரிய நேர்ந்தது. மார்னிக் துடித்துப் போய்விட்டாள். பிரடெரிக் விட்ட கண்ணீரே ரைன் நதியில் வெள்ளமாயிற்றோ? மனைவி நிறைமாதக் கர்ப்பிணி என்றால் ஹிட்லருக்கு என்ன? மகவை ஈந்தால் அதையும் எடுத்து விழுங்க அரசாங்கம் துடிக்கும்போது பேதை கணவனை நிறுத்த யாரிடம் முறையிடுவாள்? பிரவாகம் எடுக்கும் ரைனைக்கட்டுப்படுத்த அணைகட்டினாலும் தண்ணீர் காதலி கடல்காதலனை அணைக்க ஓடுவாள். மேலும் தடையிட்டால் தடையை அழித்து அடுத்த வற்றையும் அழித்துச் செல்வாள். மார்னிக் ரைன் நதி அல்லவே! கோரப் புயற்காற்று என்று வீட்டுக்கதவைச் சாத்தினால் அதையும் தள்ளி உள்ளே

வீசும் காற்று. ஆனால் பிரடெரிக் புயற்காற்றல்லவே! மனித உள்ளம் குமுறும் எரிமலை, கொந்தளிக்கும் கடல், வீசும் புயல், சுழலிடும் ஆறு — ஆனால் தடைப்பட்டால் ... ?

பிரடெரிக் சென்றது போர் முனை, அவனுக்குக் கடிதம் எழுத நேரமேது? ஆனால் அவன் எழுதிவிட்டான் கடிதம். நெஞ்சத்து எண்ணக் குவியலிலே ஒரு முத்தை எடுத்து அனுப்பினான். இருநாள் கண் விழித்து கிடைத்த முத்து. போர் முனை என்ன போகவிடுதியா? ஒரே இடமாயிருக்க. அது ஆகாயம் போல் பரந்தது. உறையும் பனிக்கட்டி யல்ல அது. ஓடும் ஆறு. ஆகையால் மார்னிக்கின் பதில் அவனுக்கு வரவேயில்லை. அது வருமுன் அவன் இடம் மாறுவான். அது துரத்த அவன் ஓட பிரான்ஸின் எல்லைக்கே வந்துவிட்டான். அவனும் நின்றுன். அதுவும் நின்றது. ஆம். அதற்குமேல் அதனால் செல்ல முடியவில்லை. ஏனெனில் அதற்குமேல் அவன் செல்லக் கூடாது. ஆகையால் அவன் அதை சந்திக்கவே இல்லை. அது ஜெர்மனிப் பாசறையிலிருந்தது. அவன் பிரான்ஸ் கைதி முகாமில் இருந்தான். இடைவெளி என்னமோ சிலமைல்கள். ஆனால்.

* * *

மார்னிக், திரும்பிவந்த தன்னுடைய கடிதத்தோடு அரசாங்கக் கடிதத்தையும் பெற்றாள். கை நடுங்கப் பிரித்தாள். ஆணவக்கார அரசாங்கம் அவளுக்கு அளித்த செய்தி "பிரடெரிக் கைது செய்யப்பட்டு பிரான்ஸுக்கு அழைத்துச் செல்லப் பட்டுள்ளான். அவன் திரும்புவது கடினம்" அனுதாபம் கூடக் காட்டாத அரசாங்கம் எதற்காகவோ?

அவள் விழுந்து புலம்பினாள். அவளுக்கு அதிர்ச்சியையும், மன வருத்தத்தையும் அளித்தது. மோசமான கர்ப்பச்சிதைவால் அவள் ஆஸ்பத்திரியில் சேர்க்கப் பட்டாள்.

அவள் அவன் பிரியும்போது பேசிய பேச்சுக்களை எண்ணிப் பார்த்தாள்.

"நான் போரில் இறந்து விட்டால் என்ன செய்யவேண்டும் தெரியுமா மார்னிக்?"

அவள் கண்ணீர் விட்டுக் கொண்டே அவனது வாயை மூடினாள்." அதுபோல சொல்லாதீர்கள். "நீங்கள் வெற்றியோடு மீண்டு வருவீர்." மனம் அவள் கூறியதை ஒப்பவில்லை. அவனுக்கும் அது தெரியும். மீண்டு வருவது இயலாத தொன்று. வரண்ட புன்னகையோடு "அப்படியே இருக்கட்டும். அப்படி ஏதாவது நேர்ந்தால்?........." ".........."

"நீ கட்டாயம் மறுமணம் புரிந்து கொள்ளவேண்டும்"

"என்னைப் புண்படுத்தாதீர்கள். என்னை அவ்வளவு கல் நெஞ்சம் படைத்தவள் என்று எண்ணுகிறீரா? நீங்களன்றி வாழ்வேயில்லை." மார்னிக் ஏதாவது தற்கொலை செய்து கொண்டு விடுவாளோ எனப் பயந்து அவன் 'போகும்போது எனக்கு என்ன தருகிறாய்?"

"எது வேண்டுமானாலும்"

"எதுவாயினும்"

"கட்டாயமாக"

"சத்தியமாக"

"நான் இறந்தால் கட்டாயம் நீ தற்கொலை செய்துகொள்ளக் கூடாது"

"ஐயோ! என்ன செய்வேன் இப்படிச் சொல்லாதீர்கள்"

"எங்கே? நான் சொன்னதற்கு சரி என்று பதில் கூறு"

"சரி என்று தலையை யாட்டினாள்.

* * *

சிறையில் வாட்ட முற்ற முகத்தோடு பிரடெரிக் தான் கழித்த இனிய நாட்களை கனவில் கொண்டுவந்து மகிழ்வதைத் தவிர வேறு வேலையற்று இருந்தான். ஒருமுறை அவன் ரைன் நதியில் தண்ணீரில் மூழ்கி சில நிமிடங்கள் உள்ளே இருந்தபோது துடித்துவிட்ட மார்னிக் இப்பொழுதுதான் போரில் மறைவாக உள்ள நிலையில் அவள் என்ன செய்வாள் என்று எண்ணிக் கலங்கினான். சிறைச்சாலையிலிருந்து தப்ப எண்ணினான். ஆனால் தப்பினால் மீண்டும் அவன் ஜெர்மன் வீரர்கள் கையில் சிக்கிவிடுவான். சிக்கினால் மீண்டும் போர்.

1940 பிரடெரிக் தப்பி ஓடிவிட்டான். அவனைத் துரத்திச் சென்றனர் பிரெஞ்சு வீரர்கள். ஒரு ஆற்றில் இறங்கி மூழ்கிவிட்டதுபோல் போக்குக்காட்டி வீரர்கள் சென்றபின் கரையேறி பிரான்ஸை விட்டு அகன்றான். அவன் இறந்துவிட்டதாக அவர்கள் கருத அருகிலிருக்கும் ஸ்விட்ஜர்லாந்து - நடுநிலைமை நாடு-அவனை ஏற்றுக்கொண்டது. பெர்னி நகரில் அடைக்கலம் புகுந்து அங்கே நாட்களைக் கழித்தான். நொந்த உள்ளத்தோடு ஏக்கம் ஒன்றே துணையாக நல்ல நாட்களை எண்ணி எதிர்பார்த்தான். அவனது மறைவு உடனே ஜெர்மனிக்கு அறிவிக்கப்பட்டது, ஜெர்மனிய அரசாங்கம் அதை அவளுக்கு தெரிவிக்கவே மார்னிக் தாங்கொணா அதிர்ச்சியால் சித்தபிரமை அடைந்தாள். எதிரி முகாமில் இருந்த அவன் மீள்வதேது?

அவள் நிலை கண்டு பரிதாபப்பட்டு அவளைத் தன்னுடைய தனிப் பாதுகாப்பின் கீழ் அவளுக்கு சிகிச்சை செய்தார் மனோ தத்துவ நிபுணர் அனிராக். அவரது சிகிச்சை பயனளித்தது.

* * *

1944 டிசம்பர்மாதம். ஜெர்மனி தோல்வி மேல் தோல்வி கண்டது. வெற்றிமேல் வெற்றி கண்ட வெறி தாழ்ந்தது.

1945. ஆகஸ்டு 6. மனித சமுதாயத்தையே அழிக்க மனிதன் கண்ட விஞ்ஞான வேடிக்கை தன்னையே தற்கொலை செய்ய மனிதன் (சமூகம்) கண்ட கலையின் வெற்றி அணுகுண்டு ஹீரோஷிமாவில் எறியப்பட்டது. ஜப்பான் அடங்கியது. அதிகார வெறி கொண்ட ஜப்பான் தன் வினைப் பயனைக் கண்டது. ஜெர்மனியின் நிலையும் அதுவேதான்.

MANUFACTURERS OF:-

Genuine Madras Curry Powder, Curry Paste, Pepper Water Paste, Hot Mulligatawny Paste, Pickles and sweet Chutneys, Major Gray Chutney, Col. Skinner Chutney, Sauces, Jams and Jellies, Ground Black and White Pepper in Bottles and Tins.

Cable: Condiment Madras. Tel: 21657

P. VENCATACHELLUM CONDIMENTS

(ESTD: 1860)

1 BROADWAY, MADRAS-1

VIENNA 1873 P. VENCATACHELLUM'S TRADE MARK VIENNA 1873

PEACOCK BRAND

Branches:

KINGSWAY. SECUNDERABAD. ★ 7-B. BRIGADE ROAD. BANGALORE

EXPORTERS TO:-

United Kingdom, United States of America, Australia, West Germany, Switzerland, British Guiana, New Caledonia, The Middle East, Fiji and other important cities of the World.

P. V. Sambar Powder

அணுகுண்டு வீசப்படா விட்டாலும் ஜெர்மனி முழுவதும் அழிந்தது. அதன் ஆதிக்க வெறி அழிந்தது. ஹிட்லர் மறையவே ஜெர்மனி வல்லரசுகளால் கூறுபோடப் பட்டது.

* * *

1945 டிசம்பர் இரவு. பனியாலும் இருளாலும் பயங்கர மாய்க்காட்சியளித்தது. போர் அரக்கன் பசிதீர உண்டு எஞ்சிய ஜெர்மனி எங்கும் சோகக் குரல், பசிக்கொடுமை. மக்கள் சோர்ந்த கண்ணும், ஒட்டிய உடலுமாக காட்சியளித்தனர். ஆந்தையின் அலறலும், கோட்டானின் கூவலும், கழுகின் ஆனந்தக் கத்தலும், ஜெர்மனியே பிணக்காடான கதையைச் சொல்லிக்கொண்டே இருந்தது. பிரடெரிக் இந்தச் 'சிறப்புமிக்க' நன்னாளில் தைரியமாய் தாய்நாடு திரும்பினான். வருத்தம் பிறிட்டது காட்சிகளைக் காண. மகிழ்ச்சி உந்தியது மனைவியைக் காணப்போகிறோம் மகனும் இருப்பான். என்ற எண்ணத்தால். திகில் மூண்டது. போர் அவர்களை எங்கே எப்படி வைத்திருக்கிறதோ? பதட்டம் கண்டது. பரபரப்பு, கிளுகிளுப்பு, நடுக்கம் ஆகியவை மீற தன் கிராமம் நோக்கி நடந்தான்.

அவன் விட்டுச் சென்ற ஜெர்மனி எங்கே? அந்த மகோன்னத வாழ்வு எங்கே? தாய்நாடு இருந்த சிறப்பு எங்கே? ஓலமிடும் மக்களும், சோகக் குரல் எழுப்பும் உள்ளங்களுமா அவன் விட்டுச் சென்ற

ஜெர்மனியின் சொத்துக்கள்? மகிழ்ச்சி கீதம் பாடும் இதயமும், இனிமையே உருவான மக்களும் எங்கே? கிராமத்தில் அவன் மனைவியைக் காணவில்லை. எங்கே சென்று தேடுவான். கூடியமட்டும் விசாரித்ததில் அவள் சித்த சுவாதீனமிழந்து நகர ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டதாக அறிந்தான். பெர்லின் நகரில் பல இடத்தில் அலைந்தான் அந்த வைத்திய நிபுணரைத் தேடி.

* * *

அலிராக்கின் வீட்டின் கதவைத் தட்டினான். மார்னிக் கதவைத் திறந்தாள். பாய்ந்தோடி அவனை அணைத்தான் பாசம் பிறிட அவள் அவனது அணைப்பிலே பிரிவின் பெருமை ஆசை ஆகியவற்றை உணர்ந்தாள். அணைப்பிலே என்ன நெருக்கம்? என்னசூடு? கண்ணிலே ஆனந்தப் பெருக்கெடுத்தது, மார்னிக்கை கண்ட உவகையால். ஆனால் மார்னிக் அவனை இதேநிலையிலே வரவேற்றாளா? வரவேற்க முடியுமா? வரவேற்க முடிந்ததா?

அவனைக் கண்டதுமே அதிர்ச்சியால் கண்கள் நிலைகுத்தின. அவள் அசையவில்லை. மரணமடைந்தவன் என்று கருதப்பட்டவன் மீண்டு வந்தால்? சில நிமிஷங்கள் கழித்தே அவள் அவனை உணர்ந்தாள். உணர்வு பிறிட கண்ணீர் வடித்து தன் முகத்தை அவன் மார்பில் புதைத்து விம்மினாள். சில நிமிஷங்கள் பல யுகங்கள். அவள் தன்னை விடுவித்துக் கொண்டு அவனைப் பார்த்தாள். கோ! என்று கதறினாள். தன்னைக் கண்டதால் கதறுகிறாள் என்று எண்ணினான். அவளை மீண்டும் அணைத்து அமைதிதர எண்ணினான். அவன் நெருங்க நெருங்க அவள் விலகினாள். அவனுக்குத் தெரியுமா அவள் அழும் காரணம்? அவன் பதறினான். செயலற்று நின்றான். அவனறிவானா அவளது உள்ளப் போராட்டத்தை? யார் சொல்வது அவனிடம் அவள் அனிராக்கின் மனைவி என்று? அவள் அதை கூறியபோது அவன் நிலை தடுமாறினான். வெற்றுப் பார்வையும் சூனியத்தன்மையும் தாக்கவே அவன் உடல் நடுங்கி விட்டது, அதிர்ச்சியால் கல்லாகச் சமைந்துவிட்டான்.

அவள் சொன்னாள்: "அனிராக் எனக்கு வைத்தியம் செய்து எனக்குப் புத்தியளித்தான். சிதறிய சித்தத்தை ஒன்றாக்கினான். எனக்கு மீண்டும் வாழ்வைத் தந்தான். நான் சித்தம் கலங்கிப் போகாவிட்டிருந்தால். அவனுக்கு என்ன கைம்மாறு செய்வது என்று அவனைக் கேட்டபோது அவன் கூறுவதைக் கட்டாயம் செய்வதாய் சத்தியம் கூறச் சொன்னான். நானும் சரி என்றேன். நான் கண்டேனா அவன் என்னையே விலை கேட்பானென்று? நானும் திடுக்கிட்டேன். கதறியழுதேன். கடைசியில் நன்றி மறப்பதை விட தற்கொலை செய்து கொள்வதே மேல் என்றும் எண்ணினேன். அவன் கேட்பதை இல்லை என்று கூறாமல் மறுத்தவளாவேன். அதனால் அவனை மணக்கவே முடிவு செய்தேன்.

"மணமும் நடந்தேறியது. அவன் என்பால் காட்டிய

அன்பே எனக்கு உயிரளித்தது. எனக்கு உங்கள் நினைவு வரும் போது அழுகை பீறிட்டு வரும். இப்பொழுது நீங்கள்......"

"இறந்துவிட்டதாகக் கருதப்பட்ட நான் மீண்டு வந்துவிட்டேன். உயிரைக் காப்பாற்ற பல அரிய முயற்சியை மேற்கொண்டேன். உன் அன்புப் பிடியிலே செயற்கரிய செயல்களைச் செய்தேன். மீண்டு வந்தேன். இங்கே இதைக்காண. கண்டு அனுபவிக்க. என் செய்வது? அந்த குண்டு என் உயிரைப் பறித்திருந்தால்......இந்த வேதனையெல்லாம் அனுபவித்தே இருக்க வேண்டாம். அன்பு மனைவி மாற்றானின் அணைப்பில்" என்று விம்மலுக்கிடையே பேசினான். அவளும் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

"நீ என்னுடன் வந்துவிடு" என்றான்.

அவள் பதிலளித்தாள் :—

"நான் உன் மனைவிதான். இப்பொழுது ஒருவாக்குறுதிக்கு இணங்க அவரை மணந்தேன். நான் விரும்பினால் அவர் மறுக்க மாட்டார். விடுதலையளிப்பார். ஆனால் நான் கணவனை வஞ்சித்து இப்பொழுது உயிரளித்தவனுக்கும் நன்றி கொன்று வாக்குறுதி மீறி என்ன ஆனந்த வாழ்வு காணமுடியும்? என் மனமே என்னைக் கொன்றுவிடும். மனப் போராட்டமே பெரிய சித்திரவதை தரும். என்னால் அது இயலாது. என்னை மறந்துவிடு. என் துரோகத்தை மன்னித்துவிடு. நான் துரதிருஷ்டசாலி" என்றாள்.


எல்லா நன்னாட்களிலும் **பரிசளிக்க**

**1. லிப்கோ "நன்னாள் அன்பளிப்பு"**
(உடல் நலன், குடும்பம், வரவும் செலவும், நல்வாழ்வுக்குரிய)
ஏராளமான படங்களுடன் : ரூ. 2.00

**2. லிப்கோவின் "செல்வம் செழிக்க"**
(சீரிய முறையில் பணம் தேடுவதற்கும் சேமிப்பதற்கும் உற்ற வழிகள்)
ஏராளமான படங்களுடன் : ரூ. 2.50

3. லிப்கோவின் "குழந்தை வளர்ப்புக் கலை" ... ரூ. 1.50
4. லிப்கோவின் "ஸ்ரீ மஹா பக்த விஜயம்" ... ரூ. 2.25
5. லிப்கோவின் "விநோத ரச மஞ்சரி" ... ரூ. 2.25
6. LIFCO'S "ALL ABOUT MADRAS" ... ரூ. 3.00

புதுதில்லியில் பிரதிகள் கிடைக்குமிடம் :
**தில்லித் தமிழ்ச் சங்கம்**
பாராளுமன்றத் தெரு, புதுதில்லி.

பலமுறை கெஞ்சியும் பயனளிக்காததால் அவளிடம்கோபமாகக் கூறினான்: "நான் உன்னை அடைந்தே தீருவேன். உயிர் போனாலும் சரி. சட்ட ரீதியாய் நான் இருக்கும்பொழுது நீ மற்றவனை எப்படி மணப்பாய்? அது குற்றமாகும். குற்றத்தை மன்னித்து உன்னை மீண்டும் பெற நான் முயன்று வெற்றி காணுவேன்." அவன் வெளியேறினான். அவள் மனம் நொந்து வருந்திக்கொண்டிருந்தாள்.

அனிராக் வீட்டிற்கு வந்தான். தன் மனைவியின் நிலையைக் கண்டான். அன்று நடந்தவற்றைக் கேட்டான். அவன் கூறினான்:

"சட்டப்படி உன் கணவன் உன்னை மீண்டும் பெறமுடியாது. ஏனெனில் அவன் இறந்ததாகவே கருதப்பட்டான். ஆகையால் மறுமண முறைப்படி நீ என்னை மணந்தாய். நீ குற்றவாளியுமல்ல. ஆனால் அவனது ஆவல்,சோகம், தோல்வி, ஏமாற்றம் ஆகியவற்றை உணருகிறேன். உன்னை விடுதலை செய்கிறேன். நீ அவனையே மணந்து கொள்" என்றான்.

அவள் கண்ணீர் விட்டாள் என்ன? ஆனந்தக் கண்ணீர்! ஒருவன் அன்பினால் பொறுமைப்படுகிறான். கோபப்படுகிறான். அவளைப்பெற(இழக்க மறுத்து) எண்ணுகிறான். இதோ! வேறொருவன். அவனும் மனிதன்தான். தன் மேலுள்ள அன்பால் தன்னையே தியாகம் செய்கிறான். தனக்கே நஷ்டம் விளைவித்துக் கொள்கிறான். பொறுமையே பெருமை தருகிறது. அவளை மற்றவனுக்கு விட்டுக் கொடுக்கிறான்.

அவள் அதைச் சாதகமாய் பெற்று பழைய கணவனை அடைவாளா? அடைந்துதான் சுகம் காண்பாளா? தியாகத்திற்குப் பதில் சுயநலமா? அவன் பொறுமைக்குப் பதில் சஞ்சல புத்தியா? அவனது பெருமைக்கு அவளது காணிக்கை சிறுமையா? கோபமே உருவானவனுக்காகத் தன்னை இழிவுபடுத்திக் கொள்வதா?

அனிராகின் காலில் கண்ணீரைச் சிந்தினாள். அவன் அவளை எழுப்பிக் கண்ணீரைத் துடைத்தான். அவள் உறுதியான குரலில் கூறினாள். "நான் உங்களை இழக்கப் போவதில்லை. அது முடியவும் முடியாது. சட்டம் எதுவானாலும் சரி. நான் அவரை மறுத்துவிடுவேன். உங்கள் தியாகத்திற்கு நான் கீழ்ப்படிகிறேன். என்னால் உங்களைப் பிரியமுடியாது. உங்கள் உயர் குணமே என்னைக் கவர்கிறது. நான் நன்றி மறக்கக்கூடியவளல்ல. என்னை விட்டுப் பிரியாதீர்கள். என்னை வாடவிடாதீர்கள். நீங்கள் என்னைக் கைவிட்டால் என் முடிவு மரணம்தான்".

அவன் பதிலளித்தான். "அழாதே. உன்னை என்றும் விட்டுப் பிரியவே மாட்டேன்."

* * *

பிரடெரிக் ஒரு சட்ட நிபுணரைக் கண்டான். அவர் எல்லாவற்றையும் கேட்டு பதிலளித்தார். "நீ மரணமடைந்து விட்டாயென்றே அவள் மற்றவனை

மணந்தாள். அதுவும் அரசாங்கத்தால் கூறப்பட்டது. அவள் குற்றவாளியல்ல மறு மணம் முதல் மணத்தை ரத்து செய்து விட்டது. மேலும் அவளும் உன்னுடன் வர விரும்பவில்லை. நான் ஒன்றும் செய்ய முடியாதது குறித்து வருந்துகிறேன்'.

"நீங்கள் கூறும் முடிவு இது தானா? தன் சகலத்தையும் துறந்து போர்க்களம் சென்ற தியாக வீரனுக்கு மனைவியையும் பறிப்பதுதானா இந்நாடு தரும் பரிசு" என்று கேட்டான். சட்ட நிபுணர் பதிலளிக்கவில்லை.

எப்படியாவது அவளை அடைவது என்று முடிவு செய்தான். எப்படி? அனிராகிடம் கூறி அவளை மீண்டும் பெறுவது. அல்லது ஐயோ? அவளை ? கொல்வதா? மனம் மறுத்தது. கடைசியில் ஆசை வென்றது.

அனிராகின் வீடு சென்ற போது அவர்கள் பேசிய பேச்சு (மேலே குறிப்பிட்டது) கேட்டது. இந்தத் தியாகியையா கொல்வது? உத்தம குணத்தின் சிகரத்திலுள்ள அவளெங்கே? கீழ்த்தரமான உணர்ச்சியே குவிந்த நான் எங்கே? நன்றி மறக்காத அந்த மாதர்குல திலகமெங்கே? தான் அவளுக்கு ஏற்றவனா? அவனல்லவோ அவளுக்கு ஏற்றவன்! தனக்காக அவளையே பிரியத் துணிந்தவனல்லவா அவளுக்கு ஏற்றவன்! வாக்கைக் காப்பாற்றத் துணிந்தவளல்லவா அவனுக்குத் தகுந்தவள்!

அவன் அந்த இடத்தை விட்டகன்றான். ○


# RADHAKRISHNA JEWELLERY

GOLD & SILVER MERCHANTS

**BIG BAZAAR, COIMBATORE.**

(Phone 2140)

★

Genuineness of Gold, Brilliancy of Gems, Beauty of designs, Perfection of Workmanship are the outstanding features of our every Jewel.

PROMPT DELIVERY AGAINST ORDERS

# முருகன் என்னும் மின்னல்

ஸ்ரீ

நீராவி மேகமாக மாறும்போது சில மேகங்களில் வல மின்சார அம்சமும் மற்றும் சில மேகங்களில் இட மின்சார அம்சமும் பிரிந்து நிறைகின்றது. அக்காலத்தில் வல அம்சத்தினால் நிரம்பியதும் இட அம்சத்தினால் நிரம்பியதுமான இரு மேகங்கள் ஒன்றையொன்று நெருங்கும்போது இம்மேகங்களிலுள்ள அம்சங்கள் ஒன்றுக்கொன்று தாவி மின்னல் உருவமாக வெளியில் தோன்றுகிறது. இம்மின்னல் கொடிகள் சில சமயம் வெகுநீளமிருக்கும். தண்ணீரிலும் மற்றெல்லா வஸ்துக்களிலுமே நிறைந்த மின்சாரம் இரண்டாகப் பிரிந்து பின்னர் திரும்பி ஒன்ருகச் சேரும்போது ஜோதியும் சக்தியும் வலமிடமாக ஜ்வலிக்கிறது, ஒலிக்கிறது. இரண்டாகப் பிரிவது சக்தியுடன் ஜ்வலிப்பதற்காகத்தான். இது நவீன விஞ்ஞானிகள் காணும் முடிவு.

இது வெறும் ஜடசக்தியான மின்சார சக்தியில் நாம் காணும் உதாரணம். இதே முறையை சித் சக்தியான பராசக்தி விஷயத்தில் பொருத்தமுற ஆராய்ந்து பார்த்தால், பரம் பொருள் சிவனுகவும் சக்தியாகவும் பிரிந்ததன் பயன் நிறைந்த "பிரும்ம" தன்மை உலக காரியத்திற்கு உபயோகப்படும்படியாக, "சுப்பிரம்மண்ய" மாக சக்தி வேலுடன் ஜ்வலித்துக் கொண்டு உதயமாவதற்காகவே என நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது.

மின்னல் ஜோதி வெளியிருட்டை மாத்திரம் சிறிது நேரம் நீக்குகிறது. இம்முருகனென்னும் அருளொளியோ, நமது வெளியிருட்டு உள்ளிருட்டு இரண்டையும் சாஸ்வதமாக நீக்குவதோடு அதில் மனத்தைச் செலுத்தும் நாமும் அச்சோதி ரூபமாகவே ஆகும்படியாகவும் அருளுகிறது. இச்சிவ சக்திகளையே சிவன் விஷ்ணு என்றும் பெரியோர் கூறுவர். இதையே ஆழ்வார்களும் நாயன்மார்களும் சிவனை வலது அம்சமாகவும் விஷ்ணுவை சக்தி அம்சமான இடது அம்சமாகவும் விளக்கியிருக்கிருர்கள் :—

திருமங்கையாழ்வார்

"பிறைதங்கு சடையானை வலத்தே வைத்து" என்கிருர்.

பெரிய திருமொழி

"மழுவியல் படையுடையவனிடம் மழைமுகில்
தழுவின உருவினர் கணபுரம் அடிகள் தம்இடமே"

என்று பேசுகிறது.

சிவபெருமான் திருவந்தாதியில் கபிலதேவர்,

**" கூற்றுதைத்த சேவடியான் இடப்பாகம் மால் "**

என்கிறார்.

சேரமான் பெருமாள் நாயனார், 'பொன் வண்ணத் தந்தாதி'யில்,

**" இடம்மால் வலம்தான் இடப்பால்துழாய்**
**வலப்பால் ஒண் கொன்றை "**

என்றோதுகிறார்.

சக்தியே புருஷரூபத்தைத் தாங்கும்போது விஷ்ணுவாகிறார், அது கொண்டே தேவி விஷ்ணுவின் சகோதரியென வழங்கப்படுகிறாள். அப்போது திருமாலுக்கு முருகன் மருமகனாகிறான். " **மருகோனே** " என்கிறார் திருப்புகழாசிரியர்.

சிவனாயும் சக்தியாயும் பிரிந்தது ஒரே பரம்பொருள். பிரிந்த இருவரும் அன்பில் ஒன்றுபட்டு எழுந்த ஜோதியே முருகன். அக்கினியும் தாங்க முடியாதது அந்த ஜோதி. அதை, அரக்கராம் புறப் பகைவரையும், அறுவராம் அகப் பகைவரையும் வெற்றி கொண்ட ஆறுமுகனை, தினம் தினம் வழிபடுவோம்.



மழலை மொழி:

# மரக் குதிரை

★

கொள்ளோ புல்லோ தின்னாது
   கோலோ சவுக்கோ வேண்டாது
கல்லோ மண்ணோ பாராது
   கட்டக் கயிறும் கேட்காது

ஓட ஓட இளைக்காது
   ஓய்வுக் காகத் தூங்காது
லாடம் சேணம் வேண்டாது
   நாலு காலால் பாயாது

கடிக்க உதைக்கத் தெரியாது
   கனைத்தும் அன்பைக் காட்டாது
அடித்தால் கீழே தள்ளாது
   ஆற்றில் நீந்திச் செல்லாது

பின்னும் முன்னும் சாய்ந்தாடும்
   பிறந்து வளராக் குதிரைஇதைச்
சின்னஞ் சிறிய சிறுவர்கள்
   சிரித்தே ஏறி ஓட்டுவரே.

— 'வண்ணமுத்து'.

HINDUSTAN LEVER

SERVES THE HOME

*Makers of quality*

*Soaps, Vanaspati and Toilet preparations*

HLL. 3-610

# பேத்தியின் கல்யாணம்

BESANT NAGAR

**வெ. கிருஷ்ணமூர்த்தி**

சென்னை அம்மன் கோவில் தெரு அண்ணாசாமி தாத்தாவிற்கு அறுபதாம் கல்யாணமாகி ஆறு வருடங்களாகிறது. அவருடைய ஒரே பிள்ளை நாராயணன் அரசாங்கக் காரியாலயத்தில் வேலை பார்க்கும் ஒரு சாதாரண குமாஸ்தா. அவன் வாங்கும் சம்பளம் ரூபாய் நூற்று இருபத்து ஒன்பதும் அவனுடைய அப்பாவின் பென்ஷன் ரூபாய் எண்பத்திரண்டும் அவன் குடும்பத்திற்கு மாதச் செலவிற்கே காணவில்லை.

இந்த வருடம் வீட்டில் அதிக வைத்திய செலவு ஏற்பட்டது. அதனால் கிழவர் "இந்த தீபாவளிக்கு எனக்கு ஒன்றும் புதிசு எடுக்க வேண்டாமடா, பிழைத்துக்கிடந்தால் அடுத்த வருடம் பார்த்துக் கொள்ளலா"மென்று தன் செலவைக் குறைக்கப் பார்த்தார். "அடுத்த வருடமென்ன, ஐந்நூறு ரூபாய் சம்பளம் வரப்போகிறதா? வருடத்திற்கு ஒருநாள் புதுத்துணி வாங்காமலிருக்கப்படாது" என்று நாராயணன் சொல்லிவிட்டு ஜவுளிக் கடைக்குப் பெரியவரையும் அழைத்துப் போய், தீபாவளி ஜவுளிக்குக் கடன் சொல்லிவிட்டு எல்லோருக்கும் துணிமணி வாங்கி வந்துவிட்டான். தாத்தாவிற்குத் தன் நாலு வயதுப் பேத்திக்குப் பட்டுப் பாவாடை எடுக்க முடியவில்லையே என்ற குறையிருந்தது.

வீட்டுக்கு வந்தவுடன் தாத்தாவிற்கு மனச் சஞ்சலம் இன்னும் அதிகமாயிற்று. ஏனென்றால் மற்றக் குடித்தனக்காரர் பெண்ணுக்குக் கல்யாணமாகித் தலைத் தீபாவளி, பெண்ணன் தகப்பனாருக்குக் கம்பெனியில் வேலை. தீபாவளிக்கு ஒரு வாரத்திற்கு முன்பே சம்பளமும் மூன்று மாத போனஸும் வந்ததால் அவர்கள் வீட்டுத் தீபாவளி தடபுடல் தான்.

* * *

நாயனக்காரன் வந்து ஊதினான். இரண்டு குடித்தனக்காரர்களும் மங்கள ஸ்நானம் செய்து, கண்ணனைத் தொழுது மங்கல ஆடையுடுத்தி பரஸ்பரம் பண்டிகை விசாரிப்பு பரிமாறிக் கொண்டார்கள். தாத்தா பேரன்களையும் பேத்தியையும் அழைத்துக்கொண்டு வாசல் திண்ணைக்கு வந்துவிட்டார். பேரன்கள்

*With best compliments from :*

# THE PEARL CYCLE INDUSTRIES LTD.,

11/3 ASAF ALI ROAD,
NEW DELHI-1.

*MANUFACTURERS OF*

**ROYAL SUPREME & PEARL BICYCLES.**

"தாத்தா, ஒன்றும் கூடத் தெரியாது. நீபாட்டுக்கு 'தேமேனு' உக்காந்துண்டு பாரு, நாங்க சுடறோம்" என்று சொல்லிவிட்டு மூலைக்கு ஒன்றாய் ஓடிப்போய்ப் பட்டாசு சுடத் தொடங்கினர். தன்னருமைப் பேத்தியின் புதுச் சிட்டிப் பாவாடையைப் பார்த்துக் கொண்டே தாத்தா சற்றுக் கண்ணயர்ந்து விட்டார்.

அரைமணி நேரம் கழிந்திருக்கும். பக்கத்துத் தெரு பஞ்சனதய்யர் வந்தார். அவரும் ஒரு எழுபது வயது தாத்தாதான், இரண்டுபேரும் பால்ய சிநேகிதர்கள். "என்ன, ஆச்சாமி, (அண்ணுசாமியை அவர் செல்லமாகக் கூப்பிடும் பெயர்) கங்கா ஸ்நானம் ஆச்சா?...... என்று கேட்ட பொழுதுதான் திடீரென்று விழித்துக் கொண்டார். "ஆச்சு, உங்களுக்கெல்லாம் கங்கா ஸ்நானம் ஆச்சா?...... என்ன வந்து பாதியில் கலேச்சுப் புட்டியே, என் பேத்திக்கு கல்யாணம் ஆயிண்டிருக்கு!"

இதைக் கேட்ட பஞ்சு தாத்தாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"டேய் உட்காருடா, பஞ்சு" என்று சொன்னவுடன் திண்ணையிலுள்ள தூசியோ, பட்டாசுக் கரியோ தன் புது வேஷ்டியில் ஒட்டிக்கொள்ளாதவாறு மேல் சவுக்கத்தினுல் தட்டிவிட்டு பஞ்சு உட்கார்ந்தார்.

"இன்னும் உன் பேத்தி வாயில் விரல் போட்டுக் கொண்டதைக்கூட எடுக்கலே. நாலு நாளைக்கு முன்பு துணிக் கடையிலே நாலுவயது பெண் குழந்தைக்கு பாவாடைக்கு இரண்டு கஜம் சிட்டி போதுமான்னு தையற்காரனைக் . . கேட்டே, அதுக்குள்ளே எப்படியடா கல்யாணம். ஏதாவது கனுக் கண்டயோ" என்று கேட்டார்.

அதற்கு அண்ணுசாமித் தாத்தா "ஏய், அவசரக்குடுக்கை! நான் சொல்லுவதைப் பூராவும் கேளு. கனுக்கண்டால் என்ன? கல்யாணம்னு காது கொடுத்துக் கேட்கணும்" என்று சொல்லிக் கொண்டே ஒரு சிட்டிகை பொடியைப் போட்டுக் கொண்டார்.

* * *

நம்முடைய பாரதியார் பாடியபடி "எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை, எல்லோரும் இந்நாட்டு மன்னர்" தத்துவம் நடைமுறையில் வந்துவிட்டது. சோஷலிஸப் பாணியில் சமுதாயம் உருவாயிடுத்து. நம் தமிழ் நாட்டில் பன்னிரண்டு ஜில்லாக்கள்தானே. ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஒரு நபரைத் தேர்ந்தெடுத்து பன்னிரண்டு பேர்கொண்ட கல்யாண விசாரணைக் குழு ஜனங்களே ஏற்படுத்தி கல்யாண கஷ்டங்களைப் பரிசீலனை பண்ணச் சொல்லி அவர்களது சிபாரிசுகள் அத்தனையும் பொது ஜனங்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

குறைந்த செலவில் கல்யாண முறைகளைக் குழு வகுத்தது. கல்யாணச் சட்டம் வந்தது. இந்தச் சட்டப்படிதான் மாதா மாதம் கல்யாணம் நடத்துவது என்று மக்களே தீர்மானித்துக் கொண்டார்கள். செவ்வாய்

# THE SECRET OF *good* WASHING...

Effortlessly, without beating, all fabrics — woollens, silks, rayons and cottons — wash better this easy, ECONOMICAL way... become whiter, brighter than new!

## ... IS IN THE DIP-ing!



An all-purpose washing soap, DIP is equally good for washing delicate china, sanitary porcelain, floors...

- PURE POWDERED SOAP
- OPTICAL BRIGHTENER
- **NO SODA**




1-lb. & 3-lb. cartons

100% Indian Control & Capital

Godrej THE BEST NAME IN SOAPS

தோஷமுள்ள பெண்கள், திருவாதிரை, ஆயில்யம், ஹஸ்தம், சித்திரை, கேட்டை, மூலம், பூராடம் போன்ற சில நக்ஷத்திரங்களில் பிறந்தவர்களுடைய நக்ஷத்திரத்தைக் கேட்ட மாத்திரத்திலேயே ஜாதகம் கூட கொடுக்கமாட்டேன், வாங்க மாட்டேன் என்ற சிலரது கொடுமையைக் கண்டித்து இனிமேல் ஜாதகமே பார்க்க வேண்டாமென தீர்மானிக்கப் பட்டது. ஆண் பெண் உறவில் பெண் ஆண் வயதுக்குக் குறைந்த வயதாக இருக்க வேண்டுமாதலால், பிறந்த வருட கணிப்பே போதுமென்று ஒத்துக்கொள்ளப்பட்டது.

பையன் கடைசி வருடம் ஹானர்ஸ் பி.ஏ. வகுப்பு. பெண் ஐந்தாவது பாரத்தில் வாசிக்கிறது. பெண் கடைந்தெடுத்த முத்துப்போலிருக்கு. பையனும் வெகு சூடிகை. ஜாதகமும் பொருந்தியிருக்கு. பரீக்ஷை பாஸ் பண்ணினவுடன் ஏதோ ரூபாய் மூவாயிரம் கொடுத்து பெண்ணுக்குக் கல்யாணம் ஏற்பாடு செய்துவிடலாமென திட்டம் போடுகிறார்கள். ஆனால் பாஸ் பண்ணினவுடன் "ஸார் இப்ப கல்யாணம் வேண்டாம், பையன் ஐ.ஏ.எஸ்ஸுக்கு வாசிக்கிறான். உங்க 'பொண்ணும்' எஸ். எஸ். எல். சி. 'கம்பிளீட்' பண்ணட்டுமே என்று நம்பிக்கையாகச் சொல்லுகிறார்கள். பையன் ஐ. ஏ. எஸ். பாஸ் பண்ணினவுடன் பையனின் பெற்றோர்களைக் கேட்டால் "நாங்கள் என்ன செய்வது? எங்களுக்கு சம்மதந்தான். நாங்கள் சொன்னால் இனி கேட்பானா? எல்லாம் அவனிஷ்டம் ஸார். அதிகம் நாங்கள் சொல்லப்போனால் ஜாதிவிட்டு வேறு எங்கேயாவது... என்று நாங்களே பயப்படுகிறோம்" என்று தட்டிக் கழித்துவிடுகிறார்கள். இந்த கஷ்டங்கள், நகை போடலே, சீர்செனத்தி செய்யலே, கிரகப்பிரவேசம் இல்லே, தீபாவளிக்கு அழைப்பில்லே," என்ற பல அந்தக் காலத்துக்கு சௌகர்யமாயிருந்து, தற்காலத்திற்கு சிரமமாயிருக்கும் பழக்கவழக்கங்களை யெல்லாம் உதவாதென்று கல்யாண கமிட்டியார் தள்ளி விட்டார்கள்.

"கேளுடா பஞ்சு, சமூகம் மாறிவிட்டது. அணுகுண்டு யுகத்தில் ஆணும் பெண்ணும் சமம். எல்லோரும் படித்து வேலையில் இருக்கிறார்கள். என் பேத்தியும் ஒரு உத்தியோகத்திலிருக்கிறாள். இந்த மாதம் திருச்சி ஜில்லாவில் கல்யாண தீர்மான சபை ஸ்ரீரங்கத்தில் ஆயிரக்கால் மண்டபத்தில் கூடியிருக்கு. ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு ஜில்லாவிலுள்ள பெரிய கோயில்களில் இந்தக் கல்யாண சபை கூடுகிறதாம். பெண்களோட போட்டோ, பையன்களுடைய போட்டோ, பூர்வோத்திரம், படிப்பு, வயது, சங்கீத அறிவு முதலிய விவரங்களெல்லாம் "மேரேஜ் கெஜட்" என்ற பத்திரிகையில் பார்த்தேண்டா. என் பேத்தி போட்டோவைப் பார்த்ததில் அவள் பாட்டியான என் ஆம்படையா சாயலே அப்படியே உரிச்சு வச்சிருக்கடா. அந்த ஆயிரக்கால் மண்டபத்தில் ஓர் வரிசையில்

## பாரதி பெருமை

மலரை முகர்ந்து அனுபவிக்கிற சந்தோஷம் புட்டியிலடைத்த தைலத்தினால் ஏற்படுமா? கருத்து மட்டும் நன்றாக இருந்தால் அது வெறும் வாசனைத் தைலம் மாதிரி. நல்ல கவிதை உருவம் அதற்கு இருந்தால் ரோஜாப்புஷ்பம் மாதிரி...

பாரதியார் எத்தனையோ மணமுள்ள புஷ்பங்களை சிருஷ்டித்துக் கொடுத்திருக்கிறார். தேசத்துக்கு அவசியமான எல்லா விஷயங்களைப் பற்றியும் பாடியிருக்கிறார். அவர் தொடாத விஷயம் இல்லை. அரசியல் கொள்கைகளுக்காவது சமூக சீர்திருத்தத்திற்காவது கவிகளிடம் பிரமாணம் தேடவேண்டிய அவசியம் இல்லை. அப்படித் தேடினால் சில சமயம் முரண்பட்டதுபோல் தோன்றும். கருத்துக்களைக் கண்டு குழப்பமடைவோம்.

— ராஜாஜி

என் பேத்தியுள்பட பல கல்யாணப் பெண்களும், நேர் எதிர் வரிசையில் கல்யாணப் பையன்களும் உட்கார்ந்திருக்கிறார்கள். ஒவ்வொரு அமாவாசை தினம் இச்சபை கூடி கல்யாணங்களை நிச்சயிக்கிறது. அமாவாசையன்று நிறைந்த நாளானபடியால் அன்றே கல்யாணங்கள் நடத்தப்படுகிறதாம் அன்றைய தினம் 'நியூமூன்' தாம்பத்திய வாழ்க்கையும் 'நியூ லைப்' என்று ஆரம்பமாகிறதாம். பிறகு பதினான்கு நாட்களுக்கு புது தம்பதிகள் எல்லோருக்கும் "சிக்கன வாழ்வு" சமுதாய உறவு, சமூக நலன், குடும்பக் கட்டுப்பாடு, லகு சமையல், நிமிஷ அலங்காரம் முதலிய விஷயங்களைப் பற்றிச் சொல்லிக்கொடுக்கிறார்கள். மறுநாள் பௌர்ணமிக்கு தம்பதிகள் இஷ்டம்போல் எங்கு வேண்டுமானாலும் 'தேனிலவு'க்குப் போக ஏற்பாடு செய்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன்.

கேளுடா, பஞ்சு! திடீரென்று சபையில் அமைதி நிலவுகிறது. டவாலி போட்ட இரு சேவகர்கள் முன்தொடர ஓர் ஆணும், பெண்ணும் மேடைமீது ஏறி அங்குள்ள இரு சோபாக்களில் உட்காருகிறார்கள். எனக்கு இவர்கள் யாரென்று தெரியவில்லை. அருகிலிருந்த சேவகனைக் கேட்டேன் "யாரப்பா இவர்கள்! ஆம்படையான் பொண்டாட்டியா?" என்று கேட்டதற்கு அவன் சிரித்துக் கொண்டே, 'ஏன் பெரியவரே! நீங்கள் ஊருக்குப் "புச்சா", பழைய காலத்து மனுசர் போலிருக்கு! இவக இரண்டு பேரும் மாஜிஸ்டிரேட்டுகள். கெஜட்டில் போட்டிருக்கும் ஆண் பெண்களை பேட்டி கண்டு விசாரித்து கல்யாணம் தீர்மானம் செய்வாங்க. கல்யாணம் என்பது ஆண் பெண் வியவகாரம் பாருங்க. அதுக்குத்தான் இரண்டு பேருங்க" என்றான்.

அவனை இன்னும் ஏதாவது கேட்கலாமென்பதற்குள் மீனாக்ஷி என்ற பெண் பெயரையும், வெங்கட்ராமன் என்ற பையன் பெயரையும் கூப்பிட்டார்கள். அவர்கள் நேருக்கு நேர் நின்று கொண்டார்கள்.

பரஸ்பரம் கேள்விகள் கேட்டுக் கொண்டார்கள். பிறகு இரண்டு பேர்களும் "சம்மதம்", என்று கைதூக்கவே, இரண்டு மாஜிஸ்டிரேட்டுகளும் "நீங்கள் கணவன் மனைவியாக வாழ்வீர்களாக" என்று சொன்னார்கள். இப்படியே பல கல்யாணங்கள் தீர்மானிக்கப்பட்டன. என் பேத்திக்கும் லக்ஷணமா, வாட்டசாட்டமான ஆம்படையான் கிடைச்சுட்டான். இந்தப் பெண்களெல்லாம் வெறுமே தலை வாரிண்டு குங்குமம் இட்டுண்டு, சாதாரண கைத்தறிப் புடவைதான் கட்டியிருந்தார்கள்.

பக்கத்திலிருந்த ஒருவரை 'ஏனிப்படி' என்று ஆவலுடன் கேட்டேன். அவர் "அதுவா, அது கல்யாண சட்டத்தில், நாலாவது ஷரத்தில் மூன்றுவது விதியில் அப்படித்தான் இயற்கையாய் வரவேண்டுமென்று எழுதியிருக்கு. ஏனென்றால் பழைய காலத்தில் பெண் பார்க்க வரபொழுது, பிள்ளை அப்பொழுதுதான் முக க்ஷவரம் செய்துகொண்டு இளம் முகம் மாதிரி காண்பித்து விடுகிறான். பெண்ணும் நன்றாக இரண்டு தடவை முகத்தை சோப்புப் போட்டுக் கழுவி சுணை தடவி, பௌடரடித்து, லிப்ஸ்டிக் சாயம் உதட்டுக்குப்பூசி, சினிமா நக்ஷத்திரம் மாதிரி அலங்கரித்து, பட்டுப்புடவையுடுத்தி பகட்டாய் நடந்து மயக்கிவிடுகிறாள். இந்த மாதிரி செயற்கை ஏமாற்றம் கூடாதென்று... என்று அவர் பதில் முடிப்பதற்குள் ஒரு பெரிய மணி அடித்தது.

உடனே ஒலி பெருக்கியில் சில பேர்களை வாசித்துவிட்டு "இவர்கள் விஷயம் அடுத்த மீட்டிங்குக்கு ஒத்திப்போடப்பட்டது. இன்னும் சில பெயர்களை இரண்டு தடவை வாசித்துவிட்டு 'மூன்று தடவைகளிலும் இவர்களுக்குப் பிடித்தமான கணவர்களோ, மனைவிகளோ கிடைக்காதபடியால், இனி இவர்கள் கேரளம், கன்னடம் அங்கும் முடியாவிட்டால் ஆல் இந்தியா மாகாணங்களில் உள்ளவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு

## பாரதி வாக்கு

எனக்கு நாலைந்து பாஷைகளிலே பழக்கமுண்டு. இவற்றிலே தமிழைப்போல வலிமையும் திறமையும் உள்ளத் தொடர்புமுடையதுவும் வேறு ஒன்றுமேயில்லை.

இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி, வெளியுலகத்திலே பரவாமலிருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவொளி சற்றே மங்கியிருந்ததையும் நான் அறிவேன். ஆனால் போன நிமிஷம் போய்த் தொலைந்தது. இந்த நிமிஷம் சத்யமில்லை. நாளை வரப்போவது சத்யம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலக முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றி அழையுங்கள்.

[3-4-1916 சுதேசமித்திரனில் எழுதிய கட்டுரையில் ஒரு பகுதி.]

அனுமதி தரப்பட்டது என்று அறிவிக்கப்பட்டது.

உடனே வெகு இனிமையான சங்கீத வாத்தியங்கள் முழங்கின. கைத்தறிச் சேலையும் வேஷ்டியும் கட்டின தம்பதிகள் மாலை மாற்றுகிறார்கள். மோதிரம் மாற்றிக்கொள்கிறார்கள். ஒரு சேவகன் ஒரு விசையை அமுக்குகிறான். மலர்மாரி பெய்கிறது. "தமிழ் நாட்டுத் தம்பதிகள் நீடூழி வாழ்க" என்று ஒலி பரப்பப்படுகிறது. சந்தனம் தாம்பூலம் முதலியவைகள் நூதன முறையில் பொறிகள் மூலம் வழங்குகிறார்கள்.

இன்னும் கேளுடா பஞ்சு, சிறிசுகள் சற்று பேசிண்டிருக்கட்டுமென்று அவர்களைப் பிரிந்து சமையலறைப் பக்கம் நுழைந்தேன். சமையலறையில் கோட்டை அடுப்பு இல்லை, வியர்வையில்லை, ஆராய்ச்சி நிலையம் மாதிரி காணப்பட்டது. எல்லாம் அணு உலையாம். சாமான்களெல்லாம் மூட்டைகளிலும் கூடைகளிலுமில்லை. டப்பாக்களிலும் சிறு பாட்டில்களிலுமிருக்கு. "குழம்பில் பிடிச்சப் பிடி உப்பைப் போடு" மிந்திரிப் பருப்பு தீயரது. அடுப்பைத் தணி", "ஏலக்காய் பொடி பண்ணியாச்சா" முதலிய கல்யாண சமையலறை சம்பிரதாய சம்பாஷணைகள் இல்லை. சமையற் காரர்கள் வெகு சுத்தமான வெள்ளை மேலங்கி போட்டிருக்கிறார்கள். 'என்னடா இது மாதிரி' என்று கேட்டால் எல்லாம் அணுவை உபயோகப் படுத்தி சமையலாம். "டேய் பிச்சு, டப்பா 27-யும் பாட்டில் 42-யும் செயின்ரிஆக்ஷனில் விடு என்கிறான் ஒருவன். உடனே இரண்டே நிமிஷத்தில் தித்திப்பான அரை மணு சர்க்கரை வருகிறது 92-யும், 37-யும் மாடரேடரில் தள்ளி கார்பன் 14-ஐ நீக்கு" என்று சொன்னவுடன் கடுகு போன்ற 92-ம் ஜவ்வரிசி போன்ற 37-ம் மோதிக் கொண்டு ஒரு அண்டா சாதமாக வருகிறது. இதைப்பார்த்தவுடன் என் மூளை கலங்கும் போலிருந்ததால் பேசாமல் "பந்திக்கு முந்திக்கோ" என்று சாப்பிட வந்து உட்கார்ந்தேன்.

எல்லோருக்கும் 'டேபிள்' சாப்பாடு. கண்ணாடி தட்டுகள். இலையென்ற விவகாரமே இல்லை. அணுவினால் தயாரித்த சாப்பாடும் நம்ப சாப்பாடு மாதிரித்

Ours for quality

**RAMANUJAM'S**

**Boarding & Lodging House,**

12/4 W. E. A., Karolbagh,

NEW DELHI - 5.

த்தான்டா இருக்கு. டேய், பஞ்சு பரிமாறுவதெல்லாம் யாருன்னு நினைச்சே? எல்லாம் அத்தனையும் புதுத் தம்பதிகள்தான். என் பேத்தி என்னைக் கண்டு சிரித்த படியே தாத்தாவிற்கு பிடிக்கும் வாழைக்காய் கறியையும் பொரிச்ச கூட்டையும், டொமாடோ ரசத்தையும் கொஞ்சம் அதிகமாகவே பரி மாறினாள்.

சாப்பிட்டுவிட்டு நலங்கு உண் டோன்னு பழைய காலத்து ஞாபகமாய் காத்திருந்தேன். அதுதானில்லை. எல்லாம் டென் னிஸ், பேட்மிண்டன் முதலிய விளையாட்டு ஆடரதுகள். டென் னிஸ் ஆடிவிட்டு வந்த என் பேத்தியைக் கூப்பிட்டு "அடி குட்டி, உன் ஆம்படையானை இங்கே கூப்பிடடி. நான் பார்க் கட்டுமென்று" சொல்லவே பேத்தியும் பேத்தியாம்படையா னும் கையை கோத்துண்டு வந்து என்னை நமஸ்காரம் செய்தார் கள். ஏண்டாப்பா உன் பெய ரென்ன? உனக்கு எங்கே வேலை? என்ன சம்பளம்? என்று கேட் டேன். நான்தான் தாத்தா சங்கரன். ஐ. ஏ. எஸ். டிப்டி செகரடரி, அனிமல் ஹஸ் பண்டிரி டிபார்டுமெண்ட். சம்பளம் இப்பொழுது ரூபாய் இருநூறு. நம் 'வெல்ஃபேர் ஸ்டேட்' திட்டப்படி சம்பளம் ரூபாய் ஐந்நூறு வரைதான் போகும்" என்று பதில் சொன்னான். அவர்களை பார்த்துக்கொண்டு ஆசீர் வாதம் பண்ணிண்டிருக்கேன்... நீயென்னடான்னா அந்த நல்லசம யத்தில் வந்து கலைச்சுட்டே. எப் படி என் பேத்தியின் கல்யாணம் என்று முடித்துக் கொண்டே முற்றுப் புள்ளி வைப்பதுபோல் பஞ்சுவின் முதுகில் ஒரு 'சொட் டுக்' கொடுத்து பிறகு அபிமான மாக பஞ்சுவின் முதுகைத் தடவினார்.

இதுவரை வாய்திறக்காமல், மௌனமாகவும் ஆச்சர்யத்துட னும் கேட்டுக்கொண்டிருந்த பஞ்சு, "டேய் ஆச்சாமி, என்னடா ஒரே திகைப்பா யிருக்கு! ஒரு சாதாரண குமாஸ் தாவுக்கு எப்படியடா ஒரு டெபுடி செகரடரி, அதுவும் ஐ. ஏ. ஸ் மாப்பிள்ளையாக வரு வான்? பொய்சொன்னாலும் பொருந்தச் சொல்லனுமடா. கன வென்றாலும் ஒரு லிமிட்"... என்று முடிப்பதற்குள்,

"ஏன் முடியாது? இன்னும் என் பேத்திக்குக் கல்யாணமாக குறைந்தது பதினைந்து வருஷங் களாவது ஆகும். அதற்குள் இன்னும் மூன்று ஐந்தாண்டு திட்டங்கள் நிறைவேறி நம்நாடு சுபிட்சநாடாக மாறிவிடும். எல்லா வித்தியாசங்களும் மறைந்துபோய், நம் நாடு மக்க ளின் உழைப்பால் உயர்ந்து விடும். எல்லோரும் உத்யோகத் திலிருப்பார்கள். ஏனென்றால் எல்லோரும் படித்திருப்பார்கள்" என்று ஆச்சாமி சொல்லவே, 'ஆமாண்டா, ஆச்சாமி, வாஸ்த வம்' என்று ஆமோதித்து பஞ்சு தலையை இரண்டு மூன்று தடவை ஆட்டினார். இவ்வளவு பிரசங்கத்தையும் குடித்தனக் காரரின் சம்பந்தி (மாப்பிள்ளை யின் தகப்பனார்) ஜன்னலின் பின் புறத்திலிருந்து ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்து விட்டு

"என்னையா, நானும் ஒரு நாழி கையாகக் கேட்டிண்டிருக்கேன். சகிக்கலே, என்ன சொசைடி, சோஷலிஸம், சோப்பளாங்கி மோதிரம் மாத்திக் கல்யாணம், தேனிலவு, கண்ணராவி, காது கொடுத்துக் கேட்கப்படலே, காலம் மாறிப்போச்சு, கஷ்ட காலம் கலிகாலம் வந்துடுத்து" என்று பிதற்றிக்கொண்டே நல்லநாள் என்பதையும் உணர்ச்சி வேகத்தில் மறந்து தலையில் அடித்துக்கொண்டு, தோளில் தொங்கியிருந்த துண்டை இரண்டு வீச்சு வீசி அடித்து விடுபவர்போல் பாவனைசெய்து பிறகு தனது கட்கத்தில் சொருகியபடியே வெளியில் வந்தார்.

குழந்தையை தோளில் சாத்திக் கொண்டு உள்ளே இருந்து வந்த நாராயணன் "ஏது மூணு கிழங்களுமா நாளும் கிழமையுமா காலங்காத்தாலே சண்டை போடறதுகள். ஏதாவது விஷயத்தை மாற்ற வேண்டுமென நினைத்து பேசத்தொடங்கினான். இதற்குள் அவன் சகதர்மிணி சாவித்திரி சூடாக ஸ்ட்ராங்காக நான்கு டம்ளர் காபியைக் கொண்டு வைத்தாள். கிழங்களுக்கு காபி சற்று சூடாகவே வேண்டியிருந்தது போலும்! அவர்கள் காபியை ஆற்றாமலே அருந்த ஆரம்பித்தார்கள்.

வெளியில் சென்றிருந்த தாத்தாவின் பேத்தி தன் தம்பி அப்பாவின் தோளில் ஏறிக் கொண்டதைப் பார்த்துவிட்டு தாத்தாவின் தோளில் ஏறி சவாரி செய்ய ஆரம்பித்தது. தாத்தா பேத்தியை அணைத்துக் கொண்டே, "நான் உன் கல்யாணம் வரை இருப்பேனோ" என்று குழந்தையுடன் கொஞ்சினார். குழந்தைக்கு ஒன்றும் அர்த்தம் புரியவில்லை. அப்பொழுது ஆகாயத்தில் பறந்துகொண்டிருக்கும் ஏரோப்ளேனைச் சுட்டிக்காட்டி, நீ போய்ட்டாக்கூட தாத்தா ஏரோப்ளேனில் வந்துவிடு" என்று தாத்தாவின் முதுகில் டமாரம்அடித்தது. உள்ளே சென்ற நாராயணனும் குடித்தனக்காரர் வீட்டு ரேடியோ வைத் திருப்பச் சொன்னான். அதிலிருந்து வெளிவந்த

"கவலை கொள்ளாதே மனிதா
காலம் மாறிடும் இனிதா"

என்று நம்பிக்கையூட்டும் சங்கீதம் அவனுக்குத் தெம்பையளித்தது.

○

### பாரதி வாக்கு

அடிக்கடி 'காந்திகி ஜேய்' என்று ஆரவாரம் செய்யும் நம்மவர்கள் மகாத்மா சொல்லியிருக்கும் வார்த்தைகளைக் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன். நம்முடைய சமூக வாழ்வில் அநீதிகள் இருக்கும் வரையில் நமக்கு சுயராஜ்யம் சித்தியாகாது என்ற கொள்கையை நான் அங்கீகரிக்கவில்லை. நம்மவர்க்குள் பரஸ்பர அநீதியுள்ள வரையில் தேசத்தில் சமாதானம் இராது. நாம் பலவகைகளிலே துன்பப்பட நேரும்.

14. பிப்ரவரி 1921




"ஒரு ஸைக்கிள் வாங்க பணம் சேமிக்க, போன தீபாவளிக்கு பட்டு புடவை வாங்க வேண்டாமென்று அப்பாவிடம் சொன்னேன். ஆகவே மிகச் சிறந்த **ஹெர்குலிஸ்** ஸைக்கிள் வாங்கியது நியாயம்தானே!"

ஆம்; ஹெர்குலிஸ் ஸைக்கிளுக்காக எந்த விதமான தியாகமும் செய்யலாம். ஏனெனில் ஹெர்குலிஸ் வெறும் ஸைக்கிள் மட்டுமல்ல-வாழ்நாள் முழுவதும் உழைக்கும் ஓர் நற்றுணை. உயர்தர அமைப்பும், பிரயாசையின்றி சுலபமாக ஓடும் தன்மையும் கொண்ட ஹெர்குலிஸ், ஸைக்கிள்களில் மிகச் சிறந்தது என்பதில் சந்தேகமில்லை!

தயாரிப்போர்: டி. ஐ. ஸைக்கிள்ஸ்
ஆப் இந்தியா, மதருஸ்

உங்கள் ஸைக்கிள் ஒரு சிறந்த முதலீடு

# ஹெர்குலிஸ்

உங்கள் பணத்திற்கு சிறந்த பெருமானம்

# தமிழ் நாட்டின் செப்பேடுகள்

ஐ. மகாதேவன்

தமிழ் நாட்டின் பண்டைய சரித்திரத்தைப் பற்றியும் அக்கால மக்களின் நிலையைப்பற்றியும் அறிய ஆதாரமாக இருப்பவைகளுள் செப்பேடுகளே மிகவும் முக்கியமானவை.

இன்று நமக்குக் கிடைத்திருக்கும் தமிழ் செப்பேடுகளில் மிகவும் புராதனமானவை பல்லவர்களின் காலத்தவை;- அதாவது கி. பி. 7-ம் நூற்றுண்டின் இறுதிக் காலத்தைச் சார்ந்தவையாகும். பாண்டியர்களின் செப்பேடுகள் எட்டாம் நூற்றுண்டு முதலும் சேர, சோழ மன்னர்களின் செப்பேடுகள் 10-ம் நூற்றுண்டு முதலும் கிடைத்திருக்கின்றன. சங்ககாலத் தமிழ் மன்னர்களின் செப்பேடுகள் இன்று நமக்கு கிடைக்காமற் போயினும், அக்காலத்திலேயே அரசர்கள் செப்பேடுகள் வழங்கியிருக்கக் கூடுமென்று எட்டாம் நூற்றுண்டில் (கி. பி. 770) பாண்டியன் நெடுஞ்சடையினுல் வழங்கப்பட்ட வேள்விகுடி சாஸனத்தில் இருக்கும் ஒரு ரசமான செய்தியிலிருந்து ஊகிக்கலாம். சங்ககாலப் பாண்டிய மன்னனுகிய **பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி,** வேள்விகுடி என்னும் கிராமத்தை **கொற்கைக்கிழான்** நற்கொற்றன் என்பவனுக்குத் தானமாக அளித்ததாகவும், பிற்காலத்தில் களப்பிரர் கலகத்தால், தானம் அழிந்து போனதாகவும், மறுபடியும் தான சாஸனம் வழங்க வேண்டுமென்றும், கொற்கைக் கிழானின் வழிவந்தோனெருவன் பாண்டியன் நெடுஞ்சடையனிடம் முறையிடுகிறுன். மேற்கொண்டு என்ன நடந்தது என்பதை வேள்விகுடி செப்பேடுகளே கூறட்டும்:—

"......என்று நின்றவன் விக்ஞாயாப்யஞ் செய்ய
நன்று நன்றென்று முறுவலித்து
'நாட்டால்தன் பழமையாதல் காட்டி நீகொள்க'வென்ன
நாட்டால்தன் பழமையாதல் காட்டினுன் அங்கே
யப்பொழுதேய்..."

இதில் "ஆங்கே யப்-பொழுதேய்" என்ற சொற்களால், தானத்தை நிரூபித்தது பழைய செப்பேடுகளின் ஆதாரத்தைக் கொண்டு என்று கொள்ளலாம்.

தமிழ் நாட்டின் கற்கோயில்களில் ஆயிரக்கணக்கான கல்வெட்டுக்கள் இருந்தும் சரித்திரக் குறிப்புக்கள் அதிலும் முக்கியமாக வம்சாவளியைப் பற்றிய செய்திகள், அவைகளில் அதிகமாகக் கிடைக்கவில்லை. உதாரணமாக, பல்லவர்களுடைய கல்வெட்டுக்களில் பெரும்பாலானவை அரசர்களுடைய விருதுகளை மட்டும் தருகின்றன. சோழர்கள் தத்தம் மெய்க் கீர்த்திகளையே கல்வெட்டுக்களில் பொறித்தனர். தமிழ்நாட்டை யாண்ட சிம்மவிஷ்ணு குலப் பல்லவர்களுடைய வம்சாவளி கூரம், காசாக்குடி, வேலூர்ப்பாளையம், பாகூர் ஆகிய இடங் களிற் கிடைத்த செப்பேடுகளின் மூலமாகத்தான் முதன் முதலில் தெரியவந்தது. அம்மாதிரியே தஞ்சைச் சோழர்களின் வம்சாவளியை அன்பில், திருவாலங்காடு, ஆனைமங்கலம் ஆகிய இடங்களிற் கிடைத்த செப்பேடுகளும், பிற்காலப் பாண்டிய வம்சாவளியை வேள்விகுடி, சின்னமனூர்ச் செப்பேடுகளுமே நமக்கு அறிவிக்கின்றன.

மற்றும் கல்வெட்டுக்களிற் காணப்படாத சில அபூர்வ சரித்திரத் தகவல்களை செப்பேடுகளின் மூலமாகத்தான் நாம் அறிய முடிகிறது. இதற்குச்சில உதாரணங்களைத் தரலாம். "பச்சைப் பசேலென்றிருக்கும் நெல் வயல்களையும், பாக்குத் தோப்புக்களையும் அணிகலன்களாகக் கொண்ட காவிரி பாயும் சோழ நாட்டை சிம்மவிஷ்ணு பல்லவர் பிடித்துக் கொண்டார்." என்று பொருள்படும் ஒரு அழகிய சமஸ்கிருத சுலோகத்தின் மூலம், வேலூர்பாளையம் செப்பேடுகள் பல்லவ ஆட்சி சோழ நாட்டிற்கு எப்போது பரவியது என்று தெரிவிக்கின்றன. **இரண்டாம் பரமேசுவர வர்ம பல்லவன்** சந்ததியின்றி இறந்தபிறகு, பல்லவகுலத்தைச் சேர்ந்த **நந்தி வர்மனை** மக்களே அரசனாகத் தேர்ந்தெடுத்தனர் என்ற ருசிகரமான தகவலைக் காசாக்குடிச் செப்பேடுகள் கூறுகின்றன. இந்த நிகழ்ச் சியைச் சித்திரிக்கும் சிற்பங்களை இன்றும் காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோயிலில் காணலாம்.

பாண்டியர் தமிழ்ச் சங்கம் நிறுவியதையும் மகாபாரதத் தைத் தமிழில் மொழி பெயர்த்ததையும்

**"மஹாபாரதம் தமிழ்ப் படுத்தியும்**
**மதுராபுரிச் சங்கம் வைத்தும்"**

என்று சின்னமனூர்ச் செப்பேடுகள் கூறுகின்றன. வேள்விகுடிச்

சேப்பேடுகள் களப்பிரர் என்பார் தமிழ் நாட்டு மூவேந்தரையும் வென்று வெகுகாலம் குழப்பம் விளைவித்ததையும், அதற்குப் பிறகு கடுங்கோன் என்ற பாண்டியன் அவர்களை வென்று

" அளவறிய ஆதிராசரை அகல நீக்கி
அகலிடத்தைக் களபரன் என்னும் கலியரைசன்
கைக் கொண்டதனை யிறக்கியபின்
படுகடல் முளைத்த பருதிபோலப் பாண்டியாதி
ராஜன் வெளிப்பட்டு
விடுகதிர் அவிர்ஒளி விலக வீற்றிருந்து..."

அமைதியை நிலை நாட்டியதையும் என்று வர்ணிக்கின்றன.

**விஜயாலய சோழன்** தஞ்சையைக் கவர்ந்து துர்க்கைக்குக் கோயிலெடுத்தது, **ஆதித்த சோழன்** மேற்கு மலைத் தொடரிலிருந்து கிழக்கடல் வரை காவிரியின் இருமருங்கிலும் சிவன் கோயில்களெழுப்பியது, **ராஜாதித்தன்** தக்கோலப் பெரும் போரில் ஆனைமேல் வீரமரணமெய்தினது போன்ற சரித்திர முக்கியத்துவம் பெற்ற பல நிகழ்ச்சிகளையும் சோழர்களின் செப்பேடுகள் நமக்கு அறிவிக்கின்றன. இவையெல்லாவற்றையும் விட முக்கியமானதும் ரசமானதுமான நிகழ்ச்சி **ராஜராஜனென்று** பிற்காலத்தில் புகழெய்திய **அருள்மொழி வர்மன் மதுராந்தக உத்தமச்சோழனுக்காகத்** தன் பட்டத்தை விட்டுக் கொடுத்ததாகும். திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் காணப்படும் ஒரு சமஸ்கிருத சுலோகம் இந் நிகழ்ச்சியை வர்ணிக்கிறது:—

" க்ஷத்திரிய தர்மத்தின் பொருளை உணர்ந்த அருள்மொழிவர்மன் குடிமக்கள் வேண்டிக் கொண்ட போதிலும் சிற்றப்பனுக்கு அரசு புரியும் ஆசை இருக்கும் வரைதான் அரசுரிமையை மனதாலும் நினைக்கவில்லை "

என்பது அந்த சுலோகத்தின் பொருள்.

சரித்திரச் செய்திகளுக்கு அடுத்தபடியாக, தமிழ் நாட்டின் பொருளாதார நிலைமையைப்பற்றியும் செப்பேடுகளிலிருந்து பல குறிப்புக்கள் கிடைத்திருக்கின்றன. ஒரு கிராமத்தை அரசன் இறையிலியாகத் தானம் வழங்கும்போது நீக்கப்பட்ட வரிகளைப்பற்றிப் பல செப்பேடுகள் கூறுவதிலிருந்து அக்கால மக்கள் செலுத்திய வரிகளைப்பற்றி அறிய முடிகிறது. உதாரணமாக **நந்திவர்ம பல்லவனுடைய** தண்டந்தோட்டத்துச்

சாஸனத்தில் சுமார் ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டுக் கிராம மக்கள் செலுத்திய வரிகளைப் பற்றிய இந்தப் பட்டியல் காணப்படுகிறது:—

"செக்கும் தறியு முல்லியக் கூலியும்
கண்ணாலக் காணமு மூரெட்டும் குசக்காணமும்
தட்டுக் காயமும் ஈழம் பூட்சியுமிடைப் பூட்சியுங்
கூலமும் தரகுபாட்டமுந் திருமுகக் காணமு
முப்புக் கொச்செய்கையும் நல்லாவும் நல்லெருதும்
வட்டி நாழியுங் கடைக்காயும் புத நாழியு முள்ளிட்டு..."

இதிலிருந்து பற்பல தொழில் செய்வோர் மீதும் செய்பொருள்கள் மீதும் திருமணம் போன்ற சடங்குகள் மீதுங்கூட வரிகள் விதிக்கப்பட்டிருந்தன வென்பது தெளிவாகிறது.

ஒவ்வொரு செப்பேட்டிலும் தானமாக வழங்கப்பட்ட நிலங்களின் எல்லைகளும் பரப்பும் மிகக் கவனமாகவும் விவரமாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றன. இதிலிருந்து பழந்தமிழ் நாட்டில் நில அளவை எவ்வளவு முன்னேறியிருந்தது என்பது தெரிய வருகிறது. ஒவ்வொரு கிராமத்திலிருக்கும் விளை நிலங்களிலிருந்து அரசனுக்குச் சேரவேண்டிய காணிக்கடன், அதாவது நிலவரி எவ்வளவு என்பது சரிவரக் கணக்கெடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டிருந்தது. உதாரணமாக ஆனைமங்கலம் என்ற கிராமத்தின் மொத்த நில விஸ்தீர்ணம் எவ்வளவு, அதன் மீதிருந்த நிலத்தீர்வை எவ்வளவு என்பதை **ராஜேந்திரச் சோழனின்** ஆனைமங்கலச் செப்பேடுகள் கணக்கிட்டுக் கூறும் விதத்தைப் பாருங்கள்:—

"நிலந் தொண்ணூற்றேழே யிரண்டு மா
முக்காணி யரைக்காணி முந்திரிகைக் கீழ்
மூன்று மா முக்காணி முந்திரிகைக் கீழ்
அரையே யிரண்டு மாவினுல்
இறை கட்டின காணிக்கடன் நெல்லு
எண்ணாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பது
முக்கலனே இருதூணி குருணி ஒரு நாழியும்"

என்றிருக்கிறது.

பல்லவர் காலம் முதல் நாட்டில் சமண பௌத்த மதங்களின் ஆதிக்கம் குறைந்து சைவ வைஷ்ணவ மதங்கள் தழைத்தோங்க ஆரம்பித்தன. அக்காலத்திலேயே தமிழ் நாட்டில் வேதங்களைக் கற்றோர் எவ்வளவு மிகுந்திருந்தனர் என்பதற்குத்

*50 Years of service to the Nation*



This year we celebrate five decades of service in the cause of making you more beautiful; more attractive. In the 50 year span, this service has gone far beyond the successful marketing of "Afghan Snow" Beauty Aids...it brings to you the joy of better living. We believe that for us life begins at 50 and our period of greatest service to you is still before us.



GOLDEN JUBILEE 1909-1959

Afghan Snow • Afghan Nail Polish 'Kiss of Fire' Lipstick • Afghan Cold Cream • Afghan Face Powder • Afghan Talcum Powder • Afghan Lavendar Water • Atiya Hair Oil • Kamal Soap.

## AFGHAN SNOW

### BEAUTY AIDS

தண்டந் தோட்டத்துச் செப்பேடுகள் சிறந்த சான்ருகும். இரு நூறுக்கும் அதிகமான வேதியர்களின் பெயர்களைக் குறிப்பிடும் இச்செப்பேடுகள் அவர்களில் நூறு பேர் சதுர்வேதிகளென்றும், மற்றும் பலர் திரிவேதிகளும் சோமயாஜிகளுமாவர் என்றும் குறிப்பிடுகின்றன. பாண்டிச்சேரியையடுத்து இருக்கும் சிறு கிராமமாகிய பாகூரில் பல்லவர் காலத்தில் ஒரு பெரிய கல்லூரி இருந்ததென்றும் அதில் பதினான்கு விதமான கல்விகள் கற்பிக்கப்பட்டு வந்தனவென்றும் பாகூர்ச் செப்பேடுகள் மூலமாக அறிகிறோம். 9-ஆம் நூற்ருண்டில் ஆண்ட **நிருபதுங்கவர்ம பல்லவன், "வரகூர் வித்தியா ஸ்தானத்தார்க்கு வித்தியா போகமாகப் பணிந்தோம்"** என்று மூன்று கிராமங்களை தானமாக இச் செப்பேடுகள் மூலம் அளித்திருக்கிறான்.

சைவ வைஷ்ணவ மதங்களில் பற்றுக் கொண்டு அவைகளைத் தமிழ் மன்னர் வளர்த்து வந்தபோதிலும் பிறமதங்களையும் போற்றினர் என்பதற்குச் சான்ருக இரு செப்பேடுகள் கிடைத்திருக்கின்றன. 11-ஆம் நூற்ருண்டின் ஆரம்பத்தில் **இராஜ ராஜ சோழனின்** அனுமதி பெற்று சோழ நாட்டில் நாகப்பட்டினத்தில் இராஜ ராஜப் பெரும் பள்ளி என்ற பெயரால் ஒரு பௌத்த விஹாரத்தைக் கடாரத்து அரசனுகிய **சூளாமணிவர்மனும்** அவன் மகன் **மாற விஜயோத்துங்கவர்மனும்** கட்டினுர்கள். கடாரம் என்று அன்று வழங்கிய நாடு மலாய் தீபகற்பத்திலிருந்தது. **ராஜேந்திர சோழன்** இந்த பௌத்த விஹாரத்திற்கு ஆனைமங்கலம் என்ற கிராமத்தைத் தானமாக வழங்கிச் செப்பேடுகள் அளித்தான். 18-ம் நூற்ருண்டில் நாகப்பட்டினத்திலிருந்து இந்தச் செப்பேடுகள் டச்சுக்காரர்களால் ஹாலந்து தேசத்திற்கு கொண்டுபோகப்பட்டு இன்று அந்த நாட்டில் லெய்டன் (Leyden) நகரப் பொருட்காட்சிசாலையில் வைக்கப்பட்டிருக்கின்றன.

நம் நாட்டில் தோன்றிய மதங்களை மட்டுமின்றி கடல் கடந்து வந்த மதங்களையும் தமிழ் மன்னர் மதித்து நடந்தனர் என்பது சேர நாட்டில் கிடைத்த ஒரு செப்பேடால் தெரிகிறது. சுமார் 10-ஆம் நூற்ருண்டில் அரசாண்ட **ஸ்தாணுரவி** என்ற சேர மன்னன் யூதர்களின் மதகுருவாகிய ஜோஸப் ரப்பிக்கு அளித்த சாஸனத்தில், அந்த மதகுருவிற்கு ஏனைய மதத்தவர்களைப்போலக் குடை வாகனம், வாத்தியம், விளக்கு முதலான 72 வகை உபசாரங்களையும் உரிமைகளையும் வழங்கியிருக்கிருன். தமிழ் மலையாளமாக மாறிவந்த காலத்து எழுதப்பட்ட இந்தச்

சாஸனத்தின் சில பகுதிகளைக் கேளுங்கள் :—

"ஸ்வஸ்தி ஸ்ரீ கோகோன்மை கொண்டான் கோ ஸ்ரீ பாற்கரன் இரவிவன்மர் பல நூறுயிரத்தாண்டும் செங்கோல் நடத்தியாளா நின்றயாண்டு...பிரஸாதிச்சருளிய பிரஸாதமாவது ஈஸ்ஸப்பு இறப்பானுக்கு அஞ்சு வண்ணமும் பெடியாளும் வாய நத்தாலும் பா(ல்) குடமும் அஞ்சு வண்ணப் பெரும்பகல் விளக்கும் பாவாடையும் அந்தோளகமும் குடையும் வடுகப் பறையு மஹாகாளமும் இடுபடியும் தோரணமும் தோரண விதானமும் சரவும் மிக்கும் எழுபத்திரண்டு வீடுபெறும் கூட கொடுத்தோம்."

பாரத நாட்டின் உயரிய பண்பாட்டிற்கும் பழந்தமிழரின் உதார குணத்திற்கும் என்றும் சான்றுகளாக விளங்கும் இவ்விரு சாஸனங்களையும் செப்பேடுகளில் மட்டுமென்ன, பொன்னேடுகளில் கூடப் பொறிக்கலாம் என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா!

இனி அரசர்களால் சாஸனங்கள் வழங்கப்பட்ட விதத்தையும் செப்பேடுகள் எழுதப்பட்ட விதத்தையும் நோக்குவோம். சாஸனம் அளிக்கப்பட்ட நாள், அப்போது அந்த அரசன் இருந்த இடம் முதலிய எல்லா விவரங்களும் சாஸனங்களில் மிகக் கவனமாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக **இராஜ ராஜ சோழன்** தஞ்சை நகர்ப் புறமிருந்த ராஜராஜாசிரயம் என்ற மாளிகையில் தெற்கு மண்டபத்திலிருந்து சூளாமணி விஹாரத்துக்கு நிவந்த மளித்ததாக ஆனைமங்கலம் செப்பேடுகள் அறிவிக்கின்றன.

சளுக்கிய மன்னன் **விக்கிரமாதித்தியன்** தமிழ் நாட்டின் மீது படையெடுத்து வந்து, காவிரியின் தென்கரையில் உறையூரில் தங்கியிருந்தபோது ஒரு சாஸனம் வழங்கினன். அது கி. பி. 674-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ம் தேதி செவ்வாய்க்கிழமையன்று கொடுக்கப்பட்டதென்று கணித சாஸ்திர வல்லுநர் கணக்கிட்டிருக்கிறார்கள்.

அரசன் சொல்வதை அப்படியே ஓர் அதிகாரி ஓலையில் எழுதிக்கொள்வார். இந்த அதிகாரிக்குச் சோழர்களின் செப்பேடுகளில் திருமந்திர ஓலை யென்றும், ஓலை நாயகன் என்றும் பெயர்கள் காணப்படுகின்றன.

அரசரின் ஆணை தானமாக வழங்கப்பட்ட கிராமத்தை அடைந்ததும் கிராமச் சபையோரும், கிராமக் கணக்கனும் மற்ற அதிகாரிகளும் தானமாக வழங்கப்பட்ட நிலங்களின் எல்லைகளை அளந்து அடையாளக் கற்கள் நாட்டி கள்ளியால் வேலிபோடு

வார்கள். அரசனின் ஆணைக்கு மரியாதை செய்யும் வகையில் எல்லைகளைச் சுற்றி யானையை வலம் விடுவார்கள். இந்த விவரங்களைத் தரும் ஆனைமங்கலச் செப்பேடுகளின் ஒரு பகுதி வருமாறு:

"நாட்டோ முக்கு திருமுகம் வர
நாட்டோமும் திருமுகம் கண்டு
எதிரெழுந்து சென்று தொழுது வாங்கித்
தலைமேல் வைத்து பிடி சூழ்ந்து
பிடாகை நடந்து எல்லை தெறித்து
கல்லும் கள்ளியும் நாட்டி
அறவோலை செய்த நிலத்துக்கு...?

தான சாஸனம் நிலைத்து நிற்பதற்காக அதைச் "செம்பிலும் கல்லிலும் வெட்டி" அளித்தார்கள். செப்பேடுகள் பெரும்பாலும் உருவில் பனையோலை ஏடுகளை ஒத்திருக்கின்றன. **ராஜேந்திர சோழனின்** திருவாலங்காட்டுச் சாஸனம் மிகவும் பெரியது; முப்பத்தொரு செப்புத்தகடுகளில் எழுதப்பட்டுள்ள எட்டு மணுவிற்கும் அதிகமான நிறையுடையது. ஒரு சாஸனத்தின் எல்லாச் செப்பேடுகளும் ஒரே வளையத்தில் கோக்கப்பட்டு அந்த வளையத்தில் வட்டவடிவமாக ராஜமுத்திரையிடப்படுவது



இலச்சினை

வழக்கம். பல்லவர்களின் செப்பேடுகளில் நந்தி இலச்சினை காணப்படுகிறது. சோழச் சக்கரவர்த்திகளின் இலச்சினையில் நடுவில் ஒரு புலி கம்பீரமாக உட்கார்ந்திருக்க அதன் ஒருபுறம் இருமீன்களும் கீழே வில்லும் காட்சியளிக்கின்றன. இந்த

இலச்சினை சோழர்கள் பாண்டியர்களையும் சேரர்களையும் வென்று "மும்முடிச் சோழர்களாக" அரசாண்டதைக் காட்டுகிறது.

அநேகமாக எல்லாச் செப்பேடுகளிலும் முன்பகுதி சம்ஸ்கிருதத்திலும் பின்பகுதி தமிழிலும் எழுதப்பட்டிருக்கின்றன. சம்ஸ்கிருதப் பகுதி கிரந்த எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்கிறது. இது தமிழ் நாட்டில் அக்காலத்தில் நாகரி எழுத்துக்கள் அவ்வளவாக வழக்கில் இல்லை யென்பதைக் காட்டுகிறது. தமிழ்ப் பகுதி பல்லவ, சோழசாஸனங்களில் தமிழ் எழுத்துக்களிலும், சேர, பாண்டிய சாஸனங்களில் பழங்காலத் தமிழ் எழுத்தாகிய வட்டெழுத்துக்களிலும் எழுதப்பட்டிருக்கிறது.

சாஸனங்களின் ஆரம்பத்தில் கடவுள் துதி இருக்கும். சிவபெருமான் அல்லது மகாவிஷ்ணுவைப் போற்றும் இந்த ஸ்லோகங்கள் சாஸனம் வழங்கிய அரசர் எம்மதப் பற்றுடையவர் என்பதைக் காட்டுகின்றன.

இதற்கடுத்த பகுதி அரச குலத்தின் புராணத் தோற்றுவாயை விவரிக்கும். இது அக்காலத்தில் வழங்கிவந்த ஒரு மரபு. உதாரணமாக, பல்லவர்கள் பிரம்மா, அங்கிரஸ், பிருகஸ்பதி முதலியோரிடமிருந்தும், சோழர்கள், சூரியன், மனு, சிபி முதலியோரிடமிருந்தும் தோன்றியதாக அவர்களுடைய செப்பேடுகள் கூறுகின்றன. இதற்கடுத்தபடியாக அந்த அரச குலத்தினருடைய சரித்திரபூர்வமான வம்சாவளியும் அந்தக் குலத்தைச் சேர்ந்த அரசர்களின் வீரச் செயல்களும் விவரிக்கப்படும். **கரிகாலச் சோழன்** காவிரிக்குக் கரையெழுப்பியது சோழர்களுடைய செப்பேடுகளில் பெருமையாகக் கூறப்படுகிறது.

சோழர்களுடைய சில செப்பேடுகளில் அவர்களது கல்வெட்டுக்களில் காணப்படும் மெய்க்கீர்த்திகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனைமங்கலம் செப்பேடுகளில் காணப்படும் குலோத்துங்கச் சோழனுடைய மெய்க்கீர்த்தியைக் கேளுங்கள் :

**"புகழ்மாது விளங்கச் செயமாது விரும்ப**
**நிலமகள் நிலவ மலர்மகள் புணர**
**உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி**
**வில்லவர் குலேதர மீனவர் நிலைகெட**

விக்கலன் சிங்கணன் மேல்கடல் பாயத்
திக்கனைத்தும் தன் சக்கர நடாத்தி
விஜயாபிஷேகம் பண்ணி வீரஸிம்ஹாஸனத்து
புவன முழுதுடையா ளோடும் வீற்றிருந்தருளிய
கோவிராஜகேசரி பன்மரான சக்கரவர்த்திகள்
ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு 20–வது"
— (கி. பி. 1090)

அடுத்துவரும் பகுதிகளில் எதற்காக தானம் கொடுக்கப்படுகிறது என்பதும், தானம் வாங்குவோரின் குலங் கோத்திரம் முதலியவைகளும் தானமாகக் கொடுக்கப்படும் நிலங்களின் எல்லைகள், வரி நீக்கம் முதலிய விவரங்களும் சொல்லப்படுகின்றன. சாஸனத்தின் வாசகங்களை இயற்றியவர், செப்பேட்டை எழுதியவர் – இவர்களது பெயர்களும் தரப் பட்டிருக்கின்றன. சில செப்பேடுகளின் முடிவில் வருங்காலத் தவர்கள் தானத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று பிரார்த்தித் தும், தானத்தை அழிப்போர் மீது சாபமிட்டும் சில சுலோகங் கள் காணப்படுகின்றன. விஜயநகரச் செப்பேடுகளில் அரசரின் கையெழுத்து கடைசியாகக் காணப்படுகிறது.

தமிழ்நாட்டுச் செப்பேடுகளின் புகைப்படங்களையும், நகல்களையும் தென்னிந்திய சாஸனங்கள் (South Indian Inscriptions) என்ற தொகுதிகளிலும் Epigraphica Indica என்ற வெளியீடுகளிலும் காணலாம். ஆயினும், பல நூல் களில் சிதறிக் கிடப்பதாலும் இப்புத்தகங்கள் எளிதிற் கிடைக் காதாதாலும் பலரும் செப்பேடுகளில் காணும் அரிய செய்தி களைப் படித்து இன்புற முடியாமல் இருக்கிறது. ஆகையால் இந்தச் சாஸனங்களைத் திரட்டி ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் தமிழில் விரைவில் வெளியிட வேண்டியது அவசியமாகும். ○


## நமது சகாப்தத்தில் ஓர் பெரிய திருப்பணி

தமிழ் நாட்டின் பழம் பெருங் கோயிலான மதுரை ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர் ஆலயம் புதுப்பிக்கப் பெற்று வருகிறது. செலவு மதிப்பு 20 லட்சம் ரூபாய். தேவஸ்தானத்திலிருந்து 3 லட்சம் ரூபாய் கிடைக்கும். மீதி 17 லட்சம் ரூபாய் அன்பர்களிட மிருந்து கிடைக்க வேண்டும். தேவியின் கைங்கர்யத் தில் உங்கள் பங்கும் சேர சிறப்பாக உதவுங்கள்.

"இந்தியன் பாங்கின்" எந்தக் கிளை அலுவலகத்திலும் ஸ்ரீமீனாட்சி கோயில் திருப்பணிக்கென்று "செக்" அல்லது பணம் கொடுத்தால் பெற்றுக் கொள்வார்கள்.


Supremely Yours
Brooke Bond
SUPREME
Darjeeling Tea

# 'சுடர்'

இராகம் : குறிஞ்சி　　　　　　　　தாளம் : ஆதி

பல்லவி

உளமெனும் கோயிலின் கதவைத் திறந்தே
உள்ளே சுடரை ஏற்றுவாய்... நாளும்
(உளம்)

அநுபல்லவி

கள்ளம் பொய்அகந் தையாகும் பலவும்
களைந்தே உண்மையை நாடி நீயே
(உளம்)

சரணம்

அளப்பரும் துன்ப வாழ்வினில் மீண்டும்
உளப்படுத் தும்ஆசை அறியா மையிவை
முளையா வகையில் முயல்வாய் முழுதும்
திளைப்பாய் தேனும் தெய்வநெறி யென்றும்
(உளம்)

—" காலன் "


MY KINGDOM FOR A PACKAGE OF...
Parle's Gluco
BISCUITS

# இலக்கியக் கனவு

கனகசவுந்தரி இளந்திரையன்

நம் முன்னோர்களின் சிந்தனை வளத்தையும் நாகரிகச் சிறப்பையும் அவர்களின் இலக்கியங்கள் நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன. நாடக வழக்கும் உலகியல் வழக்கும் கலந்து செய்யப்படுவதே இலக்கியம். ஆகையால் ஓர் இலக்கியம் அதில் குறிக்கப்படும் மக்களின் வாழ்க்கை முறைகளையும் நம்பிக்கைகளையும் உட்கொண்டு திகழ்கிறது. இதனாலேயே இலக்கியம், தான் தோன்றிய காலத்தின் விளக்கமாகவும் தொடர்ந்துவரும் மக்கள் பரம்பரைக்கு வழிகாட்டியாகவும் அமைகிறது.

நமது இலக்கியங்களால் அறியப்படும் தமிழர் பழக்க வழக்கங்கள் பல, அன்றையத் தமிழரின் நம்பிக்கைகள் பலவும் இலக்கியங்களில் அங்கங்கே இடம்பெற்றுள்ளன. அந்த நம்பிக்கைகளில் கனவும் ஒன்று.

நமக்குக் கிடைக்கும் பழைய தமிழ் நூல்களில் மிகவும் தொன்மை வாய்ந்தது தொல்காப்பியம். அதில் விரித்துக் கூறப்படும் மெய்ப்பாடுகளில் கனவும் ஒன்றாகக் குறிக்கப்பட்டுள்ளது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு பதினெண் கீழ்க்கணக்கு ஆகிய நூல்களில் காதலைப் பாடுபவை அகத்துறை நூல்கள் எனப்படும்; வீரம் முதலிய பொதுச் செய்திகளைப் பாடுபவை புறத்துறை நூல்கள் எனப்படும். இந்த இருவகைப் பட்ட நூல்களிலும் கனவு பேசப்படுகின்றது.

"மலைபயந்த மணியும் கடறு பயந்த பொன்னும்
கடல் பயந்த கதிர்முத்தமும்
வேறுபட்ட உடையும் சேறுபட்ட தசும்பும்
கனவில் கண்டாங்கு வருந்தாது நிற்ப
நனவில் நல்கியோன் நசைசால் தோன்றல்" (377)

என வரும் புறநானூற்றுப் பாடலில், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் கொடைச்சிறப்பை வியந்து பாராட்டு

கிறார் உலோச்சனார். இதே போல கடுங்கோ வாழியாதனின் கொடைவளத்தைப் பாராட்டும் குண்டுகட்பாலியாதனார் என்னும் புலவர் பின்வருமாறு பாடுகின்றார்.

"குன்று உறழ்ந்த களிறு என்கோ?
கொய் உளைய மா என்கோ?
மன்று நிறையும் நிரை என்கோ?
மனைக் களமரொடு களம் என்கோ?
ஆங்கு அவை, கனவு எனமருள, வல்லே, நனவின்
நல்கி யோனே, நசைசால் தோன்றல்."

நட்பினால் ஏற்படும் கொடிய வினைவுகளை விளக்க வந்த வள்ளுவர்,

"கனவினும் இன்னாது மன்னோ, வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு."

என்று குறிப்பிட்டு, நட்பு கனவில்கூட விரும்பத் தக்கது அன்று என்றும் கனவிலும்கூட அது துன்பம் செய்யும் என்றும் இரண்டு பொருள்பட வலியுறுத்தி யுள்ளார்.

★

அகப்பாடல்களிலே வருகின்ற கனவைப்பற்றிய பாடல்கள், தலைவனும் தலைவியும் பிரிவுக்காலத்தில் ஆற்றுமை மிஞ்சி நிற்கின்ற நிலையை விளக்குவனவாக அமைந்துள்ளன.

"கோடு ஏந்து புருவமொடு குவவு நுதல்நீவி,
நறுங் கதுப்பு உளரிய நன்னர் அமையத்து,
வறுங்கை காட்டிய வாய்அல் கனவின்
ஏற்று ஏக்கற்ற உலமரல்." (39)

எனவரும் அகநானூற்றுப்பாடல், தலைவியின் உடனிருந்து மகிழ்வதாகக் கனவுகண்டு, அக்கனவு இடையிலே கலைந்ததனால் ஏங்கும் தலைவனின் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டியுள்ளது.

தலைவன் தலைவியர் வாழ்வில் கனவுக்கு உள்ள சிறந்த இடத்தை நிலைநாட்டுவது போல, வள்ளுவரும் தமது நூலில் 'கனவுநிலை உரைத்தல்' என்னும் தனி அதிகாரமே வகுத்துள்ளார்.

"நனவுஎன ஒன்றுஇல்லை யாயின் கனவினால்
காதலர் நீங்கலர் மன்."

என்று, தன்னையும் தன் தலைவனையும் பிரித்துவைக்கும் நனவைப் பழிக்கின்ற கிழத்தியை அங்கு காண்கிறோம்.

இலக்கியத்தில் கனவைப் பற்றி உள்ள இச்செய்திகளைக் கண்ட பேராசிரியர், கனவு என்ற சொல்லுக்கு, 'கனவென்பது வாய்வெருவுதல் ;—அதனானும் அவன் உள்ளத்து நிகழ்கின்றது ஒன்று உண்டு என்று அறியப்படும்' என்று உரை வகுத்துள்ளார். திருக்குறளில் 'கனவுநிலை உரைத்தல்' என்னும் அதிகாரத்திற்கு அடைவுமுறை கூறவந்த பரிமேலழகர், 'கனவு, நனவின்கண் நினைவுமிகுதியால் கண்டதாகலின் இது (கனவுநிலை உரைத்தல் என்னும் அதிகாரம்) 'நினைந்தவர் புலம்ப'லின் பின் வைக்கப்பட்டது,' என்று விளக்கியுள்ளார்.

சங்ககால இலக்கியங்களில் பெருமை, தீமை, கொடுமை முதலியவற்றை மிகைப்படுத்திக் கூறுவதற்குக் கனவு கையாளப்பட்டிருக்கிறது. உரையாசிரியர்களின் காலத்திலோ நினைவுமிகுதியே கனவு உண்டாவதற்குக் காரணம் என்னும் கொள்கை நிலைபெற்றிருந்ததாகத் தெரிகிறது. இந்த இரண்டிற்கும் இடைப்பட்டதாகிய காப்பிய காலத்தில் கனவு இலக்கியத்தில் சிறந்ததோர் இடத்தைப் பெற்றிருந்தது என்று கூறலாம். காப்பியத்தின் வளர்ச்சியிலே வரும் திருப்புமையங்களாகிய நிகழ்ச்சிகள் எதிர்பாராத அதிர்ச்சியை அளிக்காவண்ணம் சூழ்நிலையை ஏற்படுத்துகின்ற பணியைக் கனவுகளே ஏற்றுக்கொண்டுள்ளன.

★

காப்பிய அழகிலும் பண்பிலும் தோய்ந்து நிற்கும் சிலப்பதிகாரம் கனவைக் கையாளுவதிலும் சிறந்தே நிற்கிறது. மாதவியைப் பிரிந்து சென்ற கோவலன் மீண்டும் மாதவியிடம் செல்லும் எண்ணத்தையே மறந்தான். மாதவி அவனுக்கு எழுதி அனுப்பிய அன்புக் கடிதத்தையும் மறுத்து விட்டான். இதைத் தன் தோழி மூலமாக அறிந்த மாதவி, நம்பிக்கை தளராமல் 'மாலைவாராராயினும் காலை காண்குவம்' (நாளைக்காலையிலாயினும் கோவலர் நம்மிடம் வந்து விடுவார்) என்று தன் தோழியிடம் கூறினாள். ஆனால் அவள் எதிர்பார்த்தபடி கோவலன் திரும்பிவரவில்லை; கோவலன் அதன்பிறகு அவளிடம் வரவே இல்லை. இதை,

> "காதலி கண்ட கனவு கருநெடுங்கண்
> மாதவி தன்சொல்லை வறிதாக்க."

என்று ஆசிரியர் குறித்துள்ளார். அதாவது கண்ணகி கண்ட கனவின்படி நிகழ்ச்சிகள் நடைபெற்றன; கோவலன் மாதவியிடம் மீண்டும் போக முடியவில்லை. கண்ணகி கண்ட அந்தக் கனவை அவளே சொல்லுகிறாள் :

"............கனவினால், என்கை
பிடித்தனன் போய்ஓர் பெரும்பதியுள் பட்டேம்;
பட்டபதியில், படாதது ஒரு வார்த்தை
இட்டனர் ஊரார், இடுதேள் இட்டு, என்–தன்மேல்;
கோவலற்கு உற்றது ஓர்தீங்கு என்று அதுகேட்டு,
காவலன் முன்னர் யான்கட்டுரைத்தேன்; காவலனோடு
ஊர்க்குஉற்ற தீங்கும் ஒன்றுஉண்டால்; உரையாடேன்;
தீக்குற்றம் போலும், செறிதோடீஇ! தீக்குற்றம்
உற்றேனொடு உற்ற உறுவனோடு யான்உற்ற
நற்றிறம் கேட்கின் நகைஆகும்" (9 : 45–54)

கண்ணகியின் இக்கனவைக் கேட்கும்போது, 'பிரிந்திருந்து வருந்திய கண்ணகி மகிழ்ச்சியடையும் வண்ணம் அவள் கணவன் திரும்பி வரவும் கூடும்' என்று எண்ணி மகிழ்கிறோம். அந்தக் கனவு நனவாக வேண்டும் என்னும் ஆசை நம்மை அறியாமலே நம் உள்ளத்தில் எழுகிறது. ஆனால் திரும்பிவந்த கோவலன் கண்ணகியையும் அழைத்துக்கொண்டு அவசரம் அவசரமாக மதுரைக்குப் புறப்படுவதைக் காணும்போது, 'மேலே என்ன நடக்குமோ?' என்று திகைக்கிறோம். கனவாவது நிறைவேறுவதாவது' என்று நாம் எடுத்தெறியும் கனவுதான் நம் உள்ளத்தில் இத்தனை உணர்ச்சி விளையாட்டுக்களையும் நடத்துகிறது.

பின்னர், மதுரை புறஞ்சேரியில் தங்கியிருந்தபோது கோவலன் ஒரு கனவு காண்கிறான். அக்கனவில், தனக்குப் பெரும் தொல்லை ஏற்படுவதாகவும் அதனால் கண்ணகி மிகுந்த வேதனையடைவதாகவும் மாதவி துறவியாவது போலவும் அவள் மகளாகிய மணிமேகலையும் துறவுநெறியில் செலுத்தப் படுவதுபோலவும் காணுகிறான். தான் கண்ட அக்கனவைச் சொல்லிவிட்டு,

"நனவு போல நள்ளிருள் யாமத்துக்
கனவு கண்டேன் கடிது ஈங்கு உறும்"

என்று அதில் தான் கொண்ட நம்பிக்கையையும் வெளியிடுகிறான் கோவலன். இக்கனவு அப்படியே நிறைவேறுவதைக் காவியம் விளக்குகிறது.

உங்கள் குழந்தைகளுக்கும், நண்பர்களுக்கும்
பிறந்தநாள் பரிசாகவோ, கலியாணப் பரிசாகவோ
ஒரு ஜெனபாக்ஸ் கேமராவை அளியுங்கள்.



வீட்டின் உள்ளேயோ, வெளியிலோ, பகலிலோ, இரவிலோ, எச்சமயத்திலும் எக்காட்சியையும் நன்றாகப் படமெடுக்க ப்ளாஷ் பொருத்தும் வசதியுடன் கூடிய **ஜெனபாக்ஸின்** விலை ரூ. 30/-தான். (வரிகள் தனி.)

**KESHO RAM & SONS (INDIA) PRIVATE LTD.** DELHI BOMBAY

இலவச பிலிமை உங்கள் டீலரிடம் கேட்டு வாங்குங்கள்.

"எத்தனை இன்பம் செல்வதிலே! - மகிழ்
வெத்தனை உடைமை கொள்வதிலே!"



தொல்லை தராத, சுகமான சவாரிக்கு உகந்த 'ஸ்டீல்ஸன்ஸ்' சைக்கிள் ஒவ்வொன்றையும் மிக்க கவனத்துடன் அதிகப்படியான இன்பமும் வசதியும் அளிக்கும் வகையில், எங்கள் தொழிற்சாலையில் தயாரிக்கிறோம்.

"இலவசமாக ஒக்கிட்டுத் தருகிறோம்" என்று உறுதி தரப்பட்டிருப்பதால் 'ஸ்டீல்ஸன்ஸ்' சைக்கிளில் சவாரி செய்வது பாதுகாப்புடன் கூடியதாகும்.

**Steelsons**

**இந்தியாவின் உயர்ந்த ரக சைக்கிள்**

ஸ்டீல்ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட், கோவிந்தபுரி.
மோடிநகர் (உ. பி.)

மற்ருேரிடத்தில் பழைய கனவின் நினைவு செயலாற்றத் தூண்டுகின்ற திறமும் பேசப்படுகின்றது. கோவலன் கொலை யுண்டான். அதையறிந்த கண்ணகி அழுது துடித்துக்கொண்டு கொலைக்களத்துக்கு ஓடினுள். அங்கே குருதி கொப்புளித்துப் புழுதியாடிக் கிடந்த கோவலனின் உடலைக் கண்டாள். அவள் உள்ளம் இடிந்தது. உணர்ச்சி மடிந்தது. ஆயிரம் வேதனை களின் அலைமோதலிலே சிக்கித் திகைத்துச் செயலற்று நின்ருள். அப்போதுதான் கள்வன் என்னும் பழியைச் சுமந்து கொண்டே தன் கணவன் முடிந்தது அவளுக்கு நினைவு வந்தது.

'தீ வேந்தன் தனைக்கண்டு, இத்திறம் கேட்பல்யான்' என்று எழுந்தாள். கூடவே அவள் முன்புகண்ட கனவும் அவள் நினைவுக்கு வந்தது.

"......இடருற்ற தீக்கனு
நின்ருள் நினைந்தாள், நெடுங்கயற்கண் நீர்சோர
நின்ருள் நினைந்தாள், நெடுங்கயற்கண் நீர்துடையாச்
சென்ருள், அரசன் செழுங்கோயில் வாயில்முன்"

கனவின் முற்பகுதி தானுக நிறைவேறி விடவே பிற்பகுதியின் நினைவு அவளைத் தீவிரமாகச் செயல்படத் தூண்டியது. அழுத கண்ணும் குமுறும் நெஞ்சமும் விரித்த தலையுமாக மன்னன் மாளிகையை நோக்கி ஓடினுள்.

இதற்குள் பாண்டிமாதேவி தீயகனவு ஒன்று கண்டு நடுக் கத்தோடு அதை மன்னனிடம் வந்து சொல்லுகிருள். கண்ணகி கோவலன், பாண்டிமாதேவி ஆகிய மூவரும் கண்ட கனவுகள் பின்னுல் நடக்கப்போகும் நிகழ்ச்சிகளைத் தெளிவாகச் சொல்லி விடுகின்றன. நடக்கப்போவதை இக்கனவுகளின் மூலம் முதலி லேயே தெரிந்து கொள்வதனுல்தான் உள்ளம் கொள்ளாத உருக்கமும் அவலமும் நிறைந்த அந்தச் செய்திகளை அதிர்ச்சியும் நடுக்கமும் இன்றி ஏற்று இலக்கியத்தைச் சுவைக்க முடிகின்றது. சிலப்பதிகாரமும் சிறந்த காப்பியமாக வளர்ந்து முடிகிறது.

★

சீவகசிந்தாமணியில் நூலின் தொடக்கத்திலேயே கனவு வருகிறது. அதன் விளைவே காவியமாக விரித்து உரைக்கப் படுகிறது. நாட்டுவளம், நகர்வளம், கோயிற் சிறப்பு ஆகிய வற்றைப் பாடி முடித்தவுடன், விசயை கண்ட கனவைப் பின் வருமாறு குறிப்பிடுகிருர் திருத்தக்க தேவர்.

" தொத்துஅணி பிண்டி தொலைந்துஅற வீழ்ந்தது; எண்
முத்துஅணி மாலை முடிக்கு இடனாக
ஒத்ததன் தாள்வழி யேமுளை யோங்குபு
வைத்தது போல வளர்ந்ததை யன்றே "

இக் கனவின் பொருளையும் தேவர் தெளிவுற விளக்கி யுள்ளார். நான் இப்படிக் கனவு கண்டேன் என்று சச்சந்த மன்னனிடம் கூறுகிறாள் விசயை. அதுக்கேட்ட மன்னன் அக்கனவினால் குறிக்கப்பட்டு எதிர்காலத்தில் நிகழஇருந்த நன்மை தீமைகளைத் தெளிவாக உணர்ந்தான். ஆயினும் அவற்றை அப்படியே சொன்னால் விசயை மனம் உடைந்து போவாள் என்று அஞ்சி அதன் நல்ல பகுதிகளை மட்டும்,

" நன்முடி நின்மக னாகும்; நறு மாலைகள்
அன்னவ னல்அம ரப்படும் தேவியர்;
நின்முளை நின்மகன் ஆக்கம தாம் "

என்று விளக்கிச் சொல்லுகிறான். சச்சந்தன் முடிவு, ஜீவகன் பிறப்பு, பின்னர் அவன் அடைந்த சிறப்புக்கள் ஆகிய எல் லாம் காவியத்தில் விரிவாக உள்ளன.—இக்கனவிலேயே அவை குறிப்பாக உணர்த்தப் பட்டுள்ளன.

சமணக் கோட்பாடுகளையும் அறங்களையும் தமிழ் நாட்டில் பரப்ப வந்த சமணப் பெரியோர்கள் இலக்கியம், இலக்கணம், தத்துவம் ஆகிய பல துறைகளிலும் தமிழுக்குத் தொண்டாற்றி னர். பொன்னவன் என்னும் சமணப் பெரியாரால் எழுதப் பட்ட கனநூல் அக்காலத்தில் மக்களுக்குக் கனவின்மேல் இருந்த நம்பிக்கையைத் தெளிவாகக் காட்டுகின்றது. இரவின் எந்த எந்தச் சாமத்தில் காணும் கனவு எவ்வளவு காலத்தில் நிறைவேறும் என்பதை கனநூல் அறுதியிட்டு விளக்குகிறது.

" படைத்தமுற் சாமம்ஓ ராண்டிற் பலிக்கும்; பகரிரண்டே
கிடைத்தபிற் சாமம்மிகு திங்கள் எட்டிற் கிடைக்கும்
என்னும்;
இடைப்பட்ட சாமம்ஓர் மூன்றினில் திங்கள் ஓர்
மூன்றென்பவால்;
கடைப்பட்ட சாமமும் நாள்பத்தி லேபலன் கைபெறுமே "

இப்பாடலில் கூறப்படும் கனவுப்பலன் முறையை மக்கள் ஏற்று நம்பி வந்தார்கள் என்றே தெரிகிறது.

சிந்தாமணியில் விசயை காணும் கனவு கடையாமத்தில் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.

"பஞ்சிஅடி பவளத் துவர்வாய் அவள்
துஞ்சும்இடைக் கனமூன்றவை தோன்றலின்
அஞ்சி நடுங்கினள் ஆயிழை, ஆயிடை
வெஞ்சுடர் தோன்றி விடிந்ததை அன்றே"

சிலப்பதிகாரத்தில் கோவலன் கண்ட கனவு விரைவில் பலனளிக்கத் தொடங்கியதாக ஆசிரியர் அமைத்திருப்பதும் இக் கருத்தையே நினைக்கத் தூண்டுகிறது.

★

பின்னால் வந்த புராணங்களிலும் காவியங்களிலும்கூட நனவாகியுள்ள சில கனவுகள் குறிக்கப்படுகின்றன. கம்பராமாயணத்தில் திரிசடை கண்ட கனவின்படியே இராவணன் வீழ்வதும் இராமன் வெல்வதும் விபீடணன் இலங்கை அரசராக முடிசூடிக் கொள்வதுமாகிய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாகிய ஆண்டாள் தான் கனவில் கண்டபடியே அச்சுதனை நனவிலும் மாலையிட்டு மகிழ்கிருள்.

இவைகளை விட்டுப் பிற்காலத்திற்கு வந்தால், அங்கும் இலக்கிய கனவு நம்மை எதிர்கொண்டழைக்கத் தவறவில்லை. பிற்காலத் தமிழின் ஒரே நாடக இலக்கியமான மனோன்மணீயத்தில் கதைத்தலைவனும் கதைத்தலைவியும் காணும் கனவுகள் நூலின் நாடகப்பண்பை உயர்த்துவனவாக அமைந்துள்ளன. இக்கனவுகளே நாடகத்தின் பிற்பகுதி நிகழ்ச்சிகளுக்கெல்லாம் அடிப்படையாக அமைந்துள்ளன.

காலம் செல்லச் செல்லக் கனவின்மீது மக்களுக்கு இருந்து வந்த நம்பிக்கை ஓரளவு தளர்ந்தது. அத்துடன் கனவு என்னும் சொல்லுக்கே புதியபொருளும் ஏற்பட்டுவிட்டது. கவிஞர்களின் அல்லது சிந்தனையாளர்களின் கற்பனைகள் 'கனவு' என்ற சொல்லால் குறிக்கப்படுவதைப் பார்க்கிருேம்; தாங்கள் அமைத்துக் காட்டும் இலட்சிய வாழ்வு, இலட்சிய சமுதாயம் போன்றவைகளைக் 'கனவு' என்று அவர்களே குறிப்பிடுவதையும் காண்கிருேம். கவிஞர் பாரதியாரும் தமது அழியா ஓவியமாகிய குயில் பாட்டை,

"............கவிதைவெறி மூண்டே நனவழியப்
பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்
நெட்டைக் கனவின் நிகழ்ச்சி"

என்றே குறிப்பிட்டுள்ளார்.

# "கம்பன் பிறந்த தமிழ்நாடு...."

சென்னையில் இவர் (பாரதியார்) இருந்த போது நான் இவரோடு பலமுறை பழகியிருக்கிறேன். பிரசிடென்ஸி காலேஜில் வாரந் தோறும் நடைபெறும் தமிழ்ச் சங்கக் கூட்டத்துக்கு வருவார்; பேசுவார்; புதிய பாட்டுகளைப் பாடுவார். வருஷபூர்த்திக் கொண் டாட்டங்களில் புதிய செய்யுட்கள் செய்து வாசிப்பார்.

ஒரு முறை வி. கிருஷ்ணசாமி ஐயர் தலைமையில் அச்சங்கத்தில் ஜி. ஏ. வைத்தியராமையர் பேசினர். கிருஷ்ணசாமி ஐயருடைய தமிழபிமானமும், தமிழ் வித்வான்களை ஆதரிக்கும் இயல்பும் தெரியாத பலர் 'இவருக்குத் தமிழ் பாஷையில் பழக்கம் இல்லையே; தமிழில் என்ன பேசப் போகிருர்?' என்று நினைத்தனர். அவரோ, "தமிழைப்பற்றி அதிகம் பேசுவானேன்? உலகத்தி லுள்ள பல பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டு விளங்கும் திருக் குறளைத் திருவள்ளுவர் இயற்றிய பாஷை இந்த பாஷை. நவரஸமும் பொருந்திய இராமாயணத் தைக் கம்பர் செய்த பாஷை இது. எல்லோருடைய மனத்தையும் கரைத்து உருக்கித் தெய்வ பக்தியை உண்டாக்கும் தேவாரத்தை நாயன்மார்கள் இயற்றிய பாஷை இது. ஆழ்வார்கள் திவ்யப் பிரபந்தத்தைப் பாடிய பாஷை இது" என்று உத்ஸாகத் தோடு பிரசங்கம் செய்தார்.

அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்த பாரதியார், அந்தப் பிரசங்கத்தில் மிகவும் ஈடுபட்டார். பின்பு, கிருஷ்ணசாமி ஐயர் பாஷையின் பெருமையையும், தேசத்தின் பெருமையையும் வெளிப்படுத்தி யாவருக்கும் விளங்கும்படியான பாட்டுகளைப் பாடியனுப்ப வேண்டுமென்று என்னிடம் சென்னர். எனக்கு அவகாசம் இல்லாமையால் வேறொருவரை அனுப்பினேன். அவருடைய பாட்டுக்கள் அவருக்குத் திருப்தியை அளிக்கவில்லை. பிறகு பாரதியாரே அவருடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்தார். ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி ஐயரது பிரசங்கத்தில் இருந்த கருத்துக்களே பாரதியார், "கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்பது போன்ற பகுதிகளை அமைத்துப் பாடுவதற்குக் காரணமாக இருந்தன.

— டாக்டர் ஐயரவர்கள்

[1936-ல் அகில இந்திய காங்கிரஸின் பொன் விழாவில் பாரதியாருடைய படம் திறக்கப்பட்ட போது செய்த பிரசங்கம்.]

---

இதுவரை இலக்கிய வரலாற்ருேடு இணைந்த கனவின் வரலாற்றை விரிவாகப் பார்த்தோம். நனவின்போது ஏற்படும் நினைவு மிகுதியினுலேயே கனவு தோன்றுகிறது என்றும், பின்னுல் வரப்போகும் நிகழ்ச்சிகளின் முன்னறிவிப்பே கனவு என்றும் ஏற்பட்டிருந்த பல நம்பிக்கைகளையும் கண்டோம். கனவின் அடிப்படை எதுவாக இருந்தாலும், அது பயனுள்ளதாகவோ பயன் இல்லாததாகவோ—எப்படி இருந்தாலும் வாழ்க்கையிலே கனவு இருக்கிறது; இலக்கியங்களிலே இடம் பெற்று உயர்ந்த சுவையை வழங்குகிறது என்னும் செய்தி உண்மை; யாரும் மறுக்க முடியாத உண்மை. *

எல்லாவித கட்டிட வேலைகளுக்கும்

நீங்கள் திட்டமாக குறிக்க வேண்டியது

## சங்கர் பிராண்ட்

## போர்ட்லண்ட் சிமெண்ட்

*

சங்கர் நகரிலுள்ள எமது தொழிற்சாலையில் சமீபத்தில் மேலும் புதிய இயந்திரங்கள் நிறுவப்பட்டு சங்கர் பிராண்ட் போர்ட்லண்ட் சிமெண்ட் உற்பத்தி இப்பொழுது வருடம் ஒன்றுக்கு 5 லக்ஷம் டன் அளவாக பெருகி இருக்கின்றது.

*

தயாரிப்பாளர்கள் :

## இந்தியா சிமெண்ட்ஸ் லிமிடெட்

தொழிற்சாலை :

**சங்கர்நகர், திருநெல்வேலி ஜில்லா.**

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ் :

**'தன் பில்டிங்' 175/1, மவுண்ட் ரோட், மதராஸ்-2**

விநியோகஸ்தர்கள், விற்பனையாளர்கள் :

**சிமெண்ட் மார்க்கடிங் கம்பெனி ஆப் இந்தியா பிரைவேட் லிமிடெட்**

# சுவாதீன சித்தமும் ஆட்படுதலும்

(புற்றன்)

மனிதன் ஆறு அறிவு படைத்தவன். மற்ற உயிர்களுக்கு இல்லாத மனம் என்பது ஒன்று அவனுக்கு உண்டு. அதனுல் அவனுக்குச் சுவாதீன சித்தம் (Free will) என்பது உண்டு. சுவாதீன சித்தமும் ஆட்படுதலும் எப்படி ஒவ்வும் என்று கேட்கிருர்கள். இதைப்பற்றிச் சிந்தனை செய்தபோது மாணிக்க வாசகப் பெருமான், கல்வியும் கேள்வியும் அறிவும் நிறைந்த அமைச்சர் அருளிய ஒரு பாட்டு இக்கேள்விக்கு விடை அளித்தது.

''இருந்தென்னை ஆண்டுகொள்,
விற்றுக்கொள்,
ஒற்றிவை, என்னினல்லால்
விருந்தின னேனை விடுதிகண்
டாய், மிக்க நஞ்சமுதா
அருந்தின னேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே,
மருந்தின னேபிற விப்பிணிப்
பட்டு மடங்கினர்க்கே!''

ஒருவனுக்கு ஒரு வீடோ நிலமோ இருக்கிறது. அதை அவன் விற்க விரும்புகிருன். அதனை வாங்குபவன் ஒரு விஷயத்தில் முக்கியமாகக் கவனம் செலுத்துகிருன். விற்பவனுக்கு அச்சொத்தின் மீது பூர்ண சுவாதீன மிருக்கிறதா என்பதை ஆராய்ந்து அறிகிருன். வில்லங்கங்கள் இல்லையே என்பதை வழக்கறிஞர்களைக் கொண்டு ஆய்வு செய்து தெரிந்து தெளிகிருன். ஒற்றிக்குப் பெற்ருலும் அப்படியே ஆராயப்படும்.

மாணிக்கவாசகப் பெருமான் தம்மை இறைவனுக்கு உரிமையாக்க முன் வருவதற்கு முன்பு அவருக்குத் தம்மை அவ்வண்ணம் அளிக்க உரிமை உண்டா என்பதை இறைவன் ஆராய்ந்து தேர்கின்ருன். மாணிக்க வாசகர் பூர்ண சுவாதீன சித்தம் கொண்டன்றித் தம்மை அளிக்க இயலார். இறைவன் அவரை ஏற்க இயலான். சுவாதீனசித்தத்தின் தலைசிறந்த ஈடற்ற இறுதிச் செயலே ஆட்படுதலாகும். சிறிதளவேனும் சுவாதீன சித்தம் குறைவு படுமேல், தம்மை இறைவனுக்கு அளிப்பதற்கு மாணிக்க வாசகருக்கு உரிமை இராது; இறைவன் ஏற்பதற்கும் இசையான். ஆட்படுதலே சுவாதீன சித்தத்தின் பரம கைங்கர்யம். அதற்காகவே சுவாதீன சித்தம் மனிதனுக்கு அளிக்கப் பட்டுள்ளது. இதில் யாதொரு பலவந்த (கட்டாய)முமில்லை. என் வழிவேறு, உன் வழி வேறு என்று இறைவனை ஒதுக்கிச் செல்வதும் சுவாதீன சித்தனின் கைக்குள் இருக்கிறது. இறைவன் குறைகூற மாட்டான், காத்திருப்பான், பிறவிதோறும் காத்திருப்பான். ''நாயேனைத் தினையின் பாகமும் பிரிவது திருக்குறிப்பன்று'' என்கிருர் மாணிக்கவாசகர்.

சுவாதீன சித்த நிறைவால் ஆட்படுதலால் அன்ருே, அடியான் மற்ற உலகத்து அடிமைகளைப் போலல்லாமல், ஆனந்தாதீதத்தில் மூழ்குகின்ருன், திளைக்கின்ருன்!

Tel. "MURSOKS" Phone: 2788.

REGD NO 141241.

WHITE HORSE SOAP
ஒயிட் ஹார்ஸ் சோப்

# WHITE HORSE SOAP

A SUPERFINE SOAP

FOR SILK AND LINEN WASH

## ஒயிட் ஹார்ஸ் சோப்

தரத்திலும் குணத்திலும் சிறந்ததென
எல்லோராலும் புகழப்பட்டது.
தகுந்த விலையில் கிடைக்கக்கூடியது.

*MANUFACTURERS:-*

## NATIONAL INDUSTRIES,

MADRAS - 21.

*MADRAS CITY DISTRIBUTORS:-*

**MURALI TRADING CO.,**

79, Acharappan Street, MADRAS - 1.

# துறவு

"சித்திரையான்"

சப்தசுர சக்கரவர்த்தி, சங்கீத சாம்ராட், நாதப்பிரமம் சுப்பராம பாகவதர் நடிக்கும் பட்டினத்தார் - இந்த விசேஷ நாடகம் பார்க்கத் தவறாதீர்கள். கண்ணுக்கினிய காட்சி - காதுக்கினிய கீதம் - ஒரே காட்சி" என்று விளம்பர வண்டியிலிருந்தவன் தனது எட்டுக்கட்டை சுருதியில் கூவினான். இந்தத் தகவல்களை வெளியிடும் 'ஸ்பெஷல்' நாடக நோட்டீசையும் எல்லாருக்கும் வழங்கினான். நோட்டீசு கொடுப்பது நின்றதும் ஒலி பெருக்கி சினிமாப் பாட்டை இசைக்கத் தொடங்கியது. காஞ்சி நகரில் வரதர் தேரோடும் வீதிகளில், இந்த 'ஸ்பெஷல்' நாடக விளம்பர வண்டி நகர்ந்தது.

குழந்தைகளும் பெரியவர்களுமாக பலர் அந்த வண்டியின் பின்னால் ஓடினார்கள். சிதர்த் தேங்காய் மூடி கிடைப்பது போலச் சிலருக்கு முழு நோட்டீசும் சிலருக்குத் துண்டுகளும் கிடைத்தன. ஒலிபெருக்கியின் ஓலம் போதாதென்று இவர்களுடைய ஆரவாரமும் தெருவை நிறைத்தது.

விளம்பர நோட்டீசுக்காரனும் ஒலி பெருக்கியும் காலையிலிருந்தே வஞ்சனையில்லாமல் உழைத்தார்கள். பிற்பகல் இரண்டுமணிக்கு, முக்கியமான தெருக்களைச் சுற்றிய பிறகு விளம்பர வண்டி சப்பாணிப் பிள்ளையார் கோவில் தெருவில் திரும்பியது. அந்த வெயிலில் ஓரிரு குழந்தைகளையும் ஒரு தெரு நாயையும் தவிர வண்டிக்குப்பின்னால் யாருமே ஓடவில்லை நோட்டீசு கொடுப்பவனும் சோர்ந்துவிட்டான். ஒலிபெருக்கி மட்டும், பயன் கருதாத யோகியைப் போல, அலறிக்கொண்டிருந்தது.

கண்ணும் கண்ணும் கலந்ததே
-யிம்
மண்ணில் இன்பம் விளைந்ததே...

அம்பலவாணருக்கு இந்தப் பாட்டைக் கேட்டு எரிச்சலாக வந்தது. காஞ்சியின் வெயிலைத் தாங்க முடியாமல், தூங்க முயன்று நொண்டிருந்தவருக்கு வெயில் நேரத்தில் 'மண்ணில் இன்பம் விளைவிக்கும்' பாட்டு வேதனையாகவும் இருந்தது; வேடிக்கையாகவும் பட்டது. தம்மை மறந்து, தமது நிலையை மறந்து அவர் வெளியேவந்தார். சிறு பிள்ளையைப்போல, வண்டி

யின் பின்னே சென்று, தூங்கு கிறவனைத் தட்டி எழுப்பி நோட்டீசு கேட்டார். அவனும் சலிப்புடனே ஒன்றை எடுத்துக் கொடுத்தான். 'பட்டினத்தார்' ஸ்பெஷல் நாடக நோட்டீசு அவரைக் கவர்ந்தது. இரவு அந்த நாடகத்துக்குச் செல்வது எனத் தீர்மானித்துக்கொண்டார்.

இரவு மணி எட்டரை. மாடர்ன் தியேட்டருக்கெதிரே மாபெரும் கூட்டம். 'பட்டினத்தார்' ஸ்பெஷல் நாடகம்பார்க்க வந்தோரும், வந்தவர்களைப் பார்க்கவந்தோருமாக, கூட்டம் நிரம்பி வழிந்தது. இரட்டை மண்டபத்திலிருந்து கச்சபேசர் கோவில் வரை வண்டி செல்ல வழியேயில்லை.

சங்கீத சாம்ராட் சுப்பராம பாகவதரைப்பார்க்கவேண்டும் என்பதற்காக நாடகத்துக்குச் சென்றவர்கள் பலர்; அவர் வாயால் பட்டினத்தார் பாடலைக் கேட்க விரும்பியவர் பலர்; 'ஆர்மோனியம்' சண்முகத்தின் 'அபார' வேலைகளைக் கேள்விப் பட்டு வந்தவர் சிலர். ஆனால் அம்பலவாணரோ பொழுது போக வேண்டுமே என்பதற்காக ஒன்பதரை மணி நாடகத்திற்கு எட்டரை மணிக்கே வந்து விட்டார். முதல் வகுப்பில் உட்கார்ந்தபடியே பின்னால் இருப்பவர்களைப் பார்ப்பதும், கடிகாரத்தைப் பார்ப்பதுமாக இருந்தார். இடையிடையே தாம் கலெக்டர் என்பதும் கணக்குத் தணிக்கைக்காகக் காஞ்சிபுரம் வந்திருக்கிறோம் என்பதும் நினைவுக்கு வரும்போது அவர் தலை ஆடாமல் நின்றுவிடும். என்றாலும் கலெக்டர் பதவியையும் மீறிய மனிதத்தலையல்லவா அது? தன்னிச்சையாகத் திரும்பும்.

பத்து மணிக்கு திரை உயர்ந்தது. ஆர்மோனியத்தின் பின்னணியுடன் 'சங்கீத சாம்ராட்' மேடையில் தோன்றினார். நீண்ட பாட்டொன்றைத் தொடங்கினார். சற்று நேரத்துக்குப் பிறகு, 'ஆர்மோனியம்' சண்முகத்துக்குச் 'சான்ஸ்' கொடுத்து விட்டு, முதல் வரிசையில் இருந்தவர்களைக் கவனித்தார். பழக்கத்தின் காரணமாகவோ என்னவோ, அவர் கண்கள் ஆண்களையெல்லாம் அப்படியே தாண்டி, பெண்கள் பகுதியில் போய் நின்றது. இரண்டாவது வரிசையில் நான்காவது நாற்காலியில் இருந்த பெண்மணியைக் கண்டதும், ஆர்மோனியத்தின் 'சான்ஸ்' முடியவில்லை என்பதையும் மறந்து, அவர், அடுத்த அடியைப் பாடத் தொடங்கினார். இந்தத் தடுமாற்றத்துக்குக் காரணம்என்ன என்பதை அம்பவாணர் திரும்பிப் பார்த்து தெரிந்து கொண்டார்; அவருக்குச் சிரிப்புப் பொங்கியது.

பாட்டு முடிந்து உள்ளே சென்ற பாகவதருக்கு நெஞ்சு விம்மியது!

'சங்கீத சாம்ராட்' இசையில் மட்டுமன்றி நடிப்பிலும்வல்லவர். ஆகவே நாடகம் மிக நன்றாக அமைந்திருந்தது. அம்பலவாணர் தம்மை மறந்து நாடகத்தில் ஈடுபட்டிருந்தார்.

மருதவாணன் மறையும் கட்டம்.

'காதற்ற வூசியும் வாராது காண் நும் கடைவழிக்கே' வரிகளைப் படித்த பட்டினத்தார் திகைத்து நிற்கிறார்!

சுப்பராம பாகவதர், அந்த வரிகளை, மெல்லிய குரலில், பல இராகங்களில் இசைத்துக் காட்டினார். அமைதியான சூழ்நிலை... மெல்லிய இசை... பொருள் பொதிந்த சொற்கள்...

அம்பலவாணருக்கு நெஞ்சிலே ஒரு நரம்பு அறுந்தது போலத் தோன்றியது. குளத்தில் கல் பட்டுத்தோன்றும் அலை கரையை எட்டுவது போல, இந்த வரிகள் நெஞ்சின் விளிம்பைத் தொட்டன. ஏகம்பன் கோவிலில் 'கருவுற்ற நாள் முதலாக' என்றெழுதியிருந்தபாடல் நினைவுக்கு வந்தது. நெஞ்சின் குறுகுறுப்பு மறைந்தது...

நெஞ்சின் அவலத்தில் மூழ்கியிருந்த அம்பலவாணர் கண்களைத் திறந்து பார்க்கையில், சுப்பராம பாகவதர் மருதவாணன் பிரிந்து சென்றதை எண்ணி வருந்தி பிறகு தேறி துறவுக்கோலம் பூண்டு கொண்டிருந்தார். அரையிலிருந்த வேட்டியோடு புறப்பட்டார் பட்டினத்தார்! அவர் கண்கள் மட்டும் இரண்டாவது வரிசையில் நான்காவது நாற்காலியைச் சுற்றி வந்தன!

"ஊருஞ் சதலமல்ல
  உற்றார் சதமல்ல
உற்றுபெற்ற பேருஞ் சதமல்ல
  பிள்ளைகளும் சீரும் சதமல்ல
செல்வம் சதமல்ல
  தேசத்திலே யாரும் சதமல்ல
நின்தாள் சதம்
  கச்சி யேகம்பனே"

கணீரென்ற குரலில் நாதநாமக்கிரியை இழைந்து கொண்டிருந்தது. அம்பலவாணருக்கு ஏதோ மின்னல் வெட்டியதைப் போல ஒரு தோற்றம். பிள்ளைகளும் சீரும் சதமல்ல என்ற அடிகள் திரும்பத் திரும்ப நெஞ்சிலே சுழன்றன. எதிரொலி போல எதிர்த்து வந்தன.

'யாரும் சதமல்ல நின் தாள் சதம் கச்சி யேகம்பனே' என்ற அடியில் நிரவலை வைத்துக் கொண்ட பாகவதர், தம் குரல் இரண்டாவது வரிலசை நான்காவது நாற்காலியை எட்டுகிறதா என்பதைக் கவனிப்பதில் கண்ணுயிருந்தார்!

'பிள்ளைகளும் சீரும் சதமல்ல' என்ற அடி அம்பலவாணரின் நினைவிலே வட்டமிட்டது; அந்த நினைவலை அவரை எங்கேயோ கொண்டு தள்ளியது... அந்த அலைகளின் நடுவே ஒரு சிறு முகம்... அழகு நிறைந்தமுகம்... அவர் மகன் மணி... திடீரென்று அலை மறைந்து, அங்கே இரத்தம்நிறைந்தது...சாக்லேட் வாங்கவோடிய மகன் லாரியின் கீழே... அம்பலவாணரின் அதிகாரம் மகன் உயிரை மீட்க உதவவில்லை... ஒரே மகன்... தவமிருந்து பெற்ற பிள்ளை... ஒரே கணம்...பிணம்... அலை மெதுவாக வீசின... "பிள்ளைகளும் சீரும் சதமல்ல" என்ற ஒளி எங்கோ, உள்மனதில் கேட்டது... மனம் புலன்களோடு சேர்ந்து செயலாற்ற தொடங்கிய போது "நின் தாள் சதம் கச்சி யேகம்பனே!" என்ற பாகவதரின் குரல் காதில் விழுந்தது.

Grams: PHARMLAB P. B. No. 902 Phone: 71170

# Mount Mettur Pharmaceuticals Pte. Ltd.

3, Greenways Road,

Raja Annamalaipuram :: MADRAS - 28

*

*MANUFACTURERS OF:*

(A) Vitamin injections: (B 1, B 12, B-Complex & C in various strengths).

(B) Elixirs (Syrup-B-Complex, Proteinosol, Metazyme, Asthmix, Liviron, Mount Malt etc.)

(C) Household Remedies: (Terpecol – Cough Syrup, Gripe-water, Scabimet & Iodon (ointments)

(D) Trnsfusion Solutions: (Glucose in Saline, Glucose Plain, Ringer Lactate, Darrows Potassium Lactate, Molar Lactate, Sodium Sulphate etc.)

(E) Common ampoules: (Glucose Solution, Calcium Gluconate etc.)

(F) Tablets: (Sulpha, Vitamins, Aspirin etc.)

*SUPPLIERS TO:*

Government Hospitals, Medical Stores, Private Nursing Homes, and Members of Medical Profession in the States of Madras, Andhra, Kerala and Mysore.

*

WITH BEST COMPLIMENTS

FROM

GWALIOR RAYON SILK MFG. (Wvg) Co., Ltd.,

BIRLAGRAM.

NACODA.

*

இடைவேளை. 'கருவுற்றநாளும்' 'காதற்ற வூசியும்' அம்பலவாணரின் சிந்தனையை அலைக்கழித்துக் கொண்டிருந்தன. தெளிவு பெற முடியாது அவர் திண்டாடினார்.

பட்டினத்தார், தலயாத்திரை மேற்கொண்டார், அற்புதமான பாடல்கள் வெளி வந்தன. பாகவதர். தாம் 'சங்கீத சாம்ராட்' தான் என்பதை ஒவ்வொரு நிமிஷமும் நிரூபித்துக் கொண்டு வந்தார்.

'ஒருமடமாதும் ஒருவனுமாகி' என்று தொடங்கினார் பாகவதர். இன்னிசையோடு கலந்தும் சொற்கள் தெளிவாக இன்ப ஊற்றாகப் பொங்கிப் பரந்தன.

கண்களை மூடியமர்ந்தார் அம்பலவாணர். பாட்டின் ஒவ்வோரடியும் ஒரு புதுமையைக் கூறியது, ஒரு பழமையை விளக்கியது; இணைத்துக் காட்டிப் பொதுமை தோன்றியது. நெஞ்சில் ஒரு மலர்ச்சி...

'உடற்கூற்று வண்ணம்' முடிந்து 'ஒன்ஸ்மோர்' என்று ஐந்து கட்டை சுருதியில் ஒருவன் கத்தினான், அடுத்து, பலகுரல்கள் பல சுருதிகளில் அதையே திருப்பி ஒலித்தன; இடையிடையே சிட்டிகள்!

பாகவதர் சோடா குடித்தார்; தொண்டையக் கனைத்துக் கொண்டார். 'ஒருமடமாதும் ஒருவனுமாகி' என்று மீண்டும் தொடங்கினார்.

அம்பலவாணருக்கு அந்தப் பாடலின் அருமை தெளிவாகத் தெரிந்தது. தமிழில்ஒன்றுமில்லை என்று எண்ணியிருந்த அவருக்கு, ஷேக்ஸ்பியர் 'மனித வாழ்வின் ஏழுபடிகள்' என்று சொன்னதையும் தாண்டி, அதன் தோற்றத்தையும் இறுதியையும் அறுதியிட்டு இடையிலிருப்பதை விளக்கிக் காட்டி, அதன் வெறுமையை, தமிழிலே ஒருவர் பாடியிருக்கிறார் என்பதையறிய வியப்பு கடலாகவே விரிந்தது.

பட்டினத்தார் திருவொற்றியூரில் மணலில் மறைகிறார். அவர் மறைந்த இடத்திலே ஓர் இலிங்கம் தோன்றுகிறது...

நாடகம் முடிந்து, தாம் வீடு திரும்பியது கூட அம்பலவாணருக்கு நினைவில்லை. அவர் நெஞ்சம் நிறைந்தது "காதற்றவூசிதான்" உறக்கம் கொள்ளவில்லை.


Settling in Madras on retirement, ?

*Please Consult*

**P. R. Seetharaman,**

" Standard Constructions " 20/Fourth Cross Street,
Mandavelipakkam, Madras - 28.

for Valuation of Buildings, Plans & Estimates & Construction of Residences.

Charges Reasonable; Work High Class.

உள்ளம் உருண்டதைப் போல, உடல் புரண்டது.

நெடு நேரத்துக்குப் பிறகு' அவர் அமைதியாக எழுந்தார். புயல் வீசி ஓய்ந்ததைப் போல, நெஞ்சு அடங்கிவிட்டது. 'இரவு விளக்'கைப் பெரிதாக்கி, வெள்ளைத்தாள்களிலே எழுதத் தொடங்கினார்.

முதலில் அரசாங்கத்துக்கு: வேலையை அன்றோடு விட்டுத் துறப்பதாக எழுதினார்.

இரண்டாவது மனைவிக்கு :

"சிவகாமி! இன்று 'பட்டினத்தார்' நாடகம் பார்த்தேன். துறவு பூண்பதற்கு முன்பு அவருக்கு மனைவியாயிருந்தவரின் பெயர் சிவகலை. அந்த ஞானச் செல்வியின் பெயரிலே பாதி உனக்கும் அமைந்திருக்கிறது.

"நானும் சென்னைப்'பட்டினத்தான்' உயிர் உறுதியைத் தேடிச் செல்கிறது...... நீ என்னைத் "தேடாதே"

இந்த இரு கடிதங்களையும் அஞ்சற் பெட்டியில் போட்டு விட்டு, சப்பாணிப் பிள்ளையாருக்கும் ஒரு கும்பிடு போட்டு விட்டு. இருளிலேயே வடக்கு நோக்கி நடந்தார் சென்னைப் பட்டினத்தார்.

அதே நேரத்தில், செங்கழுநீர்த் தெருவில், 'சங்கீத சாம்ராட், ஆகிய பட்டினத்தார், இரண்டாவது வரிசை நான்காவது நாற்காலியிலமர்ந்து தமது நடிப்பைச் சுவைத்த ஏகம்பர் கோவிலுக்குரிய செங்கமலத்திடம் " ஒருமடமாது " என்ற பாடலுக்கு விளக்கம் தந்து கொண்டிருந்தார்!


# Mahalakshmi Auction Benefit Chit Fund

**(Private) Ltd.**

*Head Office*:
6/90 W.E.A., Karolbagh,
New Delhi-5.
Phone No. 51412

*Branch Office*:
3, Main Market, Lodhi Road,
New Delhi-3.
Phone No. 73181

December 1960 Series
(3rd Sunday Auction)
Last date for admission :
15-12-60
First date of auction :
18-12-1960

January 1961 Series
(2nd Sunday Auction)
Last date for admission :
5-1-1961
First date of auction :
8-1-1961

20 Months | 20 Members

| Class | Subscription | Chit Value |
|---|---|---|
| A | Rs. 100/-P.M. | Rs. 2000 |
| B | ,, 50 ,, | ,, 1000 |
| C | ,, 25 ,, | ,, 500 |
| D | ,, 15 ,, | ,, 300 |

Free Copy of our Rules will be sent on request.
Name and address may please be legibly written.

*By order of the Board*
**N. Viswanathan,**
*Managing Director.*

SAVE MONEY - BENEFIT YOURSELVES.

# விருந்து

லெ. இராம. முத்து

விருந்தை இனிதாகவும் முறையாகவும் பேணிய குலம் தமிழ்க் குலம். விருந்தும் விருந்தோம்பலும் நமக்குப் பழையவை மட்டுமல்ல; நமக்குப் பெருமை தரக்கூடியனவுமாகும். விருந்தினர் எனப்படுவோர் முற்றிலும் முற்றிலும் புதியவரேயன்றி, இக்கால 'விருந்தினர் எனும் சுற்றத்தினர்' அல்ல, புதியவரை வரவேற்று இனிமை படைப்பதே தமிழ் விருந்து. சொல் விருந்து, இலக்கியவிருந்து, இசைவிருந்து, காட்சி விருந்து என விருந்து பல வகைப்படும். நல்லதொரு இசையைக் கேட்பதை இசை விருந்தென்போம். காண்பதற்கரிய ஒரு நிகழ்ச்சியைக் காணுங்கால் காட்சி விருந்து என்கிறோம். நல்ல இலக்கியத்தின் சுவையை அனுபவிக்குங்கால் இலக்கிய விருந்து என்கிறோம். அவற்றுள் நாம் ஈண்டு இலக்கியத்தில்வரும் விருந்து பற்றிய செய்திகளைப் படித்துச் சுவைப்போம்.

விருந்தினர், "முகரக்குழையும் அனிச்ச மலர்" போல் மென்மையுள்ளம் படைத்தவர்கள். அவர்களை சேய்மையில் கண்ட போது இன்முகம் காட்டி, அண்மையில் நண்ணியவழி இன்சொல் கூட்டி விருந்து கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றது குறள்,

"இந்திரர் அமிழ்தம்
இயைவதாயினும் இனிதென
தமியர் உண்டலும்
இலரே" (புறம்)

"மருந்தே யாயினும்
விருந்தோடு உண்"

என்பன எடுத்துக்காட்டுக்கள், விருந்தினரை வரவேற்பான் தமிழன் சாவா மருந்தெனினும் வந்தவர்கள் பசித்திருக்க வாயிவிடான் தமிழன். அன்னவற்குத் தந்து மகிழ்வான் என்பதை வெள்ளிடை மலைபோல் காட்டுகின்றன.

சங்க காலத்தில் ஒரு தலைவன் போகூழ் காரணமாக, அன்றில் பெடையன்ன ஒன்றி வாழ்ந்த தலைவியைவிட்டு, பரத்தையர் வயப்பட்டான். தலைவியும் அதை உணர்ந்து விட்டாள். கண்ணுள் வந்தால் கண் கொடுத்து பார்க்கவோ முகம் கொடுத்து பேசவோ கூடாது என உறுதி செய்கின்றாள். ஆனால் அன்று தலைவன் வந்தபோது அவள் உறுதி எங்கே போனது? தன்னையும் மீறிப்பார்த்து விட்டாளே, தலைவனை! ஆம், கொழு

நன்பழி அவனைக் காணாத விடத்துத்தானே? எனினும் மனத்தை உறுதி செய்துகொண்டு அடுக்களை செல்லுகின்றாள். தலைவன் அலைகடலிடை இட்ட கலம் போலவும், புயலிடை அகப்பட்ட இலை போலவும் மறுகுகின்றான். வீட்டின் வாயிலிற் சென்று யாரையோ எதிர்நோக்குகின்றான்? தோழியையா? சமரசம் பேசி வைக்கும் பெரியவர்களையா? அன்று, அன்று, விருந்தினரைத்தான் எதிர்நோக்குகின்றான்! விருந்தினர்வந்துவிட்டால் தமிழ்பெண்டிர் கொழுநன்மேற் கொண்ட சீற்றம் தணிந்து எல்லோரிடமும் இன்முகம் காட்டி விருந்தினரை வரவேற்பர் என்பதனால்தான். விருந்திற்கு எந்தப் பெரிய ஊடலையும் கூடலாக்கும் சக்தி உண்டு. இக்காலத்திலும் தலைவன், தலைவி தம்மிடையே குறையிருந்தாலும் விருந்தினர் வந்தபோது இன்முகம் கூட்டி குறை தெரியாது வரவேற்கின்ற தன்மை, முன்னதின் வழிப்பிறப்பே.

சேரநாடு தந்த செம்மல், இளங்கோவின் ஒப்பற்ற காவியமாம் சிலம்பில், காவிரியின் செல்வி கண்ணகி 'விண்ணக மாதர்க்கு விருந்து ஆயினாள்' என்று கூறப்படுகிறது. கோவலனும் கண்ணகியும் ஒருங்கு சேர்ந்து வருவிருந்து எதிர்கொண்டு செல்விருந் தோம்பும் பெருமையைக் காணவே அவர்களுக்கு மணம் செய்வித்து அவர்களைத் தனிக் குடித்தனம் பண்ண வைத்ததாகச் சிலம்பு கூறுகிறது. தனக்கு மண வாழ்க்கைதான் மற்றைய பெண்டிரைப்போல் அமையவில்லை எனினும், தமிழரின் தனிப்பெரும் அறமான விருந்தோம்பலைச் செய்யும் வாய்ப்பும் இயலாது போய்விட்டதே என்று கண்ணகி வருந்தும் பகுதி விருந்தின் இன்றியமையாமையை விளக்குகின்றது.

அசோக வனத்திலே சீதை சிறையிருக்கின்றாள். அப்போது அவள் என்ன நினைக்கின்றாள் என்பதை 'விருத்த மென்னும் ஒண்பாவில் உயர் கம்பன்' சொற் சித்திரமாக்கிக் காட்டுகின்றான்.

"அருந்த மெல்ல டகு யாரிட
அருந்தும் ?...
விருந்து கண்டபோது
என்றுமோ?" எனவிம்மும்

கிடைக்கும் கனிகிழங்குகளை என் தலைவர் இராமருக்கு இப்போது யார் பரிமாறுவார்கள்? இந்த நிலையில் விருந்தினர் வந்துவிட்டால் என் தலைவர் என்ன துன்பம் அடைவாரோ?' என்று சீதை ஏங்குகின்றாள். இஃது ஒரு மனைவியின் கடமையையும் அன்பையும் கொண்டு விருந்தை பார்க்குமிடம்.

விருந்து என்பது புதுமை; இனிமை தருகின்ற புதுமை. நந்தமிழ் நாட்டின் ஒப்பற்ற இந்தப் புதுமையை விருந்தை ஓரளவிலாவது எப்போதும் நடத்தி வரவேண்டும், அப்படி நடத்தினால்தான் தமிழரின் தனிக்குணமான விருந்தினர் பேணும் தன்மை உலகிற்கு விளங்கும்.

வளர்க விருந்து பேணும் தன்மை! அதில் மலர்க தமிழர் உள்ளம்!

## INDEX


Afghan Snow ... 136
All India Handloom Bd... 53
Ambal Snuff 2nd Cover
Anamalai Bus Transport 86
Anantaswami T. G. ... 6
B & C. Mills ... 172
Bapalal ... 76
Bliss & Cotton ... 118
Britania Biscuit ... 66
Brooke Bond ... 142
Central News Agency ... 82
Co-optex Outer Cover
East Asiatic Co. 3rd Cover
Godrej-Dip ... 124
Golden Tobacco Co., ... 96B
Gwalior Rayon ... 162
Hindustan Lever ... 120
Imperial Tobacco Co., ... 1
India Cements ... 155
Indian Overseas Bank ... 168
Iris Ink ... 89
Jay Engineering ... 16
Keshoram & Sons ... 149
Lakshmi Appalam ... 32
Lifco ... 114
Madras Hotel ... 75
Madras Pencil Factory ... 101
Madura Temple ... 141
Mahalakshmi Chit Fund... 164
Mangaram, J. B. ... 65
Mani, S.S. ... 52
Modern Coffee House ... 84
Mount-Mettur Pharmacy 161
National Shorthand Assn. 29
Northern Railway ... 171
Pandyan Insurance ... 72
Parle Biscuits ... 144
Pearl Cycle Industries ... 122
Radhakrishna Jewellery 116
Rajkumar, Dr. N. ... 69
Ramanujam's ... 128
Ramco Group ... 102
Remy Talcum ... 108
Royal Enfield ... 49
Sakthi Karyalayam ... 169
Seshasayee Group ... 8
Siddhar Navaloka Kalpam 167
Standard Constructions... 163
Standard Motor ... 54
Steelsons ... 150
Sundaram Motors ... 2
T. I. Cycles ... 131
Tiru Arooran Sugar ... 96A
Venkatachellum, P. ... 112
Vummidiars ... 94
White Horse Soap ... 157



**WHY SUFFER FROM**

Sinus, Asthma, Skin Diseases, Leucoderma, Cancer, Fits & similar chronic ailments?

*Please Contact Our Siddha Vaidhyar*

Founder of

**SIDDHAR NAVALOKA KALPAM** (REGD.)

(Tested by the Govt. Chemical Laboratory)

Famous for over 33 years and known as a Home of relief from complicated ailments. Our preparations are in strict accordance with the Siddha Sastra with Basmam, Chenduram, Chunnam, Thailam etc.

*SIDDHA VAIDHYAR*

SADHU V. NARAYANASWAMI PILLAI

**Sri Raja Rajeswari Siddha Vaidhyasalai (Regd.).**

5, General Swamy Naicken Street, Triplicane, MADRAS-5.

# THE INDIAN OVERSEAS BANK LTD.

*CENTRAL OFFICE:*

**151, Mount Road, MADRAS - 2.**

*Chairman:*
M. Ct. MUTHIAH

*General Manager:*
C. P. DORAIKANNU

Branches in the principal commercial centres of India and South-East Asia

*LOCAL BRANCHES:*

NEW DELHI { JANPATH
KAROL BAGH

CHANDI CHOWK

Every type of Banking and Foreign Exchange business transacted

IOB's Special Services Include :—

* Personal Loans for purchase of durable consumer goods, repayment in easy instalments.
* Gift Cheques.
* Travellers' Cheques.

# எங்களிடம் கிடைப்பவை

★

| | | |
|---|---|---|
| இந்தியக் குடியரசின் அரசியல் அமைப்பு | ந. வெங்கடராமன், பி.ஏ.பி.எல். | ரூ. 1-00 |
| ராஜ்யம் | க. சந்தானம் | 1-00 |
| மகாகவி பாரதியார் கவிதைகள் (மலிவுப்பதிப்பு) | | 1-75 |
| திருஆனைக்கா உலா | காளமேகப் புலவர் | 2-50 |
| எமர்சன் கட்டுரைகள் | எமர்சன் | 1-00 |
| புறநானூறும் தமிழரும் | ச. வையாபுரிப் பிள்ளை | 1-00 |
| ஐந்தாவது சுதந்திரம் | லக்ஷ்மி கிருஷ்ணமூர்த்தி | 1-50 |
| கம்ப ராமாயணம்: | | |
| —புத்தகம் 1 | பால-அயோத்தியா காண்டங்கள் | 5-00 |
| —புத்தகம் 2 | ஆரணிய-கிஷ்கிந்தா காண்டங்கள் | 5-00 |
| கீதைப் பேருரைகள் | வினோபாஜி | 1-00 |
| அணுவை அறிக | நா. கி. நாகராஜன் | 1-50 |
| அழகிரிசாமி கதைகள் | கு. அழகிரிசாமி | 3-75 |
| வாசந்தி | தொகுப்பு | 1-00 |
| அமெரிக்கக் கதைகள் | ஸ்டீன்பெக் | 1-00 |
| நான்கு முட்டாள்கள் | வை. கோவிந்தன் | 0-25 |
| அணில் (வாரப் பத்திரிகை) | வருஷ சந்தா | 3-00 |
| தர்மரட்சகன் | பதிப்பாசிரியர்: வை. கோ. | 1-00 |
| ஜீவப்பிரவாகம் | ,, | 1-00 |
| காவியக் காதல் | ,, | 1-00 |
| இரண்டு பெண்கள் | ,, | 1-00 |
| முத்திரைக் கணையாழி | விசாகதத்தர் | 1-00 |
| கூண்டுக்கிளி | ஹரீந்தர நாத் சட்டோபாத்யாய | 1-00 |
| போரும் வாழ்வும் 1 | டால்ஸ்டாய் | 8-00 |
| போரும் வாழ்வும் 2 | ,, | 8-00 |
| போரும் வாழ்வும் 3 | ,, (அச்சில்) | 8-00 |
| மகாகவி பாரதியார் | வ. ரா. | 2-00 |
| பாரதியார் சரித்திரம் | செல்லம்மா பாரதி | 2-00 |
| அறிஞர் மார்க்ஸ் | ஆர். ராமநாதன் | 1-50 |
| என் கதை | ஹெலன் கெல்லர் | 0-75 |
| குருகோவிந்த சிங்கன் | வ. வே. சு. ஐயர் | 1-00 |
| சினிமா ராணியின் அற்புதக் கதை | | 1-25 |

## சக்தி காரியாலயம்

3/111, மௌண்ட் ரோட், சென்னை - 6.

# நன்றி...

தமிழில் ஆர்வமுடன் சென்ற எட்டு வருஷங்களாக, சுடரை ஆதரித்து வந்திருப்பவர்களுக்கும் இவ்வருஷமும் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பவர்களுக்கும் பாரதி மலரை தாழ்மையான வணக்கத்துடன் சமர்ப்பணம் செய்கிறேன்.

"தமிழ் நாட்டின் செப்பேடுகள்" என்ற கட்டுரையை அச்சிட அனுமதி தந்த தில்லி வானொலி நிலயத்தார்க்கு எங்கள் நன்றி உரித்தாயது.

சுடர் ஆசிரியக் குழுவினர் திட்டமிட்டபடி இந்த மலரில் தில்லித் தமிழர்களே பெரிய பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சிலர் பழைய எழுத்தாளர்கள்; பலர் புதிதாக எழுத முன் வந்திருப்பவர்கள். அவர்களுக்கும் திரு. பெ. நா. அப்புஸ்வாமி அவர்களுக்கும் மனமார்ந்த நன்றி.

இலக்கிய ஆசிரியக் குழுவில் பணிசெய்த திருவாளர்கள் பா. நடராஜன், சாலை இளந்திரையன், எஸ். சீனிவாசன், சங்கக் காரியதரிசி திரு. ஸித்தலிங்கய்யா, மலர் குற்றமற்றதாக அச்சேற உதவிசெய்த ஸ்ரீ. கே. எஸ். ஜம்புநாதன், இவர்களுக்கு நான் கடமைப் பட்டுள்ளேன்.

அழகிய மூவண்ண பாரதி பட பிளாக் கொடுத்துதவிய சக்தி காரியாலய அதிபர் திரு. வை. கோவிந்தன் அவர்களுக்கும், சித்திர அநுபந்த பிளாக்குகளைத் தந்துதவிய சென்னை அமுத நிலைய அதிபர்களுக்கும், சித்திர பாரதி ஆசிரியர் ரா. அ. பத்மநாபனுக்கும் என் மனமார்ந்த நன்றி.

தில்லித் தமிழ்ச் சங்கத்தின் மீது மிகுந்த அன்புடன் விளம்பரங்கள் கொடுத்து ஊக்கிய வர்த்தகப் பெருமக்களுக்கும், அரசாங்க ஸ்தாபனங்களுக்கும் சங்கம் என்றும் கடமைப் பட்டுள்ளது.

விளம்பரங்கள் சேகரித்தும் அலுவலக வேலைகளை ஆர்வமுடன் செய்தும் எனக்கு ஆதரவு தந்த திருவாளர்கள் எஸ். ராமசாமி, எஸ். கிருஷ்ணமூர்த்தி, எம். பாலசுப்பிரமணியன், ஆர். நாராயணசாமி இவர்களுக்கும் என் அன்புகலந்த நன்றி.

இமயப் பதிப்பகத்தின் அதிபர் திரு. டி. என். ராமச்சந்திரன் எங்கள் குடும்பத்தில் ஒருவராய், குறித்த நாளைக்குள் மலரை வெளியிட உதவியதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன்.

நிர்வாக ஆசிரியர்.

## WHEN YOU TRAVEL BY RAIL

DO YOU CARRY JEWELLERY, PRECIOUS STONES, WATCHES, SILKS, SHAWLS, CAMERAS, MUSICAL INSTRUMENTS OR OTHER VALUABLE ARTICLES

●

If so, you are advised that when you entrust such articles to the care of the Railways for carriage and the value of such articles in any one package exceeds Rs. 300/–, you should

(1) declare their value in writing at the time of booking, and

(2) pay a percentage on the value so declared over and above the normal freight charges,

failing which the Railways will not accept liability for the loss, destruction, deterioration or damage of such articles. The articles named above and many others you will find listed as "Excepted Articles" in the Railways Time Tables and Guide.

The Station Master of the nearest station will give you detailed information if you contact him.

●

## NORTHERN RAILWAY

## சுந்தரும் மந்தரும்

மந்தர்: "நல்ல புகழ்மாலைகள் உங்களுக்கு, கல்லடி எனக்கு. ஏன்? காலேஜில்கூட சிறந்த பேச்சாளர் நானல்லவோ?"



13820

சுந்தர்: "யாரும் அதை மறுக்கவில்லையே. ஆனால் அருவருப்பான ஆடைகளும் சிறந்த பேச்சுத் திறமையும் இணைந்து இருக்க முடியாது."

மந்தர்: "ஏன் முடியாது? அவர்கள் வருவது என் பேச்சைக் கேட்கத்தானே தவிர என் உடையைப் பார்ப்பதற்கில்லையே."

சுந்தர்: "உங்களது தோற்றம்தான் முதலில் அவர்களுக்கு நல்ல எண்ணத்தை உண்டாக்கும். ஏன் நல்ல துணியைத் தேர்ந்தெடுக்கக்கூடாது? விசேஷமாக பின்னியின் துணிகளை? அவை தர நிர்ணயம் செய்யப்பட்டவை. கண்ணிற்கு புலப்படாத சிறு குறைகளையும், பழுதுகளையும் உற்பத்தி செய்யும் ஒவ்வொரு கட்டத்திலும் துப்புரவாக நீக்கி விடுகிறார்கள். இதனால்தான் பின்னியின் துணிகள் பார்வைக்கு ரம்யமாகவும், உழைப்புக்கு வன்மையாகவும் விளங்குகின்றன."

## பின்னி – துணி உலகில் ஒரு புகழ் பெற்ற பெயர்

## BINNY - a great name in textiles

பின்னி கம்பெனிகள் ஒவ்வொரு வருஷமும் சுமார் 9 கோடி கெஜம் துணியை உற்பத்தி செய்கின்றன. அவை தோற்றுவித்துள்ள பல ரகங்களில் கீழ்க்கண்டவை சில:

ஷர்டிங் - காக்கி ட்ரில் - வெளுக்கப்பட்ட மற்றும் சாயம் தோய்த்த டிரில்கள் - சுருக்கம் விழாத ஸ[illegible]டிங்குகள் - டஸ்ஸர்கள் - யூனியன் துணிகள் - டவல்கள் - பட்டுச் சேலைகள் - கம்பளிகள்

பக்கிங்ஹாம் & கர்னடிக் கம்[illegible] லிமிடெட்

பெங்களூர் உல்லன், காட்டன் & ஸில்க் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

மானேஜிங் ஏஜெண்டுகள்: பின்னி & கம்பெனி (மதராஸ்) லிமிடெட்

★

WITH BEST COMPLIMENTS

OF

**THE EAST ASIATIC Co. (INDIA) Pte. Ltd.**

BOMBAY – CALCUTTA – MADRAS – NEW DELHI.

★

சகலரும்

சால

விரும்பும்

கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி
ஆடைகள்



அடைக்கும் இதர பல

அலங்காரங்களும்

புதுதில்லியில் எங்கள் கிளைகள் :
1. 22-பி. கான்மார்க்கெட், புது தில்லி.
2. 10174 குருத்வாரா ரோட், கரோல்பாக், புது தில்லி.

சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்
34/A-1 பாந்தியன் ரோடு எழும்பூர் சென்னை 8.